# இந்து நாகரிகம்

( HINDU CIVILIZATION TEACHERS GUIDE GRADE -12 )

# தரம் - 12

# ஆசிரியர் வழிகாட்டி

(2017 ஆம் ஆண்டில் இருந்து நடைமுறைப்படுத்தப்படுகிறது)

சமயங்கள் மற்றும் விழுமியங்கள் கல்வித் துறை,

மொழிகள், மானிடவியல், சமூக விஞ்ஞான பீடம்,

தேசிய கல்வி நிறுவகம்,

மஹரகம.

# இந்துநாகரிகம்

தரம் - 12

ஆசிரியர் வழிகாட்டி

தேசிய கல்வி நிறுவகம்

முதற் பதிப்பு - 2017

ISBN :

சமயங்கள் மற்றும் விழுமியங்கள் கல்வித் துறை,

மொழிகள், மானிடவியல், சமூக விஞ்ஞான பீடம்,

தேசிய கல்வி நிறுவகம்,

மஹரகம.

பதிப்பு : தேசிய கல்வி நிறுவகம்,

மஹரகம.

# பணிப்பாளர் நாயகம் அவர்களின் செய்தி

2007 ஆம் ஆண்டு நடைமுறையிலிருந்த உள்ளடக்கத்தை அடிப்படையாகக் கொண்ட பாடவிதானத்தை நவீனப்படுத்தி, தேசிய கல்வி நிறுவகம், ஆரம்ப, இடைநிலை கல்விப் பரப்புகளின் எட்டு வருட சுழற்சி முறையான, புதிய தேசியமட்ட பாடவிதானத்தின் முதல் பாகத்தினை அறிமுகப்படுத்தியது. தேசிய கல்வி ஆணைக்குழுவினால் முன்மொழியப்பட்ட தேசிய கல்வி இலக்குகளை அடிப்படை நோக்காகக் கொண்டு, இது செயற்படுத்தப்பட்டதுடன் பொதுத் தேர்ச்சிகளை விருத்தி செய்து வந்தது.

பல்வேறுபட்ட கல்வியாளர்களால் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளினதும், கருத்துக் களினதும் பொருத்தப்பாட்டுடன் பகுத்தறிவு வாதத்தினை அடிப்படையாகக் கொண்டு பாடவிதானம் நடைமுறைப்படுத்தப்பட்டது. அதன் தொடர்ச்சியாக பாடவிதானச் சுழற்சியின் இரண்டாம்பாகம் 2015 ஆம் ஆண்டில் இருந்து கல்வி முறையில் அறிமுகப்படுத்தப்பட்டு வருகின்றது.

இந்தப் பகுத்தறிவுவாத நடைமுறையின் கடை நிலையில் இருந்து உயர்நிலை வரை அனைத்துப் பாடங்களிலும் ஒழுங்குபடுத்தப்பட்ட முறையில் தேர்ச்சிகளை வளர்த்தெடுப்பதற்காக, கீழிருந்து மேல்நோக்கிய நடைமுறைப்படுத்தப்படும் அணுகுமுறை பயன்படுத்தப்படுகிறது. ஒரே பாடத்தின் உள்ளடக்கத்தினை ஏனைய பாடங்களிலும் மீண்டும் பாவிப்பதனைக் குறைப்பதற்காகவும், பாடத்தின் நோக்கங்களை மட்டுப்படுத்துவதற்காகவும், செயற்படுத்தக்கூடியதான மாணவர் மையப் பாடவிதானம் ஒன்றை உருவாக்கும் நோக்கிலும் கிடையான ஒருங்கிணைப்பானது செயற்பட்டு வருகின்றது.

ஆசிரியர்களிற்கு, அவர்களது வகுப்பறைக் கற்பித்தல்களை வழிப்படுத்துவதற்கு அவசியமான வழிகாட்டுதல்களை வழங்குவதற்காகவும், தங்களைக் கற்றல் - கற்பித்தல் செயற்பாடுகளில் பொருத்தப்பாட்டுடன் ஈடுபடுத்திக்கொள்வதற்காகவும், வகுப்பறை அளவீடு களையும் மதிப்பீடுகளையும் பொருத்தமாகப் பயன்படுத்திக் கொள்வதனை நோக்கமாகக் கொண்டு புதிய ஆசிரிய வழிகாட்டி நூல்கள் அறிமுகப்படுத்தப்படுகிறது. இந்த வழிகாட்டி. நூல்கள், ஆசிரியரை ஒரு பொருத்தப்பாடுடைய ஆசிரியராக வகுப்பறையில் செயற்பட வைக்கின்றது. இந்த வழிகாட்டி நூல்களினூடாக, ஆசிரியர்கள் தங்கள் மாணவர்களின் தேர்ச்சிகளை வளர்த்தெடுக்கத் தேவையான தர உள்ளீடுகளையும், செயற்பாடுகளையும் தாங்களாகவே தெரிந்தெடுக்கும் சுதந்திரத்தினையும் பெற்றுக்கொள்கின்றனர். விதந்துரைக் கப்பட்ட பாடப்பரப்புக்களின் பாரிய சுமைகள் இல்லாதொழிக்கப்படுகிறது. ஆதலால், இப்புதிய ஆசிரிய வழிகாட்டி நூல்கள் முழுப்பயன்பாடு உடையவையாவதற்கு, கல்வி வெளியீட்டாளர்களினால் வெளியிடப்படும் விதந்துரைக்கப்பட்ட பாட நூல்களின் உச்சப்பயன் பாட்டினை பெற்றுக்கொள்வது அவசியமாகின்றது.

இப்புதிய பகுத்தறிவுவாத பாடவிதானத்தினதும், புதிய ஆசிரிய வழிகாட்டி நூல்கள், புதிய பாடநூல்களினதும் அடிப்படைக் குறிக்கோள், மாணவர்களை ஆசிரிய மையக் கல்வியிலிருந்து விடுவித்து, செயற்பாடுகளுடன் கூடிய மாணவர் மையக்கல்வியினை நடைமுறைப்படுத்தக்கூடிய கல்வி முறைமையினால், பூகோள தொழில் சந்தைகளுக்கு தேவையான தேர்ச்சிகளும் திறன்களும் மிக்க மனித வளத்தினை வழங்கக்கூடிய மாணவர் களின் எண்ணிக்கையினை விருத்தி செய்யக்கூடியதாயிருத்தலேயாகும்.

இந்தச் சந்தர்ப்பத்தில் இந்நிறுவகப் பேரவையின் அங்கத்தவர்களுக்கும், கல்வி அலுவல்கள் சபையின் அங்கத்தவர்களுக்கும், இவ்வாசிரியர் வழிகாட்டி நூல்களின் உருவாக்கத்திற்குப் பங்களிப்புச் செய்த வளவாளர்களுக்கும் மற்றும் இவ்வுயரிய நோக்கத்திற்காக அர்ப்பணிப்புடன் பணியாற்றிய அனைவருக்கும் எனது நன்றிகளையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**கலாநிதி . திருமதி . ஜெயந்தி குணசேகர**
பணிப்பாளர் நாயகம்
தேசிய கல்வி நிறுவகம்
மகரகம.

## பிரதிப் பணிப்பாளர் நாயகத்தின் செய்தி

கற்றல் என்பது பரந்து விரிந்து செல்வதொன்றாகும். அது வாழ்க்கையை மேம்படுத்தவும் எளிமைப்படுத்தவும் வல்லது. மனிதன் கற்கும் ஆற்றலில் உச்ச நிலையில் உள்ளான். மனித, சமூக அபிவிருத்தியை மையமாகக் கொண்ட ஒரு நாடும் அதன் சமூகமும் அறிவாற்றலினால் இனங்கண்ட, நியமமற்றவற்றைக் களைவதற்கும். நல்லவற்றைப் பண்படுத்திப் புத்துலகைப் படைப்பதற்கான கருவியாய் அமைவது கல்வியாகும்.

கற்றலுக்காகப் பெறுமதிமிக்கவை எவையோ அவையும், கற்றல் முறையியல்களும் வசதிகளும் கல்வியைச் சூழ உருவாதல் வேண்டும். கலைத்திட்டம், பாடத்திட்டம், வழிகாட்டிகள், வசதி செய்வோர் போன்றவையெல்லாம் இவ்வகையிலேயே கல்வித்துறையிற் சேர்ந்து கொள்கின்றன.

இலங்கை, நவீன செல்நெறிகளையும் பண்டைய அருஞ்செல்வங்களையும் கலக்கச் செய்து தமது கல்விக்கோலத்தை உருவாக்கிக்கொண்டுள்ளது. சமகாலத் தேவைகளுக்கமைய மறுசீரமைப்புகளினூடாக எட்டு ஆண்டுகளுக்கொருதடவை இற்றைப்படுத்தப்படும் கலைத்திட்டத்துக்குரிய ஒரு கற்றல் வளமாக இவ்வாசிரியர் வழிகாட்டிகள் தயாரிக்கப்படுகின்றன.

பாடக் குறிக்கோள்களின் ஒத்ததன்மையைத் தேசிய மட்டத்தில் பேணுவது அவசியமாகும். எனினும், ஆசிரியர் வழிகாட்டியிற் தரப்பட்டுள்ள கற்றல் முறையியல்கள் சற்றேனும் பிசகாது அச்சொட்டாகப் பயன்படுத்துவதற்குரிவையன்று. பாடத்திட்டத்தின் தேர்ச்சிகள், தேர்ச்சி மட்டங்களை அடைவதற்காகப் பாடவிடயங்களின் மூலம் கற்றற் பேறுகளை அண்மிப்பதற்காகக் கற்றல் முறையியல்களை ஆக்கபூர்வமானதாக மாற்றியமைத்துக் கொள்வதற்கான சுதந்திரம் வசதி செய்து கொடுப்போருக்கு உண்டு என்பதில் ஐயமில்லை. மாணவரது அடைவுச் சதவீதத்தை உயரிய மட்டத்திற்கு இட்டுச் செல்ல உதவும் மற்றும் அதற்கான வசதிகளைச் செய்து கொடுக்கும் ஆசிரியரது வகிபாகத்திற்கு உந்துதலளிப்பதற்காகத் தயாரிக்கப்பட்டுள்ள ஆசிரியர் வழிகாட்டியை ஆசிரியர்கள் மட்டுமன்றி மாணவரும் பெற்றோரும் கூட பயன்படுத்தலாம். குறித்த பாடத்தின் பாடநூலுக்குத் துணையாக அமையும் ஒரு சாதனமான இவ்வாசிரியர் வழிகாட்டி, மற்றுமொரு பாடநூல் அன்று என்பதை அறிந்து பாடநூல், ஆசிரியர் வழிகாட்டி ஆகிய இரண்டையும் ஆசிரியர்கள் பயன்படுத்த வேண்டும்.

அந்தந்தப் பாடத்தின் அடைவு தொடர்பில், தேசிய நிலைப் பரீட்சகர்களால் எதிர்பார்க்கப்பெறும் அடைவுகளை, மாணவர்கள் அடைந்துள்ளனரா என்பது பற்றிப் பாடநிறைவில் வகுப்பறையில் வசதி செய்து கொடுப்பவர்களால் மதிப்பிடப் பெறுதல் வேண்டும். களிப்பூட்டத்தக்க செழுமையான பண்பாட்டைக் கட்டியெழுப்புவதற்கான ஒரு கருவியாக இவ்வாசிரியர் வழிகாட்டி அமைய வேண்டுமெனப் பிரார்த்திக்கின்றேன்.

**வண கலாநிதி மாம்புல்கொட சுமனரதன தேரர்**
பீடாதிபதி, பிரதிப் பணிப்பாளர் நாயகம்
மொழிகள், மானுடவியல் மற்றும் சமூக விஞ்ஞான பீடம்
தேசிய கல்வி நிறுவகம்

**ஆசிரியர் வழிகாட்டியை பயன்படுத்துதல் தொடர்பான அறிவுறுத்தல்கள்.**

தேசிய கல்வி நிறுவக இந்து சமயத் துறையின் ஊடாக தரம் - 12 இந்து நாகரிக புதியபாடத்திட்டத்திற்கான ஆசிரியர் வழிகாட்டியைத் தயாரித்து, பாடசாலைத் தொகுதிக்கு அறிமுகம் செய்து வைப்பதில் மிகுந்த மகிழ்ச்சியை அடைகின்றோம்.

பாடசாலைகளில் சமய பாடம் கலைத்துறைப் பாடமாகக் கொள்ளப்பட்டாலும், வாழ்க்கையில் நேரடியாகப் பங்கெடுக்கும் விடயங்கள் பல அதில் உள்ளன. அதனாற் கலைத்துறை மாணவர்கள் மட்டுமன்றி, எல்லாத் துறையினரும் இந்து நாகரிக பாடத்தைக் கற்க முன்வர வேண்டும். இதற்கு இந்து நாகரிகம் கற்பிக்கும் ஆசிரியர்களின் அர்ப்பண சிந்தனை, முயற்சி என்பன தேவை. அவ்வகையில் இப்பாடத்தை மாணவர் விருப்புடன் பயிலக்கூடியதாக ஆசிரியரின் பங்களிப்பும், ஒத்துழைப்பும் எதிர்பார்க்கப்படு கின்றது. இப்பாடம் பரீட்சைக்குரியது மட்டுமன்றி முழுவாழ்க்கைக்குத் தேவையான அம்சங்களையும் உள்ளடக்கியுள்ளது.

இந்த ஆசிரியர் வழிகாட்டியானது இரண்டு பகுதிகளைக் கொண்டது.

- விடய உள்ளடக்க வழிகாட்டித் தொடர்
- பாடசாலை மட்டக் கணிப்பீடு என்பன அவையாகும்.

மாணவரிடம் அபிவிருத்தி செய்யப்பட வேண்டிய தேர்ச்சி மட்டங்கள் தொடர்பான கற்றற் பேறுகள், உத்தேச விடய உள்ளடக்க வழிகாட்டிகள், கற்றல் - கற்பித்தற் செயற்பாடுகள், உசாத்துணைகள் என்பவற்றை உள்ளடக்கியதாக இந்நூலின் முதற்பகுதி அமைகின்றது. இவை யாவும் ஆசிரியர்களுக்கான வழிகாட்டலையே வழங்குகின்றன. எனவே, ஆக்கபூர்வமான ஆற்றல்களுக்கும் ஆய்வுச் சிந்தனைக்கும் ஏற்றதான கற்றல் - கற்பித்தல் செயற்பாட்டை மேற்கொள்ள ஆசிரியர்களுக்கு பூரண உரிமை உண்டு.

ஆசிரியர் வழிகாட்டியின் இரண்டாம் பகுதியில் கற்றல் - கற்பித்தற் செயற் பாடுகளை மேலும் விருத்தி செய்வதற்குரிய பாடசாலை மட்டக் கணிப்பீட்டுக் கருவிகள் தவணைக்கு மூன்று என்ற ரீதியில் தரம் - 12 க்கு 9 கருவிகள் வழங்கப்பட்டுள்ளன. இந்தக் கணிப்பீட்டுக் கருவிகள், வகுப்பறைக்கு வெளியேயும் மாணவர்கள் கற்பதற்குத் துணைபுரிவதுடன், குழுச் செயற்பாடு, ஆய்வுகள் என்பவற்றுக்கும் சிந்திக்கும் ஆற்றல், சமூகத் திறன்கள், தனியாள் என்பவற்றின் விருத்திக்கும் இட்டுச் செல்லும் என நம்புகின்றோம்.

**திரு பொன் ஜெயரூபன்**
உதவி விரிவுரையாளர்,
சமயங்கள் மற்றும் விழுமியங்கள் கல்வித் துறை,
தேசிய கல்வி நிறுவகம்.

# கலைத்திட்டக் குழு

**வழிகாட்டலும் அனுமதியும் :** **கல்விசார் அலுவல்கள் சபை,**
தேசிய கல்வி நிறுவகம்.

**பணிப்பு :**

- **கலாநிதி . திருமதி . ஜெயந்தி குணசேகர**
  பணிப்பாளர் நாயகம், தேசிய கல்வி நிறுவகம்
- **வண. கலாநிதி மாம்புல்கொட சுமனரதன தேரர்**
  பிரதிப் பணிப்பாளர் நாயகம்,
  மொழிகள், மானிடவியல், சமூக விஞ்ஞான பீடம்,
  தேசிய கல்வி நிறுவகம்,

**இணைப்பாக்கம் :** **திரு பொன் ஜெயரூபன்**
உதவி விரிவுரையாளர்,
சமயங்கள் மற்றும் விழுமியங்கள் கல்வித் துறை,
தேசிய கல்வி நிறுவகம்.

**விடய ஆலோசனை :**

- **பேராசிரியர். இரா.வை. கனகரத்தினம்**
  (ஓய்வு) தமிழ்த் துறை, பேராதனைப் பல்கலைக்கழகம்.
- **பேராசிரியர். பி. கோபாலகிருஷ்ண ஐயர்,**
  வாழ்நாள் பேராசிரியர், இந்து நாகரிகத்துறை,
  யாழ். பல்கலைக்கழகம்.
- **பேராசிரியர். எம்.வேதநாதன்**
  தலைவர், இந்து நாகரிகத்துறை,
  யாழ். பல்கலைக்கழகம்.
- **திருமதி. சாந்தி கேசவன்,**
  தலைவர், இந்து நாகரிகத்துறை,
  கிழக்குப் பல்கலைக்கழகம், மட்டக்களப்பு.
- **தீருமதி நாச்சியார் செல்வநாயகம்,**
  சிரேஷ்ட விரிவுரையாளர் (ஓய்வு), இந்து நாகரிகத்துறை,
  யாழ். பல்கலைக்கழகம்.
- **பேராசிரியர் கலாநிதி மா.கருணாநிதி,**
  கல்விப் பீடம், கொழும்புப் பல்கலைக்கழகம்.
- **கலாநிதி (திருமதி) எஸ். ஸ்ரீமுரளிதரன்,**
  சிரேஷ்ட விரிவுரையாளர், இந்து நாகரிகத்துறை,
  யாழ். பல்கலைக்கழகம்.
- **கலாநிதி (திருமதி) வி. பவநேசன்.**
  சிரேஷ்ட விரிவுரையாளர், இந்து நாகரிகத்துறை,
  யாழ். பல்கலைக்கழகம்.
- **திரு.எஸ். முகுந்தன்,**
  சிரேஷ்ட விரிவுரையாளர், இந்து நாகரிகத்துறை,
  யாழ். பல்கலைக்கழகம்.
- **திரு. எஸ். ரமணராஜா,**
  விரிவுரையாளர், இந்து நாகரிகத்துறை,
  யாழ். பல்கலைக்கழகம்.
- **திரு. என். சுபராஜ்,**
  விரிவுரையாளர், இந்துநாகரிகம்,
  தென்கிழக்குப் பல்கலைக்கழகம், ஒலுவில்.
- **திரு.என். வாமன்,**
  விரிவுரையாளர், இந்து நாகரிகத்துறை,
  கிழக்குப் பல்கலைக்கழகம்.

## எழுத்தாளர் குழு

**உள்வாரி** : - **திரு. பொன் ஜெயரூபன்**
உதவி விரிவுரையாளர்,
சமயங்கள் மற்றும் விழுமியங்கள் கல்வித் துறை,

**வெளிவாரி** - **திரு. பெ. பேரின்பராசா**
ஆசிரியர், மட்/களுதாவளை மத்திய மகா வித்தியாலயம்,
களுவாஞ்சிக்குடி. மட்டக்களப்பு.

- **திருமதி ஆர். யோகானந்தம்,**
ஓய்வு பெற்ற ஆசிரியர்,
கொ/ நுகேகொட தமிழ் மகா வித்தியாலயம், நுகேகொட.

- **திருமதி என். சுதமதி**
ஆசிரியர், யாழ்/ மீசாலை மத்திய கல்லூரி, மீசாலை.

- **திரு. எஸ். கமலநாதன்**
ஆசிரிய ஆலோசகர், வலயக் கல்வி அலுவலகம்,
மட்டக்களப்பு மேற்கு.

- **திரு. ரி. சுதர்சன்**
ஆசிரியர், யாழ்/நாவற்குழி மத்திய மகா வித்தியாலயம்,
நாவற்குழி.

- **திருமதி எம். சண்முகதாஸ்,**
ஆசிரியர், தி/ இ.கி.மி. ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக் கல்லூரி,
திருகோணமலை

.

- **கலாநிதி வீ. குணபாலசிங்கம்,**
ஆசிரியர், மட்/ மகிழடித்தீவு ம.மகா வித்தியாலயம், மட்டக்களப்பு.

- **திருமதி . எம். சிவகுமாரன்**
ஆசிரியர், கல்/ வாகரை தமிழ் மகா வித்தியாலயம், வாகரை

.

**கணனி வடிவமைப்பு** - **திரு. பொன் ஜெயரூபன்**
சமயங்கள் மற்றும் விழுமியங்கள் கல்வித் துறை,

**அட்டைப்படம்** -

**காரியாலய உதவி** - திருமதி எஸ்.சி.பிரியதர்சனி
- திருமதி மங்கலிகா விஜயரதன
- திரு..டயஸ் அமரசிங்க

# உள்ளடக்கம்


| விடயம் | | பக்கம் |
|---|---|---|
| பணிப்பாளர் நாயகத்தின் செய்தி | - | 3 |
| பிரதிப் பணிப்பாளர் நாயகத்தின் செய்தி | - | 5 |
| ஆசிரியர் வழிகாட்டியைப் பயன்படுத்துவதற்கான அறிவுறுத்தல்கள் | - | 6 |
| கலைத்திட்டக் குழு | - | 7 |
| 12.1 விடய உள்ளடக்க வழிகாட்டித் தொடர் | - | 11 |
| 12.2 பாடசாலை மட்டக் கணிப்பீடு - அறிமுகம் | - | 107 |

# செயற்பாடுகள்

## கற்றல் கற்பித்தல் முறைகள் - விளக்கம்

**தேர்ச்சி 1.0 : இந்து நாகரிகத்தின் வரலாற்றுப் பின்னணியையும் உலக நாகரிகங்களில் அதன் சிறப்பம்சங்களையும் இனங்கண்டு, அவை பற்றிய பகுப்பாய்வினை மேற் கொள்வார்.**

**தேர்ச்சி மட்டம் 1.1 :** நாகரிகம், பண்பாடு என்பவற்றின் பொருள் விளக்கங்களையும் அவற்றுக்கு இடையிலான தொடர்புகளையும் அறிந்து கூறுவார்.

**பாடவேளைகள் :** 06

**கற்றற் பேறுகள் :**

- நாகரிகம், பண்பாடு என்பவற்றின் பொருள் விளக்கங்களை அறிந்து கூறுவார்.
- நாகரிகம், பண்பாடு என்பவற்றுக்கு இடையிலான தொடர்புகளைப் பட்டியற்படுத்திக் காட்டுவார்.
- பண்பாட்டு அம்சங்களாகிய சமயம், கலை, இலக்கியம், ஒழுக்கம் தொடர்பாடல், மொழி ஆகியவற்றின் இணைப்பே பண்பாட்டு வெளிப்பாடு என்பதை அகராதியில் ஆதாரம் காட்டி எடுத்துரைப்பார்.
- பண்பாட்டம்சங்கள், தர்மநெறியையும் வாழ்க்கை முறைகளையும் வெளிப்படுத்தும் எனச் சுட்டிக்காட்டுவார்.
- உலகப் பொதுமைக்கான ஒழுக்கக் கருத்துக்களை தோத்திரப் பாடலாதாரங்கள் மூலம் எடுத்துக்காட்டுவார்.
- இந்துப் பண்பாட்டில் அறியவேண்டிய பொருள் மரபாகிய சமயம், கிரியை, கலை, தத்துவம் முதலானவை வேறுவேறானவை எனப் பிரித்துக் கூறுவார்.
- இந்துப் பண்பாட்டினை வெளிப்படுத்தும் பாடல்களைப் பாடி இரசிப்பார்.
- இந்துப் பண்பாட்டின் வரலாற்றை வெளிப்படுத்தும் மூலங்களைப் பட்டியல்படுத்திக் காட்டுவார்.

**விடய உள்ளடக்க வழிகாட்டி :**

- இந்துப் பண்பாட்டு வரலாற்றில் அரசியல் வரலாறு, பொருளாதார வரலாறு என்பவற்றை விட சமய வரலாறே கூடுதலாக மேலோங்கி நிற்கின்றது. பண்பாட்டுப் பகிர்வால் சமய நெறிகளும் தத்துவக் கோட்பாடுகளும் பல்கிப் பெருகியுள்ளன.
- **culture** (பண்பாடு) எனும் ஆங்கிலச் சொல், இலத்தீன் சொல்அடியிலிருந்து தோன்றியது. வாழ்வியலுக்கு மனதினைப் பண்படுத்தல் பண்பாடு ஆகும்.**culture** என்னும் ஆங்கிலச் சொல்லுக்கு ரி. கே. சிதம்பரநாத முதலியார் பண்பாடு என்னும் பதத்தை முதன்முதலில் பிரயோகித்தார். ஆயினும், பழந்தமிழ் இலக்கியங்களில் சால்பு என்ற பதம் இதனைச் சுட்டுவதாகவே உள்ளது.
- பண்பாடு பற்றிப் பலவிதமான வரைவிலக்கணங்கள் கூறப்படுகின்றன. அவற்றுள், ஒரு சமூகத்தின் உறுப்பினரின் அறிவு நலம், கருத்து நலம், கொள்கை நலம், ஒழுக்க நலம் ஆகியவை மென்மேலும் திருந்திய ஒரு நடைமுறையே பண்பாடு ஆகும் எனவும், பண்பாடு என்பது அறிவு, நம்பிக்கை, கலை, ஒழுக்கம், சட்டம், பழக்கவழக்கம் என்பவற்றின் முழுமைத் தொகுதியாகும் எனவும் எட்வெட் ரெய்லர் கூறுகிறார்.
- பண்பாடு என்பது ஒரு சமூகத்தில் கற்று அறியப்படும் நடவடிக்கைகள் அனைத்தையும் குறிப்பதாகவும் கூறப்படுகின்றது. பண்பாட்டில் உள்ளடங்கும் கூறுகளில் சமயம் பிரதான இடத்தைப் பெறுகிறது.

- பண்பாட்டிற்கும் சமயத்திற்கும் இடையிலான நெருங்கிய தொடர்பு
    - **T.S.** எலியட்டின் கூற்று
      பண்பாட்டின் அமைப்பையும் மீட்டுருவாக்கத்தையும் தீர்மானிக்கும் பிரதான காரணியாக சமயம் விளங்கும். இந்துப் பண்பாடு, இந்துக்களின் மரபுவழியான வாழ்வியலுக்கு கூடுதல் முக்கியத்துவம் கொடுக்கின்றது.
        1. பண்பாட்டு மரபுகள்
        2. பண்பாட்டு வாழ்வு
    - இவை இரண்டும் இந்துப் பண்பாட்டில் பிரதானமானவையாகும். இந்து விழுமியப் பண்புகளை நூல்களில் இருந்து கற்பது பற்றியும் அவற்றை வாழ்வில் கடைப்பிடிப்பது பற்றியும் இந்துப் பண்பாடு வலியுறுத்துகின்றது.
    - வேதம், ஆகமம், புராணம், இதிகாசம், பன்னிரு திருமுறைகள், ஆழ்வார் பிரபந்தங்கள் அனைத்தும் இந்துக்களைப் பண்படுத்தும் இந்துசமய நூல்களாகவே அமைந்துள்ளன.
    - சமய நம்பிக்கை. இறைநம்பிக்கை, கலை உணர்வு என்பவற்றை அவ்விலக்கியங்கள் வெளிப்படுத்தும்.
    - இவ்வாறு நோக்குகையில் இந்து ஒருவரால் இந்து சமூகத்திற்கு கையளிக்கும் மரபுகள், இந்து சமூகம் தனி ஒருவருக்காக ஒப்படைக்கும் அம்சங்கள் பண்பாட்டில் பிரதானமானதாக இடம் பெறும்.

நாகரிகம் என்பதன் வரையறை

- மனித வரலாற்றில் பண்பாட்டின் உயர் எல்லையைக் காட்டுவது நாகரிகம்
- **CIVITAS** இலிருந்து **CITIZEN** என்பதும், இதில் இருந்து **CIVILIZATION** என்னும் ஆங்கில சொல்லும் உருவானது. இது இலத்தீன் சொல்லில் இருந்தே உருவானது. நகர மக்களின் வாழ்வியலைப் பிரதிபலிப்பது நாகரிகமாகும். இதனை நகர்+ அகம் எனப் பிரித்து நோக்கலாம். தமிழில் திருக்குறளிலே நாகரிகம் என்னும் சொல் காணப்படுகிறது. நயத்தக்க நாகரிகம் வேண்டுபவர் என்பது இங்கு சுட்டிக்காட்டப்படுகிறது.
- பண்பாட்டிற்கும் நாகரிகத்திற்கும் உள்ள வேறுபாடு

  உ - ம்:
    - பண்பாடு அகவயமானது. நாகரிகம் அகவயமானதும் புறவயமானதும் ஆகும்.
    - பண்பாட்டின் உட்கூறுகள் வெளிப்படுத்தப்படுகையில், அது நாகரிகமாகின்றது.

- இந்து சமய முறைகளைக் கையாண்டு, தமது பிரதேசத்திலும், சமூகத்திலும் இடம் பெறும் அன்றாடப் பிரச்சினைகளுக்கு பண்புத்தரம் மிக்க முடிவினை முன்வைப்பர்.

படி : பண்பாடு என்னும் விடயப்பரப்பில் உள்ள ஒரு பகுதியைத் தெரிவுசெய்து மாணவர்களைக் கவரும் விதத்தில் முன்வையுங்கள்.

படி : விடயங்கள் தொடர்பான தகவல்களைச் சேகரிக்குமாறு வழிப்படுத்துங்கள்.

படி : ஒவ்வொரு குழுவிலிருந்தும் ஒருவர் வீதம் தாம் தேடித் தொகுத்த தகவல்களை முன்வைக்க இடமளியுங்கள்.

படி : காட்சிப்படுத்தச் செய்யுங்கள்.

**உசாத் துணைகள்:** ·

வியத்தகு இந்தியா - ஏ. எல். பசாம்
இந்தியாவின் பண்பாட்டுவரலாறு ஓர் அறிமுகம் - கல்வி வெளியீட்டுத் திணைக்களம்

இந்தியாவின் சிறப்பு வரலாறு - ஆர்.சி.மஜுந்தார்

- எச்.சி.ராய் சௌத்ரி

- கே. தத்தர்

(தமிழாக்கம் - எ.பாண்டுரங்கன்

திருக்குறள் - பரிமேழளகர் உரை

பண்பாட்டு மானுடவியல் - பக்தவத்சல பாரதி

**தேர்ச்சி 1.0 :** **இந்து நாகரிகத்தின் வரலாற்றுப் பின்னணியையும் உலக நாகரிகங்களில் அதன் சிறப்பம்சங்களையும் இனங்கண்டு, அவை பற்றிய பகுப்பாய்வினை மேற் கொள்வார்.**

**தேர்ச்சி மட்டம் 1.2 :** உலக நாகரிகங்களில் இந்து நாகரிகத்தின் வகிபங்கை இனங்கண்டு எடுத்துரைப்பார்.

**பாடவேளைகள் :** 15

**கற்றற் பேறுகள் :**

- உலக நாகரிக வரலாற்றில் இந்திய நாகரிகமும் அடங்கும் எனக் குறிபபிடுவர்.
- இந்திய நாகரிகம் மிகப் தொன்மையானது எனப் பகுப்பாய்வு அடிப்படையில் குறிப்பிடுவார்.
- இந்து நாகரிகத்தின் அடிப்படையான தொல்லியற் சின்னங்களை எடுத்துக்காட்டுவார்.
- உலக நாடுகளில் இந்து நாகரிகத்தின் சிறப்புக்களைத் தேடிப் பெறுவார்.
- மேலைநாடுகளில் உயர் கல்விநிலையில் இந்து நாகரிகத்தின் பரம்பலை ஆதாரங்கள் காட்டி விளக்குவார்
- 19ஆம் நூற்றாண்டில் மேலை நாடுகளில் இந்துப்பாரம்பரியங்களைக் கடைப்பிடிக்கும் சிறப்புக்கள் பற்றி எடுத்துரைப்பார்.
- பௌத்த,கிறிஸ்தவ, இஸ்லாமிய பண்பாடுகளில் இந்துப் பண்பாட்டம்சங்களை ஒப்பிடுவார்.
- உலகப் பொதுமைக்கான ஒழுக்கக் கருத்துக்களை சமய இலக்கிய ஆதாரங்கள் மூலம் எடுத்துக்காட்டுவார்.

**விடய உள்ளடக்க வழிகாட்டி :**

- இந்து நாகரிகம் இற்றைக்கு 5000 ஆண்டுகள் பழமையானது. தனக்குச் சம காலத்தில் தோன்றிய பிற நாகரிகங்களில் சுவடுகள் அழிந்து போக, கால தேச வர்த்தமானங்களைக் கடந்து இன்று வரை நிலைத்துள்ள சிறப்பு இந்து நாகரிகத்திற்கு உண்டு.

- உலகின் பல்வகை நாகரிகங்களிலே இந்து நாகரிகம் தனித்துவமானது; சிறப்புத்தன்மை வாய்ந்தது. அத்தகைய தனித்துவமான தன்மை காரணமாக இந்துமதம் இன்றும் புகழ் பெற்று விளங்குகிறது.
- வைதிகநெறியின் அடிப்படையில் இறை உண்மை, இறை நம்பிக்கை என்பவற்றை ஏற்று வாழ்தல்.
- மானுட ஆற்றலை விட இறை ஆற்றலே மேலானது என்னும் கருத்துக்கள்.

- வாழ்வியல் தர்மத்தை வாழ்க்கை விதிகளாக எடுத்துக்காட்டியுள்ளமை. இதற்கு ஆச்சிரம தர்ம வாழ்வு, புருடார்த்தங்கள் என்பன சான்றாகும்.
- நாகரிகத்தின் பரிமாணங்களான சமூகம், சமயம், தத்துவம், கலை, அரசியல், அறிவியல் முதலானவற்றில் இந்து நாகரிகத்தின் சிறப்புக்களை அவதானிக்கலாம். இந்து நாகரிகத்தின் மூல நூல்கள் சாத்திரமயப்படுத்தப்பட்டு, அமையப்பெற்ற சிறப்பு வாய்ந்தவை.

  (உ-ம்: அரசியல் - அர்த்தசாத்திரம், பரதம்-பரத நாட்டிய சாத்திரம்,
  சிற்பம்- சிற்பசாத்திரம்)
- இந்து தத்துவங்கள் வாழ்வியலை இணைத்துள்ள முறைமை மேலும் சிறப்பானது. சைவசித்தாந்தமானது, சமய வாழ்வியல் தத்துவமாகவும், அறிவியல், உளவியல் கருத்துக்களை உள்ளடக்கியதாகவும் காணப்படுகின்றது.
- இந்து நாகரிகம் அறிவியல், வானியல், வைத்தியம் முதலிய துறைகளையும் உள்ளடக்கி இருப்பதால் உலகளாவிய பெருமையும் உண்டு.
- சனாதன தர்மமாக விளங்குகின்றது. மண்ணில் நல்லவண்ணம் வாழும் எண்ணங் களைப் பதிவுசெய்த இலக்கியங்கள் இந்து ரிஷிகளால் படைக்கப்பட்டுள்ளன. பிறர் நலம், பிறருக்கான பிரார்த்தனைகள், விருந்தோம்பல் உணர்வுகள் என்பன சமயத்தின், வாழ்வாதாரமாகவும், தர்மமாகவும் இந்துப் பண்பாட்டில் இணைக்கப்பட்டுள்ளன.
- பல்பண்பாட்டுச் சங்கமத்தை எடுத்துக்காட்டும் பெருமையும் இந்து நாகரிகத்திற்கு உண்டு. வடமொழிக் கலாசாரம், தமிழ்க் கலாசாரம் என்பவற்றின் பிணைப்பை அங்கு அவதானிக்க முடியும்.
- உலகளாவிய இலக்கியங்களிலே இசைப்பாடல் வடிவங்களை உள்ளடக்கிய சிறப்பும் இந்துப் பண்பாட்டிற்குண்டு. சைவத்திருமுறைகளிலும் ஏனைய தோத்திரங்களிலும் இச்சிறப்புக் காணப்படுகிறது.
- உலக விடுதலைக்கான வேண்டுதல்கள் நாளாந்தம் ஆலயங்களிலே ஒலிக்கின்றன. வான்முகில் வழாது பெய்க..." என்னும் பாடலில் குறைவிலாது உயிர்கள் வாழ வழிகாட்டும் சைவநீதிக் கருத்துக்கள் பிரதானமானவையாகும்.
- பயன் கருதாத கடமைக்கு முக்கியத்துவம் கொடுத்த இந்து நாகரிகம் "கடமையைச் செய்; பயனை எதிர்பாராதே " என்றும், "என்கடன் பணி செய்து கிடப்பதே என்றும் பணிவான தொண்டை உயர் தொனியாகக் கொண்டுள்ளது.
- காலம் காலமாக வளர்ந்து வரும் கலைப்பண்பாட்டைக் கூறுவதுடன் கலை கலைக் காகவே என்பதை விட, கலை ஆன்மீக அனுபவத்திற்காகவே என்னும் தத்துவத்தை யும் அழகியல் ரசனையையும் அரவணைத்துக் கொண்டுள்ளது.
- பிற மதக் கருத்துக்களை ஏற்றும் மதித்தும் போற்றும் தன்மை இந்து நாகரிகத்தின் மற்றொரு சிறப்பம்சமாகும். பல்கலாசாரத்திற்குள்ளும் இணைந்து தமது அடையாளத்தை வெளிப்படுத்துகிறது.
- ஆன்மீக விடுதலையாகிய முக்தி தத்துவத்தை இலக்காகக் கொண்டது.
- உலகியலையும் ஆன்மீகத்தையும் இணைக்கும் பண்பு உன்னதமானது.
- இவ் உலக வாழ்வை மட்டுமல்லாது, மறுமை உலக வாழ்வையும், இந்த உலக வாழ்வியலில் இருந்து விடுபடும் ஆர்வத்தைத் தூண்டும் சிறப்பும் முக்கியமானதாகும்.

- கற்றல் - கற்பித்தற் செயற்பாடுகள்:

படி - i இந்து நாகரிகத்தின் சிறப்பம்சங்களில் மாணவர்கள் தமக்குத் தெரிந்த வற்றைக் கூறச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.

படி - ii தகவல்களைத் திரட்டுவதற்காக நூல்களை வழங்கி வழிப்படுத்துங்கள்.

படி - iii இந்துநாகரிகத்தின் சிறப்பம்சங்களைத் தேடித் தொகுக்குமாறு கூறுங்கள்.

படி - iv தொகுத்த விடயங்களை ஒழுங்குபட எழுதி வகுப்பறையில் காட்சிப் படுத்துங்கள்.

உசாத்துணைகள்:

இந்துப் பண்பாட்டு மரபுகள் - பேராசிரியர் ப. கோபாலகிருஷ்ண ஐயர்

இந்துப் பண்பாடு அன்றும் இன்றும் - பேராசிரியர் வி. சிவசாமி

**தேர்ச்சி 1.0 : இந்து நாகரிகத்தின் வரலாற்றுப் பின்னணியையும் உலக நாகரிகங்களில் அதன்சிறப்பம்சங்களையும் இனங்கண்டு, அவை பற்றிய பகுப்பாய்வினை மேற் கொள்வார்.**

**தேர்ச்சி மட்டம் 1.3 :** இந்து நாகரிகத்தின் தோற்றம் வளர்ச்சி என்பவற்றை வரலாற்று ஆதாரங்களின் துணைக் கொண்டு கால கட்டங்களாக எடுத்துரைப்பார்.

**பாடவேளைகள் :** 08

**கற்றற் பேறுகள் :**

- இந்துப் பண்பாட்டின் வரலாற்று மூலங்களைப் பட்டியல்படுத்திக் காட்டுவார்.
- இந்து நாகரிகத்தின் தொன்மையைத் தொல்பொருட் சின்னங்கள், இலக்கியச் சான்றுகள், வெளிநாட்டார் குறிப்புகள் முதலான ஆதாரங்கள் மூலம் அறிந்து கூறுவார்.
- சமஸ்கிருத மொழி,தமிழ்மொழி இலக்கியங்களை வேறுபடுத்திச் சொல்லுவார்.
- வேத இலக்கியம் இந்துசமய மூல இலக்கியம் என்பதற்கான காரணங்களைக் கூறுவர். அவ்விலக்கியங்கள் எழுந்த சூழலைக் குறிப்பிடுவார்.
- ஆகமங்கள் சமய தத்துவ, கலை,வாழ்வியல் விடயங்களுடன் தொடர்பானவை என்பதை எடுத்துக்காட்டுவார்.
- இதிகாசங்களும் புராணங்களும் இந்து நாகரிக வளர்ச்சி நெறியில் ஏற்படுத்திய செல்வாக்கினைக் சுட்டிக்காட்டுவார்
- இந்து சமூகத்தில் சமுதாய சிந்தனை மாற்றங்களை ஏற்படுத்துவதற்காக புராண,இதிகாச கதை பற்றிய கூத்து நாடகங்களை எழுதிக்காட்டுவார். (சமுதாய சிந்தனை மாற்றம்)
- இந்துசமயம் சார்ந்த தத்துவ உண்மைகளையும் அறநெறிக் கருத்துக்களையும் கதைவடிவில் பாமர மக்களுக்கு புராணங்கள் எடுத்துக் கூறும் தன்மையை விளக்குவார்.
- இந்து தத்துவ மூலங்களில் ஒன்றான உபநிடதத்தைக் குறிப்பிடுவார். தமிழ் இலக்கிய மூலங்களை எடுத்துக் காட்டுவார்.

**விடய உள்ளடக்க வழிகாட்டி :**

**1.3.3 சிந்துவெளிக் காலம்**

- உலகின் பல பாகங்களிலும் பல்வேறு நதிக்கரை நாகரிகங்கள் தோன்றி வளர்ச்சி பெற்றன. அவ்வாறு தோன்றிய ஏனைய நதிக்கரை நாகரிகங்களுக்கு ஒப்பான சிறப்புடையதாக சிந்துவெளி நாகரிகமும் அமைகின்றது.
- இந்து நாகரிகம் கி.மு. 3250 தொடக்கம் கி.மு. 2750 வரையான காலப் பகுதியில் சிறப்புடன் விளங்கி இருக்கலாம் என்பதை ஆய்வாளர்கள் துணிகின்றனர்.
- சிந்துவெளிப் பிரதேசத்தில் வாழ்ந்த மக்கள் இந்து சமய நம்பிக்கைகளைக் கடைப் பிடித்தனர் என்பது வரலாற்று ஆதாரங்கள் தரும் உண்மையாகும்.
- இந்துசமயம் இற்றைக்கு 5000 ஆண்டுகள் பழைமை உடையதெனக் கொள்ள இடமுண்டு.

- சிந்து நதி பாயும் பகுதியானது 1922 தொடக்கம் 1930 வரையான காலத்தில் சேர். ஜோன் மார்ஷலின் தலைமையில் அலெக்ஸ்சாண்டர், கன்னிங்காம், வில்லியம் ஜோன்ஸ் முதலான புதைபொருளாய்வாளர்களால் அகழ்வாய்வுக்கு உட்படுத்தப்பட்டது.
- அவர்களால் மொகஞ்சதாரோ, ஹரப்பா போன்ற பல நகர அழிபாடுகள் கண்டுபிடிக்கப்பட்டன.
- அவற்றுள் ஹரப்பா மேற்குப் பஞ்சாப் மாநிலத்திலும், மொகஞ்சதரோ பாகிஸ்தானிலும் உள்ளன.
- அந்நகரங்களில் கண்டுபிடிக்கப்பட்ட கட்டடங்கள், கற்சிலைகள், இலிங்க வடிவங்கள், களிமண் பொம்மைகள், சித்திர வடிவ எழுத்துக்கள் போன்ற புதைபொருட்களைக் கொண்டு சிந்துவெளி மக்களின் சமயநிலை, வாழ்க்கை முறை என்பன பற்றி அறிய முடியும்.

## சமய நிலை

- சிந்துவெளிப் பிரதேச புதைபொருட்கள் இந்து சமயச் சார்புடையனவாகவே உள்ளன.
- இப்பிரதேசத்தில் கண்டெடுக்கப்பட்ட புதைபொருட் சின்னங்கள் வாயிலாக இம்மக்கள் இந்துத் தெய்வங்களை வழிபட்டனர் என்பதை அறியமுடிகின்றது.
- சைவத்தின் பரம்பொருளாகிய சிவனை அக்கால மக்கள் முக்கிய தெய்வமாக வழிபட்டனர்.
- முத்திரைகள், இலிங்க வடிவங்கள் என்பன அக்கால சிவ வழிபாட்டை அறிய உதவுகின்றன.
- முத்திரை ஒன்றில் யோக நிலையில் அமர்ந்த ஒரு வடிவம் காணப்படுகிறது. இவ் வடிவம் தலை மீது வளைந்த கொம்புகள், இடுப்பில் இரட்டைப் பட்டையாக அரைக்கச்சை என்ற அங்க இலட்சணங்களுடன் காட்சியளிக்கிறது.
- யோகி வடிவத்தின் கீழ்ப் புறத்தில் யானை, புலி, எருது, காண்டாமிருகம் போன்ற அம்சங்களைக் காணலாம். அவ்வடிவத்தினை சேர். ஜோன் மார்ஷல் போன்றவர்கள் சிவ வடிவத்துடன் இனங்காண்கின்றனர்.
- தற்காலச் சக்தி வழிபாட்டுடன் இனங்காணத்தக்கதாக சிந்து வெளி மக்களிடையே நிலவிய தரைப்பெண் வழிபாடு அமைகிறது.
- ஒரு பெண்ணின் கருப்பையில் இருந்து செடி ஒன்று முளைப்பது போன்று பொறிக்கப் பட்டுள்ள முத்திரையை இதற்கு ஆதாரமாகக் காட்டுவர். உற்பத்திக்குக் காரணமான பூமாதேவியை (பூமியை) இம்மக்கள் தாயாக வழிபட்டனர் எனக் கொள்வர். ஆய்வாளர்கள் இத்தெய்வத்தை தரைப்பெண் வழிபாடு அல்லது தாய்த் தெய்வ வழிபாடு என்று குறிப்பிடுகின்றனர்.
- சுடுமண் தாயத்தொன்றில் முக்காலி ஒன்றின்மேல் பாற் கிண்ணம் காணப்படுகின்றது. அருகில் பாம்பு தனது படத்தை விரித்தபடி உள்ளது. இன்றும் எமது சமயத்தில் நாகத்திற்கு பால், பழம் படைத்து வழிபடும் மரபு இருந்து வருகின்றது.
- சில முத்திரைகளில் மரங்களும், அம்மரங்களில் உறையும் பெண் தேவதைகளின் வடிவங்களும் பொறிக்கப்பட்டுள்ளன. ஒரு முத்திரையில் மரங்களுக்கு இடையில் பெண் உருவம் காணப்பட அதன் கீழ் ஒரு பெண் அவ்வடிவத்தினை வழிபடும் வகையில் காட்சியளிக்கின்றது. எனவே அம்மக்கள் விருட்சங்களை அல்லது அவற்றில் உறையும் தெய்வங்களை வழிபட்டிருக்க வேண்டும் என்று கொள்வர்.



•

- சூரிய வழிபாட்டுடன் தொடர்புடைய ஆதாரங்களும் சிந்துவெளிப் பகுதியில் காணப் படுகின்றன.
- இன்றைய இந்து மதத்தில் காணப்படும் வழிபாடுகளுக்கு ஒப்பான சமயச் சடங்குகள் அக்கால மக்களிடையே நிலவியதை உணரலாம்.
- உயரமான கோயில்களை அமைத்த சுமேரிய மக்களோடு வணிகத் தொடர்புகளைக் கொண்டிருந்த சிந்துவெளி மக்கள், நிலையான கோயில்களை அமைத்திருக்க வேண்டுமெனக் கருத இடமுண்டு. இப்பிரதேசத்தில் கோயில் இருந்திருக்க வேண்டும் என்று கருதப்படும் இடம் இதுவரை அகழ்வாய்வு செய்யப்படவில்லை.
- இங்குள்ள செய்குளத்திற்கருகே எட்டு அறைகளைக் கொண்ட கட்டடம் ஒன்று காணப்படுகின்றது. இவ்வெட்டு அறைகளும் மேலே ஏறுவதற்குப் படிக்கட்டுக்களைக் கொண்டுள்ளன. கட்டிடத்தின் அமைப்பை அவதானித்த ஆய்வாளர்கள் இங்கு வாழ்ந்தவர்கள் சைவசமயச் சார்புடையவர்களாக இருந்திருக்க வேண்டுமெனக் கருதுவர்.
- முத்திரைகளில் இறைவனின் முன் ஆட்டைப் பிடித்திருப்பதனைப் போலவும், ஒரு பெண் மண்டியிட்ட வண்ணம் இருக்க, ஒருவன் வாளை ஓங்குவது போலவும் காணப்படுகிறது. இம்மக்களிடையே பலியிடுதல் முக்கிய சடங்காக இடம்பெற்றமைக்குரிய சான்றாக இது அமைகிறது.
- இன்றைய இந்து சமயத்தில் நிலவும் ஆலய வழிபாட்டுடன் தொடர்புடையதாகவுள்ள நிவேதன வழிபாட்டினை வெளிப்படுத்தும் ஆதாரங்களையும் காணலாம்.
- முத்திரையொன்றில் பெண்கள் படைக்கும் தட்டுக்களை ஏந்தியவாறு காணப்படுகின்றது.
- பூசைத் தட்டுகள் கிடைக்கப் பெற்றமையினைக் கொண்டு, தெய்வங்களுக்கு பூசைப் பொருட்களை நிவேதனமாகப் படைத்து வழிபட்டிருக்க வேண்டுமெனக் கருதுவர்.
- முத்திரைகளில் உள்ள எழுத்து வடிவங்கள் பசுபதி என்னும் பெயரைச் சுட்டுவதாக சேர் ஜோன் மார்சல் குறிப்பிடுகிறார்.

## நுண்கலைகள்

- சிந்துவெளிப் பிரதேசத்தில் கலைகளின் வளர்ச்சியையும் காணலாம்.
- மொஹஞ்சதாரோ, ஹரப்பா போன்ற இடத்துக் கட்டடங்களும் அக்கால கட்டடக்கலையின் வளர்ச்சியை அறிவதற்கு உதவுகின்றன.
- இப்பிரதேசத்தில் மாளிகை போன்ற கட்டிட அமைப்புகள், களஞ்சிய அறை, நீராடுகின்ற குளம், மாடி வீடுகள், வீடுகள் என்று பல கட்டடங்கள் கண்டுபிடிக்கப்பட்டன.
- கட்டடம் ஒன்று 242 அடி நீளமும் 112 அடி அகலமும் கொண்டதாக உள்ளது.
- மழைநீருக்குத் தாக்குப் பிடிக்கும் வண்ணம் வெளிப்புறச் சுவர்களுக்கு சுட்ட செங் கற்களைப் பயன்படுத்தியுள்ளனர்.
- உட்புறச் சுவர்களுக்கு சூளையிடப்படாத செங்கற்களைப் பயன்படுத்தியுள்ளனர்.
- அடுக்கு மாடி வீடுகளுக்கு அதன் பாரத்தைத் தாங்கும் வகையில் நடுப்பகுதிச் சுவர்கள் தடிப்பாக அமைக்கப்பட்டுள்ளன.
- மொஹஞ்சதரோ, ஹரப்பா போன்ற இடங்களில் கண்டுபிடிக்கப்பட்ட பல்வேறு சிற்ப வடிவங்களும் அக்கால சிற்பக்கலை வளர்ச்சியைக் காட்டுவன.
- சிந்துவெளி காலம் சிற்பக்கலை வளர்ச்சியைக் காட்டுவதாக பல ஆய்வாளர் கருதுவர். சேர். ஜோன். மார்ஷல் ‘இந்திய சிற்பக்கலை இந்தியாவிற்கே உரியது’ என்று கூறுவதனையும் காணலாம்.

- சிந்துவெளி மக்கள் சிற்பங்களுக்கு வெண்கலம், பழுப்பு நிறக் கற்கள், சுண்ணக் கற்கள் போன்றவற்றினை மூலப்பொருளாகப் பயன்படுத்தினர்.
- சிந்துவெளி பிரதேசத்தில் வெளிப்படுத்தப்பட்ட சிற்பங்களுள் வெண்கலத்தினாலான நடனமாதின் வடிவம், ஆடவர் வடிவங்கள் போன்றவற்றைக் கூறலாம்.
- வெண்கலத்தில் வார்க்கப்பட்டுள்ள நடன மாதின் வடிவம் வழுவழுப்பாகவும் ஒழுங் காகவும் செப்பனிடப்பட்டுள்ளது. இவ்வகைச் சிலைகள்: ‘சிவபெருமானது பிற்கால நடனத்திற்குத் தோற்றுவாய் ஆகலாம்’ என்று மா. இராசமாணிக்கனார் கருதுகின்றார்.
- துளைகளை உடையதாகக் காணப்பட்ட ஊதுகுழல் வாசிக்கும் நிலையில் இருந்த தாக அறிஞர் மாக்கே குறிப்பிடுகிறார்.
- இங்கு கிடைக்கப் பெற்ற மட்பாண்டங்கள் மீது பாம்புகள், மீன்கள், வட்டங்கள், சதுரங்கள், இலைகள் என்று பல உருவங்கள் ஓவியங்களாகத் தீட்டப்பட்டுள்ளன.
- மட்பாண்டங்களில் காணப்படும் வடிவங்கள் அக்கால ஓவியக்கலை பற்றி அறிய உதவுகின்றன.
- முத்திரைகளில் பொறிக்கப்பட்டுள்ள மிருதங்கம், தவில் போன்ற சான்றுகள் அக்கால இசைக் கலை பற்றி அறிய உதவுவன.

- **வாழ்க்கை முறை**
  - சிந்துவெளிப் பிரதேச மக்கள் நாகரிகம் உடைய வாழ்க்கையை வாழ்ந்தமைக்கு அப்பிரதேசத்தில் கண்டுபிடிக்கப்பட்ட புதைபொருட் சின்னங்களே சான்றாக அமையும்.
  - சிந்துவெளிப் பிரதேச மக்களின் முக்கிய தொழிலாக வாணிபமே இருந்தது. சிந்துவெளியில் கிடைத்த முத்திரைகள், மட்பாண்டங்கள், கருவிகள் போன்றவை சுமேரியா, மொசப்பதேமியா, எகிப்து போன்ற நாடுகளில் கிடைக்கப் பெறுகின்றமை யைக் கொண்டு சிந்துவெளி மக்கள் மேற்கூறிய நாட்டு மக்களுடன் வணிகத் தொடர்புகளை வைத்திருந்தனர் எனக் கொள்வதற்கு இடமுண்டு.
  - கப்பல் கட்டுதல், தச்சுத் தொழில், சிற்பத் தொழில், கைவினைத் தொழில் என்பன போன்ற தொழில்களிலும் அம்மக்கள் ஈடுபட்டனர்.
  - இங்கு கண்டுபிடிக்கப்பட்ட மதகுருவின் ஆடையில் பூவேலைப்பாட்டுடன் கூடிய சித்திரத்தைக் காணமுடிகின்றது.
  - ஆண்கள் மேலாடைகளை அணியும் அளவிற்கு அக்கால மக்கள் நாகரிகமுடைய வர்களாக வாழ்ந்தனர் என்பது இதன் மூலம் பெறப்படுகிறது. மிகப் பெரிய நகர அமைப்பையும் பாதுகாப்பான சுற்றாடலையும் உடைய நாகரிக வாழ்வையும் பின்பற்றினர். நெருக்கமான வீட்டு அமைப்பால் ஒருமைப்பாடான சமூக அமைப்பு வெளிக்காட்டப்படுகிறது.

## வேதம்

- இந்து இலக்கியங்களுள் வேதம், ஆகமம் என்பன முதன் நூல்கள் எனவும் பிரமாண நூல்கள் எனவும் கொள்ளப்படுகின்றன.
- வேதம் என்ற சொல் 'வித்' என்னும் வினையடியிலிருந்து தோன்றியது. வித் என்றால் அறிவு என்னும் பொருளைத் தரும். அதனால் வேதங்களை அறிவு நூல் எனக் கொள்வர்.
- வேதங்கள் இறைவனால் அருளிச் செய்யப்பட்டவை என்பது மேலோர் மரபு.
- வேதங்களை தொகுத்தவர் வியாசர் ஆவார். வியாசர் என்பது ஒரு காரணப்பெயர். அதற்குத் தொகுப்பாசிரியர் எனப் பொருள் கொள்வர்.
- கால அடிப்படையில் வேத இலக்கியங்கள் கி.மு. 1500 - கி.மு. 600 வரையிலான காலப்பகுதியில் தோற்றம் பெற்றன எனக் கூறப்படுகின்றது.
- வேதங்களை எழுதாமறை, எழுதாக்கிளவி, சுருதி, மறை, அபௌருஷேயம், சுயம்பு, ஆம்நாயம் முதலான பல பெயர் கொண்டு அழைப்பர்.
- இந்துசமய இலக்கியங்கள் அனைத்தும் வேத இலக்கியங்களை ஆதாரமாக் காட்டுகின்றன

## வேதங்களின் வகையும் அமைப்பும்

- வேதங்கள் நால் வேதம் அவை சதுர்மறை, சதுர்வேதம் எனவும் அழைக்கப்பட்டன.
- ஆரம்பத்தில் வேதங்கள் 'திரையீ வித்யா' என மூன்றாகச் சொல்லப்பட்டன. அவை இருக்கு, யசுர், சாமம் என்பனவாகும். பின்னர் வழக்கில் இருந்த அதர்வ வேதமும் இணைக்கப்பட்டு, நான்காகக் கூறப்பட்டன.
- வேதங்களில் முதலில் வைத்தெண்ணப்படுவது இருக்கு வேதம். இருக்கு என்பதற்கு பாட்டு என்பது பொருள். இவ் வேதம் பாட்டுக்களை மட்டுமே கொண்டிருப்பதனால் இருக்கு வேதம் எனப் பெயர் பெற்றது.
- இவற்றுள் இரண்டாம் மண்டலம் முதல் ஏழாம் மண்டலம் வரையும் உள்ள மண்டலங்களிலே மிகப் பழைய பாடல்கள் இருக்கின்றன. இவற்றை இயற்றியோர் கிருத்ஸமதர், விசுவாமித்திரர், வாமதேவர், அத்திரி, பரத்துவாசர், வசிட்டர் என்போர் ஆவர்.
- யசுர் வேதம், செய்யுள் நடையிலும் உரை நடையிலும் அமைந்த மந்திரங்களைக் கொண்டுள்ளது. இம்மந்திரங்களை ஓதுபவர்கள் அத்வர்யுக்கள் என அழைக்கப்பட்டனர்.
- சாமம் என்பது இசைப் பாடல்களைக் கொண்டது.
- இருக்கு வேதம் 10 மண்டலங்களையும் 1028 சூக்தங்களையும் கொண்டுள்ளது.
- 101 சாகைகளைக் கொண்ட யசூர் வேதம் கிருஷ்ண யசூர், சுக்கில யசூர் எனும் இரு பிரிவுகளைக் கொண்டது.
- சாம வேதம் 1875 பாடல்களைக் கொண்டுள்ளதுடன் ஆர்ச்சிகம், உத்தர ஆர்ச்சிகம் என்னும் இரு பிரிவுகளையும் கொண்டுள்ளது.
- அர்ச்சிகம் என்பது பாட்டுக்களின் முதல் தொகுதி எனப் பொருள்படும். உத்தராச்சிகம் என்பது பாட்டுக்களின் பின் தொகுதி எனப் பொருள்படும்.
- அதர்வ வேதம் 20 காண்டங்களையும், 731 சூக்தங்களையும், 6000 பாடல்களையும் கொண்டுள்ளது.

- அதர்வ வேதத்திற்கு அதர்வாங்கிரஸ், பிருகுவாங்கிரஸ், பிரமவேதம் என்ற பெயர்களும் உண்டு.
- நான்கு வேதங்களும் நான்கு பகுதிகளையும் மூன்று காண்டங்களையும் உடையன.
- சங்கிதை, பிராமணம், ஆரணியகம், உபநிடதம் என்பன நான்கு பகுதிகளாக உள்ளன. அவற்றுள் சங்கிதை என்பது மந்திரங்களின் தொகுப்பாகும். பிராமணம் என்பது வேள்விக் கிரியைகளுக்குரிய விதிகளை எடுத்துரைப்பவை. ஆரணியகம் என்பது வானப்பிரஸ்தனுக்குரிய சமய அனுட்டானங்களை எடுத்துரைப்பவை. உபநிடதம் என்பது உண்மைப்பொருள் பற்றிய விசாரணைகளை எடுத்துரைப்பவை.
- ஆரணியங்கள் யாகங்கள் மறைபொருளாய் உணர்த்தும் உண்மைகளையும் யாகம் எவற்றையெல்லாம் குறிப்பது என்பதையும் விளக்கிக் கூறும் நூல்கள்
- சங்கிதை, பிராமணம் என்பன வேதத்தின் கர்ம காண்டப் பகுதியைச் சார்ந்தவை.
- ஆரணியகம் உபாசனைக் காண்டத்தையும் உபநிடதம் ஞான காண்டப் பகுதியையும் சார்ந்தவையாகும்.

**வேதங்களில் தெய்வங்களும் வழிபாடுகளும்**

- வேத இலக்கியங்கள் அக்காலத்தில் நிலவிய சமய நிலை பற்றி அறிய உதவுகின்றன.
- வேத கால மக்களிடையே காணப்பட்ட இயற்கை வழிபாடு பற்றி இவை விபரிக்கின்றன.
- இயற்கை அம்சங்களே நாளடைவில் தெய்வங்களாக உயர்வு பெற்றன.
- வேதங்களில் கூறப்படும் 33 தெய்வங்களையும் விண்ணுலகத் தெய்வங்கள், இடையுலகத் தெய்வங்கள், மண் உலகத் தெய்வங்கள் என வகைப்படுத்துவர். ஆயினும் ''ஏகம் சத் விப்ரா பகுதா வதந்தி'' என்ற வகையில் ஒரு கடவுட் கோட்பாடாக பரிணாமம் அடைந்தது.
- தெய்வங்கள் வழிபடுவோருக்கு நன்மைகளை கொடுப்பனவாகவும் பகைவர்களை அழிப்பனவாகவும் வேதங்கள் குறிப்பிடுகின்றன.
- நீண்ட ஆயுளை வேண்டும் பாடல்களும் காணப்படுகின்றன.
- வேதங்களில் கூறப்பட்ட தெய்வங்களே பிற்கால சமய வளர்ச்சியின் தெய்வீக நம்பிக்கையில் பிரதான இடத்தை பெறுகின்றன.
- வேதகால மக்கள் தெய்வங்களுக்குச் செய்த வழிபாடுகள், கிரியைகள் பற்றி வேதங்களில் கூறப்பட்டுள்ளன.
- வேதங்களில் அஸ்வமேதம், இராஜசூயம், வாஜபேயம், புருஷமேதம், சர்வமேதம் போன்ற வேள்விகள் தொடர்பான செய்திகள் காணப்படுகின்றன.
- வேள்வி வழிபாட்டில் புரோகிதன், அக்கினி பகவான், சோமன் என்போர் பிரதான இடம் வகித்தனர்.
- வேள்விக் கிரியைகளின்போது யாககுண்டம் அமைத்தல், அக்கினி வளர்த்தல், தானஸ் துதி பாடுதல், தானம் வழங்குதல், தட்சணை வழங்குதல் முதலான கிரியைகள் இடம்பெற்றன.

- வேள்விகளின் பிரதான நோக்கம் இம்மைப் பயன்களேயாகும்.
- நீண்ட ஆயுள், போரில் வெற்றி, நோய் நீக்கம் முதலான உலகியல் தேவைகளை அவாவி வேள்விகள் செய்யப்பட்டன.
- சவித்திரு எனும் ஞாயிற்றுக் கடவுளுக்குரிய காயத்திரி மந்திர செபம், விபூதி தாரணம் பற்றியும் வேதங்களில் காணலாம்.
- சுக்கிலயசூர் வேதம் உருத்திரனுக்குரிய பல திருநாமங்களைக் கூறி வழிபடும் முறையைக் கூறுகின்றது. உ-ம்: சதருத்திரியம்
- சாம வேதம் இறை வழிபாட்டிற்குரிய இசைப் பாடல்களைக் கொண்டுள்ளது.
- இருக்கு வேதம் ''தூய்மையான இறைவனைத் தூய பாடல்களால் போற்றுவோமாக'' என்று இசையால் இறைவனை வழிபடுதல் பற்றிக் கூறுகின்றது.
- அதர்வண வேதம் சாதாரண மக்களிடையே நிலவிய மாந்திரீக நம்பிக்கைகளுக்கு அதிக முக்கியத்துவம் கொடுத்துள்ளது.
- பௌஷ்டிகாணி - உழவனுக்கும் வர்த்தகனுக்கும் செல்வச் செழிப்பு போன்ற நன்மையளிக்கும் தன்மை உடையது

  பேஷஜானி - நீண்ட ஆயுளை அளிக்க வல்வ மந்திரம், ஸ்திரீகர்மாணி - பெண்கள் சுபீட்சம் பற்றியும் நன்மை தீமை கருதிச் செய்யப்படுபவை, ராஜகர்மாணி - அரசர்களின் நன்மை கருதிச் செய்யப்படுபவை போன்ற பகுதிகள் பற்றியதாகவும் அமைந்தவை.
- எல்லா உலகமும் எல்லா மக்களும் சுகமாக வாழ்வதற்கான வேண்டுதல்களும் வேத மந்திரங்களில் உண்டு.

## தனிமனித வாழ்வும் சமூக நிலையும்

- வேத இலக்கியங்கள் அக்கால மக்களின் வாழ்வின் பல்வேறு அம்சங்கள் பற்றியும் விபரிப்பன.
- தனிமனித வாழ்க்கைப் படிநிலைகளாகிய பிரமச்சரியம், கிருகஷ்தம், வானப்பிரஸ்தம், சந்நியாசம் என்பன தொடர்பான சிந்தனைகளை வேதங்கள் கொண்டுள்ளன.
- இருக்கு வேதத்தில் உள்ள பிரம்மசரிய சூக்தம், முனி சூக்தம், திருமணம் பற்றிய பாடல்கள் போன்றவற்றில் வாழ்க்கைப் படிநிலைகள் பற்றிக் கூறப்பட்டுள்ளன. திருமணம், கணவன் மனைவி உறவு, குடும்ப வாழ்வு, கணவரின் கடமைகள் பற்றியும் அவை குறிப்பிட்டுள்ளன.
- கணவன் - மனைவி என்போரைச் சுட்டும் 'தம்பதி' என்னும் தொடர் இருக்கு வேதத்தில் உள்ளது.
- குடும்பத் தலைவனின் கடமைகளுள் முக்கியமானது வேள்விச் சடங்கினை ஆற்றுதல்.
- வேத இலக்கியங்கள் ஊடாக, அக்கால சமூகக் கட்டமைப்பு, சமூகத் தொடர்புகள் என்பனவற்றை அறியலாம்.
- நால்வகை வருணக் கட்டமைப்பின் தொடக்கத்தை இருக்கு வேத புருஷ சூக்தப் பாடல்கள் கொண்டுள்ளன.

- வேட்டல், வேட்பித்தல், ஓதல், ஓதுவித்தல் என்பன பிராமணர்களின் முக்கிய கடமைகள் எனக் கூறப்படுகின்றன.
- வேத காலச் சமூக அமைப்பில் சத்திரியர்களும் முக்கிய இடத்தை வகித்தனர்.
- வேத கால மக்கள் குழுக்களாக வாழ்ந்தனர். அதனை அடுத்து குழுத் தலைவர்கள் அரசர்களாக உயர்வு பெற்றனர்.
- அரசர்கள் மாளிகையில் வசிப்பவர்களாகவும், உயர்ந்த ஆடை ஆபரணங்கள் அணிபவராகவும் கூறப்பட்டுள்ளது. மக்களின் நலன்களைப் பேணும் வகையில் அரசனின் ஆட்சி அமைய வேண்டும் எனக் கூறப்பட்டிருந்தது.
- அரசரின் மகுடாபிஷேகத்தின்போது 'மன்னராகிய நீர் இன்று முதல் வலியோரையும் மெலியோரையும் சமமாக நடத்துவீராக' என்று புரோகிதன் வேண்டிக் கொண்டான்.
- அரசனுடன் தொடர்புடைய சபா, சமிதி முதலான நிறுவனங்கள் பற்றியும் வேதங்கள் கூறியுள்ளன. அரசனது அன்றாடச் செயற்பாடுகளுடன் தொடர்பு உடையனவாக இந்நிறுவனங்கள் காணப்பட்டன.

## தத்துவ சிந்தனைகள்

- வேத இலக்கியங்கள் இந்து மெய்யியல் தொடர்பான அடிப்படைச் சிந்தனைகளையும் கொண்டுள்ளன.
- பரம்பொருள், ஆன்மா, பிரபஞ்சம் தொடர்பான பல விடயங்கள் நாஸதீய சூக்தம், ஜம சூக்தம், வருண சூக்தம் போன்ற பகுதிகளில் உண்டு.
- ரிக் வேத 1:164:46 வது பாடலில், 'ஏகம் சத் விப்ரா பகுதா வதந்தி' என்னும் தொடர் ஒரு கடவுள் கொள்கையை பிரதிபலிப்பதாக உள்ளது.

- இருக்கு வேதத்தில் உள்ள நாஸதீயப் பாடலில் இந்து மெய்யியலில் உள்ள அத்வைதக் கோட்பாட்டில் வலியுறுத்தப்படும் ஒருமை வாதத்தின் ஆரம்பத்தைக் காணலாம்.
- வேத இலக்கியங்களில் பிரபஞ்சம், ஆன்மா, ரிதம் தொடர்பான சிந்தனைகளும் முன்வைக்கப்பட்டுள்ளன.
- இருக்கு வேதத்தில் உள்ள யம சூக்தம், இறப்பு பற்றிய பாடல்கள் போன்ற பகுதிகளில் ஆன்மாவின் இறப்புக்குப் பிற்பட்ட நிலை, ஆன்மாவின் கன்ம வினைகள், வினைகளுக்கான பயன்கள் பற்றிய கருத்துக்கள் உள்ளன.
- பிரபஞ்ச உற்பத்தி, பிரபஞ்சப் படைப்புக்கு முற்பட்ட நிலை, படைப்பின் மூலாதாரம் பற்றிய விடயங்களை இருக்கு வேதத்திலுள்ள நாஸதீய சூக்தத்தில் காண முடிகின்றது.
- இருக்கு வேதத்திலுள்ள வருணன் பற்றிய பாடல்களில் வரும் வருண சூக்தம் ஒழுக்கம் பற்றிய சிந்தனைகளைக் கொண்டுள்ளது.
- ரிதத்துக்குரிய பொறுப்புடையவன் வருணன். அதனால் ரிதஸ்ய கோபா, ரிதஸ்வான் என்ற பெயர்கள் அவனுக்குண்டு. வருணன் உலக ஒழுங்கைப் பேணுபவனாகவும், மனிதர்களின் ஒழுக்கத்தைக் கண்காணிப்பவனாகவும் கூறப்படுகின்றான்.
  மேற்கூறியவற்றின் அடிப்படையில் வேத இலக்கியங்கள் அக்கால மக்களின் தத்துவ சிந்தனைகளைக் கொண்டிருப்பதுடன் அவை பிற்கால மெய்யியல் வளர்ச்சிக்கும் முன்னோடி என்பர்.
- வேதங்களின் இறுதிப்பகுதியாக அமைந்த உபநிடத்தில் பிரமம், ஆன்மா பற்றிய சிந்தனைகள், முத்தி பற்றிய கருத்துக்கள் விரிவாக ஆராயப்பட்டள்ளன.

## வேதங்களின் முக்கியத்துவம்

- இந்து சமய வளர்ச்சியில் வேதங்கள் முக்கிய இடத்தை வகிக்கின்றன.
- இந்து சமயம் சார்ந்த இறை நம்பிக்கை, தத்துவ சிந்தனைகள், அரசியல், சமூக சிந்தனைகள் போன்றவற்றின் வளர்ச்சியில் வேதங்கள் அதிக செல்வாக்குச் செலுத்தியுள்ளன.
- வேதங்கள் இறை சம்பந்தமுடையது என்பதுடன், அக்கால மக்களின் சமய நம்பிக்கை பற்றி அறிய உதவும் முக்கியமான இலக்கிய மூலமாகவும் அமைகின்றன.
- பிற்காலத்தில் வைதீக மரபுகளைப் பிரதிபலிக்கும் இலக்கியங்கள் பல தோன்றுவதற்கு வேதங்கள் பிரமாணமாய் அமைந்தன.
- நால்வகை ஆச்சிரம நிலைகளின் வளர்ச்சிக்கும் வேதங்களே அடிப்படையாகும்.
- தரும சாத்திரங்கள், தருமசூத்திரங்கள், புராணங்கள், இதிகாசங்கள் போன்றவற்றின் உருவாக்கத்தில் வேதங்களுக்கு முக்கிய பங்குண்டு.
- இறைவனைத் துதித்துப் பாடிய முதல் துதிப் பாடல்களாக வேதப் பாடல்கள் உள்ளன. பிற்காலத்தில் எழுந்த துதிப்பாடல்களுக்கு வேதங்களே முன்னோடி.
  உ-ம்: - நாயன்மார் பாடல்கள், ஆழ்வார் பாசுரங்கள்- வேத நெறி தழைத்தோங்க.... என்னும் பாடல்கள் வேத மரபின் வளர்ச்சியை எடுத்துரைக்கும்.
  ஆழ்வார் பாடல்களில் - ''அமரவோரங்க மாதும் வேதமோர் நான்கு மோதி'' - என தொண்டரடிப் பொடியாழ்வார் பாடுகின்றார்.

## ஆகமம்

- **ஆகமம் என்ற சொல்லின் பொருள் விளக்கம்**
  - தொன்றுதொட்டு வரும் அறிவு
  - ஆன்மா, மலநாசம் பெற்று இறைவனை அடைய வழிகாட்டும் நூல் எனப் பலவாறு பொருள் கொள்ளப்படும்.

- **ஆகமங்களின் சிறப்பு**
  - இந்து சமய வரலாற்றில் வேதங்களைப் போல் ஆகமங்கள் முதனூல்கள் ஆகும்.
  - சிரௌதம், சுப தந்திரம் என ஆகமம் சிறப்பிக்கப்படுகிறது.
  - வேதங்கள் பொது நூல் எனவும், ஆகமங்கள் சிறப்பு நூல் எனவும் கொள்ளப் படுகின்றன.
  - ஆகமங்கள் சிறப்பு நூல்கள் என்ற வகையில், சைவ ஆகமங்களை சிவாகமங்கள் என்றும் வைணவ ஆகமங்களை சங்கிதைகள் என்றும் சாக்த ஆகமங்களை தந்திரங்கள் எனவும் அழைப்பர்.
  - இந்து சமய தத்துவக் கோட்பாடுகள் பலவற்றில் ஆப்த வாக்கியப் பிரமாணமாக அமையும் சிறப்புடையது.

    உ-ம்: வேதமொடாகமம் மெய்யாம் இறைநூல் ஓதும் பொதுவும் சிறப்புமென்றுள்ளன
    நாதன் உரையவை.... திருமந்திரம்
  - இந்துக்களின் கோயில் கட்டட, சிற்பக் கலைகளை எடுத்துக் கூறுவது ஆகம மாகும். பிற்கால சிற்பசாத்திர நூல்களுக்கு அடிப்படையாக அமைந்துள்ளது. ஆகமங்களை சிற்ப சாத்திரங்களாகவும் கொள்ளப்படும்.
  - இந்துக்களின் கிரியை மரபுகளை நெறிப்படுத்துவதில் ஆகமங்கள் முக்கிய இடம் பெறுகின்றன.
  - ஆகமங்கள் இறை வழிபாட்டை கிரியை நெறி மூலம் வழிப்படுத்துகின்றன. இக்கிரியை நெறியை எடுத்துக் கூறும் நூலே பத்ததிகள் ஆகும்.
  - ஆகமங்கள் ஆலய வழிபாடு, சமய அனுட்டானங்கள், சைவ சித்தாந்த சிந்தனைகள் போன்ற பல விடயங்களின் ஊடாக மக்களின் வாழ்க்கையுடன் நெருக்கமுற்று விளங்குகின்றன.

- **ஆகமங்களின் பொருள் மரபு**

  (அ) கிரியைகள்
  (ஆ) ஆலயக் கட்டட அமைப்பு
  (இ) சிற்பம், ஓவியம், நடனம்
  (ஈ) விக்கிரகவியல்
  (உ) தத்துவம்

- **ஆகமங்களின் முக்கியத்துவம்**
  - சமயம், தத்துவம், வாழ்வியல், கலை முதலானவற்றில் ஆகமங்களின் செல்வாக்கு.

**சிவாகமங்கள்**

- **சைவ ஆகமங்களின் பொருள் விளக்கம்**
  - ஆ - பசு, க - பதி, ம - பாசம். அதாவது பதி, பசு, பாசம் என்னும் முப்பொருள்களை உணர்த்தும் நூல்.
  - ஆகமம் என்பதில் உள்ள ஆ - சிவஞானம், க - மோட்சம், ம - மலநாசம். அதாவது மலத்தை நாசம் பண்ணி, சிவஞானத்தை உதிப்பித்து மோட்சத்தை நல்குவது எனவும் பொருள்படும்.
- சிவாகமங்களைச் சிவனே அருளினார் என்பது சைவ சமயத்தவர்களின் நம்பிக்கை.
  - மாணிக்கவாசக சுவாமிகள்

    ''மன்னுமாமலை மகேந்திரமதனில் சொன்ன ஆகமம்..... எனவும்

    ''ஆகமமாகி அண்ணிப்பான்......'' எனவும்

    ''அண்ணல் அருளில் அருளும் சிவாகமம்......'' எனவும் பாடியுள்ளமை, ஆகமம் தெய்வீக நூல் என்பதை உணர்த்தும்.
- சிவாகமங்களுள் மூலாகமங்கள் காமிகம் முதல் வாதுளம் ஈறாக 28. இவை சிவபேதம் கூறுபவை, உருத்திரபேதம் கூறுபவை என இருவகைப்படும்.
- சிவாகமங்கள் ஒவ்வொன்றும் சரியா பாதம், கிரியா பாதம், யோக பாதம், ஞான பாதம் என்னும் நான்கு பிரிவுகளை உடையன. அவையாவன:
  1. சரியா பாதம்- பிராயச்சித்த விதி, பவித்திர விதி, ஆலய அமைப்பு விதி, சுற்று பிரகாரம், கோபுரம், பரிபாலகர் அமைப்பு உமாமகேசுவரர் இலக்கணம், சிவலிங்க இலக்கணம்.
  2. கிரியா பாதம்-மந்திரம், உற்சவம், நித்திய, நைமித்திய, காமிய கிரியைகள், சிவசின்னங்களை அணியும் முறை.
  3. யோக பாதம்- அட்டாங்க யோகம், அட்டமாசித்திகள், ஆறுவகை ஆதாரங்கள்.
  4. ஞான பாதம்- முப்பொருள் உண்மை, புவனங்களின் தோற்றம்.

     ஞானபாதம் ஆகமாந்தம் எனவும் அழைக்கப்படுகின்றது.

**ஆலய நிருமாணமும் திருவுருவ அமைப்பும்**

- சிவாகமங்கள் கடவுள், ஆன்மா, கடவுள் வழிபாடு, ஆன்மாக்கள் ஆற்றும் வினைகள், சைவ சமய வாழ்க்கை, ஆலய அமைப்பு, ஆலயக் கிரியைகள், சித்தாந்த சிந்தனைகள் என்று சைவநெறிசார் பல விடயங்களைக் கூறுகிறது.
- சைவாகமங்கள் சைவ மக்களின் ஆன்மீக வாழ்வை ஆலயங்களை மையமாகக் கொண்டு கூறுகின்றமையைக் காணலாம்.
- ஆலய வழிபாட்டையும் அவைசார்ந்த அனுட்டானங்களையும் விதிகளாக விளக்குவ தனால் சிவாகமங்களுக்கு சாத்திரங்கள் என்ற பெயரும் உண்டு.
- அனைத்து மக்களும் ஆன்ம விடுதலை பெறவேண்டும் என்ற வகையிலேயே ஆகமங்கள் ஆலய வழிபாட்டை வகுத்துக் கூறுகின்றன.
- வேதங்கள் கூறும் அக்கினி வழிபாடும் சாதாரண மக்களுக்கு ஏற்புடைய உருவ வழிபாடும் சிவாகமங்களில் இணைவுறுகின்றன.

- சிவாகமங்கள் ஆலயம் அமைக்கும் இடம், ஆலய அமைப்பு, ஆலயத்தின் உறுப்புகள், அவை அமைய வேண்டிய இடங்கள், அவற்றின் அளவைப் பிரமாணங்கள், கோயிற் கிரியைகள், ஆலய அனுட்டானங்கள் போன்ற விடயங்களை விதிகளாக விபரிக்கின்றன.
- சிவாலயம் ஒன்றில் இடம்பெற வேண்டிய கருவறை, மண்டபங்கள், பரிவாரக் கோயில்கள், பிரகாரங்கள் மற்றும் கோபுரம், விமானம் என்பன அமைய வேண்டிய விதிகள் பற்றி இவற்றில் உண்டு.
- ஆலயம் ஒன்றில் அமைய வேண்டிய பிரகாரங்கள் பற்றி காமிக ஆகமம் 'பிரகார லட்சண விதிப்படலம்' எனும் தலைப்பில் விபரிக்கிறது.
- சிவாகமங்கள் ஆலய அமைப்பினூடாக திருவுருவ வழிபாட்டை வகுத்துக் கூறுகின்றன.
- சிவலிங்கத் திருமேனி, அர்த்தநாரீஸ்வரர், இலிங்கோற்பவர், கங்காதரர், தட்சணாமூர்த்தி போன்ற 25 மூர்த்தி பேதங்களை அமைக்க வேண்டிய விதிகளை ஆகமங்களே வகுத்துக் கூறுகின்றன.
- திருவுருவங்களை செதுக்குவதற்குரிய கருங்கல்லைத் தெரிவு செய்தல் பற்றி சிவாகமங்கள் 'சிலாபரீட்சணம்' என்ற தலைப்பில் கூறுகின்றன.
- திருவுருவங்களினுடைய பங்க அமைதிகள், அங்கலட்சணம், அவற்றின் அளவுப் பிரமாணம், ஆடை ஆபரணம் என்பன பற்றியும் அவற்றில் உண்டு.
- சுக்கிர நீதி - 'திருவுருவங்கள் அளவில் மிகினும் குறையினும் நலமுடையன அல்ல' என்கின்றது.
- திருவுருவங்களின் பிரதிமாலட்சணத்தில் ஆகமப் பிரமாணம் முதன்மையான இடம் பெறுகின்றது.

## ஆலயக் கிரியைகளும் அனுட்டானங்களும்

- அனைத்து மக்களின் ஆன்ம ஈடேற்றம் சிவாகமங்களின் உயிர் நாதமாக உள்ளது. சிவாகமங்கள் இந்நோக்கத்தை அடையும் வகையில் திருவுருவ அமைப்பையும் அவை சார்ந்த கிரியை முறைகளையும் வகுத்துக் கூறுகின்றன.
- ஆகமம் கூறும் உருவ வழிபாட்டின் அடிப்படையில் 'ஒரு நாமம் ஓர் உருவம் ஒன்றுமிலார்க்கு ஆயிரம் திருநாமம் பாடி தெள்ளேணம் கொட்டாமே' என்னும் மணிவாசகரின் வாக்கு அமைகிறது.
- சிவாகமங்கள் கூறும் கிரியை முறைகள் திருக்கோயிலையும் திருவுருவங்களையும் மையமாகக் கொண்டவை. நித்திய கிரியை நைமித்திய கிரியை, காமிக கிரியை, பிரதானமானவை அவற்றுடன் கர்ஷணம், பிரதிஷ்டை, உற்சவம் பிராயச்சித்தம் முதலான கிரியைகளும் இடம்பெறுகின்றது.
- கோயிற் கிரியைகளை சிவாகமங்கள் கர்ஷணம், பிரதிட்டை, உற்சவம், பிராயச்சித்தம் எனும் நான்கு பிரிவுகளாக வகைப்படுத்தியுள்ளன.

  கர்ஷணம் - ஆலயம் அமைப்பதற்குரிய இடத்தைப் பண்படுத்துதல்.

  பிரதிட்டை - ஆலயத்தில் திருவுருவங்களை பிரதிட்டை(நிறுவுதல்) செய்தல்.

  உற்சவம் - ஆலயத்தில் வருடமொரு முறை இடம் பெறும் திருவிழா

  பிராயச்சித்தம் - ஆலய கிரியைகளின்போது இடம்பெறும் குற்ற நிவர்த்தியின் பொருட்டு ஆற்றப்படும் கிரியை

- கோயில்களில் இடம்பெற வேண்டிய கிரியைகள், அவற்றை ஆற்றும் விதிகள், பூசையின் அங்கங்கள், மந்திர உச்சாடனம், நிவேதனப் பொருள்கள் என்பன பற்றிக் கூறுகின்றன.
- சிவாகமங்களில் வரும் பூஜா விதிப்படலம், மந்திராவதாரப் படலம் போன்ற பிரிவுகள் மேற்கூறிய அம்சங்களுடன் தொடர்புபட்டவை.
- திருவிழாக்களில் கொடியேற்றம் வாகனத் திருவிழா, மௌன உற்சவம், தேர்த் திருவிழா, தீர்த்தத் திருவிழா என்பவை பிரதானமானவை.

**சைவசித்தாந்த சிந்தனைகள்**

- சிவாகமங்கள் ஆலய வழிபாட்டுடன் சித்தாந்த சிந்தனைகளையும் கொண்டுள்ளன.
- சிவாகமங்களின் யோகபாதம், ஞானபாதம் என்பனவற்றில் சைவ சித்தாந்தக் கருத்துகள் அதிகம் உண்டு.
- கிரணம், ரௌரவம், பௌஷ்கரம் முதலான ஆகமங்கள் சித்தாந்த சிந்தனைகளைப் பெரிதும் கொண்டவை.
- பதி, பசு, பாசம் எனும் முப்பொருள் உண்மை, அவற்றின் இயல்புகள் பதியின் மூவகைத் திருமேனிகள், அவற்றின் இயல்புகள், ஐந்தொழில்கள், ஆன்ம ஈடேற்றம், மும்மலங்கள் போன்ற விடயங்களை ஆகமங்கள் கூறுகின்றன.
- கிரண ஆகமம் பதி படலம், பசு படலம், மாயா படலம், சத்திநிபாத படலம் போன்ற தலைப்புகளின் கீழ் சைவசித்தாந்த உண்மைகளை விபரிக்கின்றது.
- சிவாகமங்களில் சரியா பாதம், கிரியா பாதம், யோக பாதம், ஞான பாதம் என்பனவற்றின் சைவ சித்தாந்த சாதனைகள் குருலிங்க சங்கம வழிபாடு, சிவசின்னங்கள், தீட்சை பற்றிய விளக்கங்கள் உண்டு.
- இயமம், நியமம், ஆசனம், பிரணாயாமம், பிரத்தியாகாரம், தாரணை, தியானம், சமாதி எனும் அட்டாங்க யோகங்கள் பற்றியும் இவற்றில் காணப்படுகின்றன.
- அட்டாங்க யோகம் மூலம் கைகூடும் அட்டமா சித்திகளாகிய அணிமா, லகிமா, மகிமா, கரிமா, பிராப்தி, பிரகாமியம், ஈசத்துவம், வசித்துவம் பற்றியும் கூறுகின்றன.
- ஆன்மாவின் இறுதி இலட்சியமான வீடுபேறாகிய **சுத்தாத்துவித** முத்தி பற்றியும் சிவாகமங்கள் கூறுகின்றன.

**சாக்த ஆகமங்கள்**

- சக்தியின் சிறப்பு கூறுபவை.
- இதனை தந்திரங்கள் என அழைப்பர். இவை 77 ஆகும்.

இவற்றில் 1. மகாநிருவாணதந்திரம்
2. திரிபுரரகசியம்
3. காமகலாவிலாசம் முதலானவை குறிப்பிடத்தக்கவை.

## வைணவ ஆகமங்கள்

- வைணவ ஆகமத்தை தந்திரம், சங்கிதை, பாகவதசாத்திரம் எனவும் அழைப்பர்.
- 108 ஆகமங்கள். ஆயினும் சிலர் 218 எனவும் கூறுவர்.
- வைணவ ஆகமங்களை வைகாசன மரபு, பாஞ்சராத்திர மரபு, என இரண்டாகக் கூறுவர். வைகாசனம் வைதிக ரிஷியான விகாணஸ் என்பவரால் தொகுக்கப்பட்டது. இவை ஒரே தத்துவங்களைக் கொண்டவை.
- வைணவ ஆகமங்கள்
  உ-ம்: சகஸ்தியசங்கிதை, ஈஸ்வரசங்கிதை, காசிப சங்கிதை, அனிருத்தசங்கிதை

## இதிகாசம்

- இதிகாச இலக்கியங்களில் மகாபாரதம், இராமாயணம், சிவரகசியம் என்பன அடங்கும். அவற்றுள் மகாபாரதம், இராமாயணம் சிறப்பானவை. அவை ஆரம்பத்தில் சமஸ்கிருத மொழியிலே எழுதப்பட்டன. பின்பு வெவ்வேறு இந்திய மொழிகளிலே மொழிபெயர்க்கப்பட்டுள்ளன. மகாபாரதம், இராமாயணம் ஆகியன இந்திய நாட்டின் இந்துப் பண்பாட்டினை வெளிப்படுத்தும் இலக்கியங்களாக அமைகின்றன. ஐந்தாம் வேதம் எனப் போற்றப்படுபவை. வேத இலக்கியங்களின் விரிவுபட்ட நெறியாகக் கருதப்படுவதால் மகாபாரதத்தைச் சிறப்பாக ஐந்தாம் வேதம் எனவும் அழைப்பர்.
- இதிகாசங்கள் இந்துசமய கலைக் களஞ்சியமாகவும் விளங்குகின்றன. இந்து சமூகத்தில் ஏற்பட்ட சமுதாய மாற்றங்களை இதிகாசம் வெளிப்படுத்துகின்றது. மகாபாரதத்தின் ஒரு பகுதியான பகவத்கீதை உலகப்புகழ் பெற்றுள்ளது. சூதர்களால் ஓதப்பட்ட கதைகள் பின்பு முழுவடிவமாக தொகுக்கப்பட்ட பின்பே இன்றைய இதிகாச வடிவத்தைப் பெற்றுள்ளன. கிறிஸ்து சகாப்தத்திற்கு முன்பே தோற்றம் பெற்றாலும் குப்த ஆட்சிக் காலத்திலேயே இறுதி வடிவம் பெற்றுள்ளதெனக் கூறப்படுகின்றது.
- இந்துப் பண்பாட்டு அம்சங்களாகிய சமயம், வழிபாடு, அரசியல், வாழ்வியல் முறை, தர்மம் முதலிய விடயங்களை உள்ளடக்கமாகக் கொண்டுள்ளன.

### மகாபாரதம்

- 18 பருவங்களை உடையது. ஆதிபர்வம் தொடக்கம் மோட்சபர்வம் வரை ஒரு இலட்சம் சுலோகங்களைக் கொண்டது. உபதேச முறையானது. கி.மு. 6 ஆம் நூற்றாண்டில் எழுந்தது. விஷ்ணு பகவானை முதன்மைப்படுத்தும் நூல். அத்துடன் விஷ்ணுவின் பரத்துவமும் விளக்கப்படுகிறது. சாக்தம், கௌமாரம், சௌரம் முதலிய சமய நெறிகளுக்கான மூலங்களை அறிவதற்கு இந்நூல் துணையாகின்றது. பாகவதத்திற்கும் மூலமாக அமையும். சக்தி வழிபாடு பற்றிய தோத்திரப் பாடல்களும் கூறப்பட்டுள்ளன. உ-ம்: அருச்சுனன் சிவனை வழிபட்டு பாசுபதம் பெற்றமை.
- மகாபாரதம் உலகியல் சார்பும் தெய்வீக நம்பிக்கையும் கலந்த இலக்கியமாகும். தன்னிகரில்லாத்தலைவனின் தர்மநெறியை தெளிவான சிந்தனையுடன் விளக்கும் நூல் இதுவாகும். இந்நூலில் கூறப்படாத விடங்களை வேறெங்குமே காணமுடியாது என சிறப்பிக்கப்படுகின்றது.

- ஒவ்வொரு அத்தியாயமும் "ஓம் நமோ நாராயண்ய நமஸ்கிருதய " என்று ஆரம்பிக்கின்றது. பாகவத வழிபாட்டிற்கு இந்நூல் அடிப்படையாக அமைகின்றது. மகாபாரதத்தின் ஒரு பகுதியான பகவத்கீதை, கிருஷ்ண அவதாரத்தை வெளிப்படுத்தும் தத்துவ இலக்கியமாகவும் யோக நூலாகவும் பக்தி நூலாகவும் அமைந்துள்ளது.
- இந்து மதத்தின் பிரதான வழிபாட்டம்சங்கள், வாழ்க்கை முறைகள் அனைத்தும் மகாபாரதக் கதையில் வெளிப்படுத்தப்பட்டு, விரத வழிபாடு, தீர்த்த யாத்திரை, தல மகிமைகள், தவம், பூசை முறை, உருவ வழிபாடு, துறவு, தியானம் ஆகிய விடயங்களும் இந்நூலில் எடுத்துரைக்கப்படுகின்றது. துர்க்கா தோத்திரம் இங்கு இடம் பெறுகிறது.
- மகாபாரதத்தில் ராஜதர்மம் உயர்நிலையில் போதிக்கப்படுகின்றது. சாந்திபருவத்திலே அரச உபாயம், மக்கள் ஒழுக்கம் ஆகியன குறிப்பிடப்பட்டுள்ளன. அறத்தால் வருவதே உண்மை வெற்றி என்பது அரசியல் நெறியாக கூறப்படுகின்றது. வீஷ்ம பருவம், துரோண பருவம் என்பனவும் அரச தர்மங்களையே போதிக்கின்றன. வில் வித்தை போதித்தல், தபோவன வாழ்வு, குருகுல மரபு, இல்லற வாழ்வு முதலிய தர்ம விடயங்களும் மகாபாரதத்தில் கூறப்பட்டுள்ளன.
- பகவத்கீதை பாகவதநெறிக்கும், இந்து தத்துவக் கோட்பாடுகளுக்கும் அடிப்படையான தாகும். கடவுள், ஆன்மா, கன்மவினை, மறுபிறப்பு கோட்பாடு, கருமயோகம், பக்தி யோகம், ஞானயோகம் முதலிய விடயங்கள் இந்துக்கள் அனைவருக்கும் உரிய கோட்பாடுகளாக விளங்குகின்றன.
- மகாபாரதக் கதைகளை தழுவிய இலக்கிய வடிவங்கள் பல இந்துமதத்தை அலங்கரிக்கின்றன. வைகுந்த அம்மானை, பாரத அம்மானை, கிராதார்ஜீனியம் ஆகியவற்றில் பாரதக் கதை செல்வாக்குண்டு.
- தேவாரப் பாடல்களில் ''அடுத்தானை உரித்தானை அர்ச்சுனர்க்கு பாசுபதம் கொடுத்தானை'' என்னும் அடி பாரதக் கதையை எடுத்துக்காட்டுவதாக அமைந்துள்ளது.

### இராமாயணம்

- இராமாயணம் வடமொழியில் வான்மீகியால் முதலில் எழுதப்பட்டது. இந்நூல் ஏழு காண்டங்களை உடையது. அவை பாலகாண்டம், அயோத்தியாகாண்டம், ஆரண்யகாண்டம், கிஷ்கிந்தாகாண்டம், சுந்தரகாண்டம், யுத்தகாண்டம், உத்தரகாண்டம் என்பனவாம். 24000 சுலோகமும் உடையது. வெவ்வேறு காலங்களில் இடம்பெற்ற இந்துசமய கதைகளின் தொகுப்பாக இராமாயணம் முக்கியத்துவம் பெறுகிறது. கி.பி. 2 ஆம் நூற்றாண்டில் தொகுக்கப் பட்டது. வெவ்வேறு இலக்கிய மரபுகள் தமிழ்நாட்டில் பரவியபோது தமது பிரதேச மொழிக்கேற்ப பல மொழிகளில் பாடப்பட்டது.
- தமிழில் சோழர்காலத்தில் கம்பரால் கம்பராமாயணமும் இந்திமொழியில் துளசிராமாயணமும், வடமொழியில் இராம அவதாரம் விஷ்ணுவின் அவதாரமாகக் கொள்ளப்படும்.

- மகாபாரதம் இந்துசமய நெறியின் அடிப்படையானது. இராமாயணம் இந்து தர்ம நெறிக்கும் மானுட விழுமியங்களுக்கும் அடிப்படையாகும். இராமாயணத்தில் நட்பு, தவம், அரச உபாயம், ஒழுக்கம் ஆகிய விடயங்கள் சிறப்பாக போதிக்கப் பட்டுள்ளன.
- இராமாயணக் கதை மூலம் வட இந்திய கலாசார மரபுகள் தமிழகத்தில் பரவிய வரலாற்றை அறியமுடியும். இவை புதிய கலை மரபுகள் தோன்றுவதற்கும் பொருளாக அமைந்தன. இந்துக்களின் விருந்தோம்பல், செய்ந்நன்றி அறிதல், யுத்த தர்மம், ஆச்சிரம வாழ்க்கை முறைகள் என்பவற்றை அவை பிரதிபலிக்கின்றன.
- தேவாரப் பதிகங்களில் இராவணன் இறைவனிடம் அருள் பெற்ற வரலாறு சிறப்பாகக் கூறப்பட்டுள்ளது.
- ஆழ்வார் பாடல்களிலும் அயோத்தி இராமன் தெய்வீகத் தன்மை பெறுவது கூறப்படுகிறது பிற்கால சீதா வழிபாடு, ஆஞ்சநேய வழிபாட்டிற்கு ஆதாரமானது.

## புராணங்கள்

### புராணங்களின் அறிமுகம்

- புராணம் என்பதன் பொருள் விளக்கம்.
  புராணம் - பழமைவாய்ந்தது என்னும் கருத்துக்களைத் தரும். "பூரணாத் புராணம் இதி உச்சயதே "-முழுமையானதால் புராணம் என்ற கருத்தும் உண்டு.
- தோற்றம்
  - பௌராணிகர்களால் தோற்றுவிக்கப்பட்டது.
  - வைதீக ஒழுகலாறுகளைப் பேணும் வகையில் தோற்றம் பெற்றன.
  - தெய்வீக வரலாற்றைப் பரப்பும் நோக்கில் இடம்பெறுதல்.
- காலம் - குப்தர் காலம்
- புராணங்களின் பகுப்பு முறைகள்
  சிவ புராணங்கள் - 10
  விஷ்ணு புராணங்கள் - 04
  அக்கினி புராணம் - 01
  சூரிய புராணம் - 01
  பிரம புராணம்- 02 எனப் பகுப்பினைக் கொண்டவை.

### புராணங்களின் அமைப்பு

- வடமொழிப் புராணங்கள் 18. அவை மகா புராணங்கள் என்று அழைக்கப்படும். அவை சமஸ்கிருத மொழியில் உள்ளன. பல லட்சம் சுலோகங்களைக் கொண்டமைந்தவை.
- சூதர் ஓதிய மூவாறு தொல்கதை என்ற புராணக் கதை பற்றி கந்தபுராணம் குறிப்பிடுகிறது.
- பஞ்ச லட்சணங்கள் - சர்க்கம், பிரதி சர்க்கம், வம்சம், வம்சாநுசரிதம், மனுவந்தரம்
- தச லட்சணங்கள்: மேற்கூறிய பஞ்சலட்சணங்களுடன் முக்தி, கேது, ரக்ஷா, அபாரஷ்ய விருத்தி என்பனவும் அடங்கும்.
- தெய்வங்களின் வரலாறுகளைக் கூறுவது.
- சைவ, வைணவ நெறிகள் பற்றிக் கூறுவது.
- திருக்கோயில் வழிபாட்டு வழிமுறைகளை எடுத்துரைப்பது.
  - விரதம், தீர்த்தம், தவம், தலயாத்திரை, தோத்திரம்

- தெய்வீகப் பரத்துவத்தை விளக்குவது. அட்டவீரட்டக் கதைகள்
  சிவ பரத்துவம் - அடிமுடி தேடிய கதை
  விஷ்ணு பரத்துவம் - பாகவத புராண அவதாரம்
  சக்தி பரத்துவம் - துர்க்கை மகிடாசுரனை அழித்தது
- பக்தி மரபுகள்- மார்க்கண்டேயர், பக்த பிரகலாதன் கதைகள்
- கலை, அரசியல் மரபுகள் கொண்டமைபவை - விஷ்ணுதர்மோத்திரத்தின் உரையாடல்கள் கலை மரபு வளர்ச்சிக்கு ஆதாரமானவை.

**புராண இலக்கியங்கள் பிற்காலச் சமய மரபுகளில் செலுத்திய செல்வாக்கு**

- தல புராணங்களும், தமிழ்ப் புராணங்களும் தோன்றக் காரணமாக வடமொழிப் புராணங்கள் அமைந்தன
- மகாத்மியங்கள் / மான்மியங்கள் உருவாகக் காரணமானவை
  புராண படன மரபு, கந்த புராணக் கலாசாரம் என்பவை தோன்ற இடமளித்தவை
- பிற்கால வடமொழி நாடகம், காவியங்களுக்கு முன்னோடியானவை
- திருமுறைகளிலும் ஆழ்வார் பிரபந்தங்களிலும் புராணக்கதைகள் செல்வாக்குப் பெற்றமை
- சிற்ப, ஓவிய, நடனக் கலைகளுக்கு கருவாக அமைந்தவை

**முக்கியத்துவம்**

- நண்பர் போல் அறிவுரை வழங்குவது
- கோயில் வழிபாடு, உருவ வழிபாடு என்பன பற்றிக் கூறுவது
- சமயக்கருத்துக்களை இலகுபடுத்தியும், எளிமைப்படுத்தியும் கூறும் பாங்குடையது.
- அறநெறிப் போதனை புரிவது
- இந்து இலக்கிய மரபிற்கு அடிப்படையானது
- கலை - புராணங்களை அடிப்படையாகக் கொண்டு திருவுருவ வழிபாடு, சிற்பக்கலை மரபு, ஓவியக்கலை என்பன வளர்ச்சி பெற்றன.
- இலக்கியம் : இலக்கிய வடிவங்களுக்கும், குறிப்பாக பன்னிரு திருமுறைகள், நாலாயிர திவ்விய பிரபந்தங்கள் ஆகியவற்றுக்குப் புராணங்கள் பொருள் மரபாக அமைந்துள்ளன.
  பிற்காலக் காவியங்களுக்கு புராணங்கள் முன்னோடியாக அமைவன.
  புராணபடன மரபு வளர அடிப்படையானது

- சமயம் - புராணங்கள் சமய சின்னங்களுக்கு அடிப்படையாக விளங்குவன.
  புராணங்கள் இறைநம்பிக்கையை வலுப்படுத்துவன.
  பக்தி, தவம், தானம், விரதம், தீர்த்தம், மூர்த்தி, தலம், தியானம் முதலான சமய அடிப்படைகளைக் கூறுவன.
  சிவன், பிரமா, விஷ்ணு, சூரியன், முருகன், சக்தி முதலான தெய்வங்களின் பரத்துவம் கூறுவன.

- தத்துவம் - இந்துசமயம் சார்ந்த தத்துவ உண்மைகளைப் பாமர மக்களுக்கு கதைவடிவில் புராணங்கள் எடுத்துக் கூறுவன.

  (உ-ம்) 1. கருடபுராணம் - பாவச் செயல்கள் அதன் பிராயச்சித்தம் என்பனவற்றினைக் கூறும்

  2. ஸ்கந்த புராணம் -சூரன்போர் - ஆணவத்தைஅழித்தலைக் குறிக்கும்.

  3. மார்க்கண்டேய புராணம் -யம சங்காரம் - பக்தியின்சிறப்பு

  தசலட்சணத்தின் முத்தி, ஹேது, ரக்ஷா, அபாரஷ்ய என்பவை ஆன்மவினைகள், ஆன்ம அருள், ஆன்ம விடுதலை முதலிய விடயங்களைக் கூறும்

**கற்பித்தல் செயற்பாடுகள் :**

படி : இந்தியாவில் இந்து நாகரிகத்தின் வளர்ச்சி என்னும் தலைப்பிலுள்ளஒரு பகுதியைத் தெரிவுசெய்து, மாணவர்களுக்கு விருப்பை ஏற்படுத்தும்வகையில் முன்வையுங்கள்.

படி : மாணவர் குழுக்களுக்கு இடமளியுங்கள். தேவையான நூல்களையும்வழங்குங்கள.

படி : குழுக்களிலிருந்து ஒருவர் வீதம் தெரிவு செய்து, வகுப்பில் முன் வைக்கஇடமளியுங்கள்.

**உசாத் துணைகள்:**

| | | |
|---|---|---|
| வியத்தகு இந்தியா | - | ஏ. எல். பசாம் |
| இந்தியா ஒரு பண்பாட்டு வரலாற்றுச்சுருக்கம் | - | இலங்கை கல்வி வெளியீட்டுத் திணைக்களம் |
| இந்திய வரலாறு | - | நா. தருமராசன் |
| ஆரியர் ஆதி வரலாறும் பண்பாடும் | - | பேராசிரியர் வி. சிவசாமி |
| வாழ்வியற் களஞ்சியம் | - | ‘கு’ தொகுதி |
| இந்துப் பண்பாட்டு மரபுகள் | - | பேராசிரியர் கோபால கிருஷ்ண ஐயர் |
| வேதங்களும் ஆகமமங்களும் | - | இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம் |
| வடமொழி இலக்கிய வரலாறு | - | டாக்டர் கா.கைலாசநாத குருக்கள் |
| சைவத் திருக்கோயிற் கிரியைநெறி | - | டாக்டர் கா.கைலாசநாத குருக்கள் |

**தேர்ச்சி 1.0 : இந்து நாகரிகத்தின் வரலாற்றுப் பின்னணியையும் உலக நாகரிகங்களில் அதன் சிறப்பம்சங்களையும் இனங்கண்டு, அவை பற்றிய பகுப்பாய்வினை மேற் கொள்வார்.**

**தேர்ச்சி மட்டம் 1.1 :** தமிழகத்தில் சிவன், திருமால், முருகன், சக்தி ஆகிய கடவுளர்களின் வழிபாடு வளர்ச்சி பெற்றவாற்றை ஆதாரங்களின் துணை கொண்டு காலகட்டங்களாக வகுத்து காட்டுவார்.

**பாடவேளைகள் :** 06

**கற்றற் பேறுகள் :**

- தமிழகத்தில் ஏற்பட்ட சமய பண்பாட்டு மாற்றங்களை வெளிப்படுத்துவார்.
- சைவ வைணவ நெறிகளின் தனித்துவமான சிறப்பம்சங்களைக் குறிப்பிடுவார்.
- சங்ககாலத்தில் வடமொழிப் பண்பாடு சைவசமய மரபில் ஏற்படுத்திய மாற்றங்களைக் குறிப்பிடுவார்.
- சமஸ்கிருத கலாசாரம் தமிழ் கலாசாரத்தில் கலந்தமைக்கான ஆதாரங்களை எடுத்துக் காட்டுவார்.
- சங்ககால இலக்கியம். பாடல் சான்றுகளை ஆதாரமாகக் கொண்டு சிவ, விஷ்ணு, முருக,சக்தி வழிபாட்டைக் காட்டுவார்.
- பல்லவர் காலத்திற்கு முன்பு தமிழ் நாட்டில் ஏற்பட்ட பண்பாட்டு மாற்றங்களில் சமண பௌத்த செல்வாக்கும், சமஸ்கிருத பண்பாட்டுக் கலப்பும் காரணம் என்பதைக் குறிப்பிடுவார்.
- பல்லவர் காலத் தெழுந்த சைவசமய எழுச்சிகளையும்,நாயன்மார்களது பங்கும் பணியும் பற்றிக் கூறுவார்.
- ஆழ்வார்களது பாடல்களையும் வைணவ மீள் எழுச்சியையும் குறிப்பிடுவார்.
- பல்லவர் காலத்து சைவ அரசர் பெருமைகளைக் குறிப்பிடுவார்.
- பல்லவர் காலத்து இந்துசமய எழுச்சி சோழராட்சியில் பெருவளர்ச்சி பெற்றதை விளக்குவார்.
- சோழர்கால அரசியல்,சமயம், சைவ அடியார்கள் வைணவ அடியார்கள் கலை மரபு, இலக்கிய மரபு, தத்துவ வளர்ச்சி என்பவற்றை தனித்தனியாக எடுத்துக் கூறுவார்.
- விஜய நகர நாயக்கர்கால கலை, இசை, நாடகங்களை பற்றி எடுத்துரைப்பார்.
- விஜயநகர ஆட்சியில் பண்பாட்டு மாற்றங்களைக் குறிப்பிட்டு, தெலுங்கு,சமஸ்கிருத வரலாறுகள் கலந்தமையைச் சுட்டிக் காட்டுவார்.
- பல்லவர் சோழர்காலத்தில் விளங்கிய சக்தி,முருக வழிபாடுகள் விஜயநகர ஆட்சியில் மீட்டுருவாக்கம் பெற்றதை எடுத்துக் காட்டுவார்.

## 1:4:1 விடய உள்ளடக்க வழிகாட்டி :

**தமிழகப் பண்பாட்டு மாற்றங்களின் அறிமுகம்**

- தமிழகப் பண்பாடு கிறிஸ்து சகாப்தம் தொடக்கம் தற்காலம் வரையிலான வரலாற்று வளர்ச்சியை எடுத்துக் காட்டுகிறது.
  - சங்க இலக்கியங்களில் இந்து சமயப் பண்பாட்டிற்கான பல்வகை ஆதாரங்களை நோக்க முடியும்.
  - சங்ககால பிற்பகுதியில் வேத, புராண, இதிகாச மரபுகள் ஊடுருவியும் பரவியும் காணப்பட்டன.
  - தமிழ் மொழியும், சமஸ்கிருத மொழியும் கலந்த நிலையை பிற்கால சங்க இலக்கியங்கள் மூலமாக அறிகிறோம்.
  - திருமுருகாற்றுப்படை, பரிபாடல் என்பவற்றில் இடம்பெறும் செய்திகள் இந்து சமயப் பண்பாட்டை வெளிப்படுத்தும் ஆதாரங்களாகும்.

- களப்பிரர்களுக்கும், வைதீக பிராமணர்களுக்குமிடையிலான போராட்டம் சங்க மருவிய காலத்தில் நிகழ்ந்தது. மரபுவழி இந்து சமய அமைப்பில் அது மறுமலர்ச்சியை ஏற்படுத்தியது.
- களப்பிரர் சமண சமயச் சார்புடையவர்கள். அதனால் களப்பிரர் ஆட்சிக்காலம் தமிழக வரலாற்றில் பின்னடைவுக்காலம் என்று குறிப்பிடலாம்.
- பௌத்த மதச் செல்வாக்கும் தமிழகத்தில் பரவலாயிற்று.
- கி.பி. 4 ஆம் நூற்றாண்டளவில் ஆந்திரா நாட்டின் தென்பகுதியில் ஆதிக்கம் செலுத்திய பல்லவர்கள் பினனர், கி.பி. 6 ஆம் நூற்றாண்டளவில் காஞ்சிபுரத்தை தலைநகரமாகக் கொண்ட தொண்டை மண்டலத்தில் தமது ஆதிக்கத்தை விரிவு படுத்தினர்.
- பல்லவர்களில் சிம்மவிஷ்ணு, குமாரவிஷ்ணு ஆகியோர் ஆரம்ப கால அரசர்களாவர்.
- பல்லவ அரசர்களின் ஆட்சிக் காலத்தில் வைதீக சமயநெறியானது தமிழக சைவநெறியுடன் கலந்தமையைப் பின்வரும் விடயங்கள் விளக்குகின்றன.
  - பிராமணர்களுக்கு நிலமானியங்கள் வழங்கப்பட்டமை.
  - வேத, ஆகம கல்வி மரபு பரவியமை - காஞ்சி கடிகைஸ்தானம்
  - ஆலயங்களை அடிப்படையாகக் கொண்ட கிராமங்கள் எழுச்சி பெற்றமை.
  - மன்னர்களும், மக்களும் சைவ, வைணவ மதங்களைத் தழுவியமை.
  - வேதம், வேதாங்கம், மீமாம்சை முதலியன போதிக்கப்பட்டமை.
  - மரபுவழியான சைவமரபு மறுமலர்ச்சியடைந்தமை - பிரமதேயம், அக்கிரகாரங்களின் எழுச்சி
- தமிழ்நாட்டில் வேதாகம சிந்தனை பரவி, மரபுவழியான சைவ வைணவ மதங்களில் கலந்தமை சைவசமய பக்தி இயக்கமும், வைணவ பக்தி இயக்கமும் தோன்றக் காரணமாயிற்று.
- தொண்டை மண்டலத்தில் ஆரம்பித்த பக்தி இயக்கம் சோழ மண்டலத்திலும் பரவ லாயிற்று. இதன் விளைவாக சைவ நாயன்மார்களும், வைணவ ஆழ்வார்களும் தத்தம் சமயநெறி வளர்ச்சிக்கு பல பணிகளைச் செய்தனர்.
  - சிவனடியார்கள், பொதுமக்கள், கலைஞர்கள் முதலானோர் நாயன்மார்களுக்கும் ஆழ்வார்களுக்கும் உதவினர். இந்த கூட்டுக் நிலையே பக்தி இயக்கமாகியது
  - இந்துப்பண்பாடு இந்து அரசர்களின் ஆதரவோடும் வளர்ச்சியடைந்தது.
- தமிழ் நாட்டில் பல்லவர் ஆட்சியைத் தொடர்ந்து, தஞ்சையிலிருந்து ஆட்சி செய்த முதலாம் ஆதித்தன், முதலாம் பராந்தகன் முதலான சோழ மன்னர்கள் பல்லவர்களின் ஆட்சிப் பிரதேசங்களை வென்று சோழ மண்டலத்தைக் கைப்பற்றி ஆட்சி உரிமையை நிலை நாட்டினர். அத்துடன் வட நாடு, தக்கணத்தின் சில பகுதிகள், இலங்கை தென்கிழக்காசிய நாடுகளிலும் சோழராட்சி பரவியது.
- முதலாம் இராஜராஜன், முதலாம் இராஜேந்திர சோழன் ஆகியோரின் ஆட்சிக் காலத்திலே இந்துப் பண்பாட்டுப் பணிகள் உச்சநிலையை அடைந்தன. குறிப்பாக சைவசமயம் உச்சநிலை அடைந்தது. முதலாம் இராஜராஜன் இலங்கையில் ஆதிக்கம் செலுத்த, முதலாம் இராஜேந்திரன் இந்தியாவின் கங்கைநாட்டை வெற்றி கொண்டான் என்று கூறப்படுகிறது.
- சோழராட்சியில் கோயில்கள் சமுதாய மைய நிறுவனங்களாகின.
- பல்லவ பக்திநெறிப் பண்பாடு சோழராட்சியில் நிறுவனமயமாகியது.
- நாயன்மார் வழிபாடுகள் விருத்தியடைந்தன. நாயன்மார் பாடல்களும் கோயில்களில் பாடப்பட்டன.
- சைவ, வைணவ சமயப் பக்திப் பாடல்கள் தொகுக்கப்பட்டன.
- கோயில்களில் ஆடல், பாடல் என்பன விருத்தியடைந்தன.
- காப்பியம் சார்ந்த சைவ இலக்கியங்களும் எழுந்தன. சைவசித்தாந்தமும் எழுச்சி யடைந்தது.

- சோழராட்சியின் இறுதியில் வடஇந்தியாவில் ஆதிக்கம் கொண்டிருந்த இஸ்லாமிய கலாசாரம் தென்இந்தியாவிலும் தாக்கத்தை ஏற்படுத்தியது. இஸ்லாமிய எழுச்சியை தொடர்ந்து இந்துப் பண்பாட்டை பாதுகாக்க கி.பி. 1336 இல் துங்கபத்திரா நதிக்கரையில் காணப்பட்ட விஜய நகரத்தில் இந்து அரசு ஒன்று நிறுவப்பட்டது.
- விஜய நகர அரசர்கள், தமிழ்நாட்டிலும் தமது ஆதிக்கத்தை கி.பி. 16 ஆம் நூற்றாண்டு வரை நிலைநிறுத்தினர்.
  விஜயநகர அரசரின் பிரதானிகளாக நாயக்க அரசர்கள் ஆதிக்கம் செலுத்தினர்

## சங்க காலம்

- சங்ககாலமானது தமிழர் சமயநெறியின் பண்பாடு, கலை, இலக்கியம் ஆகியவற்றின் தொன்மைச் சிறப்பினைக் காட்டும் காலமாக அமைந்தது. சங்ககால நெறியில் சங்ககாலம், சங்கம் மருவிய காலம் இரண்டும் உள்ளடக்கப்படுகின்றன.
- சங்ககாலம் என்பது தமிழ்நாட்டின் ஆரம்பப் பண்பாட்டினைக் குறிக்கின்ற காலம் ஆகும். இக்காலத்திலே மௌரியர், யவனர், நந்தர் ஆகியோரது பண்பாட்டம்சங்கள் தமிழ் நாட்டில் கலந்தமை பற்றிய குறிப்புக்களும் உண்டு. அதுமட்டுமன்றி வடமொழி இலக்கியம்சங்கள் கலந்த வரலாறுகளும் காணப்படுகின்றன.
- சங்ககால அரசியல் பின்னணியில் அரசன் சமூகத்தால் ஏற்கப்பட்ட தலைவனாக மாறினான். அவன் குடிமக்களின் நலன்கருதி, பிராமணர்களுக்குத் தானம் வழங்கி மக்களை நீதிமுறை வழுவாது காத்தான்.
- சங்ககால சமுதாயப் பின்னணியில் ஐவகை நிலவாழ்வுக்கு அமைய சமுதாய அமைப்பு நிலவியது. மக்கள் வாழ்வில் இசை, நடனம் கலந்த பண்பாடு காணப்பட்டது. ஐவகை நில அமைப்புக்கேற்ப வழிபாடுகள் காணப்பட்டன. பிராமணர்களது கலாசாரப் பரவல் இக்காலத்தில் ஏற்பட்டது. இயற்கையோடு இயைந்த வாழ்வு வாழ்ந்தாலும் வழிபாடு, சடங்கு, கலையுணர்வு மிக்கவர்களாக வாழ்ந்தனர்.
- கலைப் பின்னணியை நோக்குகையில் கட்டட அமைப்புக்கள், சித்திரமாடங்கள் துணங்கைக் கூத்துக்கள், பாணர் இசைகள் முதலியன காணப்பட்டன. ஆடல்களை வடமொழிக் கதை தொடர்பில் ஆடியதாக அறிய முடிகின்றது.
  மேற்படி பின்னணிகளிலேயே சங்ககால சமய நெறி நோக்கப்படுகின்றது.
- இந்துப் பண்பாட்டு நிலை வடநாட்டின் வைதீக சமயநெறியும் தமிழ்த் தெய்வமரபும் கலந்து காணப்பட்டன.
  - மாயோன், சேயோன், வேந்தன் வழிபாடுகள்" இதற்கு ஆதாரமானவை.
- சிவ வழிபாட்டில் புராணக்கதை மரபுகள் பரவியமை, சைவசமயம் சார்பான திருவாதிரை நாள் பற்றிய விரிவான குறிப்புக்கள் காணப்படுகின்றன.
  கறைமிடற்றண்ணல், ஆலமர்கடவுள், முக்கட்செல்வன் என சிவன் போற்றப்பட்டமை.
  கொற்றவை சக்தி வழிபாட்டில் சங்கமித்தமை.
- திருமுருகாற்றுப்படை பிராமணிய வழிபாட்டையும் நாட்டார் வழிபாட்டையும் இணைத்துக் கூறுகின்றது.

- சங்ககாலத்தில் வைணவ வழிபாடு தோற்றம் பெற்றது. தொல்காப்பியத்தில் மாயோன் மேய மைவரை உலகு என்று கூறப்பட்டுள்ளது. வைணவம் முதன்மை பெற்றது என்பதற்கு இதுவே சான்று.
- வழிபாட்டம்சங்களில் வெறியாட்டு, நடுகல், பாவை நோன்பு என்பன இடம்பெற்றன. சங்க இலக்கியம் தழுவியே வைணவ வேதாந்த வளர்ச்சிகள் ஏற்பட்டன.
- முருக வழிபாடு ஆரிய - திராவிட இணைப்பைக் காட்டுவதாய் அமைகிறது. திருமுருகாற்றுப்படையில் இரு வகை வழிபாடு, ஆறுபடை வீடுகள் என்பன கூறப்பட்டுள்ளன.
- சங்ககால இந்து தர்மநெறி

  ஒரு இனத்தின் பண்பாடானது அந்த நாட்டின் வளங்களை வைத்து அறியப்படுவ தில்லை. அந்நாட்டு மக்களின் பண்புநலன் பற்றியே கூறப்படும் என்று வலியுறுத்தப்பட்டுள்ளது. "யாதும் ஊரே யாவரும் கேளிர்" என்ற ஒருமைப்பாடு தர்மத்தை எடுத்துக் காட்டுகின்றது.

  "தீதும் நன்றும் பிறர்தரவாரா" என்பது இந்துப் பண்பாட்டின் உயர் விழுமியத்தின் அடிப்படையில் எழுந்ததுவேயாகும். மனச்சாட்சியை விட உயர் தர்மம் எதுவும் இல்லை என்பது கலித்தொகைப் பாடல்களிலே குறிப்பிடப்பட்டுள்ளது.

## பல்லவ, பாண்டியர் காலம்

- கி.பி. 3 ஆம் நூற்றாண்டில் பல்லவர்கள் ஆந்திர தேசத்தின் தென்பகுதியில் செல்வாக்குச் செலுத்தினர். பின்னர் தொண்டை மண்டலத்திலும் அவர்கள் ஆதிக்கம் பரவியது. தொண்டை மண்டலத்தின் தலைநகரமாக காஞ்சிபுரம் விளங்கியது. அங்கு பிராகிருத மொழி ஆட்சி மொழியாகவும் பண்பாட்டு மொழியாகவும் விளங்கியது.
- கி.பி. 3 ஆம் நூற்றாண்டினைத் தொடர்ந்து தமிழ்நாட்டில் களப்பிரர் ஆதிக்கமும் பௌத்த சமயச் செல்வாக்கும் ஏற்பட்டன. இவ்வேளையிலே ஆரம்ப கால பல்லவ அரசர்கள் வைதீக சமயத்தை வளர்த்தனர். வேதக் கல்வி மரபு பரவியது. ஆலயங் களை அடிப்படையாகக் கொண்ட கிராமங்கள் எழுச்சியடைந்தன. புராண இதிகாசக் கதைகளும் பரவின. சமண சமயத்தைச் சேர்ந்த மன்னர்கள் சைவ சமயத்துக்கும் வைணவ சமயத்துக்கும் ஆதரவு வழங்கினர்.
- தமிழ் நாட்டின் வடபகுதியில் காஞ்சிபுரத்தில் வடமொழிக் கல்விக்கூடம் அமைந் திருந்தது. அங்கு வேதாங்கம், மீமாம்சை முதலியன போதிக்கப்பட்டன. கூரம் செப்பேட்டில் கி.பி. 6 இல் வைதீகப் பல்லவர்கள் ஆட்சி செய்தமையைக் குறிப்பிடுகின்றது.
- பல்லவர் ஆட்சியோடு இணைந்து பாண்டிய அரசர் செல்வாக்கும் இடம்பெற்றது. கூன்பாண்டியன், பாண்டிமாதேவி முதலியோர் பல்லவர் காலத்தவர்.

- **பல்லவராட்சியில் வேதாகம மரபுகள்**
  - பல்லவ மன்னர்கள் பிராமணக் குடியிருப்புக்களை விரிவுபடுத்தினர்.
  - வேதாகம மரபுகள் பரவின.
  - திருக்கோயில்கள் எழுச்சி பெற்றன. கோயில் பூசை மரபுகளும் ஏற்பட்டன. திருக்கோயில் நகரங்களும் உருவாகின.
  - அரண்மனையில் சமயச்சடங்குகள் மேலோங்கின.
  - அரண்மனைச் சடங்குகள் ஆலயச்சடங்குகளாக மாற்றமடைந்தன.
  - மன்னர்களும் வேதாகம மரபுகளைப் பேண, மக்களும் சைவசமயச் சார்புடைய வர்களாகினர்.

- **அரசர்களும் சைவ மரபும்**
  - சிம்மவிஷ்ணு வைணவ சமயத்தவனாவான். இவனது மகனே மகேந்திரவர்மன்.
  - பல்லவர் காலத்துப் பக்தி நெறியில் பெரும்பங்கு வகித்தவன் சிம்மவிஷ்ணுவே. ஆயினும் மகேந்திரவர்மன் காலத்திலேயே இந்து மத மறுமலர்ச்சியும் சமயநிலையில் திருப்பங்களும் புதுமைகளும் ஏற்பட்டன.
  - பல்லவர்களின் சமய சின்னமாகிய நந்திச் சின்னமும் சிவனின் கட்டுவாங்கக் கொடியும் அவர்கள் சைவத்தின் மீது கொண்டிருந்த ஈடுபாட்டைப் புலப்படுத்துகின்றன. கூரம், காசாக்குடிப் பட்டயங்களில் நந்திக்கு மேல் லிங்கம் அமைக்கப்பட்டுள்ளது.
  - கோயிற்பணிகளில் மாற்றமேற்பட்டது. மகேந்திரவர்மன் மண், மரம் தவிர்த்து புதிய கற்கோவில்களைக் (குணபர ஈச்சரம்) கட்டுவித்தான். வட மொழிக் கல்வி பரவி, வேள்விக் கிராமங்கள் உருவாகின. சாளுக்கியப் படையெடுப்பை முறியடித்து, சைவ சமயத்தைப் பாதுகாத்தான். சைவ சமயத்திலிருந்து சமணத்திற்கும் பின் சைவ சமயத்திற்கும் மதம் மாறினான். இவனால் சீயமங்கலம், வல்லம் முதலிய இடங்களில் குட போக ஆலயங்கள் அமைக்கப்பட்டன. விசித்திரசித்தன், வியத்தகு திறத்தோன், சங்கீர்ணஜாதி, குணபரன், மத்தவிலாசன், ஷேத்காரி, சித்திரகாரப்புலி என்னும் விருதுப் பெயர்களும் மகேந்திரவர்மனுக்கு வழங்கப்பட்டன.
- மகேந்திரவர்மன் நூலாசிரியனாகவும், கட்டட நிர்மாண சிற்பியாகவும், இசை வல்லுனனாகவும், ஓவியனாகவும் விளங்கியமையே இதற்குக் காரணமாகும்
- திருச்சிராப்பள்ளிக் (குகைக் கோயில்) கல்வெட்டு மகேந்திரவர்மனது சைவப்பணி களைக் குறிப்பிடுகின்றது. குடுமியாமலைக் கல்வெட்டில் இடம்பெற்றுள்ள சிவதோத்திரம் மகேந்திரவர்மனின் ஆழ்ந்த சிவபக்தியைப் புலப்படுத்துகின்றது.
- 1 ஆம் சிம்மவர்மன் திருக்கழுக்குன்றம் சிவன் கோயிலுக்குத் தானம் செய்ததாக, சாசனச் சான்று குறிப்பிடுகின்றது.
- 3 ஆம் சிம்மவர்மனே ஐயடிகள் காடவர்கோன் என்று புகழ் பெற்ற சைவ அடியார் ஆவார். இவர் 24 சிவத்தலங்கள் பற்றி, ஷேத்திர வெண்பா பாடியுள்ளார்.

- பல்லவ அரசவம்சத்தை பின்வருமாறு குறிப்பிடலாம்.

## முற்காலப் பல்லவர் 300-600

பப்பதேவன்

சிவஸ்கந்த வர்மன்

விஷ்ணுகோபன் (கி.பி.340)

குமாரவிஷ்ணு

ஸ்கந்தவர்மன்

வீரகூர்ச்சவர்மன்

ஸ்கந்தசிஷ்யன்

- சிம்மவர்மன்
  - ஸ்கந்தவர்மன் (கி.பி.600)
  - நந்திவர்மன் 1
  - நந்திவர்மன் 2
- விஷ்ணுவர்மன்
  - சிம்மவர்மன் 2
  - விஷ்ணுகோபவர்மன்
  - சிம்மவர்மன் 3
  - சிம்மவிஷ்ணு (கி.பி.575-600)
- குமாரவிஷ்ணு

**இடைக்காலப் பல்லவர்**

மகேந்திரவர்மன் (கி.பி.600-630)

நரசிம்மவர்மன் 1 (மகாமல்லன்) (630-668)

பரமேசுவர்மன் 1

இராஜசிம்மன் (கி.பி.680-700)

(நரசிம்மவர்மன் 2

- பரமேசுவரவர்மன் 2
- மகேந்திரவர்மன் 3

**பிற்காலப் பல்லவர்**

நந்திவர்மன் 2

இன்ன பிற அரசர்கள்

- **மாமல்லன்**
  - பல்லவ அரசர்களில் மாமல்லன், ‘முதலாம் நரசிம்ம பல்லவன்’ என்று அழைக்கப்பட்டான். வாதாபிச் சாளுக்கியருடன் போராடி, தமிழகத்தை மீட்ட பெருமை இவனுக்குண்டு.
  - ரதக் கோயில்களை அமைத்து திறந்தவெளிப் பாறைகளில் சிற்பக்கூடங்களை அமைத்தவனும் இவனே. வாதாபியை வெற்றி கொண்டதை அடுத்து, வாதாபி கணபதியை தமிழ் நாட்டிற்கு வெற்றிச்சின்னமாகக் கொண்டு வந்தான்.
  - மாமல்லபுரக் கலைக்கூடத்தையும் குடபோக மண்டபங்களையும் ஒற்றைக்கல் ரதக் கோயில்களையும் அமைத்தான். புராண இதிகாசக் கதைகளைச் சிற்பங் களாக வடித்தான்.
  - வராக மண்டபம், மகிடாசுர மண்டபம், பாண்டவ ரதங்கள் என்பன இவர் காலத்தவையாகும்.
  - மாமல்லபுர ஒற்றைக்கற் கோயில்களில் அருச்சுனன் ரதம், தர்மராஜ ரதம் ஆகியவை சிவனுக்குரியவை.
- **பரமேசுவரவர்மன்**
  - வித்யாவிநீதன் எனும் விருதுப்பெயர் கொண்ட இவன் “கூரம்” என்ற இடத்தில் சிவன் கோயிலொன்றை அமைத்தான். அக்கோயிற் பூசைகளுக்கென 108 சதுர்வேதிகட்கு நிலமளித்ததாக அறியமுடிகின்றது.
  - இவன் தனது திருமுடியில் உருத்திராட்சத்திலான மகா சிவலிங்கத்தைத் தரித்திருந் தான் என அறிஞர்கள் சான்றுகளைக் காட்டுகின்றனர்.
  - மாமல்லபுரக் கணேசர் கோயிற் கல்வெட்டு, பரமேசுவரவர்மனின் ஆழ்ந்த சிவபக்தியினை எடுத்துக்காட்டும். அது வருமாறு: “சிவனுக்குமேல் தெய்வம் இல்லை; அவனே முழுமுதற்கடவுள்; சிவனை நினையாதோர் ஆறு முறை சபிக்கப்பட்டவர்கள்.”
- **இரண்டாம் நரசிம்மவர்மன் (இராசசிம்மன்) பணிகள்**
  - 40 ஆண்டுகள் ஆட்சி செய்தான். இவனுடைய காலத்தில் தமிழ்நாட்டில் அமைதி நிலவியது. சிவ பக்தனாகையால் இவன் காலத்தில் சைவ நெறி சிறப்பாக வளர்ச்சி கண்டது. மகாபலிபுரத்திலும் காஞ்சிபுரத்திலும் சைவ ஆலயங்களையும் வைணவ ஆலயங்களையும் அமைத்தான். காஞ்சிக் கடிகையை மறுசீரமைப்புச் செய்து, வடமொழிப் பண்பாட்டைப் பரப்பினான்.
  - பிற்காலத்தில் பல்லவர் பாண்டியர் தொடர்பு வலுப்பெற்றது. தமிழகத்தின் வடக்கில் பல்லவர்களும் தெற்கில் பாண்டியர்களும் ஆட்சி செய்தனர். அவர் களிடையே சமயப் பண்பாட்டு அடிப்படையில் ஒருமைப்பாடு நிலவியது.
  - மேற்படி அரசர்கள் முதலில் தொண்டை மண்டலத்தையும் அதனைத் தொடர்ந்து சோழ மண்டலத்தையும் தமது ஆதிக்கத்துக்கு உட்படுத்தினர். ஆந்திர மண்டலத்தின் தென்பகுதிகளும் பல்லவர் ஆதிக்கத்தின் கீழ் வந்தன. இவ்வரசர் காலத்தில் சைவ வைணவ ஆலயங்களுக்கு தனித்தனிச் சொத்துக்கள் வழங்கப்பட்டன. சிவாலயங்களுக்குச் சொந்தமான நிலபுலங்கள் “தேவதானம்” என்றும் வைணவ ஆலயங்களுக்குச் சொந்தமான நிலங்கள் “திருவிடையாட்டம்” என்றும் அழைக்கப்பட்டன.



-

- இக்காலத்தில்,
  - வடஇந்தியாவிலிருந்து வந்த வைதீக கலாசாரம் தமிழ் கலாசாரத்துடன் கலந்தது.
  - சதுர்வேதிமங்கலங்களும் கிருஷ்ணமங்கலங்களும் பெருகின.
  - வைதீகக் கல்வி பரவியது. புராண இதிகாசக் கதைகளும் போதிக்கப்பட்டன.
  - தமிழ்நாட்டு மக்கள் புராண இதிகாசக் கதைகளை அறியும் வாய்ப்பு ஏற்பட்டது.
  - சைவம், வைணவம் என்பவற்றுடன் பாசுபதம், கபாலிகம் என்னும் சைவப் பிரிவுகளும் வைசேடியம், சாங்கியம் முதலிய தத்துவக் கோட்பாடுகளும் பரவலாயின.
  - சிவசூடாமணி, சங்கரபக்தன், ஆகமப்பிரியன், ரிஷபலாஞ்சனன், சைவசித்தாந்த மார்க்கன் எனும் விருதுப்பெயர்கள் அவன் சைவத்தின் மீது கொண்ட ஈடுபாட்டினைப் புலப்படுத்துகின்றது.
  - இராசசிம்ம அரசன் அமைத்த பெரிய திருக்கற்றளி - காஞ்சி கைலாசநாதர் கோயில், தமிழகத்தின் பெரிய கட்டுமானக் கோயில் என்ற பெருமையைப் பெறுகின்றது.
  - "கலியுகத்தில் அசரீரி கேட்டவன் " என்று சாசனங்களில் குறிப்பிடப்படுகின்றான். பூசலார் நாயனார் வரலாற்றுடன் தொடர்புபடுத்தப்படும் மன்னன் இவன் எனக் கருதப்படுகின்றது.

- **சைவ, வைணவ அரசர்கள்**
  - ஆலயப் பணியில் ஈடுபட்டனர். கிராமங்களைத் தேவதானமாக வழங்கினர். கலைஞர்கள், சிற்பிகள், புரோகிதர்கள் சைவ வைணவ சமயப் பணிகளில் ஈடுபட்டனர். ஆலயங்கள் கல்வி, பண்பாட்டு நிலையங்களாக விளங்கின. ஆலயங்களில் வேதக்கல்வி, இதிகாச புராணக் கதை மரபு என்பன பரப்பப்பட்டன. வைணவ சமயம் தமிழகத்தில் ஆழ்வார்கள் மூலமாகச் செல்வாக்குப் பெற்று, தென்கலை வைணவமாகச் சிறப்புற்றது.
  - பல்லவர் காலத்து சைவநெறி பல்வேறு பிரிவுகளைக் கொண்டிருந்தது. ஆகம வழியை பின்பற்றிய மாகேஸ்வரர்கள் வீர ஆகமங்களைக் கடைப்பிடித்து வீர சைவர்கள் எனப்பட்டனர். காளாமுகர், மாவிரதர், பாசுபதர் முதலிய சைவ சமயப் பிரிவினர் காணப்பட்டனர். இவ்வேளையிலேயே நாயன்மார்கள் சைவ சமய பக்திநெறியை வெளிப்படுத்தினர்.

- **சைவ சமய பக்தி இலக்கியங்கள்**
  - புறச் சமயக்கண்டனம், சைவ சமய மீட்டுருவாக்கம், இறைவனை அன்புவழியில் வழிபடல், தோத்திரப் பாடல்கள் தோன்றுதல், பதிகம் பாடல், இசையுடன் பாடல் கலைஞர்களை இணைத்தல், சைவப் பெண்களைப் பக்தி இயக்கத்தில் இணைத்தல், மன்னர்களை சைவ சமயத்தில் சேர்த்தல், சிவசின்னங்களைப் பேணுதல், பஞ்சாட்சர மந்திரம் ஓதுதல் போன்றவற்றை சைவபக்தி இயக்கத்தினர் கடைப்பிடித்தனர். ஆலயத் தொண்டுகளைச் செய்தனர். ஊர் ஊராகச் சென்று, புராணக் கதைகளைக் கூறினர். ஆடிப்பாடி வழிபாடு செய்தனர்.

    "காதலாகிகக் கசிந்து கண்ணீர் மல்கி ஓதினர்....
    பூவார் மலர்கொண்டு அடியார் தொழுதனர்......
    என்கடன்பணி செய்து கிடப்பதே" என சாதனை செய்தனர்....

- அன்பு நெறி வழிபாட்டில் இறையருள் மூலம் அற்புதங்கள் பல விழைந்தன. பொது மக்களின் துன்பங்கள் விலகின. சிவனடியார் பக்தி இயக்கத்தில் கலந்து செயற்பட்டனர். பொதுமக்கள் நாயன்மார்களுடன் சேர்ந்து வழிபாட்டில் ஈடுபட்டனர். அனல்வாதம், புனல்வாதம் என்பவற்றால் சைவசமயமே மெய்ச் சமயம் என வலியுறுத்தப்பட்டது. பக்திநெறியால் இறைசிந்தனை ஊட்டும் இனிமையான பதிகங்கள் தோற்றம் பெற்றன. நாயன்மார்கள் பல்வேறு மார்க்கங்களில் சிவனைப் போற்றினர். அவை தாச மார்க்கம், சற்புத்திர மார்க்கம், சக மார்க்கம், சன் மார்க்கம் என்பனவாகும்.

- **ஆழ்வார்களும் வைணவத் திருப்பணிகளும்**
- திருமால் பக்தியில் மூழ்கித் திளைத்தவர்கள் ஆழ்வார்கள். திருமால் மீது தமிழில் தோத்திரப் பாடல்களை இசையுடன் பாடி வைணவ பக்தியை வளர்த் தார்கள். அன்பை விளக்காகவும், ஆர்வத்தை நெய்யாகவும் கொண்டு ஆன்ம ஒளி விளக்கேற்றி வழிபாடு செய்தவர்கள் ஆழ்வார்கள். கடவுள் மீது இடையறாத ஈடுபாடு கொண்ட ஆழ்வார்கள், தோத்திரப் பாடல்களைப் பஜனையாகப் பாடும் மரபையும் கொண்டவர்கள். வைணவ பிரபந்தத்திற்கு புராண, இதிகாசக் கதைகளை ஆதாரமாகக் கொண்டனர். பெரிய திருவந்தாதி, திருவாய்மொழி, திருமடல், திருப்பாவை முதலிய பிரபந்த வகைகளைப் பாடினர்.
- பல்வேறு பாவங்களில் விஷ்ணுவைப் போற்றினர். தாஸ்ய, மதுர, வாத்சல்ய, சகிய முதலான பாவங்கள்.
- மங்களாசனம் பெற்ற திவ்ய தேசங்களின் உருவாக்கத்திற்கு ஆழ்வார்கள் அடித்தளமிட்டனர்.

**சோழர் காலம்**
- சோழ அரசர்களில் முதலாம் ஆதித்தன், முதலாம் பராந்தகன் ஆகியோர் ஆரம்ப கால அரசர்களாவர். அவர்களைத் தொடர்ந்து முதலாம் இராஜராஜன், முதலாம் இராஜேந்திரன் ஆகியோர் ஆட்சி செய்தனர்.
- முதலாம் இராசராசன் மும்முடிச்சோழ மண்டலத்தையும் கங்கை நாடு, கடாரம், தொண்டை மண்டலம், வேங்கி மண்டலம் ஆகிய நாடுகளையும் தமது ஆதிக்கத்தின் கீழ்க் கொண்டு வந்தான்.
- சோழ அரசர்கள் சைவநெறி தழுவியவர்கள். அதனால் திருநீற்றுச்சோழன் என்றும் திரிபுவனச் சக்கரவர்த்திகள் என்றும் சிவபாதசேகரன் என்றும் பல விருதுப் பெயர்களால் அழைக்கப்பட்டனர்.
- நடராச சின்னம் சோழ அரசர்களது சின்னமாகியது. அத்துடன் சோழர் காலத்தில் நந்திக்கொடியும் சமய சின்னங்களில் இடம்பெற்றது.
- பல்லவ - பாண்டியர் ஆட்சியில் முத்தரையர் என்னும் அரச வம்சத்தவர்களும் ஆதிக்கம் செலுத்தினர். இதே காலத்தில் விஜயாலய சோழன், முத்தரையர்களைத் தோற்கடித்து தஞ்சையைத் தலைநகரமாக்கினான். விஜயாலய சோழனைத் தொடர்ந்து, ஆதித்தனின் ஆட்சி நிலவியது. அவனது ஆட்சியில் சோழ மண்டலத்தில் பல்லவ ஆதிக்கம் நிலை குலைந்தது. அதனைத் தொடர்ந்து சோழ அரசர்கள் தொண்டை மண்டலத்தில் தமது ஆட்சியைப் பரப்பி, இந்துப் பண்பாட்டைப் பேணிக் காத்தனர். சைவ ஆலயங்களையும் அமைத்தனர். ஆலயங்களுக்கு வழங்கிய அறக்கொடை களும், பிராமணர்களுக்கு வழங்கிய தானங்களும் இவர்களால் பொறிக்கப்பட்ட உத்தர மேரூர் சாசனத்திலே கூறப்பட்டுள்ளன.

## சோழ அரசும் சைவ நெறியும்

- இராஜராஜ சோழன் சோழ அரசர்களில் தலைசிறந்தவன். நர்மதா நதி வரை தமது அரசாட்சியைப் பரப்பியவன். அவன் இந்தியத் துணைக் கண்டம் எங்கும் சைவப் பண்பாட்டைப் பரப்பினான். இராஜராஜன் ஆட்சியில் சைவசமய நெறி பல வளர்ச்சிகளைக் கண்டது. அவற்றைப் பின்வருமாறு குறிப்பிடலாம்.
    - அரச சபையிலும், வீடுகளில் பயன்படுத்தப்பட்ட அளவைக் கருவிகளிலும் ஆடவல்லானாகிய நடராச சின்னம் பொறிக்கப்பட்டது.
    - பிராமணர்களுக்கு கொடைகள் வழங்கப்பட்டன.
- இராஜராஜ சோழனின் பிறந்த நாள் விழா (ஐப்பசிச் சதயம்) பெருவிழாவாகக் கொண்டாடப்பட்டது.
- சோழர் ஆட்சியில் தமிழ்நாட்டிலும், இலங்கையிலும் கோயில்கள் பல அமைக்கப்பட்டன. அவற்றில் இறை திருமேனிகளும் சிவனடியார் சிற்பங்களும் பொறிக்கப் பட்டன.
- ஆகம முறையிலான பூசைகள் இடம்பெற்றன. ஆலய விழாக்களின் பொருட்டு தேவரடியார், ரிஷபத்தளியிலார், தலைக்கோலிகள், நிருத்தவிடங்கியர் முதலானோர் நியமிக்கப்பட்டனர்.
- சைவத் திருமுறைகள் தேடித் தொகுக்கப்பட்டன; அவற்றிற்குப் பண் வகுக்கப்பட்டன; ஓதுவார்கள், பிடாரர்கள் என்போர் அவற்றைப் பண்ணுடன் பாடினார்கள்.
- வேதவிருத்தி, புராணவிருத்தி, பாரதவிருத்தி முதலிய மானியங்கள் விடப்பட்டன.
- கோயில்கள் செய்த சேவைகள் பெருகின. கோயில்கள், ஆதுலர் சாலைகளாகவும் விளங்கின. அரசைச் சிறப்பிக்கும் விழாக்களும் அங்கு இடம்பெற்றன.
- ஆலயங்களுக்கு அண்மையில் மடங்கள் அமைத்து, சமயப் பணி செய்யும் நிலை ஏற்பட்டது. ஆலயங்களிலும் மடங்களிலும் கல்வி நிலையங்கள் அமைக்கப்பட்டன.
- திருமுக்கூடல் என்னும் இடத்தில் வணிகர்கள் மடங்கள் அமைத்து, சைவப்பணியில் ஈடுபட்டனர்.
- சோழர் காலத்தில் நம்பியாண்டார் நம்பி, சேக்கிழார், சேந்தனார், கருவூர்த்தேவர் முதலியோர் சைவம் தொடர்பான பதிகங்களையும் அடியார் இலக்கியங்களையும் பாடினர். அவற்றால் நாயன்மார் வழிபாடு முதன்மை அடைந்தது.
- சோழர்காலப் பகுதியில் சிவனடியார் குருபூசைகள் முக்கியத்துவம் பெற்றன. நம்பியாண்டார் நம்பி தமது பாடல்களில் திருஞானசம்பந்த மூர்த்தி நாயனாரதும் திருநாவுக்கரச நாயனாரதும் வாழ்க்கை வரலாறுகளைப் பாடியுள்ளமை குறிப்பிடத்தக்கது.
- சோழர்காலப் பகுதியில் சைவ சித்தாந்தம் கோட்பாட்டு வடிவம் பெற்றது அதில் மெய்கண்ட தேவரின் சிவஞானபோதம் பிரதானமானது. ஆகம மரபுகளும் சைவ சித்தாந்த வளர்ச்சிக்கு உறுதுணையாக அமைந்தன. திருவுந்தியார் திருக்களிற்றுப்படியார் காலத்தால் முந்தியது.
- கோயில் அமைப்பு மேலும் பல விருத்திகளைக் கண்டது. தேவார சுற்றுக் கல்லூரி, நிருத்த மண்டபம், திருக்கைக்கோட்டி மண்டபம், வக்காணிப்பு மண்டபம் என்பன அவற்றுள் அடங்கும். இவ்விடங்களில் தேவார பாராயணங்கள் இடம்பெற்றன
- சோழர் காலத்தில் அம்மன் வழிபாடு திருக்காமக் கோட்டத்தில் இடம்பெற்றது. விநாயகர் வழிபாடும் இக்காலத்தில் இடம்பெற்றிருந்தது.
- அரசர்களது இராஜகுருமாராக சைவக் குருமார்கள் இடம்பெற்றிருந்தனர். ஈசான பண்டிதர், சர்வசிவ பண்டிதர் முதலான பெயர்கள் இதற்குச் சான்றாக அமைகின்றன.

### சோழர் ஆட்சியில் வைணவம்

- சோழர் ஆட்சியில் வைணவமும் வளர்ச்சி கண்டது. வைணவத்திற்கு மன்னர்கள் ஆதரவு வழங்கினர். வைணவ ஆலயங்கள் தோன்றின. வைணவ இலக்கியங்கள் தொகுக்கப்பட்டன. நாதமுனிவர், யமுனாச்சாரியார் வைணவ குருமாராக விளங்கினர்.
- ஆழ்வார் மரபு ஆச்சாரியார் மரபாக வளர்ச்சியடைந்தது.
- ஆழ்வார் சிந்தனைகள், இராமானுஷர் விசிட்டாத்துவைத சிந்தனையாக வளர்ச்சியடைந்தது. இராமானுஜர் வேதாந்த சாரம், வேதாந்ததீபம், வேதாந்த சங்கிரகம் முதலான நூல்கள் இயற்றினார்.
- வடகலை வைணவம், தென்கலை வைணவம் பற்றிய சிந்தனைகள் வளர்ச்சியடைந்தன. திருவரங்க கோயிலும் வைணவர்களது தலைமை இடமாகியது

### விஜய நகராட்சியில் இந்துப் பண்பாடு

### விஜயநகர தோற்றமும் தமிழகத்தில் அதன் ஆதிக்கமும்

- தென்னிந்தியாவில் கர்நாடக மாநிலத்தில் 1336 இல் விஜயநகரப்பேரரசு நிறுவப்பட்டது. அவர்கள் காவிரி, வைகை, தாமிரபரணிப் பிரதேசங்களையும் கைப்பற்றினார்கள். விஜயநகர அரசர்கள் தமிழகத்தை ஆதிக்கம் செலுத்த முன்பு இஸ்லாமியர் ஆட்சி தமிழகத்தில் பேராதிக்க நிலையை ஏற்படுத்தியது. முதலாம் புக்கன் என்பவன் விஜயநகரப் பேரரசனாக முடிசூடித் தமிழகத்தை ஆட்சி செய்தான். அவனைத் தொடர்ந்து கரிகரன், குமாரகம்பணன் முதலியோரும் விஜயநகர ஆதிக்கத்தை வளர்த்தனர். விஜயநகர அரசர்களில் தமிழ் நாட்டை ஆண்டவர்களை மண்டலிதர் எனக் கூறுவது மரபாகியது. மண்டலிதர் என்பவர் மண்டல ஆட்சியில் ஈடுபட்டவர் களாவர். விஜயநகர ஆதிக்கத்தின் கீழ், தமிழ்நாட்டை ஆண்டவர்கள் மகாமண்டல ஈஸ்வரன் என அழைக்கப்பட்டனர். இத்தகைய விஜயநகர அரசர்களின் ஆட்சி தலைக்கோட்டைப் போரைத் தொடர்ந்து வலுவிழந்தது. தலைக்கோட்டைப் போரைத் தொடர்ந்து விஜயநகர நாயக்கர் அரசர் மதுரை, தஞ்சை, செஞ்சி திருமலை ஆகிய இடங்களில் ஆட்சிசெய்து தம்மை இந்து மன்னர்களாக மாற்றிக் கொண்டார்கள்.

- சோழர் காலத்தில் காணப்பட்ட மண்டலம்எனும் அரசமுறை தவிர்ந்து விஜயநகர ஆட்சியில் ராஜ்ஜியம் என்னும் ஆட்சிமுறை வலுப்பெறத் தொடங்கியது. விஜயநகர அரசர்களில் முதன்மையானவன் கிருஷ்ணதேவராயன் (1509-1529). இவனது பெருமையைப் பயசு எனும் வெளிநாட்டறிஞன் புகழ்ந்துரைத்துள்ளான். நீதியான ஆட்சி அவன் காலத்தில் இடம்பெற்றதென பயசு குறிப்பிட்டுள்ளார். கிருஷ்ணதேவராயரைத் தொடர்ந்து அச்சுதராயர் ஆட்சி செய்தார். அதன் பின்பு இராமராயர் ஆட்சி இடம்பெற்றது. இராமராயரைத் தலைக்கோட்டைப் போரில் தோல்வியடையச் செய்ததன் மூலம் விஜயநகர ஆதிக்கம் சிதைவுற்றது. விஜயநகர அரசர்கள் வைணவத்திற்கும் பங்களிப்புச் செய்தனர்.

## விஜயநகர ஆட்சியும் வடமொழி இலக்கியச் சிறப்பும்

- முதலாம் புக்கன் சாயனருக்கு உதவி செய்தான். அவனால் நான்கு வேதங்கள் பிராமணங்கள் என்பவற்றுக்கு உரை எழுதப்பட்டது. இராமாயண உரையை ஸ்வரதீட்சிதர் எழுத கிருஷ்ணதேவராயர் உதவினான். கிருஷ்ணதேவராயரின் அரண்மனைப் புலவராகிய சானாவதிம்மர் மகாபாரதத்திற்கு கிருஷ்ணசந்தம் என்னும் உரையை எழுதியுள்ளார். விஜயநகராட்சியில் நாடக நூல்களும் எழுந்தன.
- தமிழகத்தில் ஆட்சிசெய்த நாயக்கர் அவையில் அப்பையதீட்சிதர் வடமொழி இலக்கியத் துறைக்கு பெரும்பணி செய்தார். சமஸ்கிருதம், தமிழ், தெலுங்கு இலக்கியங்கள் இங்கு சிறப்பிடம் பெற்றன. கிருஷ்ணதேவராயர் ஆமுக்தமால்யதா என்னும் ஆண்டாள் கதையை இயற்றினார்.

## விஜயநகர ஆட்சியில் சைவமும் வைணவமும்

- இஸ்லாமியர்கள் இந்துப் பண்பாடுகளை அழித்தனர். இந்துக்களை மதம் மாற்றினர். கோயில் களையும் படிமங்களையும் சிதைத்தனர். அத்துடன் இந்துக்களை இழிவாகக்கருதும் நிலையை ஏற்படுத்தினர். இவ்வேளையில் இவற்றையெல்லாம் எதிர்க்கத் தோன்றியதே விஜயநகர அரசாகும். கொய்சல (கௌசல) அரசின் தொடர்ச்சியாகவே விஜயநகர அரசு வளர்ச்சி பெற்றது. வித்யாரண்யர் (1305-1387) என்னும் அரசவைத் தலைவர் இதனை உருவாக்கினார்.
- விஜயநகர அரசர்களில் ஒருவரான கரிகரர் காளகஸ்தி, சிதம்பரம், திருப்பதி, திருவரங்கம் முதலிய கோயில்களில் திருப்பணி செய்தார். இவற்றினூடாக கரிகர அரசரது சைவ, வைணவப் பணி வெளிப்படுகின்றது.
- விஜயநகரத்தின் ஆரம்பகால அரசர்கள் சைவசமயத்தைச் சேர்ந்தவர்கள். விஜயநகர அரசர்கள் சங்கரரின் சிருங்கேரி மடத்திற்கு கூடுதல் மானியங்களை வழங்கினர். சாளுவநரசிம்மனுக்கு பின்பு ஆட்சி செய்த அரசர்கள் வைணவ அரசர்களாவர். அவர்கள் சைவ, வைணவ ஆலயங்களுக்கு வேறுபாடின்றி தானங்களை வழங்கினர்.
- சித்தாந்த சைவம், வீர சைவம், காஷ்மீர சைவம் என்பவற்றின் வளர்ச்சி காணப்பட்டது. பசவபுராணம் பிரதான நூல். இது வீரசைவக் கோட்பாட்டைக் கூறுகின்றது. பிரபுலிங்கலீலை, விருபாட்சகர் கோயில், விருபாட்சம் பொறித்தல் என்பன முக்கியமானவை. சைவசமய நெறியில் விருபாட்சகர் வழிபாடு பிரதான இடத்தைப் பெற்றது. வைணவம் பற்றித் தெலுங்கு, கன்னட மொழிப்பாடல்கள் எழுந்தன. கிருஷ்ணதேவராயர் காலத்தில் தெலுங்கு இலக்கியமும் முதன்மை இடம்பெற்றது. கிருஷ்ணதேவராயரே விஷ்ணுசித்தீயம் என்னும் நூலை எழுதியுள்ளார். சிறந்த எளியநடைக் காப்பியம். **அட்டதிக்கஜம்** என்னும் எட்டு நூல் புலவர்கள் பிரதானமானவர்கள்.
- சைவசமயத்தில் காளத்தி மகாத்மியம் கிருஷ்ணதேவராயர் காலத்தில் எழுதப்பட்டது. இஸ்லாமிய மதத்தைக் கண்டனம் செய்ததன் மூலம் விஜயநகரத்தின் புகழ் பரவிக் காணப்பட்டது.
- வைணவம் வடகலை வைணவம், தென்கலை வைணவம் என விரிவடைந்தது. திருவரங்கத்தில் வாழ்ந்த மத்துவர் வேதாந்தத்தைப் போதித்தார். அருணகிரிநாதர் பாடல்கள் முருக வழிபாட்டை எடுத்துக் காட்டுவன. காளமுகர், பாசுபதர் முதலிய சைவசமயப் பிரிவினர்களும் காணப்பட்டனர்.

**விஜய நகரமும் கலை மரபும்**

- விருபாட்சகர் கோயில், விட்டலாசுவாமி கோயில் என்பன கிருஷ்ணதேவராயர் அமைத்த கோயில்களாகும். அவற்றில் இராமாயணக் கதைச்சிற்பம், ராஜகோபுரம், கல்யாண மண்டபம், ஆயிரங்கால் மண்டபங்கள், பட்டாபிராமர் கோயில், அம்மன் சந்நிதானம் முதலான அமைப்புக்கள் இடம் பெற்றன.
- சுற்றுப்பிரகார அமைப்புக்கள் முக்கியமானவை. இராமாயண, மகாபாரத ஓவியங்கள் அதில் தீட்டப்பட்டுள்ளன. குதிரை, யாழித்தூண்கள் அமைக்கப்பட்டன. திருப்பாற்கடலை கடைதல், இராவணன் கதைச் சிற்பங்கள் கூடுதலாக அதில் உண்டு.

## நாயக்கர் காலம்

நாயக்கர் காலம் விஜயநகர ஆட்சியைத் தொடர்ந்து எழுந்தது. நாயக்கர் வைணவ நெறிக்கு பணி செய்தனர் - வடகலை வைணவம் தென்கலை வைணவம் வீரசைவ வளர்ச்சி ஏற்பட்டது. 17ஆம்நூற்றாண்டு சிவப்பிரகாசர் பணிகள் இதற்கு சான்றானது கி.பி 14ஆம் - 18ஆம் நூற்றாண்டுவரை நாயக்கர் ஆதிக்கம் சித்தாந்த சைவ வளர்ச்சி - உமாபதி சிவாச்சாரியர் நூல்கள் சுமார்த்த சைவர் - அம்மன், முருகன், விநாயக வழிபாடுகள்

**சைவ இலக்கிய எழுச்சி**

- சிந்ததாந்த இலக்கியம், தலபுராணம்,சிந்தாந்தப்பாடல்கள் உரைநூல்கள் என்பவற்றின் வளர்ச்சி - தமிழ்ப்புராண வளர்ச்சி - 40 சைவசமய புராணம் எழுந்தது
- உமாபதி சிவம் சிதம்பரக் கோயில் பற்றி பாடியது கோயிற்புராணம்
- கமலை ஞானபிரகாசர் - திருவானைக்கா புராணம்
- நிரம்ப அழகிய தேசிகர் - சேதுபுராணம்
- எல்லப்ப நாவலரின் - அருணாசல புராணம் என்பன சான்று
- சிவஞான முனிவர் - காஞ்சி புராணம்
- கச்சியப்ப முனிவர் - தணிகைப் புராணம் என்பவற்றின் வளர்ச்சி
- ஆகம உரைகள் இக்கால எளிச்சி - சிவதர்மோத்திரம் மறைஞான சம்பந்தரால் ஆகம உரையாக எழுதப்பட்டது
- சிவாக்கிரக யோகிகளின் சிவநெறிப் பிரகாசம்

**தோத்திரப் பாடல்களின் எழுச்சி**

- குரு நமச்சிவாயது சிதம்பர வெண்பா, குமரகுருபரர் - கந்தர்களி வெண்பா, மீனாட்சியம்மன் பிள்ளைத் தமிழ், சகலகலாவல்லிமாலை - தாயுமான சுவாமி தோத்திரங்கள் பிரதானமானவை

**கலை இலக்கியங்கள்**

திரகூடராசப்ப கவிராயரின் திருக்குற்றாலக் குறவஞ்சி கீர்த்தனை வடிவமானது நாயக்கர் கால கோயில் கலை வளர்ச்சி இசைநாடக நூல் அருணகிரியார் சந்தக்கவிதைகள் - திருப்புகள், கந்தரந்தாதி, கந்தரனுபூதி

**சைவ ஆதீனங்களும் சைவசித்தாந்தமும்**

பண்டைய சாத்திர நூல்கள் தசகாரியம் சித்தாந்த சிகாமணி, நமச்சிவாயமாலை முதலியவை சைவசித்தாந்த உரைகள்

**சைவ நாயன்மார தோத்திரம்** - நால்வர் நான்மணி மாலை

**இந்துக்கோயில்களும் விழாக்களும்** - மதுரை, சிதம்பரம் திருவாரூர் கோயில்களில் பௌர்ணமி சித்திரை விழா, தெப்பத் திருவிழா திருவாதிரைத் திருவிழா என்பனவற்றின் வளர்ச்சி

**தேர்ச்சி 2.0 :** **இந்து சமய வரலாற்றில் பக்தி இயக்கங்களதும் சமூக சீர்திருத்த இயக்கங்களதும் பங்களிப்புக்களை அறிந்து மதிப்பளிப்பார்.**

**தேர்ச்சி மட்டம் 2.1 :** வடநாட்டு வைணவ பக்தி நெறியாளர்களின் பங்களிப்புக்களை விளங்கி எடுத்துக் கூறுவார்

**பாடவேளைகள் :** 06

**கற்றற் பேறுகள் :**

- வட இந்தியப் பக்தி இயக்கத்தின் தோற்றத்தையும் செயற்பாடுகளையும் குறிப்பிடுவார்.
- வட இந்தியப் பக்தி நெறியாளர்களையும் அவர்களின் பொதுப்பண்புகளையும் பட்டியற் படுத்துவார்.
- வட இந்தியப் பக்தி நெறியாளர்களின் சிறப்பினையும் அவர்களின் பங்களிப்பினையும் விளக்கிக் கூறுவார்.
- வட இந்தியப் பக்தி இயக்கத்தில் தமிழ் நாட்டுப் பக்தி இயக்கத்தின் செல்வாக்கினை மதிப்பிடுவார்.
- வட இந்தியப் பக்தி இயக்கத்திற்கும் பல்லவர் காலப் பக்தி இயக்கத்திற்கும் இடையில் காணக்கூடிய பொதுப் பண்புகளை ஒப்பிடுவார்.
- பிற சமயங்களின் எழுச்சி இந்து சமய மரபில் பக்தி இயக்கங்கள் தோன்றுவதற்கு முக்கிய காரணம் என்பதைக் கூறுவார்.
- தமிழகத்தில் வளர்ச்சி பெற்ற பக்தி நெறி வட இந்திய வைணவ சமய மறுமலர்ச்சிக்கு முன்னோடியாக அமைந்தமையைக் குறிப்பிடுவார்.
- இவ்விரு பக்தி இயக்கங்களுக்கும் இடையிலான அடிப்படைப் பண்புகளை ஒப்பிட்டுக் கூறுவார்.

**விடய உள்ளடக்க வழிகாட்டி :**

- வட இந்தியாவில் வைணவ பக்தி நெறியாளர்கள்
- வட இந்தியப் பக்தி நெறி தோன்றிய காலச்சூழல்:
  இந்து சமயமானது சமய உட்பூசல்களாலும் அந்நியர்களின் ஆக்கிரமிப்புக்களாலும் மத்திய காலத்தினை அடுத்து வந்த காலப் பகுதிகளில் வீழ்ச்சியடைந்தது. இத்தகைய சூழ்நிலையில் வடநாட்டில் பக்தி இயக்கத்தின் தோற்றத்தினைக் காணமுடிகின்றது. இந்துசமயத்தைக் குறிப்பாக வைணவ சமயத்தினை மையமாகக் கொண்டதாக, வட இந்தியப் பக்தி இயக்கத்தின் தோற்றமும் செயற்பாடுகளும் அமைந்தன.
- வட இந்தியப் பக்தி நெறியாளர்களில் குறிப்பிடத்தக்கவர்கள்.
  - இராமானந்தர்
  - கபீர்தாசர்
  - ஸ்ரீசைதன்யர்
  - மீராபாய்
  - துளசிதாசர்

- **வட இந்தியப் பக்தி நெறியாளர்களின் பொதுப் பண்புகள்**
    1. வட இந்திய பக்தி நெறி வைணவத்தினை அடிப்படையாகக் கொண்டது. அன்பும் அருளும் நிறைந்த முதல்வனான விஷ்ணுவை பரம்பொருளாகக் கொண்டமை
    2. ஆன்மாக்கள் ஒவ்வொன்றும் தனியானவை. அவை பரமாத்மா எனும் இறைவனின் பகுதியாகாமை.
    3. பக்திமார்க்கம் மூலம் விடுதலை பெறலாம்.
    4. பக்தி என்பது கர்மம், ஞானம், கிரியைகள், சடங்கு என்பவற்றை விடவும் மேலானது.
    5. சமஸ்கிருத மொழியை விட்டுப் பாடுதல்.
    6. நாம சங்கீர்த்தன முறையைப் பின்பற்றுதல்.
    7. பக்தி ரசம், பக்தி உணர்வு ததும்பும் பாடல்கள்

## இராமானந்தர்

- வட இந்தியப் பக்தி இயக்கத்தின் முன்னோடி

  காலம் : கி.பி. 14 ஆம் நூற்றாண்டின் முற்பகுதி

  சீடர் : கபீர்தாஸர்
- வடநாட்டில் எழுந்த யோகம், ஞானம் என்பவற்றோடு தென்னாட்டில் எழுந்த பக்தி, சரணாகதி என்பவற்றையும் சேர்த்து அரிய பாடல்களைப் பாடினார்.
- வகுப்புவாதம், மதபேதம் என்பவற்றைப் புறக்கணித்து ஒருமைப்பாட்டைப் பேணினார்.

## கபீர்தாஸர்

காலம் : கி.பி. 14 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதி

| | |
|---|---|
| பிறந்த ஆண்டு | : 1398 |
| இடம் | : காசி |
| தந்தை | : நூர்அலி |
| தாய் | : நிமா |
| மனைவி | : லோய் |
| மகன் | : கமால் |
| சீடர்கள் | : மனைவி, மைந்தன், சூரத்கோபால், சாஹிப், குருநானக் |

- கபீர்தாசர் இஸ்லாமிய கருத்துக்களையும் உள்வாங்கிய நிலையில் வைணவத்தை வளர்த்தார்.
- காசியில் 1398 ஆம் ஆண்டில் கபீர்தாஸர் பிறந்தார். அவர் நூர்அலி நிமா என்ற இஸ்லாமியரால் வளர்க்கப்பட்டார்.
- இளமையில் இஸ்லாமிய சமயக் கருத்துக்களை அறிந்திருந்தபோதிலும், இந்து சமய நம்பிக்கைகளையும், அதன் அடிப்படைக் கோட்பாடுகளையும் கற்றுக் கொண்டார்.
- இன, மத பேதங்களுக்கு அப்பால் உறவுகள் அனைத்தையும் துறந்து, விஷ்ணு ஒருவரையே தஞ்சம் எனக் கொண்டு வாழ்ந்தார்.
- தன் பக்தி உணர்வினை வெளிப்படுத்தும் வகையில் கபீர்தாசர் பாடிய பாடல்கள் பக்திச் சுவை நிறைந்ததாகவும், இந்து - இஸ்லாமிய ஒற்றுமையை வலியுறுத்துவன வாகவும் அமைந்தன.

## ஸ்ரீ சைதன்யர்

- வைணவ நெறிக்கு புத்துணர்ச்சி ஊட்டிய வைணவப் பெரியார்.
  இயற்பெயர் : கௌரங்கன்
  பிரசாரஞ் செய்த மாநிலங்கள் : வங்காளம், ஒரிசா, உத்தரப்பிரதேசம்
- போதனைகளின் அடிப்படை அம்சங்கள்:-
  குருவிடம் மதிப்பும் மரியாதையும் பணிவும் காட்டல்
  - அறநெறியைக் கடைப்பிடித்தல்
  - அமைதி பேணல்
  - அறப்பண்பை வளர்த்தல்
  - சத்தியநெறியில் நிற்றல்
- இவரின் சீடர்கள்:நித்தியானந்தர், ஜீவகோஸ்வாமி, பாலதேவர், ஹரிதாஸ் (முஸ்லிம் சீடர்)
- ஜீவன் பற்றிய கருத்து
  - ஆண்டவனின் சேவகன்
  - ஆண்டவனுடன் நெருங்கிய உறவுண்டு
  - ஜீவன் ஆண்டவனாக ஆகமாட்டான்
- இறை பற்றிய கருத்து
  - முடிவான உண்மைப்பொருள்
  - அருள், தெய்வம்
  - ஆனந்த வடிவினன்
  - அன்புத் தெய்வம்
  - நிர்க்குணன்
  - சகுணன்

- **மீராபாய்**

  காலம் : கி.பி. 16 ஆம் நூற்றாண்டின் முற்பகுதி
  பிறந்த இடம் : மேர்த்தா என்னும் சமஸ்தானம்
  தந்தை : ரணாரத்னசிங்
  கணவர் : போஜ்ராஜ்
- தமிழகத்தில் பக்தி நெறியினை வளர்த்த ஆண்டாளுக்கு ஒப்பாக, வட நாட்டில் வைணவ பக்தியை வளர்த்தவராக மீராபாய் திகழ்கிறார்.
- அவர் கடைப்பிடித்த பக்தி மார்க்கமும், இசைப் பாடல்களும் பல்லவர் கால பக்தி இயக்கத்தில் பங்கெடுத்த ஆண்டாளின் பணிகளுக்கு ஒப்பானவை.
- 1498 ஆம் ஆண்டில் பிறந்த மீராபாய் தனது பாட்டனாராகிய ராவ் துதாஜியுடனேயே வாழ்ந்தார்.

- மீராபாயின் கணவராகிய போஜ்ராஜ் 1521 ஆம் ஆண்டில் போரின்போது இறந்துவிட்டார். அதனைத் தொடர்ந்து துறவுக் கோலம் பூண்ட மீராபாய், தன்னை இறைவன் பணிக்காக முற்றும் அர்ப்பணித்தார்.
- தமது சமயக் கருத்துக்களை விளக்கும் வகையில் தாச போதம், சத்போதம், ஆனந்தவனபுவனம் போன்ற நூல்களை அவர் இயற்றியுள்ளார்.
- சத்போதம் எனும் நூல் அவரது தத்துவக் கருத்துக்களை விளக்குவதாகவும், தாசபோதம் வேதாந்த சிந்தனைகளை விபரிக்கும் நூலாகவும் உள்ளன.
- பிரபக்தி மார்க்கத்தை மதுர பாவனையில் வெளிப்படுத்திய பக்தி நெறியாளராக அவர் காணப்படுகிறார். தாஸிய, சகிய, வாத்சலிய உறவு முறைகளிலும் தன் இறை அனுபவத்தினை வெளிப்படுத்தியுள்ளார்.
- தன்னை கோகுலத்து ராதையாகவும், விஷ்ணுவை கோகுலத்துக் கண்ணனாகவும் கொண்டு தன் தெய்வீகக் காதலை இறைவனுக்கு உணர்த்தினார்.
- கண்ணனிடம் ஆழ்ந்த காதல் கொண்டிருந்த மீராபாய் கண்ணன் இல்லாத தனிமையின் ஏக்கத்தையும் வெளிப்படுத்துகிறார்.

  'பார் தோழி! ஹரியின் மனம் கல்லாகி விட்டது. வருவேன் என்றான் இன்னும் வந்தானில்லை' என்று தன்னை நாடி வருவதாகக் கூறியும் வராத நிலை கண்டு மனம் வருந்துகிறார்.
- மீராபாய் இயற்றிய இசைப்பாடல்கள், இலக்கியங்கள் என்பன பக்திச் சுவையும், கருத்தாழமும் கொண்டவை.
- இளமையிலேயே கவி பாடும் திறன் கொண்ட மீராபாய் எளிமையான சொற்களைக் கொண்டு இனிமையான பாடல்களை இயற்றினார். இவ்வாறு மீராபாய் 400 வரையான பாடல்களைப் பாடியுள்ளார்.
- பக்தி நெறியில் புதிய மரபைத் தோற்றுவித்த இவரது பாடல்கள் பக்திச்சுவையும், எளிய நடையும், கருத்தாழமும் மிக்கவை. இதனால் இப்பாடல்கள் சாதாரண மக்கள் மனதை இலகுவாகத் தொட்டன.
- கீர்த்தனம், வர்த்தனம், பாதஷேவனம் முதலிய ரசபாவங்கள் இவரது பாடல்களில் உண்டு
- மீராபாயின் பாடல்கள் இறை நம்பிக்கையை வளர்ப்பவை; தத்துவச் செறிவுமிக்கவை.
- வைணவ சமய உண்மைகளை விளக்குகின்ற கீத கோவிந்தடீகா, ராகமல்ஹார், ராககோவிந், ருக்மிணி மங்களம், சத்தியபாமானூருசன் என்னும் நூல்களையும் இயற்றியுள்ளார்.
- மீரா கிருஷ்ணனே தன் காதலன் என்றும் அவரின் புகழை ஆனந்தத்தோடும் ஆவேசத்தோடும் பாடியுள்ளார்.
- இவர் கைம்மை நோற்று, துறவுக் கோலத்தில் வாழ்ந்து தனது பக்தியை அதிகரித்தார்.
- இறைபற்றிய இவரது கருத்துக்கள்:
  - இறைவன் ஒருவனே உண்மையானவன். கிருஷ்ணன் எங்கும் நிறைந்தவன். எல்லாம் வல்லவர். பக்தர்களிடம் பெருங்கருணை வைத்தவர். அவர் பக்தர்களை ஆபத்துக்களிற் காப்பவர்.
- விஷ்ணு பக்தியில் சிறந்த இவர் 1547 இல் இறையடி சேர்ந்தார்.

## துளசிதாசர்

- பாந்தா மாவட்டத்தில் ராசாப்பூர் கிராமத்தில் ஆத்மாராம்துபே என்பவருக்கும் உலேசி அம்மையாருக்கும் மகனாகப் பிறந்தார். மனைவி இரத்தினவாணி
- இளமையில் வறுமை காரணமாக வால்மீகி இராமாயணக் கதையை மக்களிடையே பிரசாரமாக சொல்லி வாழ்க்கை நடத்தினார்
- துளசிதாசர் வான்மீகியின் அவதாரமாகவும் கருதப்படுகின்றார்.
- சிரசந்தீபனி, கிருஷ்ண கீதாவளி, கவிதாவளி, இராமசரிதமானஸ், ஜனகி மங்களம் போன்ற பல நூல்களை எழுதியுள்ளார்.
- இராமானுசரைப்போலவே துளசிதாசரும் ஒப்புயர்வுற்ற கடவுளை நம்புகிறார். ஆன்மா, கன்மம், மறுபிறப்பு, முத்தி பற்றியும் குறிப்பிட்டுள்ளார்.
- துளசிதாசரால் இயற்றப்பட்ட அனுமன் சாலிசா என்னும் நூல் அனுமனைப் புகழ்ந்துபாடும் நூல்.
- பல இந்துக்கள் இந்நூலை தினமும் இறைவழிபாட்டின் போது ஓதி வருகின்றனர். மக்களின் ஒழுக்கத்தினை மேம்படுத்தும் நோக்குடன் ஸ்ரீ ராமனிடம் முறையிட்டு எழுதியதே விநய பத்திரிகா.
- வட இந்தியப் பக்தி இயக்கத்திற்கு இவரின் பங்களிப்பு மகத்தானவை.
- ராமசரித மானசம் இவரின் சமயப்பற்றிற்கும் கவித்திறனுக்கும் சிறந்த சான்றாக விளங்குகின்றது.
- இந்நூல் துளசி இராமாயணம் என அழைக்கப்படுகின்றது.

**கற்றல் - கற்பித்தற் செயற்பாடுகள்:**

படி : வட நாட்டு வைணவ பக்தி நெறியாளர்கள் என்ற தலைப்பில் ஒரு பகுதியைத் தெரிவுசெய்து, மாணவர்களுக்கு விருப்பை ஏற்படுத்தும் வகையில் அதனை முன்வையுங்கள்.

படி : வட நாட்டு வைணவ பக்தி நெறியாளர்கள் என்ற தலைப்பில் தகவல்களைத் திரட்ட இடம் அளியுங்கள். தேவையான நூல்களையும் வழங்குங்கள்.

படி : குழுவில் ஒருவர் வீதம் தெரிவு செய்து, வகுப்பில் முன் வைக்க இடமளியுங்கள்.

படி : அவற்றைத் தொகுத்து, காட்சிப்படுத்த வழிப்படுத்துங்கள்

**உசாத் துணைகள்:**

பக்தி விஜயம் - மணிமேகலை பிரசுரக்குழு
இந்து நாகரிகம் - க. சி. குலரெத்தினம்

**தேர்ச்சி 2.0 :** **இந்து சமய வரலாற்றில் பக்தி இயக்கங்களதும் சமூக சீர்திருத்த இயக்கங்களதும் பங்களிப்புக்களை அறிந்து மதிப்பளிப்பார்.**

**தேர்ச்சி மட்டம் 2.2 :** இந்து சமூக சீர்திருத்த இயக்கங்களின் பங்களிப்புக்களை விளங்கிக் கூறுவார்.

**பாடவேளைகள் :** 20

**கற்றற் பேறுகள் :**

- வட இந்தியப் பக்தி இயக்கத்தின் தோற்றத்தையும் செயற்பாடுகளையும் குறிப்பிடுவார்.
- சமூக சீர்திருத்த இயக்கம் என்பதன் பொருளை விளங்கி எழுதுவார்.
- இந்து சமய,சமூக சீர்திருத்த இயக்கங்கள் தோன்றியதன் நோக்கம், பணிகள் என்பவற்றை ஒப்பிட்டு நோக்குவதுடன் அவற்றை முன்மாதிரியாகக் கொண்டு தாமும் இந்து சமய, சமூகப் பணிகளில் ஈடுபடுவார்.
- இந்து சமய, சமூக சீர்திருத்த நிறுவனங்களில் ராஜாராம் மோகன்ராயின் பிரமசமாசமும், தயானந்த சரஸ்வதியின் ஆரியசமாசமும், சுவாமி விவேகானந்தரின் இராமகிருஷ்ண மிஷனும் முக்கியமானவை என்பதை விளக்குவார்
- தமிழ்நாட்டின் இராமலிங்க அடிகளார் தவத்திரு நாராயணரும் ஈ.வே.ரா பெரியார் ஆகியோர் பணிகளை விளக்குவார்.
- சமூக சமத்துவமே சமய மேம்பாட்டிற்குரிய வழி என்பதைப் போதனையாலும் தமது சமாசத்திலே சாதனையாலும் காட்டியவர். ராஜாராம் மோகன்ரோய் என்பதை விளக்குவார்.
- சுய பண்பாட்டியக்கமாக ஆரிய சமாஜம் விளங்கியமைக்கான காரணங்களைக் கூறுவார்.
- இராமகிருஷ்ண பரமகம்சர் சுவாமி விவேகானந்தரின் பணிகள் பற்றி எடுத்துரைப்பார்

**விடய உள்ளடக்க வழிகாட்டி :**

- இந்து சமூக சீர்திருத்த இயக்கங்கள்
  - பிரம சமாசம்
  - ஆரிய சமாசம்
  - இராமகிருஷ்ண மிஷன்
- 18 ஆம் நூற்றாண்டிலே இந்தியாவில் இந்து சமய சமூகப் பின்னடைவுகள் ஏற்பட்ட வேளையிலே இந்து சமூகக் குறைபாடுகளை நீக்குமுகமாக தோன்றிய நிறுவனங்களே நவீன கால சமூக சீர்திருத்தநிறுவனங்கள் என்று அழைக்கப்படுகின்றன.
- இத்தகைய நிறுவனங்களில் ராஜாராம் மோகன்ராயின் பிரமசமாசமும், தயானந்த சரஸ்வதியின் ஆரியசமாசமும், சுவாமி விவேகானந்தரின் இராமகிருஷ்ணமிஷனும் முக்கியமானவை.
- 19 ஆம் நூற்றாண்டில் இந்து சமூகத்தை மறுமலர்ச்சியடையச் செய்த ஞானியர்களில் ராஜாராம் மோகன்ராய், தயானந்த சரஸ்வதி, இராமகிருஷ்ண பரமஹம்சர் முக்கியமானவர்கள்.
- இராமலிங்க அடிகளார், தவத்திரு நாராயணரும், ஈ.வே.ரா பெரியார் ஆகியோர் பணிகளும் பிரதானமாவை.

## பிரம சமாஜம்

- பிரம சமாஜம் ராஜாராம் மோகன்ராயால் ஆரம்பிக்கப்பட்டது.
- இவர் கி.பி. 1772 இல் வங்காள நாட்டில் பிறந்தவர். பல மதக் கோட்பாடுகளை அறியச் செய்தவர். பல மொழிகளை அறிந்து கொண்ட பிராமண குலத்தவர். பிராமணியக் கொள்கைகளைச் சீர்திருத்தம் செய்ய முயன்று, பிரமசூத்திர உரை செய்து ஒரு கடவுட் கோட்பாட்டைப் பரப்பியவர். சமூகக் குறைபாடுகளை இனங்கண்டு அவற்றை நீக்குவதன் மூலம் இந்து சமூகத்தைப் பாதுகாப்பதில் பங்களிப்புச் செய்தவர்.
- இவர் பலசமய ஆய்வாளர். இந்தியாவின் புதுயுகத் தந்தை. பகுத்தறிவு வாதத்தின் முன்னோடி. ஆயினும் மரபுவழி இந்துநெறியைப் பேணியவர். ஆன்மீக வளர்ச்சிக்கும் அறிவியல் சிந்தனைக்கும் பாலமாகத் திகழ்ந்தவர்.
- தம் குடும்பத்திலேயே தமது மைத்துனி உடன்கட்டை ஏறியதைக் கண்டு அதனைச் சதி என்னும் சட்ட மூலமாக தடுத்து நிறுத்தியவர். 1815 இல் ஆத்மீக சபை அமைத்து வேதாந்தக் கொள்கைக்கு முக்கியத்துவம் கொடுத்தவர்.
- சமூக சமத்துவமே சமூக மேம்பாட்டிற்குரிய வழி என்பதைப் போதனையாலும் தமது சமாசத்திலே சாதனையாலும் காட்டியவர்.
- 'இறைவன் ஒருவரே உண்மை, எல்லோரும் வாருங்கள்' என்று சமய ஒருமைப்பாட்டையும்
  சமூக ஒருமைப்பாட்டையும் இணைத்தவர். இவரது பணிகளில்,
  - 1840 இல் உருவ வழிபாட்டை எதிர்த்து துண்டுப்பிரசுரம் வெளியிட்டமை.
  - 1815 இல் ஆத்மீக சபை தாபித்தமை
  - 1816 இல் வேதாந்த சூத்திரத்தை மொழிபெயர்த்தமை
  - 1817 இல் வேதாந்தக் கல்வியை பரப்பியமை
  - 1820 இல் மரபு வழி நம்பிக்கைகளைப் பகுத்தறிவு ரீதியாக விமர்சித்தமை
  - 1823 இல் பிராமணன் என்னும் சஞ்சிகையை வெளியிட்டமை
  - 1825 இல் பல்வகைப் பிரார்த்தனை, வழிபாடுகளை அறிமுகம் செய்தமை
  - 1828 இல் பிரமசமாசத்தை அமைத்தமை
  - 1829 இல் உடன்கட்டைஏறும் பழக்கத்தைச் சட்டப்படி தடைசெய்தமை என்பன அவரது முக்கியமான பணிகளாகும்.
- இந்துப் பண்பாடு உபநிடத சிந்தனைகளை அடிப்படையாகக் கொண்டது என்பது இவரது கொள்கையாகும். பெண்ணுரிமையைப் பாதுகாத்து இந்து தர்மத்தை இங்கிலாந்து நாடு வரை பரப்பிய பெருமை இவருக்குரியதாகும்.
- இவரது பிரமசமாசத்தில் இந்துக்களும், இஸ்லாமியரும், கிறிஸ்தவரும் வழிபாட்டில் ஈடுபட்டனர். சமயம் கடந்த வாழ்வியலை இது எடுத்துக் காட்டுகிறது.
- ஆங்கிலக் கல்லூரி, சமஸ்கிருதக் கல்லூரி நிறுவியமை
- விக்கிரக ஆராதனை என்ற நூலில் உருவவழிபாடடை மறுத்துக் கூறியமை
- விதவைகள் மறுமணம், பெண்கல்விக்கு முக்கியத்துவம்
- பால்ய விவாகத் தடை, சிசுக் கொலை தடை
- மேலைத் தேயக் கல்வி மரபில் ஒளிபெற வேண்டுமென்ற கருத்தை வலியுறுத்தியமை

# ஆரியசமாசம்

- நவயுக இந்தியாவில் இந்து சமய – சமூக சீர்திருத்த இயக்கங்களில் ஆரிய சமாஜத்திற்குக் குறிப்பிடத்தக்க இடம் உண்டு.
- பத்தொன்பதாம் நூற்றாண்டு கால இந்தியாவில் இந்து சமய - சமூகங்கள் பல இன்னல்களுக்கு முகங்கொடுக்க வேண்டி இருந்தது.
- சுவாமி தயானந்த சரஸ்வதி வேத நெறியையும், சம்ஸ்கிருத மொழியையும் முதன்மைப்படுத்தி 1875 ஏப்ரல் 10ஆம் திகதி ஆரியசமாஜத்தை பம்பாயில் நிறுவினார்.
- இந்து சமுதாயத்தினர் எதிர்காலத்தில் முகங்கொடுக்க வேண்டியிருந்த சவால்கள் பலவற்றிற்கு ஆரியசமாஜத்தின் வாயிலாக விடைகொடுத்தார்.
- இத்தகைய ஆரியசமாஜம் இந்து சமுதாயத்தினருக்குப் பலவேறு வழிகளிலும் பல பணிகளைச் செய்து இந்துமத எழுச்சிக்குக் காரணமாக அமைந்தது.

## ஆரியசமாஜத்தின் பணிகள்

- மூட நம்பிக்கைகளை இந்து சமுதாயத்தில் இருந்து விரட்டுதல், புரோகித முறைஎதிர்ப்பு, விக்கிரக வழிபாடு எதிர்ப்பு, சாதிபேத எதிர்ப்பு, தீண்டாமை ஒழிப்பு, பெண்ணுரிமை ஆதரவு முதலானவற்றிக்கு வேதங்களில் சான்று காட்டி நிரூபித்தல்
- சாதி, மத, பால் வேற்றுமைகள் பாராமல் மக்கள் மொழிகளில் வேதங்களை மொழி பெயர்த்துப் பரவலான முறையில் பரப்பி மக்களை விழிப்படையச்செய்தமை
- சுதேசிய கல்வி முறைக்கும், சமய – விஞ்ஞான பிணைப்பிற்கும் வேதம் வழிகாட்டவல்லது என்ற கொள்கை பரப்பப்பட்டது.
- நூல்களை வெளியிட்டமை அதாவது ரிக்வேத பாஷ்ய பூமிகா(1877), ரிக்வேத பாஷ்யம்(1899), யசுர்வேத பாஷ்யம் உட்பட 26 நூல்கள் வெளியிடப்பட்டது.
- இவரது நூல்களில் சத்தியார்த்தப் பிரகாசம் குறிப்பிடத்தக்கது.
- சமயப் பிரசாரம் செய்தமை. அதாவது கூட்டாக இணைந்து சுற்றுப்பயணங்கள் செய்து 1845 – 1860 வரைக்குமான காலங்களில் இந்தியா முழுவதும் சென்று சமயப் பிரசாரம் செய்தமை.
- மதம் மாறியவர்களை மீண்டும் இந்து சமயத்தில் சேர்த்திட **'சுத்தி'** என்னும் இயக்கத்தையும், இந்துக்களை ஒன்று திரட்ட **'சங்கடனம்'** என்ற இயக்கத்தையும் தயானந்தர் தாபிப்பதற்கு ஆரியசமாஜமே அடிப்படை எனலாம்.
- ஆரிய சுத்திச் சடங்கு விதிகளை உருவாக்கியமை. அதாவது ஹோமம், தலைமுடி களைதல், பூணுல் அணிவித்தல், காயத்ரி மந்திரம் கற்பித்தல் ஆரியசமாஜத்தின் பத்துக் கோட்பாடுகளை ஒப்புக்கொள்ளச் செய்தல் ஆகியவை அந்த விதிகளாகும்.
- தாழ்த்தப்பட்ட மக்களுக்கு பூணூல் அணிவித்து அவர்களை மேன்மக்களாகப் பிரகடனப்படுத்தியமை. 1888 இல் பஞ்சாப்பில் முஸபர்கட் மாவட்டத்தில் பண்டித கங்காராம் எனும் ஆரியசமாஜப் பிரசாரகர் ஓட் தீண்டாதார் சமூகத்தினை பூணூல் அணிவித்து இந்து சமூகத்திற்குள் கொண்டு வந்தமை.
- தேசிய கல்வி முறையினை ஆரியசாஜம் நடைமுறைப்படுத்திச் சாதனை படைத்தது. அதாவது தாய் நாட்டின் இலக்கியம், வரலாறு, விஞ்ஞானம், கலை, அரசியல், போர்முறை, உற்பத்தித் திறன், தொழில், வாணிபம் ஆகியவற்றை வளர்த்தெடுத்தல்.
- பால்ய விவாகத்தை எதிர்த்தமை பிரம்ம புராணத்தையும், மனுதர்ம சாத்திரத்தையும் ஆதாரம் காட்டி பால்ய விவாகத்தைக் கண்டனம் செய்துள்ளமை.
- விதவைப் பெண்களின் மறுமணத்தினை ஆதரித்தமை. ரிக் வேதத்தினை ஆதாரம் காட்டி விளக்கப்பட்டுள்ளது.
- தயானந்தர் உருவாக்கிய ஆரியசமாஜம் பஞ்சாப், ராஜஸ்தான், உத்தரப்பிரதேசம், மத்திய பிரதேசம் முதலான பிரதேசங்களில் செல்வாக்குடனும், பிற தேசங்களில் காலூன்றியும் வெகுஜன இயக்கமாக, கல்வி இயக்கமாக, தீண்டாமை எதிர்ப்பு இயக்கமாக, பெண்ணுரிமை இயக்கமாக, சமூக சீர்திருத்த இயக்கமாக, தேசிய இயக்கமாக வளர்ச்சி பெற்று விளங்கிற்று.

## இராமகிருஷ்ண பரமஹம்சர் போதனைகளும் சாதனைகளும்

- இவர் இந்துமத மறுமலர்ச்சியாளர்களில் தலைசிறந்தவர். வங்காள நாட்டில் அந்தண குலத்தில் பிறந்தவர். சாக்த சமயப் பக்தர்.
- வேதாந்தக் கோட்பாட்டை நடைமுறை வாழ்வியலுடன் இணைத்துக் காட்டியவர். மக்களுக்குச் சேவை செய்து மானுட துன்பம் நீக்குவதை நடைமுறை வேதாந்தம் என்பதனைச் சாதனையாகக் கடைப்பிடித்தவர்.
- வேத, உபநிடதச் சிந்தனைகளையும் அவை வெளிப்படுத்தும் இந்து தத்துவத்தையும் ஜனரஞ்சகமான போதனைகளாக எடுத்துக் காட்டிய பெருமை இராமகிருஷ்ண பரமஹம்சரையே சாரும்.
- இந்து தத்துவத்தில் ஈஸ்வர வடிவில் இறைக்கொள்கையை வலியுறுத்தியும் பரப்பிரமம் என்னும் வேதாந்த நிலையில் பரம்பொருட் கொள்கையை வலியுறுத்தியும் தத்து வார்த்த விடயங்கள் குறிப்பிடப்பட்டுள்ளன. இவ்விருகொள்கைகளையும் இணைத்தே இராமகிருஷ்ண பரமஹம்சர் தமது கருத்துக்களைப் பரப்பியுள்ளார்.
- அனைத்துச் சமயங்களையும் ஏற்றுக் கொள்ளும் இராமகிருஷ்ண பரமஹம்சரின் சமயப் பொதுமைமிக்க மனப்பாங்கு மேலானதன்மையுடையது ஆகும். எல்லாச் சமயங்களும் நேரடியாகவும், மறைமுகமாகவும் இறை உண்மையை எடுத்துக் காட்டுகின்றன என்பதைத் தமது அனுபவங்களால் உணர்த்தினார்.
- சமயங்கள் பலவாறு காணப்பட்டாலும் எல்லாச் சமயங்களும் சமுதாய ஒருமைப் பாட்டையே எடுத்து விளக்குகின்றன என்றும் குறிப்பிட்டார். இதுவே இவரது நடைமுறை வேதாந்தச் சிந்தனையாகும்.
- இராமகிருஷ்ண மடத்தை சுவாமி விவேகானந்தர் தாபித்தபோது இராமகிருஷ்ண பரமஹம்சரின் போதனைகளே சாதனையாகக் கொள்ளப்படும் எனக் குறிப்பிட்டார். சமயப்பொறையைப் பேணுதல் பிற உயிர்களையும் தன்னுயிர் போல் போற்றுதல் முதலிய கடமைகளிலும் ஈடுபட வேண்டும் என்றும் இராமகிருஷ்ண பரமஹம்சர் தமது போதனைகளில் வெளிப்படுத்தினார்.
- இறைவனை உணர்ந்து கொள்வதற்கான எளிய மார்க்கங்களை இராமகிருஷ்ண பரமஹம்சர் தமது சமய அனுபவத்தினூடாகவே வெளிப்படுத்தினார். இறைவனை அன்பு வழியில் உணரலாம்,சமூக வாழ்வின் விருத்தியே சமய வளர்ச்சி முதலிய கருத்துக்களுக்கு முதன்மை வழங்கினார்.
- இத்தகைய கொள்கைகளைச் சாதனையாக்கிக் காட்டவே இந்தியாவிலும், இலங்கை யிலும் உலகின் பல பகுதிகளிலும் இராமகிருஷ்ண மடங்கள் தாபிக்கப்பட்டுள்ளன.
- வேதாந்தக் கருத்தை உலகளாவிய நிலையில் பரப்பல், ஆங்கில மொழியில் பரப்பல் என்பன இராமகிருஷ்ண மடத்தின் ஊடாக இடம் பெறுகின்றன. இராம - கிருஷ்ண விஜயம் எனும் சஞ்சிகையை வெளியிடல், ஏழை எளியவர்களுக்கு இலவச மருத்துவ வசதி அளித்தல் முதலான பணிகளையும் இராமகிருஷ்ணமடம் செய்து வருகின்றது.
- சுவாமி விபுலானந்தர் இராமகிருஷ்ண மடத்டதினூடாகவே இந்து சமயப் பணியில் ஈடுபட்டார்.

விவேகானந்தர் பணிகள் - (சுருக்கம்)

## சுவாமி விவேகானந்தரின் பணிகள் (1863 – 1902)

- பத்தொன்பதாம் நூற்றாண்டில் வாழ்ந்த இந்துமத சீர்திருத்த வாதிகளுள் சுவாமி விவேகானந்தர் குறிப்பிடத்தக்கவர். அவரது இந்துமதப் பணிகள் காரணமாக 'வேதாந்த சிங்கம்,' 'சூறாவளித் துறவி', 'வீரத்துறவி', 'தேசபக்தமெய்ஞானி' சிறப்புப்பெயர்களால் சுவாமி விவேகானந்தர் அழைக்கப்பட்டார்.
- சுவாமி விவேகானந்தரது பணிகளுள் தலையாயது தமது குருநாதிரின் பெயரினால் இராமகிருஷ்ண மடம், இராமகிருஷ்ண மிசன் ஆகிய இயக்கங்களை தாபித்து ஆன்மீக இலக்குடன் சமூக நோக்கையும் இணைத்து பணிகள் புரிந்தமை ஆகும்.
- கிக்காக்கோ மாநாடு
- எழுமின் பிழுமின் கருத்துக்கள்.....பசியுள்ளவனுக்கு சமயப் போதனை ஆகாது
- பாரம மக்களுக்கு சாதாரண கல்வியறிவினூடாகச் சமய அறிவு
- உலகில் இந்துக்கலாசாரம் சனாதன தர்மத்தை எடுத்துக் காட்டல்
- கீழைநாட்டு மேலைநாட்டு தத்துவ உண்மை ஒப்பீடு
- இலங்கையில் விவேகானந்தர்.

- **கற்றல் - கற்பித்தற் செயற்பாடுகள்:**

படி - நவீன கால சமூக சீர்திருத்த இயக்கங்களுள் ஒன்றைத் தெரிவு செய்துமாணவர்களுக்குவிருப்பை ஏற்படுத்தும் வகையில் முன்வையுங்கள்.

படி - மாணவர்களை மூன்று குழுக்களாகப் பிரித்து, நவீன கால சமூக சீர்திருத்த இயக்கங்கள் தொடர்பான தகவல்களைத் திரட்டஇடமளியுங்கள். தேவையான நூல்களையும் வழங்குங்கள்.

படி - தகவல்களை ஒழுங்குபடுத்த இடமளியுங்கள்.

படி - அவற்றைத் தொகுத்து, காட்சிப்படுத்த வழிப்படுத்துங்கள்.

உசாத் துணைகள்:

இந்து நாகரிகம் - க. சி. குலரத்தினம்

**தேர்ச்சி 3.0 :** **இலங்கையில் இந்து நாகரிகத்தின் வரலாற்றுப் பின்னணியை இனங்கண்டு அவை பற்றிய பகுப்பாய்வினை மேற்கொள்வார்.**

**தேர்ச்சி மட்டம் 3.1 :** இலங்கையில் இந்துசமய வரலாற்றினை கால அடிப்படையில் சுருக்கமாக விளக்குவார்.

**பாடவேளைகள் :** 60

**கற்றற் பேறுகள் :**

- புராதன இலங்கையில் இந்துசமயம் நிலவியது என்பதற்கான வரலாற்று, இலக்கிய மூலாதாரங்களைக் கூறுவார்.
- அனுராதபுரத்தை காலவரையறை செய்து கல்வெட்டு, இலக்கியச் சான்றுகளில் அக்கால சமயச் சிறப்புக்களை எடுத்துக் காட்டுவார்.
- அனுராதபுர கால இந்து பௌத்த உறவினை கலை, இலக்கிய வழிபாடுகளின் ஊடாகக் குறிப்பிடுவார்.
- பொலனறுவைக்கால இலங்கையின் இந்துப் பண்பாட்டில் ஏற்பட்ட மாற்றங்களைக் குறிப்பிடுவார்
- தமிழக சோழர் மரபு பொலநறுவைப் பண்பாட்டில் ஏற்படுத்திய பண்பாட்டுத் தாக்கத்தைக் குறிப்பிடுவார்.
- பொலநறுவைக் காலத்தில் தமிழக பண்பாட்டுத் தொடர்பு கிழக்கிலங்கையில் பரவிய முறைபற்றி விளக்குவார்
- ஆரியச் சக்கரவர்த்திகள் தமிழக தொடர்பில் இலங்கையின் யாழ்ப்பாண இராச்சியத்தில் ஆட்சி செய்தமையை குறிப்பிடுவார்
- ஐரோப்பியர்கள் இந்துப்பாரம்பரியத்தில் ஏற்படுத்திய தாக்கம், மாற்றங்களைக் குறிப்பிடுவார்.
- நாவலரின் யாழ்ப்பாணச் சமய நிலை முதலான வெளியீடுகளை எடுத்துக் கூறுவார்
- விபுலானந்தர் இந்துசமயத்துக்கும் தமிழுக்கும் ஆற்றிய பணிகளை எடுத்துரைப்பார்
- நாவலர் மரபினராகிய காசி வாசி செந்திநாதையர், அருணாசல தேசிகர் பணிகளை குறிப்பிடுவார்
- தற்கால இந்து நாகரிகத்துறை வளர்ச்சிக்கு பேராசிரியர் கைலாசநாத குருக்களின் பணிகளை விபரிப்பார்.

**விடய உள்ளடக்க வழிகாட்டி :**

**இலங்கையில் இந்துசமய வரலாறு -**

அறிமுகம்

- இந்து சமய நம்பிக்கைகள் இந்தியாவைப் போலவே இலங்கையிலும் தனித்துவமும் வரலாற்றுப் பழமையும் கொண்டவை.
- இலங்கை இந்திய உப கண்டத்தில் அமைந்துள்ளமையால் இதன் இந்து சமய வளர்ச்சியில் இந்தியாவிற்கு முக்கிய பங்குண்டு.
- இந்தியாவில் குறிப்பாக தமிழகத்தில் ஏற்படும் அரசியல், பண்பாட்டு மாற்றங்கள் இலங்கையிலும் அத்தகைய துறைகளில் மாற்றங்களை ஏற்படுத்தின.
- இலங்கைக்கும் இந்தியாவிற்கும் இடையிலான அரசியல், வணிகம், திருமண உறவுகள், கலாசார பரிமாற்றங்கள் போன்றவை இலங்கையின் இந்து சமய வளர்ச்சியில் செல்வாக்கினை ஏற்படுத்தின.
  - மௌரியர் காலத்தில் இலங்கைக்குப் பௌத்தம் கொண்டு வரப்பட்டமை
  - நாயன்மார்கள் இலங்கையிலுள்ள திருத்தலங்கள் மீது தேவாரங்கள் பாடியமை
  - சோழ மன்னர்கள் இலங்கையை ஆட்சி செய்தமை
- இலங்கையின் வட பகுதியில் ஆரியச் சக்கரவர்த்திகளால் யாழ்ப்பாண இராச்சியம் என்னும் சைவம் சார்ந்த அரசு தோற்றுவிக்கப்பட்டது.

## வரலாற்று மூலங்கள்

- இலங்கையின் இந்து சமய வளர்ச்சி பற்றி அறிந்து கொள்ள பல புதைபொருட் சின்னங்கள் உதவுகின்றன.
- தமிழ்மொழி, பாளி மொழி, சிங்கள மொழி, சமஸ்கிருத மொழி என்பவற்றில் தோன்றிய இலக்கியங்கள், பிற நாட்டார் குறிப்புக்கள் முதலானவை இலக்கியச் சான்றுகளாக அமைவன:
    - சமஸ்கிருத மொழி நூல்களுள் இதிகாசங்கள், புராணங்கள் முக்கியமானவை.
    - தமிழ்மொழி இலக்கியங்களை தமிழகத்தைச் சேர்ந்த இலக்கியங்கள், இலங்கையில் தோன்றிய இலக்கியங்கள் என இனங்காணலாம்.
    - பாளி மொழி இலக்கியங்களாக மகாவம்சம், சூளவம்சம் முதலானவற்றைக் கூறலாம்.
- புதைபொருட் சின்னங்களாக ஒவ்வொரு வரலாற்றுக் காலகட்டங்களிலும் அமைக்கப்பட்ட கோயில்கள், சிற்பங்கள், கல்வெட்டுகள் முதலானவை உள்ளன.
- பௌத்த சமய மரபுகளுடன் இணைந்த வகையில் இந்து சமயம்சார் புதைபொருட் சின்னங்கள் காணப்படுதல் சிறப்பம்சமாகும்.
- இந்து சமயம் தொடர்பான ஆரம்பகால ஆய்வுகளில் அதிகமானவை இலக்கியச் சான்றுகளாக முதன்மைப்படுத்தியவை ஆகும்.
- அண்மைக் காலத்தில் இருவேறுபட்ட வரலாற்று மூலங்களை அடிப்படையாகக் கொண்ட வகையில் ஆய்வுகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

## அனுராதபுரக் காலம்

- இலங்கை வரலாற்றில் கி.மு. 3 ஆம் நூற்றாண்டு தொடக்கம் கி.பி. 9 ஆம் நூற்றாண்டு வரையான காலப்பகுதி அனுராதபுரக் காலம் எனக் கொள்ளப்படும்.
- தேவநம்பிய தீசனின் காலம் முதல் 5 ஆம் மகிந்தனின் ஆட்சிக்காலம் வரையான காலப் பகுதியாக இது உள்ளது.
- பண்டுவ என்னும் பண்டுகாபய மன்னன் புரோகிதரிடம் கல்வி கற்றதாகவும் அரண்மனையில் வைதீக புரோகிதர்கள் ஆலோசனை வழங்கியதாகவும் வைதீக சடங்குகள் செய்ததாகவும் கூறப்படுகிறது.
- இலங்கை வரலாற்றில் பௌத்த சமயம் அரச ஆதரவுடன் வளர்ச்சி பெறத் தொடங்கிய காலமாக அனுராதபுரக் காலம் அமைகிறது.
- பௌத்த சமய நம்பிக்கைகளுடன் இந்து சமய மரபுகளும் வளர்ச்சியடைந்த காலம் என்ற வகையில் இலங்கையின் இந்து சமய வரலாற்றில் அனுராதபுரக் காலத்திற்கு தனித்துவமான இடமுண்டு.
- அனுராதபுரக் காலப்பகுதியில் இந்து சமயமானது தனித்துவமான நிலையிலும், பௌத்த சமய மரபுகளுடன் இணைந்த வகையிலும் வளர்ச்சியடைந்தது.
- அனுராதபுரக் கால இந்து சமய வளர்ச்சியில் இந்தியாவில் குறிப்பாகக் தமிழகத்தில் ஏற்பட்ட அரசியல் நிலை, சமய மறுமலர்ச்சி என்பன அதிக செல்வாக்குச் செலுத்தின.
- வட இந்தியாவில் மௌரியர் ஆட்சியின் போது மகிந்த தேரரினால் பௌத்தம் இலங்கைக்கு கொண்டு வந்த பின்பு அது அரச மதமாக வளர்ச்சி பெற்றது.
- இந்நிலையில் இந்து சமய நம்பிக்கைகள் பௌத்த சமயத்தினுள் உள்வாங்கப்பட்டன.
- இலங்கையின் இந்து சமய வளர்ச்சி பற்றி அறிந்து கொள்வதற்கு இலங்கையில் கிடைக்கும் சான்றுகளுடன் தமிழகத்து வரலாற்றுச் சான்றுகளும் தொல்பொருட் சான்றுகளும், இலக்கியச் சான்றுகளும் உதவுகின்றன.

### மன்னர்களும் இந்து சமயத் தொடர்பும்

- இலங்கை மன்னர்கள் பௌத்த சமயத்தை தழுவிய போதிலும் இந்து சமய வளர்ச்சிக்கு தமது ஆதரவை வழங்கினர்.
- 2 ஆம் மகிந்தன், 2 ஆம் சேனன், எல்லாளன், துட்டகைமுனு போன்ற மன்னர்களின் காலத்தில் இந்து சமய நம்பிக்கைகள் நன்நிலையில் இருந்ததாக அறிய முடிகிறது.
- மன்னர்கள் தமது பெயரில் சிவ என்னும் அடைமொழிகளையும் பயன்படுத்தினர். (உ-ம்) கிரிகந்த சிவ, மகாசிவ, முடசிவ முதலானவை
- சிங்கள மன்னர்கள் தமது அரண்மனைகளில் வைதீக சடங்குகளை ஆற்றுதல், இந்து ஆலயங்களை வழிபடுதல், புரோகிதர்களுக்குத் தானங்களை வழங்குதல் என்று இந்து சமயத்துடன் தமது தொடர்புகளைக் கொண்டிருந்தனர்.
- இலங்கை மன்னர்கள் வைதீக சடங்குகளால் தம்மைத் தூய்மைப்படுத்தியமை பற்றி சீன யாத்திரிகனாகிய பாகியன் குறிப்பிடுகிறான்.
- மகாவம்சம், சூளவம்சம் போன்ற பாளி இலக்கியங்கள் சிங்கள மன்னர்கள் இந்து ஆலயங்களைப் புனர்நிருமாணம் செய்தமை, கதிர்காமம் போன்ற ஆலயங்களை வழிபட்டமை போன்ற செய்திகளைத் தருகின்றன.
- இந்து சமயப் புரோகிதர்கள் அரண்மனைகளில் வேள்விகளை ஆற்றுதல், பூர்வ அபரக் கிரியைகளைச் செய்தல் போன்றவற்றைச் செய்தனர்.

### இந்து சமயத் தெய்வங்களும் கோயில்களும்

- இந்து சமயத்தில் வழிபடப்படும் தெய்வங்கள் தொடர்பான ஆதாரங்களும் கிடைக்கப் பெறுகின்றன.
- சிவன், விஷ்ணு, முருகன், கணபதி போன்ற தெய்வங்கள் இக்கால மக்களால் வழிபடப்பட்டதாக அறிய முடிகிறது.
- சிவபாலித, சிவரக்கித, விணு, கோபால, வேல, வேலச, கண, கணகுட்டச என்ற தொடர்கள் மேற்கூறிய தெய்வங்கள் தொடர்பாகக் கிடைக்கின்ற பிராமிக் கல்வெட்டுச் சான்றுகளாகும்.
- இந்துத் தெய்வங்கள் தொடர்பான வேறு பல சான்றுகளும் கிடைக்கப் பெறுகின்றன.
  - கி.பி. 1 ஆம் நூற்றாண்டில் இலங்கை மக்கள் சிவ வழிபாட்டை உடையவர்கள் என்று தொலமி கூறியுள்ளமை.
  - அனுராதபுர அழிபாடுகளுக்கு மத்தியில் இந்துத் தெய்வங்களின் வெண்கலப் படிமங்கள் கிடைக்கப் பெற்றமை.
  - இசுறுமுனியாவில் உள்ள “காதலர் சிற்பங்கள்” சிவன், பார்வதி ஆகியோரின் வடிவங்கள் என்பவை குறிப்பிடத்தக்கவை.
- இலங்கையின் பல்வேறு பகுதிகளிலும் இந்துத் தெய்வங்களுக்கு ஆலயங்கள் பல காணப்பட்டன.
- இந்துக் கோயில்கள் வடக்கு கிழக்குப் பகுதிகளில் மட்டுமன்றி, நாட்டின் தென்பகுதிகளில் பௌத்த மக்கள் வாழ்ந்த பிரதேசங்களிலும் சிறப்புற்று விளங்கின.
  - கதிர்காம முருகன் ஆலயத்தை துட்டகைமுனு வழிபட்டமை
  - தேவேந்திரமுனையில் உப்புல்வன் ஆலயம் சிறப்புற்றிருந்தமை
  - வசபக் குளத்தின் அருகில் பிள்ளையார் ஆலயம் இருந்தமைக்கு அவ்வாலயத்தின் அடித்தளம் கண்டுபிடிக்கப்பட்டமை
  - திருக்கேதீஸ்வரம், திருக்கோணேஸ்வரம் போன்ற சிவாலயங்கள் புகழ் பெற்று விளங்கியமை என்பன போன்ற ஆதாரங்களை இங்கு குறிப்பிட முடியும்.
- திருக்கேதீஸ்வரம், திருக்கோணேஸ்வரம் போன்ற சிவாலயங்கள் சம்பந்தர், சுந்தரர் முதலான நாயன்மார்களால் தேவாரத் திருமுறைகளில் புகழ்ந்து பாடப்பட்ட பெருமை பெறுவன.

**இலங்கையில் இந்துசமய வரலாறு - பொலநறுவைக்காலம்**

(கி.பி. 9 ஆம் நூற்றாண்டு - கி.பி. 15 ஆம் நூற்றாண்டு)

- பொலநறுவையில் மட்டுமன்றி நாட்டின் ஏனைய பகுதிகளிலும் இந்து மரபுசார் கோயில் வழிபாடு, சமயச் சடங்குகள் என்பன வளர்ச்சி கண்டன.
- இந்திய, தமிழக அரசியல் பண்பாட்டு மாற்றங்கள் இலங்கையின் பண்பாட்டு வளர்ச்சியில் செல்வாக்குச் செலுத்தின.
- சோழ மன்னர்களின் பேரரசு விரிவாக்கத்தை அடுத்து இலங்கையும் சோழர்களின் ஆதிக்கத்தின் கீழ் வந்தது.
- இராஜராஜனை அடுத்து அவன் மகன் இராஜேந்திரன் 1017 இல் நாடு முழுவதையும் தமது ஆதிக்கத்தில் கொணர்ந்தான்.
- இலங்கை - மும்முடிச்சோழ மண்டலம் எனவும், பொலநறுவை - ஜனநாதமங்களம் எனவும் அழைக்கப்பட்டன. சோழ அரசர்களின் இலங்கைப் பிரதிநிதி - சோழ இலங்கேஸ்வரன் எனப்பட்டான்.
- மகாவம்சம், சூளவம்சம், ராஜவலிய, பூஜாவலிய போன்ற இலக்கியங்கள் மூலமும் கட்டிடங்கள், சிற்பங்கள்,  கல்வெட்டுகள் முதலான தொல்பொருட் சின்னங்கள் வாயிலாகவும் பொலநறுவைக் கால இந்து சமய வளர்ச்சியைப் பற்றி அறிய முடியும்.
- தமிழகத்துடன் இலங்கை கொண்ட தொடர்பு காரணமாக பொலநறுவையிலும், நாட்டின் ஏனைய பகுதிகளிலும் இந்துப் பண்பாடும், சைவநெறியும் பெரு வளர்ச்சி கண்டன.
- பொலநறுவைப் பிரதேசத்தில் கண்டுபிடிக்கப்பட்ட 16 இந்துக் கோயில்களுள் சிவன் கோயில்கள் 10, விஷ்ணு கோயில்கள் 5, காளி கோயில் ஒன்றாகும்.
- சிவன் கோயில்களுள் வானவன் மாதேவீஸ்வரம் இராஜேந்திரனால் கட்டப்பட்டதாகும்.
- கந்தளாய், மண்டலகிரி, பதவியா, மாதோட்டம், திருகோணமலை போன்ற இடங்களில் இந்து சமய மரபுகள் வளர்ச்சி பெற்றன.
- இந்து, பௌத்த அரசர்கள் மற்றும் வணிகக் குழுக்கள், படைத்தளபதிகள் என்போர் இந்துக் கோயில்களை அமைத்ததுடன் பூசைகளும் ஏனைய காரியங்களும் முறையாக நடைபெற தானங்கள், கொடைகளை வழங்கினர்.
- சிவன் கோயில்கள் கருவறை, அந்தராளம், அர்த்த மண்டபம், மகா மண்டபம், வீதிகள், பரிவாரக் கோயில்கள் எனும் பிரதான பகுதிகளைக் கொண்டுள்ளன.
- திருக்கோணேஸ்வரம், விக்கிரம சோழேஸ்வரம், உத்தம சோழேஸ்வரம், பண்டித சோழேஸ்வரம் போன்ற ஆலயங்கள் நாட்டின் ஏனைய பகுதிகளில் வளர்ச்சி கண்ட இந்து கோயில்களாகும்.
- குருநாகல் கல்வெட்டு “விக்கிரம சாளமேகேஸ்வரம்“ பற்றியும் மெடிரிகிரியா கல்வெட்டு இராஜேந்திரன் காலத்தில் புகழ்பெற்ற  “ பண்டித சோழேஸ்வரம் “ பற்றியும் குறிப்பிடும்.
- திருக்கேதீஸ்வரத்தில் புதிய கோயில் அமைத்து அதற்கு “இராஜராஜேஸ்வரம்” எனப் பெயரிட்டனர்.
- 2 ஆம் விக்கிரமபாகு முதலான சிங்கள மன்னர் பணிகளால் இக் கோயில்கள் சிறப்படைந்தன.

- குளக்கோட்டனின் திருக்கோணேஸ்வர ஆலய நிர்மாண, புனர்நிர்மாணப் பணிகளை பல சான்றுகளால் அறியலாம். குளக்கோட்டன் இக்கோவிலை புனர்நிர்மாணம் செய்தமை, கந்தளாய்க் குளத்தை புனரமைத்தமை, திருமால், அம்மன் கோயில்களை அமைத்தமை, நிலங்களைத் தானமாக வழங்கியமை பற்றி தட்சணாகைலாச புராணம் கூறுகின்றது.
- தட்சண கைலாய புராணம் - "பா தாங்கும் கோயிலும் பொன் மண்டபமும்..... " எனும் பாடலில் திருக்கோணேஸ்வரத்தில் அவனது பணிகள் பற்றிக் கூறுகிறது.
- ஆலயங்களை அமைத்ததுடன் பூசைகளுக்கும் ஏனைய செயற்பாடுகளுக்கும் அரசர்கள் பல தானங்களை அளித்தனர்.
- தமிழகக் கோயில்களைப் போல இங்கும் ஆகம விதிப்படியான பூசைகள், தோத்திர பாராயணம் என்பனவற்றிற்கு ஒழுங்கு செய்தனர்.
- தாழிக்குமரன் திருக்கேதீஸ்வரத்தைப் புனரமைத்து அதன் தேவைகளுக்கென மாதோட்ட நகரத்து நிலத்தையும் தானமாக வழங்கினான்.
- நிலாவெளிச் சாசனம், திருக்கோணேஸ்வரத்திற்கு அதிக நிலம் தேவதானமாக விடப்பட்டமையைப் பற்றிக் கூறும்.
- பன்மகேஸ்வரர் என்பவர் திருக்கோணேஸ்வரத்து அறக்கட்டளையை மேற்பார்வை செய்தனர்.
- அரசர்களால் மட்டுமன்றி, பிரதானிகள், வணிகக் கணங்கள் என்போராலும் கோயில்கள் அமைத்து நிருவகிக்கப்பட்டன.
- அக் காலத்தில் நானாதேசிகர், வீரவளஞ்சியர் முதலான வணிகக் கணங்கள் செல்வாக்குப் பெற்றிருந்தன.
- சமூக முன்னேற்றத்திலும், கலாசார அபிவிருத்தியிலும் ஐந்நூற்றுவர் எனும் வணிகக் கணத்தின் பங்கு முக்கியமானது. ஆலயத்தை அமைத்தல், திருவுருவங்களை நிறுவுதல், மண்டபங்களை அமைத்தல் எனப் பல வகையில் அவர்களின் பணிகள் அமைந்தன.
- சாசனங்களில் ஐந்நூற்றுவர் மடம், ஐந்நூற்றுவர் மண்டபம் எனும் பெயர்கள் உண்டு.
- பதவியாக் கல்வெட்டு, காளி கணத்தவர் அமைத்த காளி கோயில் பற்றியும் அதன் நிருவாகம் பற்றியும் கூறும்.
- வேதாகம கிரியைகளை ஆற்றும் பிராமணர்கள் அக்காலத்தில் முக்கியமான இடத்தைப் பெற்றனர்.
- மிகிந்தலைக் கல்வெட்டு " ஐயங்கொண்ட சாளமேக சதுர்வேதி மங்கலம்" பற்றிக் கூறும். கந்தளாயில் அமைந்திருந்த பிராமணர் குடியிருப்பான "ராஜராஜன் சதுர்வேதி மங்கலம்" ராஜராஜன் காலத்தில் சிறப்படைந்தது. கோயில்களில் மட்டுமன்றி, அரண்மனைகளிலும் இந்து சமய மரபுகளும் பிராமணிய மரபுகளும் பேணப்பட்டன.
- அரசர்கள், அவர் தம் சுற்றத்தவர்களின் நாளாந்த வாழ்க்கை, சடங்குகள், கல்வி, கலைகள் என்ற பல துறைகளும் இந்து கலாசாரத்தின் செல்வாக்கைக் காட்டுவன.

- சோழ அரசர்களினதும், சிங்கள அரசர்களினதும் அரண்மனைகளில் இம் மரபுகள் வளர்ச்சி கண்டன.
    - சூளவம்சம் - விக்கிரபாகு புரோகிதர்கள் மூலம் வேள்விகளையும், இந்து சமயக் கிரியைகளையும் நடத்தினான் எனக் கூறும்.
    - மகாவம்சம் - "மானாபரணனின் அரண்மனையில் வேதங்களில் வல்ல புரோகிதரகள் ஓமம் வளர்த்து யாகம் செய்தார்கள்" எனக் கூறும்.
    - பராக்கிரமபாகுவின் ஜாத கருமம், கர்ண வேதனம், அன்னப்பிரசாதனம் என்பன வைதீக முறைப்படி ஆற்றப்பட்டன.
    - பராக்கிரமபாகு பிறந்த நாள் தொட்டு, வைதீகச் சடங்குகளை முறைப்படி பின்பற்றினான்.

**பொலனநறுவைக்கால கோயில்களும் சிற்பவடிவங்களும்**

- பொலநறுவைக் கால இந்துக் கோயில்கள் கட்டிடக் கலை, சிற்பக்கலை, விக்கிரகக் கலை என்பனவற்றின் வளர்ச்சியைக் காட்டுவன.
- தமிழக ஆலயங்களைப் போல் அல்லாமல் அளவில் சிறிதாக இருப்பினும் திராவிடக் கட்டிடக் கலை அம்சங்களைக் கொண்டுள்ளன.
- கோயில்கள் கருவறை, அந்தராளம், அர்த்த மண்டபம், முன் மண்டபம், பரிவாரக் கோயில்கள், விமானம் எனும் திராவிடக் கட்டடக் கலைக் கூறுகளைக் கொண்டுள்ளன. பொலநறுவைக் கோயில்களுள் 1 ஆம் சிவதேவாலயம் கலை ஆய்வாளர்களின் கவனத்தைக் கவருவன.
- இதன் கருவறை, அந்தராளம், அர்த்த மண்டபம் ஆகிய உறுப்புகள் தனித்தனியாக அமைக்கப்பட்டுப் பின்பே இணைக்கப்பட்டன.
- கருவறையின் அடித்தளம் முதல் சிகரம் வரையான பகுதி செம்மையான கற்பாளங்களால் அமைக்கப்பட்டுள்ளது.
- பொலநறுவைக் கோயில்களில் கல்லிலும், உலோகத்திலும் அமைந்த பல சிற்ப விக்கிரகங்கள் கண்டுபிடிக்கப்பட்டன.
- 1907, 1908, 1960 போன்ற ஆண்டுகளில் பொலநறுவையிலும் அதனை அண்டிய பிரதேசங்களிலும் கடவுளர், நாயன்மார் படிமங்கள் கண்டுபிடிக்கப்பட்டன.
- கடவுளர் படிமங்களுள் நடராஜர், சோமாஸ்கந்தர், பிரதோஷ மூர்த்தி என்பனவற்றையும், அடியவர் படிமங்களுள் - அப்பர், சம்பந்தர், சுந்தரர், காரைக்கால் அம்மையார் வடிவம் என்பனவற்றையும் கூறலாம்.
    - சோமாஸ்கந்த வெண்கலப் படிமத்தில் பீடத்தின் மேல் சிவன், உமை என்போர் காணப்படினும் முருகனின் வடிவம் தற்போது இல்லை.
    - திரிபங்க அமைதியில் உள்ள அப்பரின் படிமத்தின் இடுப்பும், கால்களும் சற்று வளைந்தவாறு காணப்படுகிறன.
    - காரைக்கால் அம்மையார் வடிவம் சேக்கிழார் சித்தரிக்கும் பேய் உருவை வெளிப்படுத்துவதாக உள்ளது.

### இராஜதானிகளும் இந்துசமயமும் (கி.பி 13 - கி.பி 16)

- இலங்கையின் இந்து சமய வரலாற்றில் பொலநறுவைக் காலத்தைப் போலவே அதனை அடுத்து வந்த காலத்திலும் இந்து சமயத்தின் வளர்ச்சியைக் காணலாம்.
- பொலநறுவை இராஜதானியின் வீழ்ச்சியை அடுத்து, இலங்கை பல இராஜதானிகளாக பிளவுபட்டது.
- இலங்கையின் மேல் மாகாணத்தை மையப்படுத்தி கோட்டை இராஜதானியும் மத்திய மலைநாட்டை மையப்படுத்தி கண்டி இராஜதானியும் நாட்டின் வட பகுதியை மையமாகக் கொண்டு யாழ்ப்பாண இராஜதானியும் அமைந்திருந்தன.
- கி.பி. 13 தொடக்கம் கி.பி. 16 வரையான காலத்தில் மூன்று இராஜதானிகளாக இலங்கை பிரிந்து இருந்தது.
- இவ்வாறு ஆட்சி அதிகாரங்கள் வேறுபட்ட நிலையில் காணப்பட்டாலும் இலங்கையின் எல்லாப் பகுதிகளிலும் இந்து சமய நம்பிக்கைகள் வளர்ச்சி பெற்றன.
- கி.பி. 13 தொடக்கம் கி.பி. 16 வரையான காலத்தில் இந்து சமயம் பெற்ற வளர்ச்சி பற்றி அறிவதற்கு பல்வேறு வரலாற்று மூலங்கள் உதவுகின்றன.
- சிங்கள - தமிழ் மொழிகளில் அமைந்த கல்வெட்டுக்கள், இலக்கியங்கள் என்பன அவற்றுள் முக்கியமானவை.
- அவ்வகையில் குயில் விடு தூது, புறா விடு தூது, கிளி விடு தூது முதலான இலக்கியங்களைக் குறிப்பிடலாம்.
- திருக்கரசைப் புராணம், தட்சண கைலாய புராணம், கோணேசர் கல்வெட்டு, கைலாச மாலை போன்றன தமிழ் மொழி இலக்கியங்களுள் முக்கியமானவை.
- பிற நாட்டவர்களின் குறிப்புகளும் இக்காலம் பற்றி அறிவதற்கான வரலாற்று மூலங்களாக அமைவன.
- இந்துக்கள் வாழும் பகுதிகளில் மட்டுமன்றி, பௌத்த மக்கள் வாழும் பிரதேசங்களிலும் இந்து சமய நம்பிக்கைகள் வளம் பெற்ற வகையினை அறிந்து கொள்வதற்கு இவ்வகை வரலாற்று மூலங்கள் உதவுகின்றன.

### பௌத்த சமய மரபுகளும் இந்து சமயமும்

- இலங்கையின் இராஜதானிகளில் வெவ்வேறு மன்னர்கள் ஆட்சி செய்தாலும் அவர்களின் ஆட்சிக் காலங்களில் இந்து சமய மரபுகளும் வளம் பெற்றன.
- யாழ்ப்பாணத்தில் சிங்கை ஆரியன், பரராசசேகரன், செகராசசேகரன், சங்கிலி குமாரன், விஜய காலிங்கன் முதலான அரசர்களதும் ஏனைய பகுதிகளில் 14 ஆம் பராக்கிரமபாகு, 6 ஆம் பராக்கிரமபாகு, 9 ஆம் பராக்கிரமபாகு, மாயாதுன்னை, 7 ஆம் விஜயபாகு, ராஜசிங்கன் போன்ற அரசர்களதும் ஆட்சி இடம் பெற்றது. அக் காலங்களிலும் இந்து சமயத்தின் வளர்ச்சியைக் காணலாம்.
- சிங்கள மன்னர்கள் பௌத்த சமயத்தைப் பின்பற்றினாலும் இந்து சமயத்திலும் நம்பிக்கை உடையவர்களாக விளங்கினர்.

- இலங்கையில் கோட்டை இராஜதானியாக விளங்கிய காலத்தில் நாட்டின் தென் பகுதியில் இந்து ஆலயங்களும், அவை சார்ந்த நம்பிக்கைகளும் நன்கு வளர்ச்சி பெற்றன.
- 1 ஆம் பராக்கிரமபாகு, 4 ஆம் பராக்கிரமபாகு, 6 ஆம் பராக்கிரமபாகு, 9 ஆம் பராக்கிரமபாகு, மாயாதுன்னை, 7 ஆம் விஜயபாகு போன்றவர்கள் இந்து சமயத்திற்கு அளித்த ஆதரவு, வழங்கிய நன்கொடைகள் என்பன பற்றி அறிய முடிகிறது.
- 6 ஆம் பராக்கிரமபாகு சிவன் கோயில்களுக்கும், முருகன் ஆலயங்களுக்கும் தானங்களை வழங்கினான்.
- தேநுவரை விஷ்ணு ஆலயம் பற்றிய செய்திகளை 2 ஆம் பராக்கிரமபாகுவின் கல்வெட்டு, குவெறோஸ் முதலான வெளிநாட்டுப் பயணிகளின் குறிப்புகள் போன்றவற்றில் காணலாம்.
- பூவை விடு தூது, அன்னம் விடு தூது போன்ற இலக்கியங்கள் கோட்டையில் அமைந்திருந்த முருகன் கோயில் தொடர்பான தகவல்களைத் தருகின்றன.
- சிங்கள மொழிக் கல்வெட்டு ஒன்று தெய்வேந்திர முனையில் நகரீசர், நாகர், கணேசர் முதலான தெய்வங்களுக்கு அமைந்திருந்த கோயில்கள் பற்றிக் கூறுகின்றன.
- முன்னேஸ்வரத்திற்கு 6 ஆம் பராக்கிரமபாகு, 9 ஆம் பராக்கிரமபாகு போன்ற மன்னர்கள் செய்த பணிகள் பற்றி சிங்கள, தமிழ் மொழிகளில் அமைந்த கல்வெட்டுகள் குறிப்பிடுகின்றன.

### வடக்கு, கிழக்குப் பகுதிகளில் இந்து சமய வளர்ச்சி

- நாட்டின் வடக்குப் பகுதியை மையமாகக் கொண்ட யாழ்ப்பாண இராச்சியத்தில் இந்து சமய நம்பிக்கைகள் நன்கு நிலைபெற்றிருந்தன.
- புவனேகபாகு மன்னன் நல்லூர் கந்தசுவாமி ஆலயம் அமைத்தமை பற்றிக் கைலாய மாலை குறிப்பிடுகிறது. யாழ்ப்பாண வைபவ மாலை விஜயகாலிங்க மன்னனின் சமயப் பணிகள் பற்றிக் கூறுகிறது.
- நல்லூர் தலைநகரமாக விளங்கிய காலத்தில் அதன் நான்கு திசைகளிலும் பல ஆலயங்கள் அமைக்கப்பட்டன.
- உரும்பிராய் கருணாகரப் பிள்ளையார் ஆலயம், நீர்வேலி அரசகேசரிப் பிள்ளையார் ஆலயம், அரியாலை சித்தி விநாயகர் கோயில் போன்ற கோயில்கள் புகழ்பெற்று விளங்கின.
- கிழக்கிலங்கையில் திருக்கோணேஸ்வரம், கொக்கட்டிச்சோலை தான்றோன்றீஸ்வரம், மட்டக்களப்பு மாமாங்கேஸ்வரர் ஆலயம், திருக்கோயில் முருகன் கோயில் போன்ற ஆலயங்களும் இக்காலத்தில் புகழ்பெற்று விளங்கின.
- திருக்கோணேஸ்வரத்தின் சிறப்பினைக் கூறும் திருக்கோணசல புராணம் இக்காலத்திலேயே இயற்றப்பட்டது என்பர்.

## கிராமிய வழிபாடு

- ஆகமம், சிற்ப சாத்திர நெறி சாராத வழிபாடு எனக் கருதப்படும் கிராமியச் சடங்குகளின் வளர்ச்சியையும் அக்கால இலங்கையில் நாம் காணலாம்.
- கண்ணகி அம்மன், மாரியம்மன், நாச்சிமார், பெரியதம்பிரான் முதலான கிராமியத் தெய்வங்கள் அக்கால மக்களால் வழிபடப்பட்டன.
- இந்நம்பிக்கைகளின் தொடர்ச்சியை இன்றும் மட்டக்களப்பு, வன்னி, திருகோணமலை, யாழ்ப்பாணம்,மலையகம், அம்பாறை போன்ற பிரதேசங்களில் காணமுடிகிறது.

### இலக்கிய வளர்ச்சி

- கண்ணகியின் வரலாற்றைப் பிரதேச வழக்குகளுடன் இணைத்துக் கூறும் கண்ணகி வழக்குரை, கோவலனார் கதை, சிலம்பு கூறல் போன்ற இலக்கியங்கள் தோன்றின.
- இந்து சமய நம்பிக்கைகள், இந்து ஆலய வழிபாடுகள் என்பன பற்றிக் கூறும் இலக்கியங்கள் பலவும் இக்காலப் பகுதியில் தோன்றின.
- சிங்கள மொழியில் தோன்றிய குயில் விடு தூது, புறா விடு தூது, கிளி விடு தூது முதலான இலக்கியங்கள் இந்து சமய நம்பிக்கைகள் பற்றிக் கூறுவன.
- இந்துக் கோயில்களினுடைய புகழ் கூறும் தலபுராணங்களும் தோற்றம் பெற்றன.
- உதாரணமாக திருக்கோணேஸ்வரத்தின் சிறப்பினைக் கூறுகின்ற திருக்கோணசல புராணத்தைக் குறிப்பிடலாம்.
  - கோணேசர் கல்வெட்டு, திருக்கரசைப் புராணம், கைலாய மாலை, சரசோதிமாலை போன்ற இலக்கியங்களையும் குறிப்பிடலாம்

### ஆசிரியச் சக்கரவர்த்திகள் காலம்

- ஆரியச் சக்ரவர்த்திகள் (கி.பி.1216-1621 வரை) யாழ்ப்பாணத்தில் ஆட்சி செலுத்தினர்.
- சிவ சின்னமான நந்தியை ஆரியச் சக்கரவர்த்திகள் தங்கள் இன சின்னமாகக் கொண்டனர்.
- இராமேஸ்வரத்து சேது பதிகளோடு திருமண உறவு காரணமாக இவர்கள் தம்மை சேது காவலர் என அழைக்கலாயினர். எனவே சேது யாழ்ப்பாண அரசர்காலத்தில் வெளியிடப்பட்ட நாணயங்களிலும் பொறிக்கப்பட்டன.
- நல்லூர் கந்தசுவாமி கோயில், நல்லூர் கைலாசநாதர் கோயில், சட்டநாதர் கோயில், இணுவில் கருணாகரப் பிள்ளையார் கோயில், நாயன்மார்க்கட்டு அரசசேகரிப்பிள்ளையார் கோயில், அரியாலை சித்திவிநாயகர் கோயில் என பல பாகங்களிலும் கோயில் எழுந்தன.

### இலக்கியம்

| | |
|---|---|
| சமயம் சார்பானவை | - தட்சிணகைலாச புராணம் |
| | - திருக்கரைசைப் புராணம் |
| | - கதிரை மலைப்பள்ளு |
| | - கண்ணகி வழக்குரைக் காதை |
| | - கைலாய மாலை |
| | - கோணேசர் கல்வெட்டு |
| | - சரசோதி மாலை , இரகுவம்சம் |
| சோதிடம் சார்பானவை | - செகராச சேகரம் |
| வைத்தியம் சார்பானவை | - பரராச சேகரம் |

- வேதம், புராணம், ஆகமம், தத்துவ தரிசனம், ஆகியவற்றில் புலமை பெற்ற அரசர்களின் ஆதரவின் கீழ் நல்லூர்ப் பிராமணர்கள் வாழ்ந்தனர்.

## பத்தொன்பதாம் நூற்றாண்டில் இலங்கையில் இந்துப் பண்பாட்டு வளர்ச்சி

அந்நியர் ஆட்சியில் இலங்கை - அறிமுகம்

- இலங்கை வரலாற்றில் 19 ஆம் நூற்றாண்டு தொடக்கம் 20 ஆம் நூற்றாண்டு வரையான காலப்பகுதி ஆங்கிலேயர்களின் ஆட்சிக்காலமாக உள்ளது.
- ஐரோப்பாவில் இருந்து இலங்கைக்கு வந்த அமெரிக்கன் மிஷன், வெஸ்லியன் மிஷன், மெதடிஸ்த மிஷன் போன்ற சமயக் குழுக்கள் இலங்கையருக்கு ஆங்கிலக் கல்வியைப் போதித்ததுடன், கிறிஸ்தவ சமயத்தைப் பரப்பும் சமய நிறுவனங்களாகவும் செயற்பட்டன.
- கிறிஸ்தவ சமயக் குழுக்கள் கல்வி வசதி, வேலை வாய்ப்பு, சமூக நலப்பணிகள் போன்ற வழிமுறைகள் மூலம் கிறிஸ்தவ சமயத்தைப் பரப்பின.கிறிஸ்தவ சமயக் குழுக்களின் செயற்பாடுகளுக்கு ஆங்கிலேய அரசாங்கமும் உறுதுணையாகச் செயற்பட்டது.
- இக்காலத்தில் இந்துசமயம் கிராமிய வழிபாடுகள் மூலம் பின்பற்றப்பட்டது.
  உ-ம் வைரவர் வழிபாடு
  (ஆங்கிலேயர் ஆட்சிக்காலத்தை பத்தொன்பதாம் நூற்றாண்டுக் காலத்துடன் இணைத்துக் கற்பிக்கவும்.)
- சூழ்நிலை, அரசியல், பொருளாதார, சமய, கல்வி நிலைகள்.
- ஆங்கிலேயர் ஆட்சியில், ஆங்கிலக் கல்வியும் அரச உத்தியோகமும் அளித்து, சைவ சமயத்தவர்களைத் தமது மதமாற்றக் கொள்கைக்கு உட்படுத்தினர்.
- ஆங்கில ஆட்சியாளர்கள் கிறிஸ்தவ மிஷனரிமார்களிடம் கல்வியை போதிக்கும் பொறுப்பைக் கையளித்தனர்.
- கிறிஸ்தவ சமயம் பரம்பலைத் தடுக்கவும், சைவ சமயத்தை வளர்க்கவும் 19 ஆம், 20 ஆம் நூற்றாண்டுகளில் பல சைவ சமயப் பெரியார்கள் தோன்றினர்.
- சைவ சமய முயற்சிகள்
- பிரசங்கம் செய்தல்

  பிரசங்கப் பொருள் - கடவுள், திருவிழா, நிலையாமை, மகளிர் ஒழுக்கம், கூடாவொழுக்கம்

  பிரசங்கம் செய்தோர் - ஆறுமுகநாவலர், காசிவாசி செந்திநாதையர், கொக்குவில் சபாரத்தின முதலியார், நீர்வேலி சங்கரபண்டிதர், சி. வை. தாமோதரம்பிள்ளை, த. கைலாசபிள்ளை
- கண்டனம் செய்தல்
  1. கிறிஸ்தவ கண்டனம் – கண்டனம் பிரசங்கங்களாகவும், கண்டன நூல்கள், மூலமும் துண்டுப் பிரசுரங்களின் மூலமும் நிகழ்த்தப்பட்டன
  2. சுதேசிய கண்டனம்
     (i) பொருள் - பலியிடல், ஆகமப்பிறழ்வு, மகளிர் ஒழுக்கம், ஆகமவிதி, அந்தணர் ஒழுக்கம்.
     (ii) கண்டனம் செய்தோர் - நாவலர், காசிவாசி செந்திநாதையர் மேலைப்புலோலி நா. கதிரவேற்பிள்ளை

- **சைவ சமய நிறுவனங்கள்**
    - (i) சைவப் பிரகாச சபை
    - (ii) சைவப் பிரகாச சமாஜம்
    - (iii) சைவப் பரிபாலன சபை

**நோக்கம், பணிகள்**

- பாடசாலைகள் அமைத்தல்
- அமைவிடம் -யாழ்ப்பாணம், வேலணை, புலோலி, வண்ணார்பண்ணை, ஏழாலை, கந்தர்மடம், நீர்வேலி, சாவகச்சேரி
- வித்தியாசாலையின் பெயர்கள் - சைவப்பிரகாசம், நாயன்மார்கள் பெயர், சந்தானகுரவர் பெயர் முதலானவற்றைக் கொண்டிருத்தல்.
- வித்தியாசாலைகளில் கலைத்திட்டங்கள் பேணப்பட்டன. வகுப்பு ஒன்று-முதல் எட்டு வரையான வகுப்புகள் இருந்தன.
- கணிதம், விஞ்ஞானம், வரலாறு, புவியியல் முதலான பாடங்களுடன் ஆங்கில மொழியும் கற்பிக்கப்பட்டது.
- முகாமைத்துவம் - நிறுவனங்களின் கீழும், தனிப்பட்டோரிடமும் இருந்தன.
- கல்வியின் நோக்கம் - நல்லொழுக்கம், சமயம் என்பவற்றை வளர்த்தல்.
- பாடநூல்களை எழுதுதல் - பாலபாடங்கள், நூல்களுக்கு உரை, வசன நூல்கள்
- ஆசிரியர்கள் - ஆறுமுகநாவலர், சைவப்பெரியார் சிவபாதசுந்தரனார்
- சைவாங்கில பாடசாலைகளை நிறுவுதல்.

    உ-ம்:- (i) வண்ணார் பண்ணை வைத்தீஸ்வராக் கல்லூரி
    (ii) யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி
    (iii) உரும்பிராய் இந்துக்கல்லூரி
    (iv) காரைதீவு இந்துக்கல்லூரி
- நாட்டின் பல பிரதேசங்களில் கதிரேசன் கோயில்கள், சிவன், விநாயகர், அம்மன் முதலான தெய்வங்களுக்கும் பெருங்கோயில்கள் எழுந்தன. குறிப்பாக ஒல்லாந்தர் காலத்தில் எழுந்த கோயில்கள் இக்காலத்தில் பெருங்கோயிலாகவும், உற்சவங்களையும் பல்வேறு விழாக்களையும் கொண்டதாகவும் விளங்கின.
- மலையகத்தில் தமிழ் மக்கள் வாழும் பிரதேசத்தில் முத்து மாரியம்மன் வழிபாடு அப்பகுதியில் சிறப்புப் பெற்றது.
- நாட்டார் தெய்வங்களுக்கு வெளிப்படையான சடங்குகள் நடைபெற்றன.
- வன்னிப் பிரதேசத்தில் கண்ணகியம்மன், நாகதம்பிரான் முதலான தெய்வங்கள் முக்கியத்துவம் பெற்றன.
- மட்டக்களப்பு பிரதேசத்தில் கண்ணகியம்மன், திரௌபதையம்மன் வழிபாடுகள் முக்கியத்துவம் பெற்றன. குமாரதம்பிரான், வைரவர், வீரபத்திரர், பெரியதம்பிரான் வழிபாடுகளும் சிறப்புப் பெற்றிருந்தன.

- சைவாலயங்கள் மீது பல பிரபந்தங்கள் பாடப்பட்டன.
- பிரபந்த வடிவில் காவியங்களும் பாடப்பட்டன
- அச்சியந்திரசாலை நிறுவுதல்
  - பணி - துண்டுப்பிரசுரங்களை வெளியிடல்
    பாடநூல்களை வெளியிடல்
    ஏட்டுச் சுவடிகளை அச்சேற்றல்
    உரை நூல்களை வெளியிடல்
    வசன நூல்களை வெளியிடல்
    பத்திரிகைகளை வெளியிடல்
    பிரபந்த நூல்களை வெளியிடல்
- அச்சியந்திரங்கள் அமைந்த இடங்கள்:
  வண்ணார்பண்ணை, அச்சுவேலி, யாழ்ப்பாணம், பருத்தித்துறை, வேலணை, நீர்வேலி, சாவகச்சேரி.
- அச்சியந்திர வருகையால் பத்திரிகை வெளியிடல்:
  இலங்கைநேசன், இந்துசாதனம் (Hindu Organ) (1889), சைவ உதயபானு (1880)
- இலங்கை அரசியலில் சைவர்களின் வகிபாகம்
  உ:ம் : சேர். பொன். இராமநாதன்

**இருபதாம் இருபத்தோராம் நூற்றாண்டில் இலங்கையில் இந்துப் பண்பாட்டு வளர்ச்சி**

- சூழ்நிலை, அரசியல், பொருளாதார, சமய, கல்வி நிலைகள்.
- ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலரைத் தொடர்ந்து சுவாமி விபுலாநந்தர், சேர். பொன். இராமநாதன், சிவபாதசுந்தரனார், சேர். பொன். அருணாசலம் அருணாசலதேசிகர், காசிவாசி செந்திநாதையர், கைலாசநாதக்குருக்கள் என்று பலர் சைவசமய மறுமலர்ச்சிக்காகப் பணிபுரிந்தனர்.
- சைவ சமய வளர்ச்சி நிறுவன ரீதியாக ஏற்படுத்தப்பட்டமை.
  உ-ம்:- (i) விவேகானந்த சபை (1902)
  (ii) சைவ வித்தியா விருத்திச் சங்கம் (1923)
  (iii) இராம கிருஷ்ண மிஷன்
  (iv) அகில இலங்கை இந்துமாமன்றம் (1955)
  (v) சைவ மங்கையர் கழகம் (1930)
  (vi) சிலாபம் இந்து வாலிபர் சங்கம்
  (vii) யாழ்ப்பாணம் சைவ பரிபாலன சபை - 1988
  (viii) இந்து வித்தியா விருத்திச் சங்கம் - 1951

- **பிரசங்கம்**
  தங்கம்மா அப்பாக்குட்டி தமிழ்நாடு, சிங்கப்பூர், மலேசியா முதலிய நாடுகளுக்குச் சென்று நடத்தியமை.

- **கதாப்பிரசங்கம்**
  – சமய அறிவை சாதாரண மக்களுக்கு மிகவும் எளிய முறையில் விளக்கப் பயன்படுவதாகும். உ-ம்:-
    (ii) குப்பிளான் செல்லத்துரை
    (iii) அளவெட்டி அருட்கவி சீ. விநாசித்தம்பி
    (iv) திருகோணமலை பண்டிதர் வடிவேல்
    (v) கல்முனை சிவ அன்பு
  - சச்சிதானந்த யோகிகள் தமிழ்நாடு வரை புகழ் பெற்றவர்.
  - கதாப்பிரசங்கத்திற்கு சங்கர சுப்பையர் சிறப்பானவர் எனப் புகழ் பெற்றவர்.
  - ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாததேசிக பரமாசாரிய சுவாமிகள் தமிழ்நாடு, சிங்கப்பூர், மலேசியா போன்ற நாடுகளில் கதாப்பிரசங்கம் செய்தார்.
  - பத்திரிகைகள்
    உ-ம்:- (i) சைவ சித்தாந்த பானு (1924)
    (ii) விவேகானந்தன் (1925)
    (iii) சிவதொண்டன் (1935)
    (iv) சைவக் காவலன் (1960)
    (v) மெய்கண்டார்நெறி (1972)
  - கோப்பாய் சபாபதி நாவலர் சென்னையில் சித்தாந்த வித்தியானுபாலன் எனும் அச்சகத்தை நிறுவி ஞானாமிர்தம் எனும் பத்திரிகையை வெளியிட்டமை.
  - சித்தாந்த தீபிகை எனும் ஆங்கிலச் சஞ்சிகையை ஜே. எம். நல்லசாமிப்பிள்ளை நடத்தியமை.
  - பாடசாலைகள் நிறுவப்பட்டமை
    உ-ம்:- (i) கொழும்பு விவேகானந்த வித்தியாலயம்
    (ii) இரத்மலானை இந்துக் கல்லூரி - 1951
    (iii) பம்பலபிட்டி இந்துக் கல்லூரி - 1951
    (iv) வெள்ளவத்தை சைவமங்கையர் வித்தியாலயம்
    (v) பம்பலப்பிட்டி இராமநாதன் இந்து மகளிர் கல்லூரி
    (vi) சிலாபம் மருதங்குளம் சைவப் பிரகாச வித்தியாசாலை
- சுதந்திரத்தின் பின் சைவ சமய நிறுவனங்கள் மூலம் சமயம் வளர்க்கப்பட்டது.
  உ-ம்:- அகில இலங்கை இந்துமாமன்றம் (1955)
  - பணிகள்
    - சைவ சமயக் கல்வி அரசின் அங்கீகாரத்துடன் பாடசாலையில் கற்பிக்கப்பட்டது.
    - சைவ சித்தாந்த சமாசம் (1905) நிறுவியமை.
    - வேலணையில் நடைபெற்ற திருமுறை விழா (1955)
    - வேத சிவாகம பாடசாலைகள் நிறுவப்பட்டன.
      உ-ம்: - உடுவில்-சுன்னாகம் கதிரமலைச் சிவன்கோயிலுக்கு அருகில் உள்ளது.
- **நாட்டுக்கோட்டை நகரத்தார் பணி**
  உ-ம்: யாழ்ப்பாணம், புத்தளம், காலி
  - சைவப் பிள்ளைகள் பயில்வதற்கென தனியான கல்லூரிகளும், சைவ சிறுவர் இல்லங்களும், ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையும் நடத்தப்பட்டமை.
  - 1960 ஆம் ஆண்டு 180 தனியார் பாடசாலைகளை நிறுவனங்கள் பொறுப்பேற்றன.
  - நிறுவனங்களினால் நிறுவப்பட்ட பாடசாலைகள் சைவ ஆசார அனுஷ்டான பயிற்சி நிலையங்களாக விளங்கின.



புரிந்துள்ளனர். உ - ம் : சுவாமி தந்திரதேவா

- **ஆங்கிலத்தில் சைவக் கொள்கை**
- எச். டபிள்யு. சோமறஸ் (ஜேர்மனி) என்பவர் சைவசித்தாந்தம் எனும் தலைப்பில் ஜேர்மன் மொழியில் நூலை (1912) எழுதியமை
- திருவாசகத்தை (1900) ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தமை
- திருமதி. இரத்தினா நவரத்தினம் 256 பக்கங்களைக் கொண்ட திருவாசக விளக்கம் ஆங்கிலத்தில் எழுதியமை

**கற்றல் - கற்பித்தல் செயற்பாடுகள்**

படிI - இலங்கையில் இந்து மத வரலாறு என்னும் தலைப்பின் கீழ்வரும் ஒரு பகுதியைத் தெரிவு செய்து மாணவர்களுக்கு விருப்பை ஏற்படுத்தும் வகையில் அதனை முன்வையுங்கள்.

படிII - இலங்கையில் ஆரம்பகாலம் முதல் 20 ஆம் நூற்றாண்டு வரை உள்ள காலப்பகுதியில் இந்து சமயத்தின் வளர்ச்சி தொடர்பான தகவல்களைத்திரட்ட பொருத்தமான நூல்களை வழங்குங்கள்.

படிIII- மாணவர்களை பல குழுக்களாகப் பிரித்து, காலங்களுக்கு ஏற்ப தகவல்களைத் திரட்ட வழிப்படுத்துங்கள் உ-ம்: அனுராதபுரம், பொலனறுவைக் காலம்)

- திரட்டிய தகவல்களைத் தொகுத்து, குழுவில் ஒருவர் வீதம் வந்து வகுப்பில் முன்வைக்குமாறு கூறுங்கள்.
- தகவல்களைக் குறிப்புகளாகத் தயாரிக்க வழிப்படுத்துங்கள்.

**உசாத துணைகள்:**

| | | |
|---|---|---|
| இலங்கையில் இந்து மதம் | - | பேராசிரியர் சி. பத்மநாதன் |
| சிந்தனை (சஞ்சிகை) | - | பேராசிரியர் சி. க. சிற்றம்பலம் யாழ். பல்கலைக்கழக வெளியீடு |
| கோணேஸ்வரம் | - | குணசிங்கம் |

## ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர்

அறிமுகம் - பின்னணி

- ஈழத்தில் உதித்த சைவப் பெரியார்களுள் ஆறுமுகநாவலரும் ஒருவர்.
- 19 ஆம் நூற்றாண்டில் ஈழத்தில் கிறிஸ்தவ மிஷனரிமாரின் செல்வாக்குப் பெற்ற காலத்தில் ஞானப்பிரகாசர் மரபில் வந்த கந்தப்பிள்ளை சிவகாமி தம்பதியினருக்கு ஆறாவது பிள்ளையாக நல்லூரில் 1882 டிசம்பர் 18 ஆம் திகதி பிறந்தார்.
- பிள்ளைத் திருநாமம் ஆறுமுகம் என்பதாகும்.
- தமிழ், ஆங்கிலம், சமஸ்கிருதம் ஆகிய மும்மொழிகளில் தேர்ச்சியுடையவர்.
- சுப்பிரமணிய உபாத்தியாயர், வேலாயுத முதலியார், சரவணமுத்து உபாத்தியாயர், சேனாதிராய முதலியார் ஆகியோரிடம் குருகுல முறையில் கல்வி பயின்றவர்.
- யாழ். வெஸ்லியன் மிஷன் கல்லூரியில் (யாழ்ப்பாண மத்திய கல்லூரி) கல்வி பயின்று சகல துறைகளிலும் பாண்டித்தியம் பெற்றார். அவர் 7 ஆண்டுகள் அக் கல்லூரியிலேயே ஆசிரியராகப் பணிபுரிந்தார்.
- ஆசிரியர் பணியை நிறுத்தியமைக்கான காரணம் "சைவசமயத்தையும் அதன் கருவியாகிய கல்வியையும் வளர்த்தல் வேண்டும்" என்ற பேராசையாகும்.

பணிகள்: 1. சமயப்பணி 2. கல்விப்பணி 3. பதிப்பாசிரியர் பணி 4. சமூகப்பணி

சமயப்பணி:

- சைவப் பிரசங்கங்களை ஆற்றியமை
  உதாரணம்: வண்ணார்பண்ணை வைத்தீஸ்வரர் ஆலயம்
- புராணபடனங்கள் நிகழ்த்தியமை
  உதாரணம்: நல்லூர் கந்தசுவாமி கோயில்
- ஆலயங்களைப் புனருத்தாரணம் செய்தமை.
  உதாரணம்: திருக்கேதீச்சரம், திருக்கோணேசுவரம்
  மன்னாருக்கு சமீபத்திலுள்ள மாதோட்டம் என்னும் நன்நகரில் தேன்பொந்தொன்று உள்ளது. அதனைச் சென்றடையுங்கள்" என விஞ்ஞாபனம் செய்தமை குறிப்பிடத்தக்கது.
- சைவ சமய நூல்கள் பலவற்றை எழுதி வெளியிட்டமை.
  உதாரணம்: சைவ வினாவிடை முதற்புத்தகம், இரண்டாம் புத்தகம், இலக்கண நூல்கள் பலவற்றை வெளிக்கொணர்தல்.
- பண்ணிசையினை வளர்த்தமை.

  உதாரணம்: நல்லூர் மகோற்சவ காலங்களில் திருவாவடுதுறையிலிருந்து ஓதுவார்களை அழைத்து தமிழ் வேதப்பாக்களை ஓதுவித்தமை.
- பிரமச்சரிய வாழ்வினைச் சீராக வாழ்ந்து காட்டியமை.
- பிறசமயக் கண்டனங்களையும் அகச்சமயக் கண்டனங்களையும் மேற்கொண்டமை. கண்டனப் பிரசுரங்கள் மூலம் சைவத்தின் மாண்பை நிலைநிறுத்தியமை.
  "சைவதூஷண பரிகாரம்", "நல்லூர் கந்தசுவாமி கோயில்","
  "யாழ்ப்பாணத்துச் சமயநிலை"

## கல்விப்பணி

- சைவப்பிரகாச வித்தியாசாலைகளை அமைத்தார்.
  உதாரணம்:
  - 1848 வண்ணார்பண்ணையிலும் 1864 சிதம்பரத்திலும் 1872 கோப்பாயிலும் வித்தியாசாலைகளை அமைத்தமை.
  - 1871 புலோலியில் சைவ ஆங்கில வித்தியாசாலையை அமைத்தமை.
- வித்தியாசாலைகளுக்கு முகாமையாளராக இருந்தார்.
- முதியோர் கல்வியில் கவனஞ் செலுத்தினார்.
- பெண்களுக்கான கல்வி ( 3 ஆம் பாலபாடத்தில் விளக்கியுள்ளார்) முன்னெடுக்க வேண்டியதன் அவசியத்தை வற்புறுத்தினார்.

## பதிப்பாசிரியர் பணி

- ஈழத்தில் வண்ணார்பண்ணையிலும் தமிழ்நாட்டின் சிதம்பரத்திலும் வித்தியாநுபால யந்திரசாலைகளை நிறுவினார்.
- அகராதிகள் பதிப்பித்தல் உதாரணம்: சூடாமணி நிகண்டு
- இலக்கிய நூல்கள் - இலக்கண விளக்கச் சூறாவளி
- தருக்க நூல்கள் - தருக்கசங்கிரகம்
- இலக்கிய நூல்கள் - மகாபாரதம்
- அறிவியல் சார் நூல்கள் - இலங்கை பூமிசாத்திரம்
- முதன்முதல் ஏட்டுச்சுவடிகளிலிருந்த நூல்களை அச்சுவாகனமேற்றினார்.
  உதாரணம்: தொல்காப்பிய சூத்திரவிருத்தி
- தொகுத்துப் பதிப்பித்தமை - அருட்பா
- சில நூல்கள், இலக்கணக் குறிப்புக்கள், அருஞ்சொல் அகராதி, சொல்லிலக்கண ஆராய்ச்சிப் பதிப்புக்கள்
- சிலவற்றுக்கு உரை எழுதிப் பதிப்பித்துள்ளார்.
  உதாரணம்: ஔவையார் அருளிச் செய்த நல்வழி, ஆத்திசூடி, கொன்றைவேந்தன்
- சில செய்யுள் நூல்களை வசனநடையில் எழுதிப் பதிப்பித்தார்.

  உதாரணம்: திருவிளையாடற் புராண வசனம், பெரியபுராண வசனம்,

  கந்தபுராண வசனம்.
- அப்பியாசங்களோடு பாடநூல்கள் சிலவற்றையும் எழுதிப் பதிப்பித்தார்.

  உதாரணம் : இலக்கணச் சுருக்கம்
  - "நாவலர் பதிப்பே நல்ல பதிப்பு" என்று அன்றும் இன்றும் அறிஞர்களால் பாராட்டப்படுகின்றது.
  - இலங்கையில் சைவ ஊடகத்துறை, பத்திரிகைத்துறை வளர்ச்சியுற வித்திட்டமை.
  - இலங்கைநேசன் என்னும் பத்திரிகை வளர்ச்சிக்கு உதவியமை, சைவ உதய பானு என்னும் பத்திரிகையை வெளியிட ஆர்வம் காட்டியமை.

**சமூகப் பணி**

- 1876 / 77 ஆண்டுகளில் கடும் வரட்சியால் ஏற்பட்ட பஞ்சவேளையில் கஞ்சித்தொட்டித் தருமம் மேற்கொண்டமை.
- யாழ்ப்பாண கரையூர் உள்ளிட்ட இடங்களில் பேதி நோய் பரவியபோது மக்களுடன் மக்களாக நின்று முதலுதவிகளையும் தக்க பரிகாரங்களையும் மேற்கொண்டமை.
- சமூகத்தைப் பாதிக்கும் மதுபாவனை, சூதாடுதல் முதலியவற்றை ஒழிக்கப் பாடுபட்டார்.
- யாழ்ப்பாணக் கச்சேரி நிர்வாகத்தின் ஊழல்கள் தொடர்பாக 1878 ஆம் ஆண்டு அங்கு வந்த தேசாதிபதிக்கு விண்ணப்பம் ஒன்றை வழங்கினார்.
- தமிழ் சமூகத்திற்காக தமிழ் இலக்கண இலக்கிய நூல்களைச் செம்மைப்படுத்தினார். செய்யுள் நடையிலுள்ள பழங்கால இலக்கியங்களுக்கு உரைசெய்தார்.
- பிறரை உரியவேளையில் கௌரவித்தமை.

  உ - ம்: நந்தனார் சரித்திரக் கீர்த்தனையைப் பக்திரசம் சொட்டப் பாடிய கோபால கிருஷ்ண பாரதியாருக்கு நாவலர் சன்மானம் வழங்கிக் கௌரவித்தமை.
- சுதேசிய எழுச்சிக்காகப் பாடுபட்ட தேசிய வீரராகக் காணப்பட்டார்.
- சைவத் தமிழ் மரபிற் புலமைமிக்க மாணவர் பரம்பரையை உருவாக்கி, இலங்கையின் சைவ மறுமலர்ச்சிக்குக் காரணமாகினார்.

**நிறைவு**

- 1879 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 05 ஆந் திகதி மக நட்சத்திரத்தில் இறையடி சேர்ந்தார்.
- 1971.10.29 இலங்கை அரசாங்கம் நாவலர் நினைவு முத்திரையை வெளியிட்டது.

## சுவாமி விபுலானந்தர்

அறிமுகம்

- இலங்கையிலும், இந்தியாவிலும் நடைபெற்ற பல்வேறு சமய மகாநாடுகளிலும், கருத்தரங்குகளிலும் தலைமை தாங்கினார்.
- 1892 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 27 ஆந் திகதி தமிழ் கர வருஷம் பங்குனித் திங்கள் 16 ஆம் நாள் ஞாயிற்றுக்கிழமை கிழக்கு மாகாணத்தில் மட்டுமாநகரின் தெற்கேயுள்ள காரைதீவு என்னும் கிராமத்தில் பிறந்தார்.
- சாமித்தம்பியாருக்கும் கண்ணம்மைக்கும் நன்மகனாக மயில்வாகனம் என்னும் இளமைப்பெயர் கொண்டார்.
- உயர்திரு க. குஞ்சித்தம்பி, புலோலி பொ. வைத்தியலிங்க தேசிகர் ஆகிய உபாத்தியாயர்களிடம் இளமைக்கல்வியைக் கற்றார்.
- இளமையில் ஆற்றல், அறிவு, விவேகம் முதலானவை கைவரப் பெற்றார்.
- இளமைக் கல்வியினை கல்முனை மெதடிஸ்த ஆங்கிலப் பாடசாலையிலும் பின்னர் மட்டக்களப்பு புனித மிக்கேல் கல்லூரியிலும் பயின்றார்.
- பாடசாலைக் கல்வியைக் கற்றுக் கொண்டிருக்கையில் கேம்பிரிஜ் ஜூனியர், கேம்பிரிஜ் சீனியர் பரீட்சைகளில் சித்தி பெற்றார்.
- கொழும்பு ஆசிரியர் கலாசாலையில் விஞ்ஞான ஆசிரிய டிப்ளோமாப் பயிற்சி பெற்றார்.
- 1916 இல் மதுரைத் தமிழ்ச் சங்கப் பண்டிதர் பரீட்சையில் சித்தி பெற்றார்.
- 1920 இல் லண்டன் B.Sc விஞ்ஞானமாணிப் பரீட்சையில் தேறி விஞ்ஞானப் பட்டதாரியானார்.
- கல்முனை கத்தோலிக்க மிஷன் பாடசாலை மட். புனித மிக்கேல் கல்லூரி, யாழ். சம்பத்திரிசியார் கல்லூரி ஆகிய பாடசாலைகளில் விஞ்ஞான ஆசிரியராகக் கடமையாற்றினார்.
- யாழ். மானிப்பாய் இந்துக் கல்லூரியில் அதிபராகக் கடமையாற்றினார்.
- 1922 வாழ்வில் திருப்புமுனை துறவு நாட்டம் சென்னை மயிலாப்பூர் இராமகிருஷ்ண மடம் சுவாமி சிவானந்தரால் "பிரபோத சைதன்யர்" என்னும் பிரமச்சரிய நாமம் சூட்டப்பிட்டார்.
- 1924 ஆம் ஆண்டு ஞான உபதேசம் பெற்று "சுவாமி விபுலாநந்தர்" என்னும் தீட்சை நாமம் பெற்றார்.
- துறவு வாழ்வு மானிட நேயத்தை வளர்த்தது.
- தமிழ், ஆங்கிலம், சமஸ்கிருதம், கிரேக்கம் முதலிய மொழிகளில் வல்லவராக விளங்கினார்.

### ஆற்றிய பணிகள்

- சமயப்பணிகள்
- நூலாசிரியர் பணி
- கல்விப்பணி
- பதிப்பாசிரியர் பணி
- கலைப்பணி
- சமூகப்பணி
- உரையாசிரியர் பணி

### சமயப் பணிகள்

- இலங்கையிலும், இந்தியாவிலும் நடைபெற்ற பல்வேறு சமய மகாநாடுகளிலும், கருத்தரங்குகளிலும் தலைமை தாங்கினார்.
- ஈசன் உவக்கும் இன்மலர்கள், கோயில் என்பவற்றை வினாவிடை அமைப்பில் இயற்றினார்.
- மகாலட்சுமி தோத்திரம், நடராஜ வடிவம் (ஐந்தொழில்களையும் சுருக்கமாக விளக்கும் நூல்), உமாமகேஸ்வரம் (மாதொரு பாகனாயமைந்துள்ள நுட்பத்தை விளக்குவது)

- கணேச தோத்திர பஞ்சகம், கதிரையம்பதி மாணிக்கப் பிள்ளையார் இரட்டை மணிமாலை, சுப்பிரமணிய சுவாமிகள் இரட்டை மணிமாலை, குமரவேள் நவமணிமாலை முதலான சமய நூல்களை ஆக்கியுள்ளார்.
- சமயப் பிரசங்கம் செய்தல், சமயச் சொற்பொழிவுகள் ஆற்றுவதில் ஈடுபட்டவர். இலங்கையில் அத்வைத வேதாந்த மரபின் பரவலுக்கு முன்னோடியானவர்.
- இராமகிருஷ்ண சங்கத்தின் கிளைத் தாபனம் ஒன்றை இலங்கையில் நிறுவி, அதன் ஆதரவில் கல்விச்சாலைகள் பல அமைத்தும், மாணவர் இல்லங்களை நிலைநாட்டியும், திருமடங்களைக் கட்டியும் தரும பரிபாலனம் செய்தவர்.
- சமயம் அனுட்டிப்பதற்குரியது என்பதனை தமது போதனைகளிலும் சாதனைகளிலும் நிலைநாட்டினார்.
- சமய தத்துவக் கருத்துக்களைச் சாதாரண மக்களும் விளங்கக்கூடியவாறு இலகு நடையில் விளக்கினார்.
- கலிப்பா, வஞ்சிப்பா, விருத்தப்பா வகைகளையும், கண்ணிகள் சிந்துகளையும் கையாண்டு சமய நூல்களைப் பாடினார். உதாரணமாக நான்மணிமாலை, தோத்திரம், தேவபாணி என்பனவற்றைக் கூறலாம்.
- சமயத்துறை சார்ந்தனவாகவும், வேதாந்த மரபு தழுவியதாகவும் அவரது கவிதைகள் காணப்படுகின்றன.
- இராம கிருஷ்ண பரமஹம்சர், சுவாமி விவேகானந்தர், ஆறுமுகநாவலர் முதலான சமயப் பெரியார்களை மதித்துப் போற்றியதுடன், அவர்களுடைய போதனைகளையும், பணிகளையும் முன்மாதிரியாகக் கொண்டவர்.

## கல்விப் பணிகள்

- விபுலாநந்தர் கல்வியில் உயர்ந்து விளங்கியதுடன் இந்துக்களும் அத்தகைய கல்வி பெறவேண்டும் என்பதில் ஆர்வமுடையவராக இருந்தார்.
- தமிழ் மாணவர்களுக்கு உயர் கல்வியை வழங்கும் பொருட்டு சிதம்பரத்தில் பல்கலைக் கழகம் நிறுவுவதை வலியுறுத்தி, சென்னை மாகாண அரசின் கல்விக் குழுவுக்கு சிபார்சு செய்ததுடன், அண்ணாமலைப் பல்கலைக் கழகம் உதயமாவதற்கும் வித்திட்டார்.
- அண்ணாமலைப் பல்கலைக் கழகத்திலும், இலங்கை கொழும்புப் பல்கலைக் கழகத்திலும் முதல் தமிழ் பேராசிரியராகப் பணி புரிந்தார்.

## கல்விப் பணிகள்

- விபுலாநந்தர் கல்வியில் உயர்ந்து விளங்கியதுடன் இந்துக்களும் அத்தகைய கல்வி பெறவேண்டும் என்பதில் ஆர்வமுடையவராக இருந்தார்.
- அண்ணாமலைப் பல்கலைக் கழகத்திலும், இலங்கை கொழும்புப் பல்கலைக் கழகத்திலும் முதல் தமிழ் பேராசிரியராகப் பணி புரிந்தார்.
- சுய மொழியபிமானமற்றதும், தேசாபிமானமற்றதும், அடிமைத்தனமானதும், நாகரிகத்தை நாசப்படுத்துவதுமான கல்வி முறையைக் கண்டித்தார்.
- மேல்நாட்டுக் கல்வியை இந்துக்கல்வி மரபுக்கமைவாகப் போதிப்பதற்குரிய வழிவகைகளைச் செய்தார்.

- “கற்ற கல்வி பிறரைப் பாதிக்கக்கூடாது; அது உயிர்ப்பூட்டுவது; உண்மையைக் காட்டுவது; தன்னம்பிக்கையைத் தருவது “ எனும் கொள்கை உடையவராக விபுலானந்தர் விளங்கினார்.
- தன் கல்வியற் சிந்தனைகளுக்குச் செயல் வடிவம் கொடுக்கும் நோக்கத்துடன் பல பணிகளை மேற்கொண்டார். இராம கிருஷ்ண மிஷனுக்குரிய கல்விச் சட்டத்தை இந்து போர்ட் இராஜரத்தினத்துடன் இணைந்து உருவாக்கினார்.
- 1925 இல் இலங்கையில் இராமகிருஷ்ணமிஷன் பாடசாலைகளின் முகாமைப் பொறுப்பை ஏற்று, தன் கல்விப் பணிகளைத் தொடர்ந்தார்.
- இலங்கையின் வடக்கு - கிழக்குப் பகுதிகளில் தமிழ்ப் பாடசாலைகள் பலவற்றை நிறுவி நிருவகித்தார்.
- விபுலாநந்தர் இராமகிருஷ்ணமிஷனுடன் இணைந்து பணிபுரிந்த காலத்தில்
  - கல்லடி - சிவானந்தா ஆண்கள் பாடசாலை
  - ஆனைப்பந்தி - இராமகிருஷ்ணமிஷன் பெண்கள் பாடசாலை
  - காரைதீவு - சாரதா வித்தியாலயம்
  - திருகோணமலை - இந்துக்கல்லூரி
  - வண்ணை - வைத்தீஸ்வர வித்தியாலயம்

  ஆகிய பாடசாலைகளை நிறுவி ஏழை மாணவர்களின் வாழ்வில் ஒளியூட்டினார்.
  - 1926 ஆம் ஆண்டில் யாழ்ப்பாணத்திலும், மட்டக்களப்பு கல்லடி உப்போடையிலும் அநாதை ஆச்சிரமங்களை நிறுவி, அநாதைச் சிறுவர்களின் கல்வியை மேம்படுத்தினார்.
  - இலங்கை கல்வித் திணைக்களத்தின் பாடநூற் சபை, கல்வி ஆய்வுச் சபை, தேர்வுச் சபை என்பனவற்றின் உறுப்பினராகவிருந்து கல்வித்துறைசார் பணிகளைப் புரிந்தார்.
  - மாணவர் நலனைக் கருத்திற் கொண்டு “கலைச்சொல் அகராதியை “ உருவாக்கினார்.
  - பாடசாலை மட்டத்தில் சமயக்கல்வி, பொதுக்கல்வி என்பன தொடர்பாகத் தொடர்ச்சி யான பல பணிகளை ஆற்றினார்.
  - வெள்ளிக்கிழமைகளில் கூட்டுப் பிரார்த்தனை நடாத்துதல்.
  - பக்திப் பாசுரங்களைப் பாராயணம் செய்தல்.
  - வார இறுதியில் சைவ சமய வகுப்புகளையும், பண்ணிசைப் பயிற்சிகளையும் நடாத்துதல்.
  - சமயக் கல்வியை இளைஞர்களுக்கு ஏற்றவாறு போதித்தல் அவரது புதிய திட்டமாகும். விபுலாநந்தரின் அத்தகைய திட்டம் இன்று செயல் முறைக்கு வந்துள்ளமை குறிப் பிடத்தக்கது.
  - இவரது கல்விப் பணிகள் அனைத்திலும் சமயம்சார் கல்விப் பணிகளே பிரதான இடத்தைப் பெறுகின்றன.

கலைப் பணிகள்

- இசைத் தமிழிலே மிகுந்த ஈடுபாடும் ஆராய்ச்சியும் பொருந்திய விபுலாநந்தர் கவிதைகள் ஓசை நயம் மிகுந்தவை. “இயலின்றி இசையில்லை; இசையின்றி இயலில்லை” என்பது அவரது கொள்கை.
- காலத்திற்கேற்ப கவிதை அமைந்துள்ளது.
- அவரது நூல்களில் செந்தமிழ் நடை கையாளப்பட்டுள்ளது.
- குருதேவர் வாக்கியம், விவேகானந்த பஞ்சகம், ஆறுமுகநாவலர், கங்கையில் விடுத்த ஓலை என்பவற்றை எழுதியுள்ளார்.

- அவர் உள்ளத்தில் அனுபவித்த உணர்வுகளைக் கவிதையிலே தீட்டிக் காட்டும் திறமை உள்ளவர்.
- பல்வேறு ஆசிரியப்பா, கலிப்பா, வஞ்சிப்பா, விருத்தப்பா வகைகளையும், கண்ணிகள், சிந்துகளையும் கையாண்டுள்ளார்.
- நாடகநூல் - மதங்கசூளாமணி. இசைத்தமிழ் - யாழ்நூல்
- ஆங்கிலவாணி, பூஞ்சோலைக்காவலன்
- சென்னை பச்சையப்பன் கல்லூரியில் (1936) சொல்லாக்க மகாநாட்டிற்குத் தலைமை தாங்கினார்.
- இயல், இசை, நாடகம் எனும் முத்தமிழிலும் வல்லவர் என்பதால் "முத்தமிழ் வித்தகர் விபுலானந்தர்" எனப் போற்றப்படல்.
- தமிழ்க் கவிதையின் போக்கிலே புரட்சிகரமான மாற்றங்களைச் செய்த பாரதியாரைப் பண்டிதர்கள் தீண்டாதிருந்த வேளையில் பாரதி கழகம் அமைத்து, பாரதி புகழைத் தமிழ் நாட்டில் பரப்பிய பெருமைக்குரியவர்.

**உரையாசிரியர் பணிகள்**

- தெளிவான நடை, எளிமையான மொழி நடை என்பவற்றைக் கையாண்டவர்.
- ஓசை நயத்தாலும் உணர்ச்சி வெளியீட்டுச் சிறப்பாலும் தம் உரைநடையிற் கூட பல இடங்களில் கவிதையின் எல்லையைத் தொட்டவர் விபுலானந்தர்.
- அவரது உரைநடை நூல்கள் -
    - விஞ்ஞானக் கட்டுரை
    - கலைச்சொற்கள்
    - விஞ்ஞான தீபம்• மொழிபெயர்ப்பு

      உ-ம்:- சுவாமி விபுலானந்தர் சம்பாசணை விவேகானந்த தீபம்
      விவேகானந்தரின் சொற்பொழிவு நூல்கள்

**பதிப்பாசிரியர் பணிகள்**

- விபுலாநந்தரின் நூல்கள் பிழையற்ற பதிப்புக்களாக கால, இட விபரங்களுடன் எழுதப்பட்டவை.
- அவர் தமிழரின் பழம் பெருமைகளைப் பத்திரிகைகளில் கட்டுரை வடிவில் வெளியிட்டார்.

  உ-ம்: செந்தமிழ்ச் செல்வி, கலைமகள், ஈழகேசரி உ-ம்:
- வேதாந்த கேசரி, இராமகிருஷ்ண விஜயம், பிரபுத்த பாரத முதலான வெளியீடுகளுக்குப் பத்திராதிபராக விளங்கினார்.

**பதிப்பாசிரியர் பணிகள்**

- விபுலாநந்தரின் நூல்கள் பிழையற்ற பதிப்புக்களாக கால, இட விபரங்களுடன் எழுதப்பட்டவை.
- அவர் தமிழரின் பழம் பெருமைகளைப் பத்திரிகைகளில் கட்டுரை வடிவில் வெளியிட்டார்.

## சமூகப் பணிகள்

- விபுலானந்தர் மக்களை நேசித்தவர். அவர்களுடைய நன்மை தீமைகளில் ஈடுபட்டவர்.
- ஒருமுறை கடவுள் நேரில் வந்தால் ... என்று பேச்சு எழுந்தபோது, சுவாமி பின்வருமாறு கூறினாராம். "நானென்றால் முத்தி தரும்படி கேட்கமாட்டேன். முத்தி என்னளவில் நின்றுவிடும். அதிலும் பார்க்க எல்லோரும் இன்புறும்படி சேவை செய்வதானால் அதிலுள்ள இன்பமே ஒப்பற்றது. " இவ்வாறு பிறருக்குப் பணி புரிவதே பெருமின்பம் தருவது என்ற திடசித்தம் கொண்டவர்.

- தீண்டாமை ஒழிப்பு இயக்கத்தில் ஈடுபட்டவர்.
- அன்னார் தன் சொந்த நலன்களைத் துறந்த வேளையிலும் நாட்டு நலனையும், மக்கள் நலனையும், மொழி நலனையும் துறவாதிருந்த சிறப்பு போற்றத்தக்கது.
- அநாதை இல்லங்களின் வளர்ச்சிக்காக கிராமங்கள் தோறும் அறக்கொடைத் திட்டங்களை ஏற்படுத்தினார்.
- விபுலானந்தரின் கல்விச் செயற்பாடுகள் ஏழை மாணவர்களினதும், அநாதைக் குழந்தைகளதும் முன்னேற்றத்திற்கு வழிகாட்டும் வகையில் அமைந்த சமூகப் பணிகளே என்பர்.

## நிறைவு

- இறைபதம்- 1947 ஜுலை 19 ஆம் நாள் சமாதி மட். கல்லடி உப்போடையில் உள்ளது. முத்தமிழும் பெருஞ்சீர் முதல்வனார் திருக்குமரா பக்தியுடன் பணிபவர்க்கு பல "கலையும் பாலிக்கும் சித்தி புத்தி நாயகனே திருமுறைகள் தமிழகத்தில் நிலைத்து நிலை பெற்றதுவும் நின்னருளின் திறனன்றோ" (சுவாமி விபுலாநந்தர்)

## சைவப்புலவர் கா. அருணாசலதேசிகர்

### அறிமுகம்

- 20 ஆம் நூற்றாண்டில், கிழக்கிலங்கையில் சைவசமயப்பணியும் சைவசித்தாந்தப் பணியும் புரிந்த பெரியார்களுள் அருணாசல தேசிகர் குறிப்பிடத்தக்கவர்.
- இவர் 1888 முதல் 1969 வரை 81 ஆண்டுகள் மட்டக்களப்பில் வாழ்ந்தவர்.
- பெற்றோர்:பெற்றோர்: தாய் - சின்னப்பிள்ளை அம்மையார்
  தந்தை - காசிநாத சாஸ்திரியார்
- பிறந்த இடம்- மட்டக்களப்பிலுள்ள புளியந்தீவு
- வேறு பெயர்கள் -தேசிகமணி, சைவமெய்ப்போதகர், சைவசித்தாந்தமணி

### பின்னணி

- அவரது சைவசமய நாட்டத்திற்கு, குடும்பப் பின்னணி காரணமாக அமைந்தது.
- தாயார் சைவசமய விரதங்களைப் பக்தியோடு அனுட்டிப்பவர். சந்தர்ப்பம் கிடைத்த போதெல்லாம் மட்டக்களப்பு நகரிலுள்ள ஆனைப்பந்திப் பிள்ளையாரைச் சென்று வழிபட்டார். அதனால் சிறுபராயத்திலிருந்தே அருணாசல தேசிகர் அக்கோயிலுக்கு சென்று வழிபட்டதுடன், அதில் ஈடுபாடும் கொண்டிருந்தார்.
- தந்தை சோதிடம் சொல்பவர். அவர் புராண, இதிகாசக் கதைகளில் ஈடுபாடு கொண்டவர். அவர் வீட்டிற்கு வரும் கதிர்காம யாத்திரிகர்கள், அடியார்கள், நண்பர் எல்லோருடன் புராண, இதிகாசக் கதைகளைப் பகிர்ந்து கொள்வார். சிறுபராயத்தில் இவற்றைக் கேட்டு வளரும் பேறு அருணாசல தேசிகருக்குக் கிடைத்ததுடன், அவரது வாழ்விலும் அவை பிரதிபலித்தன.
- அருணாசலதேசிகரின் மனைவி பொன்னம்மா. அவர் தேசிகரின் கல்விப் பணிக்கும், சமயப்பணிக்கும் உதவக்கூடிய சைவ ஆசாரம் உடையவராக விளங்கினார்.

- அருணாசலதேசிகரின் மனைவி பொன்னம்மா. அவர் தேசிகரின் கல்விப் பணிக்கும், சமயப்பணிக்கும் உதவக்கூடிய சைவ ஆசாரம் உடையவராக விளங்கினார்.
- அவரது அன்னையும் பிதாவும் முதற்குருவாக அமைந்து (வீட்டில்) வழிநடத்தினர்.
- ஆரம்பக் கல்வியைத் தந்தையிடம் ஆனைப்பந்திக் கோயிலுடன் தொடர்புபட்டிருந்த திண்ணைப்பள்ளியில் பெற்றார்.
- அடுத்து மட்டக்களப்பு, புளியந்தீவு மகிழடித் தெருவில் இருந்த சைவப்பள்ளியில் கல்வி கற்றார்.
- தொடர்ந்து மட்டக்களப்பு அரசடியில் இருந்த மெதடிஸ்த மிசன் பாடசாலையில் கல்வி பயின்றார். இளமையில் திறமைவாய்ந்த மாணவராக விளங்கினார்.

**மட்டக்களப்பு சுதேச இயக்கமும் அருணாசலதேசிகரும்**

- இளமைக்காலத்தில் அருணாசல தேசிகர் மட்டக்களப்பு சைவசமய சார்பான சுதேச இயக்கத்தின் பங்காளராக விளங்கியவர்.
- ஐரோப்பியர் மட்டக்களப்பை என்று கைப்பற்றினார்களோ, அன்றே அங்கு சுதேச இயக்கம் தோற்றம் பெற்றது. மட்டக்களப்புப் பிரதேசத்தில் சைவசமயம் மிகவும் பின்தங்கிய நிலையில் காணப்பட்டது.
- கிறிஸ்தவ சமயத்தவரின் மதமாற்ற நடவடிக்கைகள் தீவிரமடைந்த நிலையில் சைவசமயம் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது.
- 19 ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் யாழ்ப்பாணத்தில் தோன்றிய சைவத்தமிழ் எழுச்சி 19 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் மட்டக்களப்பிலும் பரவத் தொடங்கியது.
- சுவாமி விவேகானந்தரின் அமெரிக்கச் சிஷ்யையான அவபாமியா அம்மையார் மட்டக்களப்புக்குச் சென்று, ஊர் ஊராக இந்து சமயப் பிரசாரம் செய்தார். அதனால் மட்டக்களப்பு சைவமக்கள் பெரிதும் விழிப்புணர்வும் எழுச்சியும் பெற்றனர்.
- மேற்குறிப்பிட்ட நிகழ்வுகளின் பயனாக, சைவப்பிள்ளைகள் அனைவரும் சைவப் பாடசாலைகளில் படிக்க வேண்டும். வேண்டிய அளவு சைவப் பாடசாலைகளை ஊர் எங்கும் அமைக்க வேண்டும். தமது காரியங்களைத் தாமே செய்ய வேண்டும். என்ற குறிக்கோள்களுடன் நிறுவனங்கள், இராம கிருஷ்ண மிசன் என்பவற்றுடன் இணைந்து ஊர்மக்களும் சைவப் பாடசாலைகளைக் கட்டினர். அப்போது பாடசாலைகளை ஆசிரியர்களே கட்டி கல்விப்பணி செய்யும் முறைமை பின்பற்றப்பட்டது. பின்பு அப்பாடசாலைகளை அரசில் பதிவு செய்ய வேண்டும்.

மட்டக்களப்பில் ஏற்பட்ட சைவத்தமிழ் எழுச்சியால் பின்வரும் நன்மைகள் கிடைத்தன.
இந்துக் கோயில்கள் பல ஆகம மயமாக்கப்பட்டன. இந்துக் கோயில்களில் புராணபடனம் பரவியது.
கல்விப் பணிகள் இடம்பெற்றன.
புதிய நூல்கள் பல வெளிவந்தன; மறைந்து கிடந்த சில பழைய நூல்கள் அச்சிடப்பட்டன.

- இந்த முயற்சியில் அருணாசல தேசிகருடன் முதலியார் கா. வ. மார்க்கண்டன், வித்துவான் ச. பூபாலபிள்ளை, பண்டிதர் மயில்வாகனனார், வித்துவான் அ.சரவணமுத்தர், வித்துவான் வைத்தியலிங்க தேசிகர் முதலானோரும் அடங்குவர்.
- மேற்குறிப்பிட்டவர்களுடன் அக்காலத்தில் மட்டக்களப்பில் வாழ்ந்த யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த பெரியோர் பலரும் பங்களிப்புச் செய்தனர்.

**தொழில்:**

- அருணாசல தேசிகர் மட்டக்களப்பு அரசடியில் இருந்த மெதடிஸ்த ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியில் பயிற்சியில் ஈடுபட்டார். ஆனால் ஆசிரிய பயிற்சி இறுதிப் பரீட்சைக்குத் தோற்றுவதற்கும் சான்றிதழ் பெறுவதற்கும் மதம் மாற வேண்டும் எனும் வற்புறுத்தலுக்குப் பணியாது, ஆசிரியர் பயிற்சியை இடைநிறுத்தினார்.
- நிறைந்த அறிவைப் பெற்றிருந்த அவர் ஆசிரியத் தொழிலில் ஈடுபட்டு, நீண்ட காலம் நிலைத்திருந்தார். அதனால், மட்டக்களப்புப் பிரதேசம் பெருமளவிலான நன்மைகளைப் பெற்றுக் கொண்டது.
- நற்பிட்டிமுனை சைவப் பாடசாலையில் ஆசிரியப் பணியைத் தொடங்கிய இவர், தொடர்ந்து 1949 இல் ஓய்வு பெறும் வரை 40 வருடங்கள் ஆனைப்பந்தி சைவப் பாடசாலையில் தலைமை ஆசிரியராகப் பணியாற்றினார்.
- இவர் படிப்பதையும், படித்ததை மற்றவர்களுக்குக் சொல்லிக் கொடுப்பதையும் தனது கடமையாகக் கொண்டார்.
- பாடசாலை நேரம் என்றில்லாது தேவைகளுக்கு ஏற்றதாக சாயங்காலப்பள்ளி, இரவுப்பள்ளி என்பவற்றையும் நடத்தினார்.
- வீட்டில் படிக்க வசதி குறைந்த பிள்ளைகளுக்காக இரவுப் பள்ளி நடத்தினார்.
- தம் மாணவர்களை முன்னிலைக்குக் கொண்டு வர, ஓய்வையும் பொருட்படுத்தாது செயற்பட்டார்.
- எவ். எக்ஸ். சி. நடராசா அவர்கள் “பல வருட காலமாக பழைய முறையில் உபாத்தியாயர் வேலை செய்து, பின் புதியமுறையில் தலைமை ஆசிரியர் பதவி ஏற்று, உலகும் அரசும் போற்ற உத்தமராய்க் கடமைபுரிந்த தேசிகர் “ என்றும் திரு. வ.சி.சிவசுப்பிரமணியம் அவர்கள் “பாடசாலையில் சிறுவர்கள் ஆறுமுகநாவலரின் சைவ வினாவிடையையும் இலக்கணப்பாட நேரத்தில் நன்னூல் சூத்திரங்களையும் மனனம் செய்து ஒப்புவிக்க வேண்டும். தவறினால் தேசிகரின் தண்டனையிலிருந்து தப்பமுடியாது” என்றும் கூறியிருப்பவை அவரது தொழிலின் நேர்மையை எடுத்துக் காட்டும்.
- சுவாமி விபுலானந்தரைப் போல மாணவர்களைச் சைவ சமயநெறியில் வாழப் பழக்குதல், தம் தொழில்களைத் தாமே செய்தல், மற்றவர்களோடு அன்பாக இருத்தல், சிக்கனம், எளிமை முதலான உயர்ந்த பண்புகளை மாணவர் சமூகத்தில் உருவாக்குதில் முன்னின்று உழைத்தார்.
- இந்தவகையில் பண்டைய குருகுலக்கல்வி முறையில் குருவுக்குரிய தன்மையினையும் திண்ணைப் பள்ளிக்கூட முறையில் உபாத்தியாயருக்குரிய தன்மைகளையும் நவீன ஆசிரியர்களுக்குரிய தன்மைகளையும் ஒருங்கே காணக்கூடியவராக தேசிகமணியவர்கள் விளங்கினார்.

**சைவத் தமிழ்ப்புலமை:**

- சைவப் புலவர் பரீட்சைக்குத் தோற்றி அதில் திறமைச் சித்தி பெற்று சைவப் புலவரானார். இது அவரது சைவப் புலமைக்குச் சான்றாகும்.
- இவருக்குத் "தேசிகர் " என்ற பட்டத்தைச் சூட்டிப் பெருமைப்படுத்தியவர் இராமகிருஷ்ண சங்கத் துறவி அவிநாசாநந்த அடிகளார் ஆவார். (இத்துறவியார் சுவாமி விபுலானந்தரோடு தொடர்புபட்டு உழைத்தவர்).
- இவரது சமய அறிவையும் சேவையையும் பாராட்டி, மட்டக்களப்பு தமிழ்க்கலை மன்றம் 1952 இல் "தேசிகமணி" என்ற பட்டம் வழங்கி கௌரவித்தது.
- 1920 இல் சுவாமி விபுலானந்தரின் அழைப்பின் பேரில் தமிழ் விழாவில் உரையாற்ற தமிழ் நாட்டின் நவநீத கிருஷ்ண பாரதியார் மட்டக்களப்புக்கு வந்திருந்தார். அவர் தமது கட்டுரை ஒன்றில் அக்காலத்தில் மட்டக்களப்பில் சைவப் பெரியார்களாகவும், கல்விமான்களாகவும் விளங்கிய சைவப்புலவர் அருணாசல தேசிகர், வித்துவான் பூபாலபிள்ளை, இராசநாயக முதலியார் ஆகியோரின் நட்புக் கிடைத்தமை பற்றி தாம் பெருமைப்படுவதாகக் குறிப்பிட்டுள்ளார். இது தேசிகரின் சைவத்தமிழ் புலமைக் கான சான்றாகும்.

**அருணாசல தேசிகரின் செயற்பாடுகள்:**

- இவர் சைவசித்தாந்த நூலறிவும் மிகுந்த தமிழ்மொழிப்புலமையும் வடமொழிப் புலமையும்உடையவர்.
- இவர் அறிவைப் பெருக்கிக் கொள்வதில் ஈடுபாடு காட்டிய இரு துறைகள் குறிப்பிடத் தக்கவை. அவை: - இறக்கும் வரை தேடிக் கற்கும் முயற்சி - கற்றவர்களோடு சேர்ந்து அறிவைப் பெருக்குதல்
- நூல்களைச் சேகரிப்பதிலும் ஈடுபாடுடையவர். (உ-ம்)(உ-ம்) (உ-ம்) (உ-ம்) அவரது வீட்டு நூலகம்
- நூலகங்களை அமைக்கும் பணிகளில் மற்றவர்களுடன் இணைந்து செயற்பட்டார். (உ-ம்) ஆனைப்பந்தி நூல்நிலையம்
  கோட்டமுனை வீரகத்திப் பிள்ளையார் கோயிலுக்கருகில் உள்ள நூல்நிலையம்
- இறுதிக்காலத்தில் மட்டக்களப்பு பொதுநூல்நிலையம் இவரின் பொழுதுபோக்கிட மாயிற்று.

**அருணாசல தேசிகரின் பணிகள்:**

- அருணாசல தேசிகர் சைவசமயத்தை வளர்ப்பதற்காக பல்வேறு செயன்முறைகளைக் கையாண்டார். அவற்றுள் பின்வருவன குறிப்பிடத்தக்கவை:
  (அ) சொற்பொழிவுகள் ஆற்றுதல். (ஆ)பிரசங்கம் செய்தல்
  (இ) பிரசங்கம் செய்வதற்கான மாணவர் பரம்பரையை உருவாக்குதல்
  (ஈ) சைவசமயப் பேச்சாளர்களுக்கு ஆலோசனை வழங்குதல்
  (உ) சமயப் போதனைகள் செய்தல்
  (ஊ) சைவசமய நூல்களையும், சைவசித்தாந்த நூல்களையும் எழுதுதல்.
  (எ) சைவசமயக் கட்டுரை, ஆய்வுக்கட்டுரை எழுதுதல்
  (ஏ) வேறுபட்ட வசனநடைகளைக் கையாண்டு எழுதுதல்
  (ஐ) செய்யுள் இயற்றுதல்
  (ஒ) கோயில் தொண்டு செய்தல்

### (அ) சொற்பொழிவுகள் ஆற்றுதல்

- மட்டக்களப்பில் தலைசிறந்த சொற்பொழிவாளராகத்திகழ்ந்த அவரது சொற் பொழிவுகள், மட்டக்களப்பிலுள்ள சைவக்கோயில்களில் எல்லாம் இடம் பெற்றன. அவர் தமது 15வது வயதிலிருந்து சுமார் 65 ஆண்டுகளுக்கு மேல் இப்பணியில் ஈடுபட்டார்.
- எந்தப் பொருளை எடுத்துக் கொண்டாலும் அதில் ஆழ்ந்து பேசுகின்ற இயல்பு அவரது சொற்பொழிவுகளுக்கு மெருகூட்டியது.
- தேசிகமணி அவர்கள் பொதுமக்களைக் கவரக்கூடிய இனிய எளிய தமிழில் நகைச்சுவை ததும்ப உணர்ச்சியுடன் பேசுவார். இவர் முதலிற் சொற்பொழிவாற்றி, மக்களுள்ளத்தைத் தட்டியெழுப்பித் தகுதிபெறச் செய்த பின்பே வித்துவான் சரவண முத்தன் தமது பிரசங்கத்தைத் தொடங்குவார்.
- சைவசமயத்தைக் காத்து வளர்த்து வந்த இவர், ஒரு சைவசமயி அகவாழ்விலும் புறவாழ்விலும் எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும் என்பதையே சொற்பொழிவுகளுக்குப் பொருளாகக் கொண்டார்.
- மட்டக்களப்பில் ஆகம வழிபாட்டு முறைக்கு விளக்கம் கொடுத்தல். கோயில் அமைப்பு, நித்திய நைமித்திய பூசைமுறைகள், வழிபாட்டு முறைகள் என்பவை பற்றி விளக்குதல்.
- சைவசமய ஆசாரங்களைப் பேணுதல், ஒழுக்கத்தோடு வாழுதல், மற்றவர்கள் மீது அன்பு காட்டுதல், சமய நூல்களைக் கற்று அறிவு பெறுதல் என்பவற்றை வலியுறுத்தும் வகையிலும் அவரது சமயச் சொற்பொழிவுகள் அமைந்தன. அதனைக் கதைகள் மூலமும் மேற்கோள் காட்டியும் பாடல்கள் மூலமும் எடுத்துரைத்தார்.

### (ஆ) பிரசங்கம் செய்தல்

- மட்டக்களப்பில் சைவசமயத்தை நிலைநாட்ட பிரசங்கங்கள் மிக அவசியமானவை எனக் கருதினார். அதனால் ஓய்வொழிவின்றி சுவாமி விபுலானந்தர், சரவணமுத்தர் என்போருடன் ஊர்கள் தோறும் சென்று சைவசமயப் பிரசங்கம் செய்வதில் ஈடுபட்டார்.
- மட்டக்களப்பு மக்களிடையே ஆலய வழிபாட்டின் அவசியம், சைவப் பண்பாட்டைக் கடைப்பிடிக்க வேண்டியதன் அவசியம் என்பவற்றைப் பிரசங்கங்கள் மூலம் தெளிவுபடுத்தினார்.
- ஆனைப்பந்தி பிள்ளையார் ஆலயத்தில் வெள்ளிக்கிழமை தோறும் தவறாது சைவப் பிரசங்கம் செய்து வந்தார்.

### (இ) பிரசங்கம் செய்வதற்கான மாணவர் பரம்பரையை உருவாக்குதல்

- சமயப் பிரசங்கம் செய்யும் பணியில் ஈடுபட்டதோடு, அப்பணியில் ஈடுபடக்கூடியவர்களை இனங்கண்டு, அவர்களை ஊக்குவித்தார்.
- அவர்களில் திரு. சீ. நாகையா ஆசிரியர், திரு. வ. சித்திவிநாயகம் ஆசிரியர், பண்டிதர் த. கிருஷ்ணபிள்ளை என்போர் குறிப்பிடத்தக்கவர்களாக இருந்து சைவப் பணி புரிந்தனர்.

### (ஈ) சைவசமயப் பேச்சாளர்களுக்கு ஆலோசனை வழங்குதல்

- சைவசமயப் பேச்சாளர்களுக்கு ஆலோசனை வழங்குவதிலும் அருணாசல தேசிகர் ஈடுபட்டார். அவற்றில் சில:
  - பேச்சாளர் ஒருவர் வாழ்க்கை முழுவதும் கற்றுக் கொண்டிருக்க வேண்டும். தமிழ் இலக்கியப் பரப்பில் உள்ள அருட்பாடல்கள், அறநெறிப் பாடல்கள் என்பவற்றை பேச்சாளர் மனனம் செய்திருக்க வேண்டும். இதற்காக, இத்தகைய பாடல்களில் ஒரு பகுதியைத் தமது நூல்களிலும் வெளியிட்டார். சைவப் பேச்சாளர் இதிகாச, புராணக் கதைகளைத் தெரிந்திருப்பதிலும் பயன் படுத்துவதிலும் அக்கறை காட்ட வேண்டும்.
  - இந்த ஆலோசனைகளைத் தமது வாழ்விலும் கடைப்பிடித்தார்.

**(உ) சமயப் போதனைகள் செய்தல்**

- சைவ சமயப் போதனைகள் மூலம், சைவ சித்தாந்தக் கருத்துக்களை மக்கள் மத்தியில் விளக்கிக் கூறினார்.
- மட்டக்களப்பு சிறைச்சாலையில் கைதிகளை நல்வழிப்படுத்துவதற்காக, அங்கு அடிக்கடி சென்று சமயப் போதனைகள் செய்து வந்தார்.

**(ஊ) சைவசமய நூல்களையும் சைவசித்தாந்த நூல்களையும் எழுதுதல்**

இவர் தமது இளமைக் காலத்தில் ஆசிரியப்பணியுடன் சமயப்பணிகளிலும் ஈடுபட்டார். அத்துடன் சொற்பொழிவுகள் நிகழ்த்துவதில் ஈடுபட்டதன் காரணமாக எழுத்துப் பணிகளில் ஈடுபடவில்லை.

- ஆனால் அறுபது வயதுக்குப் பின்பே நூல்களை எழுதுவதில் ஈடுபட்டார். அவரது நூல்களில் சமய விடயங்கள் வாழ்க்கை அனுபவங்களுடன் சேர்த்து எழுதப்பட்டவையாக உள்ளன.
- சைவ மாணவர்கள் கற்பதற்காக இலகு தமிழிலும் சமய நோக்கிலும் 12க்கு மேற்பட்ட சமய நூல்களை எழுதி உள்ளார். அவை வருமாறு:

1. சைவசமய ஆரம்ப போதினி (1962)
2. சைவசமய இளைஞர் போதினி (1958)
3. இந்து மாணவர் பக்திப் பாடல் பாமணி மாலை (1961)
4. இந்து சமய மாத மகத்துவ மான்மியம் (1960)
5. சைவ இலக்கிய கதாமஞ்சரி (1964)
6. சைவசமய சிந்தாமணி (1960)
7. சித்தாந்த சிரோண்மணி
8. மெய்ஞ்ஞானதீபம்
9. சர்வஞானோத்தராகம சாரசங்கிரகம்
10. அருட்பாத் திரட்டும் அரும்பொருட் பாக்களும்
11. விநாயக மகத்துவ நுட்பமும் புளியநகர் ஸ்ரீ சித்தி விக்னேஸ்வர ஆலய மான்மியமும் (1968)
12. முருகன் மகத்துவ நுட்பம்

- இப் பன்னிரு நூல்களையும் சேர்த்து சைவசமயக் களஞ்சியம் என பெயர் சூட்டப்பட்டுள்ளது.
- சைவசமயத்தில் சிறந்த அறிவைப் பெற இத்தொகுதியைக் கற்றல் அவசியம்.
- இவரது முதல் மூன்று நூல்களும் மாணவர்களுக்குச் சைவ அறிவை ஊட்டுவதற்காக எழுதப்பட்டவை.

சைவசமய ஆரம்பபோதினி - சிறிய வகுப்பு மாணவர்களுக்கானது.
சைவசமய இளைஞர் போதினி - சைவசமய இளைஞர் போதினி மத்தியதர வகுப்பு மாணவர்களுக்கானது.

இவ்விரு நூல்களும் (1952க்குப் பின்) பாடசாலைகளில் கற்பிக்கப்பட்டவை.

இந்து மாணவர் பக்திப் பாடற் பாமணிமாலை -

இந்து மாணவர் பக்திப் பாடற் பாமணிமாலை - முதலாம் வகுப்புத் தொடக்கம் எட்டாம் வகுப்பு வரை சைவசமய மாணவர் கற்கவேண்டிய பக்திப் பாடல்களின் தொகுப்பாக உள்ளது. இது மாணவரிடையே சைவசமயம் சார்ந்த பாடல்களைப் பாடவும், பண்ணோடு ஓதவும் வழிகாட்டியது.

சைவசமய சிந்தாமணி - இந்நூல் சாதாரண மக்கள் முதல் பல்கலைக்கழக
சைவசமய சிந்தாமணி - ஆய்வாளர் வரை பயன்படுத்தத்தக்கது.

**(எ) சைவசமயக் கட்டுரை, ஆய்வுக் கட்டுரை எழுதுதல்**

- இவரது கட்டுரைகளில் சில, கல்லடி வேலனின் "சுதேச நாட்டியம்" எனும் பத்திரிகையில் வெளிவந்தன.
- அடிகளார் படிவ மலரில் (1969) கட்டுரை எழுதியுள்ளார்.
- எப். எக்ஸ். சீ. நடராசாவின் எண்ணெய்ச்சிந்து நூலுக்கு, இவர் எழுதிய முன்னுரை ஆய்வுத் தன்மை உடையது.
- இவர் 1952 இல் எழுதிய ஆய்வுக் கட்டுரையும் இங்கு குறிப்பிடத்தக்கது.

**(ஏ) வேறுபட்ட வசனநடைகளைக் கையாண்டு எழுதுதல்**

- தேசிகமணி அவர்கள் சைவசமய விடயங்களை எழுதும்போது வடமொழி கலந்த மணிப்பிரவாள நடையைக் கையாண்டார்.
- சைவசமய சிந்தாமணி எனும் நூலில் தர்க்கரீதியாக எழுதுகின்ற போக்கைக் கையாண்டார்.

**(ஐ) செய்யுள் இயற்றுதல்**

- இவர் செய்யுள் இயற்றுவதில் ஈடுபாடு கொண்டவர்.
- இவரது செய்யுள்கள் எளிமையும், யாப்பமைப்பும் கொண்டவையாகும்.

**(ஒ) கோயில் தொண்டுகள் செய்தல் கோயில் தொண்டுகள் செய்தல்**

- மட்டக்களப்பு மாவட்டத்தில் இருந்த சைவக் கோயில்கள் எழுச்சிபெற, பாடுபட்டவர்.
- அக்கோயில்களின் வளர்ச்சிக்காக ஆலோசனை வழங்கியமை, ஆனைப்பந்திப் பிள்ளையார் கோயில் நிருவாகி, ஆலோசகர் எனப் பணிகளாற்றியமை என்பன குறிப்பிடத்தக்கவை.
- ஆனைப்பந்திப் பிள்ளையார் கோயிலுள் சிவாலயம் அமைத்துக் கொடுத்தார்.
- மரண சாசனத்தின் மூலம் தான் குடியிருந்த வீட்டையும் ஆனைப்பந்திப் பிள்ளை யாருக்கு அர்ப்பணித்தவர்.

**தேசிகமணியும் அவரது நண்பர்களும்**

- தேசிகமணியின் இளமைக் காலத்தில் இவருக்கு முன்னோடியாக இருந்தவர் வித்துவான் ச. பூபாலபிள்ளை.
- வித்துவான் அ. சவரணமுத்தர், சுவாமி தாச மயில்வாகனனார் என்பவர்கள் இவரின் கல்வி, இலக்கியம், சமயம் சார்ந்த நண்பர்களாவர்.
- அருணாசல தேசிகமணியும், வித்துவான் சரவணமுத்தனும், மயில்வாகனனாரும் மட்டக்களப்பின் அன்றைய சமய, கல்விச் சூழ்நிலையில் அத்துறைகளில் பணி புரிவதற்கு இல்லறத்திலும் துறவறமே சிறந்தது என கருதியவர்கள்.
- காலப்போக்கில் மயில்வாகனனார் மாத்திரம் துறவு பூண்டு சுவாமி விபுலானந்தராக, மற்றைய இருவரும் இல்லறத்தவராயினர்.

**தேசிகமணியும் சுவாமி விபுலானந்தரும்**

- அருணாசல தேசிகர் 1910 க்கு முன்பிருந்தே சுவாமி விபுலானந்தரும் (மயில்வாகனனார்) தொடர்பு கொண்டிருந்தார். விபுலானந்தருடன் இணைந்து தமிழையும் சைவத்தையும் கற்றார்.
- தேசிகர் தமது 47வது வயதில் சுவாமி விபுலானந்தர் நடத்திய யாப்பருங்கலக் காரிகை வகுப்பில் கற்றார். நல்ல பல கருத்துக்களை சுவாமி விபுலானந்தரிடம் பெற்றுக் கொள்ளும் அவாவினால், தேசிகமணி விபுலானந்த அடிகளாருடன் கால்நடைப் பயணங்கள் செய்வதை விரும்பினார்.
- ஆனைப்பந்தி பாடசாலையின் தலைமை ஆசிரியராக அருணாசலதேசிகர் இருந்த காலத்தில் அடிகளாரும், மற்றைய இராமகிருஷ்ண சங்கத் துறவிகளும் அப்பாடசாலை அறையிலேயே வசித்தனர். அவர்களை அருணாசல தேசிகரின் குடும்பம் உபசரித்தது.

- சுவாமி விபுலானந்தரின் தளபதிகள் எனப் போற்றப்படும் அளவுக்கு வித்துவான் அ. சரவணமுத்தரும், அருணாசலதேசிகரும் அடிகளாருக்கு உறுதுணையாக இருந்தனர்
- சைவசமயப் பற்று மிக்க அருணாசல தேசிகர், சைவ மக்களிடையே காணப்பட்ட அஞ்ஞானத்தைப் போக்கவும், சமயத்தின் பேரால் மக்கள் மேற்கொண்ட மூட நம்பிக்கைகளை அகற்றவும் சுவாமி விபுலானந்தருடன் இணைந்து பணி யாற்றினார். அன்றைய சூழ்நிலையில் புதிய பாடசாலைகள் தொடங்குவதிலும், சமயம் வளர்ப்பதிலும் உறுதுணையாக இருந்தனர்.
  மட்டக்களப்பில் விபுலானந்த அடிகளாரின் கல்விப்பணி அக்காலத்தில் வெற்றி அடைய இவர்கள் இருவருமே முக்கிய காரணர் ஆவர்.
- அண்ணாமலை, கொழும்பு ஆகிய இடங்களில் அடிகளார் பேராசிரியராகப் பணிபுரிந்த போது, அவரை நீண்டகாலம் பிரிந்திருக்க முடியாத தேசிகமணி, அவ்விடங்களுக்குச் சென்று சந்தித்து வந்தார். அடிகளார் வெளியிடங்களில் வாழ்ந்த காலத்தில் தேசிகமணிக்கு அடிக்கடி கடிதம் எழுதுவார்.
- சுவாமி விபுலானந்தர் கிழக்கு மாகாணத்தில் ஸ்ரீ இராமகிருஷ்ண சங்க பொது முகாமையாளர் பணியை ஏற்றபோது, மட்டக்களப்பில் சிவானந்த வித்தியாலயமும் ஆனைப்பந்தி இராமகிருஷ்ணமிசன் பாடசாலையும் உயர்தரப் பாடசாலைகளாகவும் சிவானந்தாவுக்கு அருகில் கல்லடி உப்போடையில் மாணவரில்லம் நிறுவப்படவும், சுவாமிகளுக்குப் பெரிதும் துணைபுரிந்தோரில் அருணாசலதேசிகரும் ஒருவராவர். ஏனையோர் புலவர்மணி பெரியதம்பிப்பிள்ளை, கே. கணபதிப்பிள்ளை, வி. நல்லையா, எஸ். அம்பலவாணதேசிகர் என்போராவர்.

**அருணாசலதேசிகரும் இராமகிருஷ்ண சங்கமும்**

- மட்டக்களப்பில் இராமகிருஷ்ண சங்கக்கிளை சுவாமி விபுலானந்த அடிகளாரால் ஸ்தாபிக்கப்பட்டது முதல், தேசிகமணி அதனுடன் நெருங்கிய உறவைக் கொண்டிருந்தார்.
- அடிகளாரின் மறைவின் பின்பும் அந்த உறவு தொடர்ந்தது. அங்கிருந்த இராம கிருஷ்ண சங்கத் துறவிகளான சுவாமி அபினாசானந்த அடிகளார், சுவாமி நடராசானந்த அடிகளார், சுவாமி ஜீவானந்த அடிகளார் ஆகியோருடன் தொடர்பைக் கொண்டிருந்தார். இராமகிருஷ்ண சங்கமும் அதன் குருகுலங்களும் ஆண்டுதோறும் வட்டியைப் பெறக் கூடியதாக, தேசிகமணியவர்கள் ஒரு தொகைப் பணத்தை நிலையான வைப்பில் இட்டிருந்தார்.
- தேசிகமணியின் இறுதிக் காலத்தில் இராமகிருஷ்ண சங்கத்தின் பேருதவி அவருக்குக் கிடைத்தது.
- தேசிகமணியின் ஈமக்கிரியைகள் ஒழுங்காக நடைபெற சுவாமி ஜீவானந்த அடிகளார் ஆவன செய்தார்.

**சமயக் கொள்கை**

- அருணாசல தேசிகர் இராமகிருஷ்ண சங்கத்தை ஆதரித்தாலும், அவர் தீவிர சைவ பக்தர். இவருக்கு வேதாந்த, சித்தாந்த வித்தியாசமில்லை.
- இவர் ஆகம, வழிபாட்டு முறையினை ஆதரித்தார். அவரின் பேச்சு, எழுத்து என்பன அவற்றையே வலியுறுத்தின. ஆயினும், சிறு தெய்வ வழிபாட்டை வெறுத்து ஒதுக்கவில்லை.
- சிறு தெய்வ வழிபாட்டிடங்களுக்குச் சென்றாலும் ஆகம முறை சார்பாகவே பேசுவது இவரது வழக்கமாகும்.

**நிறைவுரை**

- சைவப்புலவர் கா. அருணாசல தேசிகரின் வாழ்வு சமய வாழ்வாகும். அவர் தமது உடல், பொருள், ஆவி அனைத்தையும் சமய, சமூகப் பணிக்காகவே அர்ப்பணித்தவர்.
- அவரது சேவை மட்டக்களப்பிலும் அதற்கு வெளியேயும் பயன் கொடுப்பனவாக அமைந்தன. மட்டக்களப்பு மாவட்டம் மறக்க முடியாத மாமனிதர் இவர்.
- தமக்குப் பின்னரும் மட்டக்களப்பில் பல சைவசமயப் பெரியார்களும் தமிழறிஞர்களும் தோன்றுவதற்கு முன்னோடியாகத் திகழ்ந்தார்.

**காசிவாசி செந்திநாதையர் அறிமுகம்**

- சைவத்துக்கும் சைவசித்தாந்தத்திற்கும் பெரும்பணியாற்றிய ஈழத்துச் சைவப் பெரியார்களுள் காசிவாசி செந்திநாதையரும் ஒருவராவார்.
- சைவ, சைவசித்தாந்த சாத்திர நூல்களிற் காணப்படும் கருத்துக்களைத் திரட்டியும் வியாக்கியானப்படுத்தியும் வழிநூல்கள் எழுதிய ஈழத்து அறிஞர்களுள் முதன்மையானவராக இவர் விளங்குகின்றார்.
- உரை ஆசிரியர்கள் என்ற வகையிலும் ஞானப்பிரகாச முனிவரைத் தொடர்ந்து, காசிவாசி செந்திநாதையர் சிறப்பிடம் பெறுகிறார். இவரது உரைகள் சைவசித்தாந்தத்திற்கான இலங்கையர்களின் பங்களிப்பில் முக்கியத்துவம் பெறுகின்றன.

**பின்னணி:**

- இவர் யாழ்ப்பாணத்தில் குப்பிளான் என்னும் கிராமத்தில் 1848 இல் பிறந்தார்.
- நல்லூர் சம்பந்த புலவர், ஆறுமுகநாவலர் முதலானோரிடம் தமிழ், இலக்கிய இலக்கணம் பயின்றவர்.
- யாழ்ப்பாணம் வெஸ்லியன் கல்லூரியில் ஆங்கிலம் பயின்றவர்.
- இம்மாமேதை தமிழ், வடமொழி, ஆங்கிலம் ஆகிய மும்மொழிகளையும் கற்றுத் தேர்ந்தவர்.

  இவரின் வேத, சிவாகம சாத்திரப் பேரறிவு பற்றி பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை அவர்கள் பின்வருமாறு கூறுவார்.

  ஒன்று கேட்டால் அது பற்றி, நூல்கள் அனைத்தின் கருத்துகளின் ஒருமைப் பாட்டையும் விளங்க வைக்கும் அறிவாற்றல் படைத்தவர்கள் ஐயர் அவர்கள். “
- செந்திநாதையர் நாவலரின் தமிழ் வித்தியாசாலையில் 6 ஆண்டுகளும் ஆங்கில வித்தியாசாலையில் ஒரு ஆண்டும் பணிபுரிந்து, நாவலரின் நன்மதிப்பையும் பெற்றவர்.
- நாவலர் பிரசங்கம் செய்யும் இடங்களெல்லாம் சென்று குறிப்பெடுத்தார். நாவலர் சிவபூசை செய்யும் போதெல்லாம் திருமுறைகளைப் பண்ணோடு ஓதுவார். இதனை நாவலர் இறைபதமெய்தியபோது, இவர் பாடிய இரங்கற்பா மூலம் அறியலாம்.

  தேவாரம் யான்சொலக் கேட்டு மகிழ்ந்து
  சிரத்தையுடன் பூவாதி, கொண்டுபுரி சிவபூசைப் பொலிவிலங்கும்...”
- செந்திநாதையர் தம் வாழ்நாளில் பெரும்பகுதியை தமிழ் நாட்டிலே கழித்தார். அக்காலப் பகுதியில் பல்வேறு சமயப் பணிகளை மேற்கொண்டார். அத்துடன் சங்கத மொழியில் தேர்ச்சி பெற்று, வேத, உபநிடத, ஆகம, புராண நூல்களை ஐயந்திரிபறக் கற்றார்.
- பாரத நாட்டின் பல்வேறு பகுதிகளுக்கும் யாத்திரை செய்ததுடன், பல இடங்களில் சைவப் பிரசங்கங்களையும் நிகழ்த்தினார்.
- இவர் காசியில் சில காலம் வாசம் செய்தமையால் “காசிவாசி“ என அழைக்கப்பட்டார்.
- இவர், 1887 இல் யாழ்ப்பாணம் திரும்பி, நாவலரின் மாணாக்கரான இணுவில் நடராசையரிடம் சைவசித்தாந்தத்தைக் கற்றுத் தெளிந்தார்.
- மீண்டும் இந்தியா சென்று பத்து ஆண்டுகள் வாசம் செய்து வேத, வேதாங்கங்களை அங்கிருந்த சாஸ்திரிகளிடம் ஐயந்திரிபறக் கற்றார்.

**பணிகள்:**

(1) சமயச் சொற்பொழிவுகளாற்றல்: ஆறுமுகநாவலரைப் பின்பற்றி, 1872-1879 வரை தென்னிந்தியாவிற் பல இடங்களிலே சைவச் சொற்பொழிவுகளை ஆற்றினார்.

(2) சமயத் தொடர்பான பல துண்டுப் பிரசுரங்களை வெளியிடல்.

(3) பத்திரிகை நடத்துதல்.

(4) சமயக் கட்டுரைகளை எழுதுதல்.

– இந்து சாதனத்தில் "வைதிக சுத்தாத்துவித சைவ சித்தாந்த சமயம் " என்ற தலைப்பில் தொடர்கட்டுரைகளை எழுதினார். இது சைவ சித்தாந்த சபை சார்பாக, மாயாவாதிகளுக்கு எதிராக எழுதப்பட்ட கண்டனக் கட்டுரையாகும். நாகை நீலகேசரி, விஜயத்துவஜம், வெற்றிக் கொடியோன் முதலிய பத்திரிகை களிலும் சமயக் கட்டுரைகளை எழுதினார்.

(5) அச்சியந்திரசாலை அமைத்து சமயப் பணிபுரிதல்.....

- 1906 ஆம் ஆண்டில் தேவகோட்டைச் சைவசீலர்களின் உதவியோடு "செந்திநாத சுவாமி யந்திரசாலையை " நிறுவினார்.

(6) மொழிபெயர்ப்புச் செய்தல்.

- பிரமசூத்திரத்திற்கு சைவ மெய்யியற் கண்ணோட்டத்தில் நீலகண்ட சிவாசாரியர் எழுதிய நீலகண்ட பாடியத்தைத் தமிழில் மொழிபெயர்த்தார். இந்நூல் இவரது படைப்புக்கள் அனைத்திற்கும் மகுடம் போன்றது.
- இந்த மொழிபெயர்ப்பு நூலுக்கு, உபநிடத உபக்கிரமணிகை, பிரமசூத்திர உபக்கிர மணிகை என்ற தலைப்புக்களில் மிக விரிவான இரு பெரிய ஆராய்ச்சி முகவுரைகளை எழுதினார்.
- பிரமசூத்திரத்தைச் சைவசித்தாந்தக் கண்கொண்டு எழுதப்பட்ட பாடியத்தின் பெருமையைத் தமிழ் மட்டும் அறிந்தவர்கள், உணர்ந்து கொள்ள ஐயரின் இம்மொழி பெயர்ப்பு உதவிற்று.
- காலத்தால் முற்பட்ட நீலகண்ட பாடியத்தை, தத்தமக்குச் சாதகமான மாற்றங்களைச் செய்தும், பொருள் கண்டும், மாயாவாதிகளும், பாஞ்சராத்திரர்களும் தத்தமது சமயங்களுக்கு இசைவாக்கிக் கொண்டனர் என்பதை ஐயர் சுட்டிக் காட்டியுள்ளார்.
- சைவ, வேதாந்தத்தின் தோற்றுவாய், பிரமசூத்திரத்திற்கான உரை வேறுபாடுகளில் இருந்து கருக்கொள்கிறது. வைதீக சமயநெறிகள் அனைத்துக்கும் மகுடமாய் உச்சமாய் அமையும் நெறி சைவசித்தாந்தமே. இதுவே முடிந்தமுடிவு; உய்விக்கும் மார்க்கம் என்றவாறான கருத்தோட்டங்களை, தமிழ்வழிச் சமய நூல்களைச் சான்றாக்கிக் கொள்கிறார். சிவாத்துவித சைவநெறியை, சைவ வேதாந்தம் மூலம் உறுதிப்படுத்துகிறார்.

(7) கண்டன உரைகளையும், கண்டன மறுப்புக்களையும் வெளியிட்டமை.

- கி.பி. 19 ஆம் நூற்றாண்டிலும் 20 ஆம் நூற்றாண்டின் ஆரம்ப காலத்திலும், இலங்கையிலும் இந்தியாவிலும் இடம்பெற்ற கிறிஸ்தவ மதமாற்றச் செயற்பாடுகளும், சைவசித்தாந்தக் கருத்துக்களுக்கும் சைவ அனுட்டானங்களுக்கும் எதிராக கிறிஸ்தவர்களால் தெரிவிக்கப்பட்ட கருத்துக்கள், கண்டனங்கள் என்பனவும் செந்திநாதையர் சைவசமயச் சார்புடைய பெருந்தொகைக் கட்டுரைகளையும் பிற மத கண்டனங்களையும் எழுதக் காரணமாயின.
- சிவநிந்தைகளையும் சைவாகம நிந்தைகளையும் மனம் பொறாது பல கண்டன உரைகளையும் கண்டன மறுப்புக்களையும் வெளியிட்டார்.
  (உ-ம்) ஞானபோத விளக்கச் சுறாவளி வச்சிர தண்டம்
- கிறிஸ்தவர்கள் சைவசமயத்தின் மீது எழுதிய கண்டனங்களுக்கு எதிராக பல கண்டன நூல்களை எழுதினார். அதனால் "கிறிஸ்தவ கண்டன குடாரி " என்ற சிறப்புப் பெயரைப் பெற்றார்.

(8) நூல்களை எழுதி வெளியிடல்.

- செந்திநாதையர் 45க்கு மேற்பட்ட வெளியீடுகளை (நூல்கள், கட்டுரைகள், கண்டனங்கள் என்ற வகையில் வெளியிட்டார். இன்று 21 நூல்கள் மட்டுமே கிடைத்துள்ளன.
- ஞானரத்தினாவளி, தத்துவ விளக்கம் மூலமும் உரையும், சிவஞான போத வசனாலங்கார தீபம், வஜ்ரடங்கம், வச்சிரதண்டம், சாண்சத்திரியப் பிரசண்டமாருதம், ஞானபோத விளக்கச் சூறாவளி, சிவனுந்தேவனா? என்னுந் தீயநாவினுக்கு ஆப்பு, விவிலிய குஞ்சிதக் குறிப்பு, தாந்திரிக துண்ட கண்டன கண்டனம், வீரபத்திராஸ்திரம், வைதிக சைவ சுத்தாத்துவித சைவசித்தாந்த சமயம், தத்துவப்பட வினாவிடை, ஸ்ரீ சீர்காழிப் பெருவாழ்வின் ஜீவகாருண்ய மாட்சி, சைவ வேதாந்தம், கந்தபுராண நவநீதம், தேவாரம் வேதசாரம், மகாவுக்கிர வீரபத்திராஸ்திரம், நீலகண்ட பாஷ்யத் தமிழ் மொழிபெயர்ப்பு, வைதீக சைவ சுத்தாத்துவித சைவசித்தாந்த சமயம் என்பன அவையாகும்.
- கந்தபுராணம் சைவசித்தாந்தக் கருவூலங்களை உள்ளீடாகக் கொண்டது என்பதைக் கந்தபுராண நவநீதம் எனும் நூல் வழியாகத் தெளிவுபடுத்தி உள்ளார்.
- சிவஞானபோத வசனாலங்கார தீபத்தில் அதிகாரங்கள் கேள்வி-பதில் வடிவில் விளக்கம் தரும் முறையும், புலன்வழி எடுத்துக்காட்டுகளைக் காட்டி, நூல் விளக்கம் செய்யும் உத்தியும் பயில்வோருக்கு பயன் தருவன.
- "தேவாரம் வேத சாரம் " என்னும் நூல் வழி, வேதம் குறிப்பிட்டதனையே தேவாரங்கள் இசையுடனும் பக்தி ரசத்துடனும் கூறுகின்றன என எடுத்துக்காட்டி, வேதம் வேறு; தேவாரம் வேறு என்ற சர்ச்சைக்கு முடிவு கட்டினார்.
- பொதுவாக செந்திநாதையரின் சைவசித்தாந்தப் பங்களிப்புக்களை மூவகைப்பட்டன வெனக் குறிப்பிடுவர்.
  - (அ) இந்திய தத்துவத்தின் மூலங்களான வேதம், உபநிடதம், பிரம்ம சூத்திரம், புராணம், இதிகாசம் போன்ற யாவும் வேதத்தின் முடிந்த முடிபான சைவ சித்தாந்த அடிப்படை உண்மைகளைக் கூறி நிற்பவை என எடுத்துக் காட்டியமை.
  - (ஆ) பிரம்மசூத்திரத்திற்கான முதற்பாடியம் நீலகண்டரினதென்றும் இதனைக் கற்று அறிந்த பின்பே மாயாவாதிகளும் பாஞ்சராத்திரர்களும் இடைச் செருகல்களை உட்புகுத்தித் தத்தம் சமயக் கருத்துக்களுக்கு ஏற்புடையவாறாக திரித்தாக்கிக் கொண்டனரென எடுத்துக் காட்டியமை.
  - (இ) ஈழத்திலும் தமிழ்நாட்டிலும் சித்தாந்த சைவத்திற்கும் அதன் நடைமுறைகளுக் கும் எதிராகக் கிறிஸ்தவர்கள் மேற்கொண்ட பிரசார நடவடிக்கைகளையும் மதமாற்ற நடவடிக்கைகளையும் சிவ நிந்தனைகளையும் அறிவுசார் வழிகளில் வலுவுடன் எதிர்த்தமை, வலிகுன்றச் செய்தமை, சித்தாந்த சைவத்தின் உண்மை களைச் சாதித்தமை, ஸ்தாபித்தமை.

**மதிப்பீடு**

- நாவலரின் வழியைப் பின்பற்றி, சொற்பொழிவுகளாற்றியும் அச்சியந்திரசாலை அமைத்தும், அரிய நூல்களை வெளியிட்டும், துண்டுப் பிரசுரங்கள், கண்டன உரைகள், கண்டன மறுப்புக்களை வெளியிட்டும், சைவசமய நூல்கள், கட்டுரை எழுதியும், மொழிபெயர்ப்புகளைச் செய்தும் சைவ சமயத்திற்கு அரும்பணியாற்றியவர்
- இன்று குப்பிளானில் 'செந்திநாதையர் ஞாபகார்த்தச் சபை' என்ற நிறுவனத்தை அமைத்து, அதன் மூலம் அவரின் பணிகளைப் பேணிச் செயற்பட்டு வருகின்றனர்.

**கைலாசநாதக் குருக்கள் - அறிமுகம்**

- சிவஸ்ரீ கார்த்திகேயக் குருக்களுக்கும் சுந்தராம்பாள் அம்மையாருக்கும் மகனாக 15.08.1921 ஆம் ஆண்டு நல்லூரில் பிறந்தார்.
- இவருக்கு தந்தையே குருவாக இருந்து கல்வி புகட்டியதுடன் உபநயனத்தினையும் செய்து வைத்தார். ஆகமக் கல்வியை தந்தையே உரிய நியமங்களோடு கற்பித்து வந்தார். வைதீகக் கல்வியான வேதக் கல்வியை பிம்மஸ்ரீ க.சிதம்பரசாஸ்திரிகள், பிரம்மஸ்ரீ ஸ்ரீநிவாச சாஸ்திரிகள் ஆகியோரிடம் மரபுவழி வேதம் ஓதும் பயிற்சியைக் கற்றார்.
- ஆரம்பக் கல்வியை நல்லூர் மங்கையற்கரசி வித்தியாலயத்திலும் பின் பரமேஸ்வராக் கல்லூரியிலும் கற்றார். திருவிடை மருதூரிலிருந்து சுழிபுரத்திற்கு வந்த வியாகரண சிரோண்மணி பிரம்மஸ்ரீ கி.சீதாராம சாஸ்திரிகளிடம் சமஸ்கிருத மொழியைக் கற்று பாண்டித்தியம் பெற்றார்.
- 1940 இல் ஸ்ரீமதி திரிபுரசுந்தரி அம்மாளை பேராசிரியர் குருக்கள் வைதீக முறைப்படி திருமணம் செய்தார். ஆங்கிலம், கணிதம்,தமிழ், வரலாறு ஆகிய பாடங்கள் அடங்கிய இலண்டன் மெற்றிக்குலேசன் பரீட்சையில் சித்தி அடைந்ததோடு ஆங்கிலம், இலத்தீன்,தமிழ், சமஸ்கிருதம் ஆகிய பாடங்கள் அடங்கிய இலண்டன் இன்டரமீடியட் பரீட்சையிலும் சித்தியடைந்தார்.
- கொழும்பு பல்கலைக்கழகத்தில் சமஸ்கிருதமொழி சிறப்புக்கலைமாணிப் பட்டத்தினைப் பெற்றார் பின் சமஸ்கிருத மொழியில் முதுகலை மாணி பட்டத்தினையும் பெற்றார்.. பின் கலாநிதிப்பட்டத்தினை பூனே பல்கலைக்கழகத்தில் பெற்றார்.
- கொழும்பு பல்கலைக்கழகத்தில் தற்காலிக விரிவுரையாளராக கடமையாற்றிய இவர் 1953 இல் பேராதனைப் பல்கலைக்கழக நிரந்தர விரிவுரையாளரானார். சமஸ்கிருதம், இந்து தத்துவம் பற்றியும் விரிவுரை நடத்தினார்.
- 1974 ஆம் ஆண்டு யாழ்ப்பாண வளாகமாக பரமேஸ்வராக் கல்லூரி உயர்ந்தபோது மொழிகள் மற்றும் கலாசாரக் கற்கை மொழித்துறைத் பதிற் தலைவராக நியமனம் பெற்றார். 1975 இல் முதன் முதலாக உருவாக்கப்பட்ட இந்து நாகரிகத்துறையின் முதற் பேராசிரியராகவும் துறைத்தலைவராகவும் விளங்கினார்.
- இந்துநாகரிகத்துறையின் பொது சிறப்புக் கலை கற்கை இந்துநாகரிகத்துறையின் பொது சிறப்புக்கலை கற்கை நெறியில் இந்து நாகரிகத்ததையும் ஒரு பாடமாக கற்பிப்பதற்குரிய பாடத்தினை வகுத்தார்.
- யாழ் பல்கலைக்கழகத்தின் இந்து நாகரிகத்துறை சமஸ்கிருதத்துறை உயர்மட்ட ஆய்வுகளுக்கும் இலங்கையில் விளங்கும் பல்கலைக்கழகங்களினதும் சமஸ்கிருத மொழி பற்றிய உயர்மட்ட ஆய்வுகளுக்கும் ஆலோசகராகவும் பரீட்சகராகவும் விளங்கிய பேராசிரியர் குருக்களுக்கு 1991 ஆம் ஆண்டு வாழ்நாட்பேராசிரியர் உன்ற தகுதியையும் 1998 ஆம் ஆண்டு இலக்கிய கலாநிதி என்ற கௌரவ பட்டத்தினையும் யாழ் பல்கலைக்கழகம் வழங்கியது.
- நியூசிலாந்து டென்மார்க், சுவிட்சலாந், இங்கிலாந்து, ஜேர்மன், பெல்ஜியம் போன்ற நாடுகளுக்குச் சென்று உலக நாடுகளில் இந்துப் பண்பாட்டின் அம்சங்களைப் பரவச் செய்தார்.
- சமஸ்கிருத, இருக்குவேதம், வடமொழி இலக்கிய வரலாறு சைவத்திருக்கோயிற் கிரியை நெறி விளக்கம், நூல்களையும் சமயக் கட்டுரைகள் பலவற்றையும் எழுதினார். பல இந்து மகாநாடுகள் ஆய்வுரைகள் நிகழ்த்தினார். இலங்கை கல்வி உயர்கல்வி அமைச்சின் இந்து சமய பாட ஆலோசனைக் குழுவில் அங்கம் வகித்தார்.

(மேலதிக விடயங்களை **கைலாசநாதம்** - பவளவிழா மலரை அணுகவும்)

**தேர்ச்சி 3.0 :** **இலங்கையில் இந்து நாகரிகத்தின் வரலாற்றுப் பின்னணியை இனங்கண்டு அவை பற்றிய பகுப்பாய்வினை மேற்கொள்வார்.**

**தேர்ச்சி மட்டம் 3.2 :** இலங்கையில் சிவாலயங்களின் வரலாறு, வழிபாடு, பண்பாடு தொடர்பான விடயங்கள் பற்றி ஆதாரங்களுடன் அறிந்து அவற்றைப் பாதுகாக்கும் வழிகளை முன்வைப்பார்.

**பாடவேளைகள் :** 30

**கற்றற் பேறுகள் :**

- இலங்கையிலுள்ள புராதன சிவன் கோயில்களை ஆதாரங்கள் மூலம் இனங்கண்டு முன்வைப்பார்.
- தரப்பட்ட கோயில்களின் வரலாறு, பண்பாடு தொடர்பான விடயங்களைத் தேடித் தொகுப்பார்.
- மேற்படி கோயில்கள் பற்றிய தகவல்களைப் பாதுகாக்கக்கூடிய வழிமுறைகளைக் கண்டறிந்து, அவற்றைப் பாதுகாக்க முன்வருவார்.
- ஆலயம் பற்றிய பாடல்களை இசையுடன் பாடுவார்.

**விடய உள்ளடக்க வழிகாட்டி :**

**இலங்கையில் இந்துக் கோயில்களின் வரலாறும் பண்பாடும் - அறிமுகம்**

- ஆலயம், கோயில் என்பவற்றின் பொருள் விளக்கம்:
  - ஆலயம் என்பது ஆன்மாக்கள் லயப்படும் இடம் என்பது பொருளாகும்.
  - கோயில் என்பது கோ + இல் எனப் பிரிந்து, கோ - என்பது பதி எனவும், இல் - என்பது இடம் எனவும் பொருள் தந்து ஆன்மாக்களின் தலைவன் வீற்றிருக்கும் இடம் எனப் பொருள் தரும்.
- வழிபாட்டிற்கும் ஆலயத்துக்கும் உள்ள தொடர்பு
- ஆகம, சிற்ப சாத்திர விதிகளுக்கு உட்பட்ட ஆலயங்களில் வழிபாட்டு முறை
- ஆலய அமைப்பு
- ஆலயமும் கிரியைகளும்
- சமூகமும் ஆலயமும்

**திருக்கோணேச்சரம்**

**ஆலய அமைவிடம்**

- இலங்கையின் கிழக்குக் கடற்கரை ஓரமாக அமைந்துள்ள மலைத்தொடர்களையும் இயற்கைத் துறைமுகத்தையும் கொண்டுள்ள திருகோணமலையில் கடலினுள்ளே நீண்டு உயர்ந்து நிற்கும் குன்றில் ஆலயம் அமைந்துள்ளது.

**வரலாற்றுச் சிறப்பு**

**புராண இதிகாசங்களில் இவ் ஆலயம் பற்றிய தகவல் உண்டு**

- நாயன்மார்களால் பதிகம் பாடப்பட்ட சிறப்புக்குரியது.
- பல்லவ சோழ மன்னர் கால வரலாற்றுச் சிறப்புப் பெற்றது.
- இவ்வாலயம் கி.மு.1300 ஆண்டிற்கு முற்பட்டது என ஈழத்து சிவாலயம் என்ற நூலில் கூறப்பட்டுள்ளது.

**வரலாறு தொடர்பான நூல்கள்**

- இதிகாசபுராணங்கள்
- திருக்கோணேசர் தலபுராணம்
- திருகோணமலை அந்தாதி
- பெரியபுராணம்
- தட்சிண கைலாய புராணம்
- தட்சண கைலாய மான்மியம்
- மகாவம்சம்

**மன்னர்கள் பணி**

- வாராம தேவன் தீருப்பணிகள்
- குளக்கோட்ட மன்னன் இவ்வாலயத்திற்கு குளம் கட்டினான்
- ஆலய திருப்பணிக்கு நிலம் வழங்கினான்
- இலங்கையை ஆண்ட பௌத்த மன்னர்களும் ஆலய வளர்ச்சிக்கு பங்காற்றினார்

**மூர்த்தி தல தீர்த்தச் சிறப்பு**

- மூர்த்தி - திருக்கோணநாதர்
- அம்பாள் - மாதுமையாள்
- தீர்த்தம் - பாவநாசம்
- தலவிருட்சம் - ஆல்

**விழாக்கள்**

- நித்திய நைமித்திய பூசைகள் நடைபெறுகின்றன, மகோற்சவ விழா சிறப்பாக நடைபெறுகின்றது. நவராத்திரி தினத்தில் ஸ்ரீ சக்கர பூசை விசேடமானது

**சமூக மேம்பாடு**

- இனமத வேறுபாடின்றி ஆலய விழாக்களில் கலந்து கொள்ளல், விரதம் இருத்தல், ஆலயத் தொண்டு செய்தல், அன்னதானம் செய்தல், அடியார் வழிபாடு.

**திருக்கேதீச்சரம்**

**ஆலய அமைவிடம்**

- மன்னாருக்கு சமீபத்தில் மாதோட்டம் என்ற இடத்தில் அமைந்துள்ளது. புராதன காலத்தில் மஹாதுவட்டாபுரம் என அழைக்கப்பட்டது.

**வரலாற்றுச் சிறப்பு**

- இதிகாச புராண காலங்களில் இவ்வாலயம் பற்றிய குறிப்புக்கள்.
- சம்பந்தர் சுந்தரமூர்த்தி நாயனாரால் பதிகம் பாடப்பட்ட சிறப்பு கொண்டது.
- பல்லவ சோழ மன்னர் காலங்களில் சிறப்புப் பெற்றது மகாதேவன் கோயில் என அழைக்கப்பட்டது.

**வரலாறு தொடர்பான நூல்கள்**

- இதிகாச புராணங்கள்
- மகாவம்சம்
- தாடாவம்சம்
- தேவாரப் பதிகம்
- தட்சிணகைலாய மான்மியம்
- பெரியபுராணம்

**மன்னர்கள் பணி**

- இராசேந்திர சோழனால் புனருத்தாரணம் செய்யப்பட்டது
- இலங்கை ஆண்ட பௌத்த மன்னர்கள் ஆதரவு

**மூர்த்தி தல தீர்த்தச் சிறப்பு**

மூர்த்தி - திருக்கேதீஸ்வர நாதர்
அம்பாள் - கௌரி அம்பாள்
தீர்த்தம் - பாலாவி
தலவிருட்சம் -வன்னி

**விழாக்கள்**

- நித்திய நைமித்திய பூசைகள் நடைபெறுகின்றன, மகோற்சவ விழாவில் ஐந்து தேர்கள் வலம் வருகின்றன. சிவராத்திரி விழா சிறப்பாக நடைபெறுகின்றது.

**சமூக மேம்பாடு**

- மடங்கள் அமைத்து உண்டி உறையுள் வளங்குதல்
- சமய சொற்பொழிவுகள் இடம்பெறல்
- அன்னதானம் வழங்கல்
- திருமுறை ஓதுதல்

**கொக்கட்டிச்சோலை தான்தோன்றீஸ்வரம்**

**ஆலய அமைவிடம்**

- மட்டக்களப்பு மாவட்டத்தில் தென்மேற்குப் பகுதியில் கொக்கட்டிச்சோலை எனும் இடத்தில் இவ்வாலயம் அமைந்துள்ளது.

**வரலாற்றுச் சிறப்பு**

- கிழக்கிலங்கையின் தேசத்துக் கோயில்களில் ஒன்று
- வேடுவர்கள் கொக்கட்டி மரத்தை வெட்டும்போது அதில் இருந்து இரத்தம் கசிந்தது ஏனையவர்களுடன் சேர்ந்து அவ்விடத்தைப் பார்த்தபோது மரத்தடியில் தானாகத் தொன்றிய சிவலிங்கம் காணப்பட்டது. அவ்விடத்தில் வேடுவர்கள் பந்தல் அமைத்து பூசை செய்து வந்தனர் என்பது ஐதீகம்.
- இந்தியாவில் இருந்து கதிர்காம யாத்திரை வந்த கொக்கட்டியார் என்னும் அடியவர் சமாதிகூடி இருந்த இடத்தில் சிவலிங்கம் தோன்றியதாக அப்பிரதேச மக்களிடையே ஐதீகம் உள்ளது.
- கல்நந்தி புல் உண்ட சிறப்புக்குரியது

**வரலாறு தொடர்பான நூல்கள்**

- மட்டக்களப்பு மான்மியம்
- கல்வெட்டு நூற்பிரதி
- மரபுவழிப் பாடல்கள
- புலவர்மணி பெரியதம்பிப்பிள்ளை பாடி இரு நூல்கள்

**மன்னர்கள் பணி**

குளக்கோட்டன் கோயில் வளர்ச்சிக்காக திருப்பணி ஆற்றியதுடன் பூசைகளுக்குரிய ஒழுங்குகளை மேற்கொண்டான். குளக்கோட்டன் பற்றிய கல்வெட்டு ஒன்று மேன்மை தான்தோன்றி லிங்கம் வெற்றி புனை...... என்று குறிப்பிடுகின்றது.

**மூர்த்தி தல தீர்த்தச் சிறப்பு**

- மூர்த்தி - கொக்கட்டிச்சோலை தான்தோன்றீஸ்வரர் (மூல விக்கிரகம் வெளியே தெரியாதபடி மேலே உமாமகேஸ்வரர் விக்கிரகம் தாபிக்கப்பட்டுள்ளது.
- அம்பாள் - பார்வதி அம்மையார்
- தீர்த்தம் - கோயிற் திருக்கேணி
- தலவிருட்சம் - கொக்கட்டிமரம்

**விழாக்கள்**

நித்திய நைமித்திய கிரியைகள் நடைபெறுகின்றது, பூசை செய்பவர் சங்கமர் எனப்படுவர். மகோற்சவ விழாவில் சிறப்பாக நடைபெறுகின்றது கிழக்கில் தேரோடும் கோயில் என்ற சிறப்புக்குரியது.

**சமூக மேம்பாடு**

- திருவிழாக் காலங்களில் மட்டுமன்றி மடங்களில் அன்னதானம் நடைபெறுகின்றது
- பாடசாலை மாணவர்களுக்கு விசேட வகுப்புக்கள் நடைபெறுதல்
- செயலமர்வுகள் கருத்தரங்குகளை ஏற்பாடு செய்து நடாத்துதல்

**முன்னேஸ்வரம்**

**ஆலய அமைவிடம்**

வட மேற்கு மாகாணத்தில் புத்தளம் மாவட்டத்தில் உள்ள சிலாபம் எனும் இடத்தில் அமைந்துள்ளது.

**வரலாற்றுச் சிறப்பு**

வியாசர், இராமர் முதலியோர் வழிபட்ட தலமாக கொள்ளப்படுகின்றது.

**வரலாறு தொடர்பான நூல்கள்**

- தட்சணகைலாய மாஹாத்ம்யம்
- முன்னேஸ்வர மான்மியம்
- ஸ்ரீ முன்னைநாத சுவாமி வடிவழகி அம்பாள் திருவூஞ்சல்
- முன்னேஸ்வரந்தாதி

**மன்னர்கள் பணி**

குளக்கோட்ட மன்னன் இவ்வாலயத்தை மீள அமைத்து திருப்பணி செய்தான்
சிங்கள மன்னர்கள் திருப்பணி - 6ஆம் பராக்கிரமபாகு, 9ஆம் பராக்கிரமபாகு
நாயக்கமன்னன் கீர்த்தி ஸ்ரீ ராஜசிங்கன் பணிகள்.

**மூர்த்தி தல தீர்த்தச் சிறப்பு**

- மூர்த்தி - முன்னைநாதர்
- அம்பாள் - வடிவாம்பிகை
- தீர்த்தம் - மாயவன் ஆறு
- தல விருட்சம் - அரசமரம்

**விழாக்கள்**

- பௌர்ணமி தினத்தில் ஸ்ரீ சக்கர பூசை
- மகோற்சவம், பக்தோற்சவம்
- நித்திய நைமித்திய கிரியைகள்

**சமூக மேம்பாடு**

**மடங்கள் அமைத்து** அன்னதானம் வழங்குதல்
வேதாகமப் பாடசாலை, அறநெறிப் பாடசாலை அமைத்து சமயம் வளர்த்தல்
இனமத பேதமின்றி வழிபாடு நடைபெறுதல்

**நகுலேஸ்வரம்**

**ஆலய அமைவிடம்**

- இலங்கையின் வடக்கே கீரிமலையில் அமைந்துள்ளது. இவ்வாலயம் புராதன காலத்தில் திருத்தம்பலேஸ்வரம் என அழைக்கப்பட்டது. கீரிமலையை நகுலகிரி என்றும் அழைக்கப்படுகின்றது.

**வரலாற்றுச் சிறப்பு**

- நகுல முனிவர் தவம் செய்து கீரிமுகம் மாறிய தலம்
  சோழ இளவரசியாகிய மாருதப்புரவீக வல்லியின் குன்மவலி திருந்தியமை
  மாவிட்டபுரக் கோயிலுக்குரிய காங்கேயன் விக்கிரகம் வந்திறங்கிய துறை.

**வரலாறு தொடர்பான நூல்கள்**

- கூத சங்கிதை, மகாபாரதம், மச்சய புராணம், தட்சணகைலாய மான்மியம், யாழ்ப்பாண வைபவ மாலை, நகுலாச புராணம், நகுலேஸ்வர மான்மியம், நகுலேஸ்வரர் சதகம், திருப்புகழ்.

**மூர்த்தி தல தீர்த்தச் சிறப்பு**

- மூர்த்தி - நகுலேஸ்வர பெருமான்
- அம்பாள் - நகுலாம்பிகை
- தீர்த்தம் - கீரிமலை

**விழாக்கள்**

- நித்திய நைமித்திய கிரியைகள் நடைபெறுகின்றன
- ஆடி அமாவாசை அன்று பிதிர்க்கடன் தீர்த்தல் சிறப்பாக நடைபெறுகின்றது. மகோற்சவ விழா சிறப்பாக இடம்பெறுகின்றது.

**சமூக மேம்பாடு**

- மடங்கள் அமைத்து புராணபடனம், திருமறை ஓதுதல் இடம்பெறல்
- அறிஞர்களுக்கு கௌரவம் அளித்தல்
- அடியார் வழிபாடு

- **பொலனறுவைக் கோயில்கள்**

## முதலாம் சிவாலயம்

- வனப்புமிக்க கட்டட வேலைப்பாடுகளின் காரணமாகவும் நகரின் மத்தியில் அமைந் திருப்பதாலும் இது முக்கியத்துவம் பெறுகின்றது.
- இக்கோயிலின் அழிபாடுகள் சுமார் 100 வருடங்களுக்கு முன் மேற்கொள்ளப்பட்ட அகழ்வுகளின் மூலம் அடையாளங் காணப்பட்டபோது கலாவிமர்சகர்களதும் பிறரதும் கவனத்தை ஈர்த்தது.
- தொல்பொருட் திணைக்கள, ஆணையாளரான எச். சி. பி. பெல் இது பற்றி பின்வருமாறு வர்ணிக்கிறார்.
  கல் விகாரை நீங்கலாகவுள்ள கட்டடங்களில், அதுவே பொலனறுவையைப் பார்க்கச் செல்வோரின் கூடுதலான கவனத்தைப் பெற்றது..... தலதா மாளிகை என்று பிழையாக வர்ணிக்கப்பட்டது" என்று கூறியுள்ளார்.
- இக்கோயிலில் வேலைப்பாடுகள் பல காணப்படுகின்றன. இக்கோயில் அதிஷ்டானம், பத்மதளம், கண்டம், கபோதம் முதலான 7 உறுப்புகளைக் கொண்டமைந்துள்ளது. அதிஷ்டானம் 4'5'' உயரமுடையது.
- இது முற்றிலும் கற்றளியாக அமைந்த கோயிலாகும்.
- இவ்வாலயம் அமைப்புருவில் 2 ஆம் சிவாலயத்தைப் போன்றதாயினும், அளவில் சற்றுச் சிறியதாகும். ஆயினும் அலங்கார வேலைப்பாடுகள் சற்று அதிகமாகக் காணப்படுகின்றன.
- இக்கோயில் கர்ப்பக்கிருகம், அந்தராளம், முக மண்டபம் ஆகியன ஒழுங்கு முறையாக அமைக்கப்பட்டுள்ளதை அவதானிக்க முடிகின்றது.
- 2 ஆம் சிவாலயம் போல் இதுவும் அடித்தளத்திலிருந்து சிகரம் வரை செதுக்கப்பட்ட கற்பாளங்களால் அமைக்கப்பட்டுள்ளது.
- இவ்வாலயம் திராவிடக் கட்டடக்கலை மரபிற்குரியது. தென்னிந்திய சிற்ப, சாஸ்திர விதிக்கேற்பவும் அமைந்துள்ளது.
- இவ்வாலயம் 61'9'' நீளம் கொண்டது. 105' நீளமும் 75' அகலமும் கொண்ட நிலப்பரப்பினுள் அமைக்கப்பட்டுள்ளது.
- இக்கோயிலில் மூன்று பரிவார தேவர்களுக்கான கோயில்கள் அமைந்திருந்தமைக்கான சுவடுகளும் உள்ளன.
- கர்ப்பக்கிருகத்தின் தென்மேற்கில் விநாயகர் கோட்டம் அமைந்திருந்தது. அதில் 9'6'' அகலமும் 8'9'' நீளமும் கொண்ட கர்ப்பக்கிருகமும் அதற்கு ஒப்பான சுற்றளவினை உடைய அந்தராளமும் இருந்தன.
- வளாகத்தின் வடமேற்கு மூலையில் அதேயளவு கொண்ட தேவகோட்டம் ஒன்று இருந்தது. அகழ்வுகளின்போது, அவ்விடத்தில் குமாரக்கடவுள் சிலையொன்று கண்டெடுக்கப்பட்டுள்ளது. இக்கோயிலில் வெண்கலப் படிமங்கள் காணப்படுகின்றன.
- கோயில் தூண்கள் பத்மதளம், கால், வரி, கலசம், பத்மம், இதழ், பலகை, பொதிகை என்னும் அழகிய வேலைப்பாடுகள் கொண்டதாக அமைக்கப்பட்டுள்ளன.

- **இரண்டாம் சிவாலயம்**
- இவ்வாலயம் பொலனறுவை நகரின் அரணமைந்த பகுதியிலுள்ள வடகிழக்கு மூலையின் சமீபத்திலே காணப்படுகின்றது.
- சோழர் இப்பகுதியை ஆண்ட காலத்தில் இக்கோயில் கட்டப்பட்டதாகும்.
- 2 ஆம் சிவாலயத்தை வானவன் மாதேவீஸ்வரம் எனவும் அழைப்பர்.
- கர்ப்பக்கிருகம், அந்தராளம், அர்த்தமண்டபம், நந்திபீடம், கோபுரவாசல் ஆகிய பகுதிகளுடன் அமைக்கப்பட்டிருந்தது. அதன் நீளம் 66.4"அடி
- " கோயில் வளாகத்தைச் சூழ்ந்த சுவர் 96' நீளமும் 84' அகலமும் கொண்டதாகும். மதிற்சுவர்கள் செங்கட்டிகளால் அமைக்கப்பட்டிருந்தன.
- கோயில் கற்றளி அமைப்புடையது. அது கருங்கல், சுண்ணக்கல் ஆகிய இரு வகையான கற்களையும் கலந்து கட்டப்பட்டுள்ளது.
- இக்கோயில் விமானம் 31'9'' கொண்டது இது தென்னிந்திய கோயில் விமானங்களுடன் ஒப்பிடுகையில் சாதாரண அளவினைக் கொண்டது. விஜயாலயன் காலத்தை ஒத்தனவாகவும் மிகுந்த அழகுடையனவாகவும் காணப்படுகின்றது.
- இக்கோயில் வளாகத்தில் பிள்ளையார் கோயில் தனி ஆலயமாகக் காணப்படுகின்றது.

**மூன்றாம் சிவாலயம்**

- இவ்வாலயம் அளவிற் சிறிய கற்றளியாகும்.
- இது யோத எல என்னும் கால்வாயின் வலதுபக்கத்துக் கரையிலிருந்து 90' தூரத்தில் அமைந்துள்ளது.
- 51'6" நீளம் கொண்டது. அதன் பிரகாரம் 102' நீளமும் 66' அகலமும் கொண்டதாகும்.
- இதன் விமானமும் கட்டடமும் இடிந்து வீழ்ந்து விட்டன.
- கிழக்கு நோக்கிய இச்சிவாலயம் கர்ப்பக்கிருகம், மண்டபம், அந்தராளம், முகமண்டபம் என்னும் பகுதிகளைக் கொண்டிருந்தது.
- இது கி.பி. 12 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் அமைக்கப்பட்டதாகும்.
- அதிட்டானத்தின் மேலே உபானம், கண்டம், கபோதம், குமுதம், பத்மதளம் ஆகிய ஐந்து படைகள் உள்ளன.
  தூண்களில் கண்டம், கலசம், பத்ம இதழ், ஆகிய அம்சங்கள் உள்ளன.

நான்காம் சிவாலயம்

- மின்னேரியா தோப்ப வாவி வீதியில் அமைந்துள்ளது.
- இது செங்கல்லினால் அமைக்கப் பெற்ற கோயிலாகும். இதில் இலிங்கம் பிரதிட்டை செய்யப் பெற்றிருந்தது.
- இதன் வளாகம் 136' நீளமும் 100' அகலமும் கொண்ட சுற்றளவினை உடையதாகும். இவ்வாலயத்துக்குத் தெற்கிலும், மேற்கிலும் நுழைவாசல்கள் அமைந்துள்ளன.
- இது மற்றைய ஆலயங்களைப் போல் கர்ப்பக்கிருகம், அந்தராளம், முக மண்டபம் ஆகியவற்றைக் கொண்டு காணப்படுகின்றது.
- மூன்று பரிவார தேவர் கோட்டங்களும் அமைக்கப்பட்டுள்ளன.

- ஐந்தாம் சிவாலயம்
- இதன் சுவர்களும் அவற்றின் மேலமைந்த பகுதிகளும் இடிந்து வீழ்ந்து விட்டன. இப்போது ஆலயத்தின் அத்திவாரமும் சில தூண்களுமே எஞ்சியுள்ளன. இது செங்கல்லினால் அமைக்கப்பட்ட பல கட்டடங்களின் தொகுதியாக அமைந்துள்ளது.
- இவ்வாலயம் 117'6" நீளமும் 75' அகலமும் கொண்ட வளாகத்தினுள் அமைந்துள்ளது. இங்கு அமைந்த தூண்கள் நான்கு வரிசைகளைக் கொண்டதாய் சதுரமாகவும், எண்கோண வடிவமானதாகவும் அமைக்கப்பட்டுள்ளன. தூண்களில் அன்னப்பறவை வடிவங்களும் குமுதங்களும் இடம் பெற்றுள்ளன.
- இவ்வாலயம் 2 ஆம் சிவாலயம் போல் எண்கோண வடிவமாக அமைந்துள்ளது.

ஆறாம் சிவாலயம்

- 5 ஆம் சிவாலயத்தின் அண்மையில் அமைந்துள்ளது. இவ்வாலயம் 54'6" நீளம் கொண்டதாகும்.
- இவ்வாலயம் இறையகம், அந்தராளம், அர்த்த மண்டபம், முக மண்டபம் என்னும் பகுதிகளைக் கொண்டதாகக் காணப்படுகின்றது.
- இவ்வாலயத்தின் மண்டபம் 25'6" நீளமும் 14'9" அகலமும் கொண்டதாக அமைக் கப்பட்டுள்ளது. அங்குள்ள ஆலயங்களின் மண்டபங்களுள் இதுவே பெரியது. இவ்வாலயம் மூன்று வாசல்களைக் கொண்டது. இவ்வாலயத்தைச் சுற்றி மூன்று பரிவார தேவ கோட்டங்கள் அமைக்கப்பட்டிருந்தன.

ஏழாம் சிவாலயம்

- நகரத்தின் வடக்கு வாசலுக்குச் செல்லும் வீதியின் வலது பக்கத்தில் அமைந்திருந்த ஆலயம் இதுவாகும். இவ்வாலயம் அழிபாடுகளுக்கு இடையில் இறையகம், அந்தராளம், அர்த்த மண்டபம், முக மண்டபம் என்னும் அமைப்புகளைக் கொண்டுள்ளது.
- இவ்வாலயம் 64' 2" நீளமுடையது.
- கோபுர வாசலின் இருபக்கங்களிலும் சிறிய கட்டடங்கள் அமைக்கப்பட்டிருந்தன.

**பொன்னம்பலவாணேச்சரம்**

**ஆலய அமைவிடம்**

- கொழும்பு மாநகரில் கொச்சிக்கடைப் பிரதேசத்தில் அமைந்துள்ளது.

**வரலாற்றுச் சிறப்பு**

- 1856 ஆம் ஆண்டு அருணாசலம் பொன்னம்பல முதலியாரால் அமைக்கப்பட்ட கருங்கற் கோயில் என்ற சிறப்புப் பெற்றது.

**மூர்த்தி தல தீர்த்தச் சிறப்பு**

- மூர்த்தி - பொன்னம்பலவாணேச்சர்
- அம்பாள் - சிவகாம சௌந்தரி
- தீர்த்தம் -

**விழாக்கள்**

- நித்திய நைமித்திய பூசைகள் நடைபெறுகின்றன. மகோற்சவ விழா சிறப்பாக நடைபெறுகின்றது.
- மகா மண்டபத்தில் நித்தியாக்கினி வளர்த்தல் ஸ்ரீசக்கர பூசை என்பன நிகழும்.

**சமூக மேம்பாடு**

- இனமத பேதமின்றி அடியார்கள் கலந்து கொள்கின்றனர்
- அறநெறிப் பாடசாலை அமைத்து மாணவர்களுக்கு உதவுதல்

**தேர்ச்சி 40 : உலக நாடுகளில் இந்து நாகரிகத்தின் பரம்பலை ஆதாரங்களை அடிப்படையாகக் கொண்டு விளக்கம் பெறுவார்.**

**தேர்ச்சி மட்டம் 4.1** : உலக நாடுகளில் இந்து நாகரிகத்தின் பரம்பலை ஆதாரங்களுடன் எடுத்துரைப்பார்.

**பாடவேளைகள்** : 20

**கற்றற் பேறுகள் :**

- உலகநாடுகளில் இந்து நாகரிகம் பரவியமைக்கான காரணங்களைக் கண்டறிந்து எழுதிக் காட்டுவார்.
- இந்து நாகரிகம் பரவிய உலக நாடுகளையும், இந்து நாகரிகம் செல்வாக்குச் செலுத்திய விடயங்களையும் எடுத்துக் கூறுவார்.
- குறிப்பிட்ட நாடுகளில் கண்டுபிடிக்கப்பட்ட பல வடமொழிச் சாசனங்களின் இலக்கிய மரபை சிறப்பாக எடுத்துகாட்டி விளக்குவார்.
- மலேசியா, கம்போடியா, ஐக்கியராச்சியம், ஐக்கியஅமெரிக்கா ஆகிய நாடுகளில் இந்துநாகரிகத்தின் தற்கால செல்நெறிகளை எடுத்துரைப்பார்
- மேலைநாடுகளில் உயர் கல்விநிலையில் இந்து நாகரிகத்தின் பரம்பலை ஆதாரங்கள் காட்டி விளக்குவாார்

**விடய உள்ளடக்க வழிகாட்டி :**

- உலக நாடுகளில் நாடுகள் வரிசையில் கீழத்தேய நாடுகளான மலேசியா, பாலித்தீவுகளிலும், மேலைத்தேய நாடுகளான ஐக்கிய அமெரிக்கா, ஐக்கிய இராச்சியம், பாரசீகம் போன்ற நாடுகளிலும் இந்து நாகரிகத்தின் பரம்பல் பற்றி அதிகம் பேசப்படுகின்றது.
- கீழத்தேய நாடுகளில் வணிகம், அரசியல் ஆகிய இரு தொடர்புகளால் இந்துப் பண்பாடு பரவியது. அரசியல் ஆதிக்கம், வர்த்தகம் என்பன சாதகமான போக்குவரத்து அமைப்பால் இலகுவாயிற்று. விவாகத் தொடர்புகளும் அரச உறவுகளும் வலுவடைந்தன. அரசசபைகளில் பிராமணர்கள் முதன்மை பெற்றார்கள். இந்திய நாட்டில் ஏற்பட்ட உள்நாட்டுக் கலவரங்கள் காரணமாகவே இத்தகைய குடியேற்றங்கள் ஏற்படலாயின. அந்நாடுகள் சுவர்ணபூமியாக விளங்கியதால் வர்த்தக நடவடிக்கைகள் பெருகின.
- அதனால் இந்தியமக்கள் உலக சுதேசிகளுடன் வாழ்வியல் அடிப்படையிலும் கலந்து கொண்டனர். குப்தர்காலம், சோழர் காலம் வரை உள்ள கால கட்டம் இந்தியப் பண்பாடு பரவிய காலமாகும். பௌத்த கலாசாரப் பரவலும் இந்தியப் பண்பாடு பரவக் காரணமாயிற்று.

**பரவிய விடயங்கள்**

- அரசர்கள், வணிகர்கள் இந்தியாவில் இருந்து குடியேறினர். அதனால் பிராமணர் நெறி, கலையம்சங்கள், இந்து இலக்கிய மரபுகள், சமயம், வாழ்க்கை அம்சங்கள், அரசியல் முறைமைகள் அனைத்தும் பரவின.

**இந்துசமயத் தொடர்பும் இந்து அரசியல் முறைகளின் பரவலும்**

- அரச சபைகளில் அர்த்தசாத்திரம், தர்மசாத்திரம் என்பவற்றின் நடைமுறைகள் பின்பற்றப்பட்டன.
- அரச சபைகளில் இந்து சமய முறைப்படி பட்டாபிஷேக விழாக்கள் இடம்பெற்றன.
- அரசர்கள் தம்மைத் திருமாலின் அவதாரமாகக் கருதினர். இது தேவராஜ வழிபாடாக மாற்றம் பெற்றது.
- அரச சபைப் புரோகிதர்கள் ‘இராஜகுரு’ என அழைக்கப்பட்டனர்.
- அரசர்கள் பிராமணர்களுக்குத் தானம் வழங்கினர். ஜாவாவில் பூரணவர்மன் சிவநெறி தழுவி 1000 அந்தணர்களுக்குத் தானம் வழங்கினான்.
- அரசர்கள் கடவுளர்களால் அனுப்பப்பட்டவர்கள் என்னும் கருத்து, சம்பா நாட்டில் நிலவியது.
- பல்லவ, சோழ அரசவம்சங்கள் ‘வர்மன்’ என்னும் பெயர்களுடன் பரவியமை. சயாம் நாட்டின் தலைநகரில் மணசீகிராமம் பகுதியில் இந்துக் குடியிருப்பு காணப்பட்டது. அங்கு காணப்பட்ட விஷ்ணுகோயில் அவனிநாரணம் என்னும் திருக்குளத்துடன் காணப்படுகின்றது.

## மேலைத்தேய நாடுகளில் இந்து நாகரிகம்

(கோயில்களும் இந்து சமய விழாக்களும்)

கம்போடியா - அங்கோ வாட் சிவாலயம் சூரியவர்மனால் கட்டப்பட்டது.

ஐக்கிய இராச்சியம்

ஐக்கிய அமெரிக்கா - பத்திரவர்மன் பத்திரேஸ்வரர் கோயில் அமைக்கப்பட்டது.

மலேசியா - பத்துமலைக்கோயில், இது முருகன் ஆலயமாகும். இங்கு தைப்பூசம்மிகவும் சிறப்பு வாய்ந்தது.

சம்பா - பத்திரவர்மன் பத்திரேஸ்வரர் கோயில் அமைக்கப்பட்டது.

ஜாவா - பிரம்பனார் கோயில், பொரபதூர் - விநாயகர் ஆலயம்

தாய்லாந்து - வாட்போ கோயில், பொரபதூர் - அரசசபையில் திருவெம்பாவைப்பாடல் முதலியன இடம்பெற்றமை.

**மலேசியாவில் இந்துப் பண்பாடு**

- பண்டையக் காலத்தில் இந்துப் பண்பாடுபரவியநாடுகளுள் மலேசியவும் ஒன்றாகவுள்ளது.
- மலேசியா - மலாயத்தீபகற்பம்,சொர்ணபூமி,சொர்ணதீபம் கி.பி.4ம், 5ம், நூற்றாண்டுகளில் இந்தியர்கள் இந்நாட்டிற்குக் குடியேறினர்.
- மலேசியாவின் கெடா-அகழ்வாய்வு-சிவன் கோயில் இவ்வாலயம் மாமல்லபுர கல்போன்றகட்டுமானத்தையுடையது. இங்கு சிவலிங்கவடிவம், துர்க்கை, மகிடாசூரமர்த்தனி, விநாயகர் வடிவங்கள் .
- அவனிநாரயணன் எனும் விருதுப் பெயர்கொண்டநந்திவர்மன் கி.பி. 9ம் நூற்றாண்டில் மணிக்கிராமம் எனும் வணிககணத்தினர் திருமால் கோயிலைநிருமாணித்தனர்,குளம் வெட்டினர். கேரிலுக்கு–அவனிநாராயணண் பெயர் சூட்டினர்.
- கி.பி.11ம் நூற்றாண்டில் இராசேந்திரன் கடாரத்தின் மீதுபடையெடுத்து, அதனை வெற்றிகொண்டு 'கடாரம் வென்றான்' எனும் பட்டத்தைச்சூடினான்.
- வீராசேந்திரன் அந்நாட்டின் மீதுபடையடுத்தமைபற்றிஅவனதுகல்வெட்டுக் கூறுகிறது.– "கழலடைந்த மன்னவர்க்கு கடாரம் எறிந்து கொடுத்தருளினான்"
- கி.பி.14ம் நூற்றாண்டில் புரோகிதர்கள் மலேசியவிற்குகுடியேறிமைவிஜயநகரப் பேரரசிக்கும் மலேசியாவுக்குமிடையில் நிலவியதொடர்புக்குச்சான்று. உலகிலேயே மிகவுயரமான தங்கத்திலான முருகன் சிலை இத்தேசத்திலேயே உள்ளது.
- பத்துமலைமுருகன் கோயில், ஸ்ரீ சுந்ரரேஸ்வரர் ஆலயம் முதலான கையளழகுமிக்கவையாவுள்ளன. இயற்கையாக அமைந்தமலைக் குகைகளில் ஆறுபடைவீடுகள் அழகுற அமைக்கப்பட்டுள்ளன.
- தைப்பூசம், இரதோற்சவம்,தீபாவளிமுதலானதிருநாட்கள் சிறப்பாகக் கொண்டாடப்படுகின்றன. இத்தினங்களில் காவடிஎடுத்தல்,அலகிடுதல் என்பனவும் நடைபெறும் வழக்கம் உள்ளது.
- குடியேற்றம்

  காஞ்சி–போதிதருமர் - வடநாடு–சீனா

  கி.மு.9ல் தமிழர் - தென் கி ஆசி.குடி. கி.ம.1 மலாயத் தீவு கி.பி.4ல் மலேசிய வணிகம் - அவனிநாரயணன் எனும் விருதுப் பெயர்கொண்டநந்திவர்மன் கி.பி. 9ம் நூற்றாண்டில் மணிக்கிராமம் எனும் வணிககணத்தினர் திருமால் கோயிலைநிருமாணித்தனர்,குளம் வெட்டினர். கேரிலுக்கு–அவனிநாராயணண் பெயர் சூட்டினர்.

**கம்போடியாவில் இந்துசமயம்**

- கம்போடியா - கம்பூச்சியா 14 - மில்லியன் மக்கள் வாழ்கின்றனர். இவர்கள் கிமர்,கம்போடியர் எனல் கம்போடியாவில் 'பூனாக்' எனும் இராச்சியம் இந்தியர்களின் ஆரம்பகால குடியேற்றம்.
- கி.பி 1ம் நூற்றாண்டிலிருந்து கம்போடியாவில் இந்துப் பண்பாட்டின் பரம்பல் கிமர் பேரரசு உதாரணம் -யசோவருமன், சூரியவர்மன், ஈஸ்வரவர்மன், பவவர்மன். இவர்களின் ஆட்சியில் சைவ, வைணசமயங்கள் பெருவளர்ச்சி கௌதன்யன் ஆட்சியைத் தொடக்கியவன் பிரமணன் - சத்திரிய முறையில் ஆண்டவன்.

**பவவர்மன்**

- 4 சிவாலயங்களை நிர்மாணித்தான். சிவலிங்கத்தைப் பிரதிட்டை செய்தல் இதிகாச புராணங்களைப் பாராயணம் செய்தல் பவவர்மனின் குருவாகிய சோமவர்மசிவன், சூரியன் - கோயில்கள் அமைத்தான். கோயில்கள் - அங்கோர்வாட், அங்கோர்வேதி, பயோன்.
- அங்கோர்வாட் - கருவறை, முன்மண்டபம், திருச்சுற்று, நூல் நிலையம், கோயிற்பூங்கா, பணி, தங்குமிடம், கிழக்கு நோக்கி, மலைகளில் அமைத்தல். லிங்கம் - படிகம், கல், பொன் என்பன மூலப் பொருளாக அமைதல்.

**அங்கோர்வாட்**

- கி.பி.12ம் நூற்றாண்டில் சூரியவர்மன். ஆனந்தகுமாரசுவாமி பனை மலை சிவன் கோயில் போன்றது எனல். மேருமலையைக் குறிப்பதாகஅமையும் இவ்வாலயத்தின் மத்தியகோபுரங்கள் மேருமலையின் ஐந்துகோபுரங்களையும் குறிக்கின்றது. ஆலயத்தின் 3 சதுரக் கூடங்கள் மத்திய கோபுரத்துடன் இணைக்கப்பட்டுள்ளன. முதல் மண்டபம் வெளிப்புறச் சதுரத் தூண்களையும், உட்புறம் மூடிய தூண்களையும் கொண்டுள்ளது. 2008ல் இவ்வவாலயம் சர்வதேச கலாசார பாரம்பரியச் சின்னமாக அறிவிக்கப்பட்டதை அடுத்து இதன் புகழ் இன்னும் உயர்ந்தது. Henri Mouhotஎ னும் பிரஞ்சு எழுத்தாளர் அங்கோர்வாட்டின் பெருமையை உலக மக்களுக்கு வெளிப்படுத்தினார்.

**அரசன் இறைவடிவம் எனல். தேவராஜ** வழிபாடு

1ம் ஜயவர்மன் - பேயோன் கோயில் - தேவராஜ லிங்கம் நிறுவவுதல்.
இந்திரபுரம் - ஜயவர்மன் - சிவனுருவில், அங்கோர்வேதி - சூரியவர்மன்- விஷ்ணுவுருவில், அங்கோர்வாட் - 7ம் ஜயவர்மன் - புத்தஉருவில்

**இந்துநுண்கலைகள்**

- அங்கோர்வாட் கோயில் மாகாபாரத ராமாயணக் காட்சிகள் சிற்பங்களாகவுண்டு. **பயோன்-** மாகாபாரதராமயணக் காட்சிகள் - ராமன் மானைவிரட்டுதல் - வாலி சுக்ரிவன் வதம், சீதைதீயில் இறங்குதல், கண்ணன் மலையைத் தூக்குதல் தூண்களுக்கு இடைப்பட்ட **விதானம் தாமரை** வடிவஅலங்காரங்களைக் கொண்டுள்ளது. சுவர் நடனவடிவங்கள்,அப்ரசர்களின் வடிவங்கள்,மண்டபங்ளின் இருபுறமும் சிங்கவுருவங்கள்

**அடியவர் வழிபாடு**

- கி.பி.7 –மகேந்திரவரமன் - காரை–பாடல் பாட அறக்கட்டளை: இந்திரவர்மன் கி.பி.9 அகத்தியர் வழி வந்தவர் எனல்.
- வடமொழி **இலக்கிய** மொழியாகவும், கடவுளையும், அரசர்களையம் போற்றும் மொழியாகவும் விளங்கியது.
- சமஸ்கிருதமொழிக் கல்வெட்டுக்களில் கி.பி.7ம், 8ம் நூற்றாண்டுக்குரிய இந்து, பௌத்த ஆலயங்கள் பற்றியகுறிப்புக்களுண்டு. இராமாயணம் இராமகீர்த்திஎன்றபெயரில் படிக்கப்பட்டது.
- கல்வெட்டு–'அதர்வவேத நிஷ்தோ"–அதர்வண வேதத்தில் மூழ்கி எழுந்தவன். ஈசானவருமனின் தங்கையை மணந்த சோமசர்மா அந்தணன் - 'வேதத்தில் கரைகண்டவன்" ஆங்கோர்வேதில் - சிவசாத்திரம், சப்தசாத்திரம், சோதிடம், சிவவியாகரணம் பற்றியுண்டு. இயற்கை அம்சங்களை 'அணங்குடா' என்ற பெயரில் வழிபாடுசெய்தனர்.

**தேர்ச்சி 5.0 : இந்துப் பண்பாட்டு வளரச்சியில் கோயில் கலைகள் வகிக்கும் சிறப்பினை அறிந்து நயக்கும் திறனை விருத்தி செய்வார்.**

**தேர்ச்சி மட்டம் 5.1** : இந்துக் கோயிற் கலைகளின் சிறப்பம்சங்களை எடுத்துரைப்பார்.

**பாடவேளைகள்** : 20

**கற்றற் பேறுகள் :**

- இந்து நுண்கலைகளில் அடங்கும் விடயங்களை எடுத்துக் கூறுவார்.
- இந்துக் கோயிற் கலைகளின் சிறப்புக்களை அறிமுகம் செய்வார்
- தமிழகத்தில் திராவிடக் கட்டடக்கலை தோன்றி வளர்ச்சியடைந்தவாற்றை எடுத்துரைப்பார்.
- சிற்ப, நடன, ஓவியக்கலைகளுக்கிடையிலான தொடர்புகளை எடுத்துக் கூறுவார்.
- சிற்பங்களின் வகைகள், பிரதிமாலட்சணங்களை விபரிப்பார்.
- நுண்கலைகளுக்கும் சமய அனுபவங்களுக்கும் இடையிலான தொடர்புகளை ஒப்பிடுவார்.
- சிற்பங்களாக அமையும் வடிவங்களது எல்லா அங்கங்களும் வெளித் தெரியும்படியாக அமைக்கும்போது அது விக்கிரகம் என்பதில் தெளிவு பெறுவார்.
- சிற்பம் விக்கிரகம் இரண்டினையும் வேறுபடுத்துவார்
- நடராசர் வடிவத்தின் தோற்றம் சிற்ப சாத்திரங்கள் கூறும் அளவுப் பிரமாணங்களின்படி அமைக்கப்படுகிறது பற்றி எடுத்துரைப்பார்.
- அனந்தசயன வடிவம் சிற்பசாத்திர முறைமைக்குள் அமைக்கப்பட்டுள்ளது என்பதை விளக்குவார்.
- இந்துப் பண்பாட்டு வரலாற்றில் இசைக்கலையானது ஆலயங்களில் மிக உன்னத கலையாக மிளிர்கின்றது என்பதை விளக்குவார்.கல்விநிலையில் இந்து நாகரிகத்தின் பரம்பலை ஆதாரங்கள் காட்டி விளக்குவாார்

**விடய உள்ளடக்க வழிகாட்டி :**

இந்துக்கலைக் கோட்பாடுகள்

- பண்பாட்டின் ஓரம்சமாகவே கலைகள் அமைகின்றன. ஆய கலைகள் அறுபத்தி நான்கு எனக் கூறப்பட்டாலும் கட்டிடம், சிற்பம், ஓவியம், இசை, நடனம், நாடகம், இலக்கியம் என்பன பிரதான கலைகளாகக் கொள்ளப்படுகின்றன. கலை என்பது கலா என்னும் சமஸ்கிருத சொல்லின் தமிழ் வடிவமாகும். ஆங்கில மொழியில் Art என்று இது குறிப்பிடப்படும்.
- கட்டிட, சிற்ப, ஓவியங்கள் (Visual Art) கட்புலக் கலைகளாகும்.
- இசை, நடன, இலக்கியங்கள் அவைக்காற்றுக் கலைகளாகவும் (Performing Art) கட்புல வடிவங்களாகவும் விளங்குகின்றன. இலக்கியம் வாய்மொழிக் கலையாக குறிப்பிடப்படுகின்றது (Verbal Art). இவ்வகையில் கலைகள் பலவகையாக பாகுபடுத்தப் படுகின்றன.
- இந்துக்கலையானது இந்து தத்துவம், ஆக்கத்திறன், அழகியல், மனமகிழ்ச்சி வெளிப்பாடு முதலானவற்றை அடிப்படையாகக் கொண்டதாகும். கலை அனுபவமும் ஆத்மீக அனுபவமும் ஒரே அனுபவத்தின் வெளிப்பாடுகளாகும்.

- கலை அனுபவத்தில் தூய்மை, மன ஒருமைப்பாடு, ஆன்மீக இன்பம் என்பன சமய சாதனையாகவும் அதனால் கிடைக்கும் இலட்சியமாகவும் வலியுறுத்தப்படுகின்றது.
- கலாயோகி ஆனந்த குமாரசுவாமி அவர்கள் "கலை உருவாக்கம் என்பது தூய உளச் செயற்பாடு " எனச் சமயத்திற்கும் கலைக்கும் இடையிலான தொடர்பை எடுத்துக் காட்டுகின்றார்.
- திருநாவுக்கரசர் "உயிராவணம் இருந்து உற்றுநோக்கி உள்ளக்கிளியில் உருவெழுதி" என்று பாடுவது கலைகள் உள ஒருமைப்பாட்டையும் பூரண அமைதியையும் ஆன்மீக இன்பத்தையும் தருவதை காட்டுவதாகும்.
- மனித உள்ளத்தைத் தன்வயமாக்கி இறைசிந்தனையில் செலுத்துவதே கலை என்றும் கலை ஒரு யோக சாதனம் என்றும் கூறப்படுகிறது. கலை தன்னல மில்லா உலகத்திற்கு ஒருவரை அழைத்துச் செல்கின்றது எனக் குறிப்பிடப்படுகிறது.
- கலை என்பது இயல்பாகவே ஒழுங்குவிதியைக் கொண்டுள்ளது. கோயில், சிற்பம், விக்கிரகம் என்பன அமைக்கப்படும்போது அளவும், பொருத்தமும் அதனுள் அடங்கி இருப்பதைக் கண்டு கொள்ளலாம். அளவும் பொருத்தமும் தத்துவ வடிவமாகும். இதுவே கலைக் கோட்பாடாக அமைகிறது. இயற்கையும் கலையும் பிரிக்கமுடியாதபடி பின்னிப் பிணைந்துள்ளன.
- பிரபஞ்சப் படைப்பு நாதாந்த நடனத்தின் மூலம் வெளிப்படுகின்றது. நடனம் ஐந்தொழில் தத்துவமாகும். இசை மனதை இசைவிக்கும் தன்மை உடையது. இசையால் வழிபடுவது இயல்பானது. இறைஞானத்திற்கும் அது அடிப்படையானது.
- இந்துக்கலையானது மனத்தூய்மை, மனவலிமை, மனமேம்பாடு, கருணை, செல்வம், தவம், யோகம், ஞானம் ஆகியவற்றைக் கொடுப்பதுடன் மேலான பேரின்ப அனுபவத்தையும் ஏற்படுத்துகின்றது.
- கலை உணர்வானது ஒருவனைக் கீழான விலங்கு உணர்வில் இருந்து விடுபடச் செய்து, மானுட நிலைக்கும் தெய்வீக நிலைக்கும் உயர்த்திவிடுகிறது. அதனால் கலையானது எல்லா மக்களிடையேயும் இனமதபேதம் கடந்த ஒருமைப்பாட்டுணர்வை ஏற்படுத்தி விடுகின்றது. இனம், மதம், மொழி என்பன வேறுபட்டாலும் கலை உணர்வு ஒரே அமைப்பாக விளங்குகின்றது.
- முத்தமிழில் கலை மரபு இயல், இசை, நாடகமாக வெளிப்படுகின்றது. இயலும் இசையும் கலந்தே நாடகம் பிறக்கின்றது. இசை இல்லாமல் இறைவழிபாடே கிடையாது. தேவாரப் பாடல்கள் பண்சுமந்த பாடல்கள் என்று குறிப்பிடப்படுகின்றன.
- பரதமுனிவரின் நாட்டிய சாத்திரம் சிருங்காரம், லாஸ்யம், காருண்யம், ரௌத்திரம், வீரம், பயம், அருவருப்பு, அற்புதம் ஆகிய எட்டு விதமான அபிநயங்களை விபரிக்கின்றது.
- பின்பு அபிநவகுப்தர், சாந்தம் என்னும் ஒன்பதாவது ரசனையும் இணைத்துள் ளார். இத்தகைய கலை ரசனைகள் பக்தி இலக்கியங்களில் தொன்றுதொட்டு வளர்ந்து வந்துள்ளமையைக் காணமுடிகிறது.

- **கட்டடக் கலை**

அ. குப்தர் காலத்தில் கட்டடக் கலை வளர்ச்சி

- வட இந்திய இந்துப் பண்பாட்டு வரலாற்றில் குப்தர் காலம் முக்கியமான இடத்தைப் பெறுகின்றது.
- கி.பி. 318 - கி.பி. 570 வரை குப்த மன்னர்களின் ஆட்சிக் காலமாக உள்ளது.
- இந்து சமயம் சார்ந்த சமயம், கலை, இலக்கியம், தத்துவம் போன்ற துறைகள் வளர்ச்சி அடைந்தன.
- இக்காலத்தில் நாகர கட்டடக் கலைப்பாணி இந்து மரபு தழுவியதாக வளம் பெற்றது.

## சிகரக் கோயில்கள்

- குப்தர் காலக் கட்டடக் கலை வளர்ச்சியில் முக்கியத்துவம் உடைய கோயில்களாக அமைவன சிகரத்தோடு கூடிய கோயில்களாகும்.
- கருவறை, முகப்பு மண்டபம் ஆகியவற்றையுடைய கட்டுத்தளி ஆலயங்களின் கருவறைக்கு மேல் சிகரம் அமையும்.
- கட்டட அழிபாடுகளின்படி கி.பி. 6 ஆம் நூற்றாண்டிலேயே சிகரங்களுடன் கூடிய கோயில்கள் அமைக்கப்பட்டன என்பர்.
- தியோகா தசாவதாரக் கோயில், நாச்சனா குடாரா சிவன் கோயில் பட்டாரி மகாதேவன் கோயில், விதர்கோன் மட்டளி போன்றன சிகரங்களோடு கூடிய கோயில்களாகும்.
- தியோகா தசாவதாரக் கோயில் சிகரத்தையுடைய கற்றளிகளுள் முக்கியத்துவம் உடைய கோயிலாகும்.
- பௌத்த தூபியை முன்மாதிரியாகக் கொண்டு அமைக்கப்பட்ட இக் கோயில் மிக அகலமான தளத்தின் மேல் அமைக்கப்பட்டுள்ளது.
- தியோகா தசாவதாரக் கோயில் கருவறை, அந்தராளம், அர்த்த மண்டபம், முன் மண்டபம், சிகரம், நடைபாதை என்பனவற்றைப் பிரதான பகுதிகளாகக் கொண்டுள்ளது.
- மண்டபங்கள் இரும்புத் தீராந்திகளால் இணைக்கப்பட்டுள்ளமை அக்காலப் பொறிமுறை நுட்பத்தைக் காட்டுவதாக அமைகிறது.
- மூலஸ்தானத்தின் சுவர்களின் வெளிப்புறம் தேவகோட்டங்களும், பக்கங்களில் அரைத் தூண்களும் உண்டு.
- கருவறைக்கு மேல் 40 அடி உயரமுடைய சிகரம் இன்று சிதைவடைந்த நிலையில் காட்சியளிக்கிறது.
- ஆலயத்தின் வாயிற்புறச் சுவரின் இருபுறமும் கங்கை, யமுனை ஆகியவற்றின் வடிவங்கள் சிற்பங்களாக உள்ளன.

## பல்லவர் காலக் கட்டடக் கலை

- தமிழக வரலாற்றில் பல்லவர் காலம் பக்திநெறிக் காலம், பக்தி இயக்ககாலம் என்று பலவாறு அழைக்கப்படுகிறது.
- கி.பி. 6 ஆம் நூற்றாண்டு தொடக்கம் கி.பி. 9 ஆம் நூற்றாண்டுப் பகுதியில் தமிழகத்தில் பல்லவ மன்னர்களினது ஆட்சி நடைபெற்றது.
- பல்லவர் கால சைவ, வைணவ மறுமலர்ச்சியில் கட்டடக்கலையின் வளர்ச்சியும் பிரதான இடத்தைப் பெறுகின்றது.
- தமிழகத்தில் முக்கியத்துவம் பெற்ற திராவிடக் கட்டடக்கலை தோன்றி வளர்ச்சியடைந்த காலமாக பல்லவர்காலம் உள்ளது.
- பல்லவர் மன்னர்களால் அமைக்கப்பட்ட பல்வேறு வகைப்பட்ட ஆலயங்கள், அக்கால கட்டடக்கலை வளர்ச்சியைக் காட்டுவன.
- பல்லவர் கால கட்டடக்கலை வளர்ச்சியை நான்கு கட்டங்களாக இனங்காண்பர்.
  1. மகேந்திரவர்மன் பாணி
  2. நரசிம்மன் பாணி
  3. இராஜசிம்மன் பாணி
  4. நந்திவர்மன் பாணி
- மற்றொரு வகையில் குடைதளிகள், மலைதளிகள், கட்டுத்தளிகள் எனவும் வகைப்படுத்துவர்.

## குடைதளிகள்

- பல்லவர்கால கட்டடக்கலை வளர்ச்சியின் ஆரம்ப கட்டமாக அமைவது குடைவரைக் கோயில்களாகும்.
- குகைகளைக் குடைந்து அமைக்கப்பட்ட குடைவரைக் கோயிலை ஆரம்பித்து வைத்தவர் மகேந்திரவர்மன் ஆவார்.
- மண்டகப்பட்டு, மகேந்திரவாடியம், மாமண்டூர், வல்லம், பல்லாவரம் போன்ற குடைவரைக் கோயில்கள் சிறந்த சான்றுகளாகும்.
- சீயமங்கலம், திருச்சிராப்பள்ளி, தளவானூர் போன்ற இடங்களில் உள்ளவை சற்றுப் பிற்பட்ட குடைவரைகளாகும்.
- குடைவரைக் கோயில்கள் கருவறை, அர்த்தமண்டபம், முகப்பு மண்டபம் என்பனவற்றையும் பிரதான வாயிலையும் கொண்டுள்ளன.
- ஆரம்பகாலக் குடைவரைகளின் முகப்பு மண்டபத்தில் 7 அடி உயரமும் 2 அடி அகலமுங் கொண்ட தூண்கள் இடம்பெறுகின்றன.
- இக்குடைவரைகளில் உள்ள கருவறைகளில் இறைவடிவங்களைக் காணமுடியவில்லை.
- இறைவடிவங்கள் சுதை அல்லது மரத்தால் அமைக்கப்பட்டிருக்கலாம் எனக் கருதுவர்.
- பல்லவர் காலக் குடைவரைக் கோயில்களின் அடுத்த கட்டட வளர்ச்சியைக் காட்டுவன மண்டபங்கள் ஆகும்.
- மண்டபங்களுள் அதிகமானவை 1 ஆம் நரசிம்மன் காலத்தில் அமைக்கப்பட்டவையாகும்.
- திரிமூர்த்தி மண்டபம், ஆதிவராக மண்டபம், மகிஷாசுரமர்த்தினி மண்டபம், தர்மராஜ மண்டபம், மாமல்லபுரம் போன்றவை உதாரணங்களாகும்.
- இம்மண்டபங்களில் பொதுவாக 7 அடி உயரமுள்ள தூண் நிரைகள் காணப்படுகின்றன. இதன் மேற்புறமும், அடிப்புறமும் சதுர வடிவமைப்பையும், நடுப்பகுதி எண்கோண அமைப்பையும் கொண்டன. மேற்பகுதியில் கும்பமும், தாமரை மொட்டும் தொங்குவது போல் அமைக்கப்பட்டுள்ளன. தூண்களின் அடியில் சிங்கங்கள் இடம் பிடிக்கும்போது தூண்களின் பாரத்தை சிங்கங்கள் தாங்கிக் கொள்வதுபோல் அமைக்கப் பட்டிருப்பது சிறந்த கலை நயப்பின் வெளிப்பாடாகும்.
- கொடிக்கால் மண்டபத்தின் கருவறையின் இருபுறமும் காவற்பெண்கள் காணப்படுவதால் கொற்றவைக்குரிய கோயிலாக இருக்கலாம் என்பர்.
- கொடிக்கால் மண்டபத்தின் பிரதான கருவறையுடன் முகப்பு மண்டபச் சுவர்களிலும் கருவறைகள் உள்ளன.
- மண்டபக்கோயில்கள் குடைவரைகள் போல கருவறை, முகப்பு மண்டபம் என்பனவற்றைப் பிரதான பகுதிகளாகக் கொண்டன.
- மண்டபக்கோயில்களில் கருவறையின் எண்ணிக்கை வாயில்களின் அமைப்பு, காவற் சிற்பங்கள் அமைப்பு என்பனவற்றில் மாற்றங்களைக் காணலாம்.
- மண்டப கோயில்களுள் சில மண்டபங்கள் இறை வடிவங்களை உடைய கருவறைகளைக் கொண்டனவாக உள்ளன.

**மலைதளிகள்**

- பல்லவர் கால கட்டடக்கலையின் 2 ஆம் கட்ட வளர்ச்சியைக் காட்டுபவை மலைதளிகளாகும்.
- மலைதளிகளை ரதக்கோயில்கள், பாறைக்கோயில்கள், செதுக்குத்தளிகள் எனவும் கூறுவர்.
- மரத்தில் இரதத்தைச் செதுக்குவது போல பாறைகளைக் மேல் இருந்து கீழாக செதுக்கி அமைக்கப்பட்ட கோயில்களாக மலைதளிகள் உள்ளன.
- மாமல்லபுரத்தில் அமைக்கப்பட்டுள்ள மலைதளிகள், மகாபாரதக் கதாபாத்திரங்களின் பெயர்களாலும் அழைக்கப்படுகின்றன.
- மாமல்லபுர மலைதளிகள், தரும ரதம், வீம ரதம், நகுல ரதம், சகாதேவ ரதம், அர்ச்சுன ரதம், கொற்றவை ரதம், வடக்குப் பிடாரி ரதம், தெற்குப் பிடாரி ரதம், வலையான் குட்டை ரதம் எனும் பெயர்களினால் அழைக்கப்படுகின்றன.
- மலைதளிகள் நாகரம், திராவிடக் கலைப்பாணிகளைப் பிரதிபலிக்கின்றன.
- மாமல்லபுரக் கோயில்களுள் தர்மராஜ ரதம் தனித்துவம் உடையது.
- மூன்று தளங்களை உடைய தர்மராஜ ரதம் திராவிட அமைப்பைப் பின்பற்றி அமைக்கப்பட்டுள்ளது.
- தருமராஜ ரதத்தின் மூன்று தளங்களிலும் இந்து சமயச் சார்புடைய பல சிற்பங்கள் காணப்படுகின்றன.
- இதனால் தருமராஜ ரதம் "சிற்பக்கலைக் களஞ்சியம்" என்று போற்றப்படுகின்றது.

**கட்டுத்தளிகள்**

- கற்களைச் சீராகப் பொழிந்தெடுத்து ஒன்றின் மேல் ஒன்றை வைத்து கட்டுகின்ற கட்டுமானக் கட்டக்கலையே கட்டுத்தளியாகும்.
- கட்டுத்தளிக் கலைமரபு இராஜசிம்ம பல்லவ மன்னனது கலைமரபாகும்.

  உ. ம்: மாமல்லபுரக் கடற்கரைக்கோயில், ஈஸ்வரன் கோயில், முகுந்தன் கோயில், தென்னார்க்காடு மாவட்டத்திலுள்ள பனைமலைக்கோயில், காஞ்சி புரத்திலுள்ள வைகுந்தப் பெருமாள் கோயில்.
- மாமல்லபுர கடற்கரைக்கோயில் பாதுகாப்பற்ற திறந்தவெளியில் அமைந்துள்ள இக்கோயில் கடல்நீரிலிருந்து வரும் உப்புக்காற்றாலும், காற்றில் வரும் மணலாலும் இன்னும் சிதைவடையாது இருப்பது பல்லவர்கால கட்டுமான வேலையின் உறுதிப்பாட்டைக் காட்டுகிறது.
- மாமல்லபுர கடற்கரைக் கோயிலை ஜலசயனம் என தற்போது அழைக்கின்றனர்.
- இராஜசிம்மனால் கட்டப்பட்ட காஞ்சி கைலாசநாதர் கோயில் கலை வனப்புடையது. பெரிய கற்றளி என பிற்கால சாசனங்கள் கூறுகின்றன.
- காஞ்சி கைலாசநாதர் கோயில் தமிழக திராவிடக் கட்டடக்கலையின் பிரதான அம்சங்களான விமானம், மண்டபங்கள், பரிவாரத்தேவர் கோட்டம், சுற்றாலை, கோபுரம், பிரகாரம் ஆகிய யாவும் அமைக்கப்பட்டுள்ளன.

- காஞ்சி கைலாசநாதர் கோயில் கருவறையில் 16 பட்டை கொண்ட இலிங்கம் உள்ளது. கர்ப்பக்கிரகத்தைச் சுற்றி வருவதற்கு பாதை அமைப்பு உண்டு.
- கர்ப்பக்கிரகத்தின் கிழக்குப் பக்கம் தவிர்ந்த ஏனைய மூன்று திசைகளிலும் உள்ள பக்கச் சுவர்களின் நடுவிலும் தேவகோட்டம் இணைந்திருப்பது சிறப்பம்சமாகும்.
- விமானம் பல தள அமைப்பும் அது உள்நோக்கிய சரிவுடன் மேலே ஓங்கியெழும் பாங்கில் கலைவனப்புடன் அமைக்கப்பட்டுள்ளது. நாற்சதுர வடிவிலான அதன் தளங்களில் மாடங்களும் புராணக்கதையை விளக்கும் சிற்பங்களும் சிகரத்தின் மேலே தூபியும் உண்டு.
- திருச்சுற்றாலையைச் சுற்றி 58 சிறிய தேவகோட்டங்கள் உள்ளன.
- காஞ்சிபுரத்திலுள்ள வைகுந்தப்பெருமாள் கோயிலே பல்லவர் காலக் கட்டடக்கலையின் மிக முதிர்ச்சி பெற்ற படைப்பு எனக் கூறலாம். அது கைலாசநாதர் கோயிலைக் காட்டிலும் ஓரளவு பெரியது.
- சுற்றாலை மண்டபம், கருவறை, முக மண்டபம் என்பன அக் கோயிலின் முக்கிய உறுப்புக்களாகும்.
- கருவறை ஏறக்குறைய 90 அடி நீளமுள்ள பக்கங்களைக் கொண்டதாக சதுர வடிவில் அமைந்துள்ளது.
- சுற்றாலை மண்டபத்தில் சிங்க உருவங்கள் செதுக்கப்பட்டுள்ள தூண் வரிசையும், பல்லவ அரச மரபினது முக்கிய நிகழ்ச்சிகளைக் கூறும் செய்திகள் பொறிக்கப்பட்ட சிற்பங்களும் உள்ளன.
- முக மண்டபம் கருவறையைப் போல சதுர வடிவானது. கருவறையின் மேலுள்ள விமானம் சதுர வடிவிலானது.
- அதனது உயரமானது தரை மட்டத்திலிருந்து 60’ ஆகும்.
- விமானம் நான்கு தளங்களைக் கொண்டுள்ளது. அதைச் சுற்றிலும் நடைவழியும் உள்ளது.
- விமானத்தில் உள்ள சிற்ப வேலைப்பாடுகள் பார்ப்போரைக் கவர்வதாகவும் உள்ளது.
- ஆலயத்திலே பிரகாரத்தின் உட்புறத்திலுள்ள திருச்சுற்றானது கூடங்கள் பொருந்திய சாலைகளுடன் காணப்படுகின்றது.
- சாலை நெடுகிலும் யாழித்தூண் நிரைகள் உண்டு.
- தூணின் பாரத்தை யாழிதாங்குவது போல் மிகத் தத்துவரூபமாக சிற்பி தன் கைவினைத் திறனைக் காட்டியுள்ளான்.
- பல்லவர் கால கட்டடக்கலையிலும் கலை வேலைப்பாடுகளிலும் மிக உயர்ந்த வளர்ச்சிக் காலம் இராஜ சிம்மனது ஆட்சிக்காலம் எனக் கூறலாம்.

## நந்திவர்மன் கட்டடக்கலை (கி.பி. 800 - கி.பி. 900 வரை)

- இம்மன்னனது கட்டடக்கலைப் பிரிவானது கி.பி. 800 - கி.பி. 900 ஆம் ஆண்டிற்கு இடைப்பட்ட காலத்தில் எழுந்த ஆலயங்களைக் குறிக்கும். இப்பிரிவுக்குள் இடம்பெறும் ஆலயங்கள் அளவிலே சிறியவை.
- கலைப் பண்புகளைப் பொறுத்தவரையில் இராஜசிம்மன் காலத்தைக் காட்டிலும் வளர்ச்சி பெற்றது என்று கூறமுடியாது.
  உ-ம்: காஞ்சியிலுள்ள முத்தீஸ்வரர் கோயில், மதங்கேஸ்வரர் கோயில், செங்கற் பட்டிற்கு அருகிலுள்ள ஓரகடத்திலுள்ள வாடாமல்லீஸ்வரர் கோயில், திருத்தணியிலுள்ள வீரட்டானேஸ்வரர் கோயில்.
- இவற்றுள் காஞ்சியிலுள்ள முத்தீஸ்வரர், மதங்கேஸ்வரர் கோயில்கள் முதலில் கட்டப்பட்டவை எனக் கருதலாம். அவற்றின் நுழைவாயிலில் இரு தூண்கள் தாங்கிக் கொண்டிருக்கும் முகமண்டபம் இருக்கிறது.
- இப்பிரிவைச் சேர்ந்த ஏனைய நான்கு கோயில்களும் அரைவட்ட வடிவில் அமைந்துள்ளன. அவை மாமல்லபுரத்திலுள்ள சகாதேவ ரதத்தை முன்மாதிரியாகக் கொண்டன.

## சோழர் காலக் கட்டடக் கலை

- தமிழக வரலாற்றில் கி.பி. 850 - 1270 வரையான காலம் சோழ மன்னர்களின் ஆட்சிக் காலமாகும்.
- இந்து சமயம் குறிப்பாக சைவநெறியானது கோயில் வழிபாடு, கலை, இலக்கியம், தத்துவம் என்று பல்வேறு துறைகளிலும் வளர்ச்சி கண்டது.
- சோழ மன்னர்கள் போரில் பெற்ற வெற்றிகளுக்காகவும், மக்களின் ஆன்மீக தேவையை நிறைவேற்றுவதற்காகவும் பல கோயில்களை அமைத்தனர்.
- சோழ மன்னர்கள் அமைத்த கோயில்கள் அக்காலக் கட்டடக்கலை வளர்ச்சியைக் காட்டுவனவாய் உள்ளன.
- சோழர் கால கட்டடக்கலை வளர்ச்சியை வெவ்வேறு வளர்ச்சிக் கட்டங்களாக இனங்காண்பர்.

- சோழர் கால கட்டடக்கலை வளர்ச்சியை வெவ்வேறு வளர்ச்சிக் கட்டங்களாக இனங்காண்பர்.
  (அ) முற்காலச் சோழர் பாணி - முற்காலச் சோழர் பாணி - கி.பி. 850 - 985 வரை விஜயாலயன் தொடக்கம் பரார்ந்தன் வரையான கோயில்கள்
  (ஆ) இடைக்காலச் சோழர் பாணி - கி.பி. 985 - 1070 வரை ராஜராஜன் தொடக்கம் ராஜேந்திரன் வரையான காலத்தில் கட்டப்பட்ட கோயில்களாகும்.
  (இ) பிற்காலச் சோழர் பாணி - கி.பி. 1070 - 1270 வரை 1 ஆம் குலோத்துங்கன் தொடக்கம் 3 ஆம் ராஜேந்திரன் வரையான காலத்தில் கட்டப்பட்ட கோயில்கள்.

(அ) முற்காலச் சோழர்களின் கோயில்கள் பல்லவர் கால கோயில்களைப் போலவே அளவில் சிறியன.

- பல்லவர் கால கட்டடக்கலை மரபின் தொடர்ச்சியாக சோழர்களின் ஆரம்ப காலக் கோயில்கள் உள்ளன.
- நார்த்தா மலை விஜயாலய சோழேஸ்வரம், புதுக்கோட்டை மூவர் கோயில் போன்றன முற்கால சோழர் கோயில்களுள் சிலவாகும்.

(ஆ) சோழர் கால கட்டடக்கலை வளர்ச்சியின் உச்சநிலையைக் காட்டுவன இடைக்காலச் சோழர்களின் கோயில்களாகும்.

- தஞ்சைப் பெருங்கோயில், கங்கைகொண்ட சோழேஸ்வரம் என்பன அவற்றுள் முக்கியமானவை.

(இ) பிற்காலச் சோழர் கோயில்கள் சோழர் கால கட்டடக்கலை வளர்ச்சியின் முதிர்ச்சியை காட்டுவதுடன், விஜயநகர கால கட்டடக்கலை வளர்ச்சிக்கு முன்னோடியாகவும் அமைவன.

- பிற்காலச் சோழர் கோயில்களுள் சிதம்பரம், ஐராவதேஸ்வரம், தரிபுவனம் என்பன சிலவாகும்.

## கட்டடக்கலையின் வளர்ச்சி

- சோழர் கால கட்டடக்கலையின் தொடக்கத்தைக் காட்டுவது விஜயாலய சோழேஸ்வரமாகும்.
- கருவறை, விமானம், முன்மண்டபம், பரிவாரக் கோயில்கள் எனும் பகுதிகளைக் கொண்டதாக இவ்வாலயம் உள்ளது.
- நான்கு தளங்களைக் கொண்ட விமானம் மேல் நோக்கி கூம்பிய வண்ணம் செல்கிறது.
- விமானத்தின் முதல் மூன்று தளங்கள் சதுரமாகவும், நான்காவது தளம் வட்டமாகவும் அமைந்துள்ளது.
- புதுக்கோட்டையில் உள்ள மூவர் கோயில் மூன்று பிரதான கோயில்களை கொண்ட ஒரு கோயிலாக உள்ளது.
- மூன்று மையக் கோயில்களுக்கும் மகா மண்டபம், நந்தி மண்டபம் என்பன பொதுவாக அமைந்துள்ளன.
- ஒவ்வொரு மையக்கோயிலும் கருவறை, அர்த்த மண்டபம் எனும் பகுதிகளை உடையன.

- மையக்கோயில் ஒவ்வொன்றும் 21 அடி நீளமும், மகா மண்டபம் 91 அடி நீளமும், நந்தி மண்டபம் 11 சதுர அடி நீளமும் உடையன.
- ஆலயத்தின் ஒவ்வொரு திசைக்கும் துணைக் கோயில்கள் உள்ளன.
- சோழர் கால கட்டடக்கலை வளர்ச்சியின் உச்சநிலையை வெளிப்படுத்துவதாக தஞ்சைப் பெருங்கோயில் உள்ளது.
- சாளுக்கிய மன்னனை ராஜராஜன் வெற்றி கொண்டதன் நினைவாகக் கட்டப்பட்டதே தஞ்சைப் பெருங்கோயிலாகும்.
- 500 அடி நீளமும் 250 அடி அகலமுடையதாக இக்கோயில் உள்ளது.
- தென்திசைமேரு, பெரிய கோயில், பெருவுடையார் போன்ற பெயர்கள் தஞ்சைப் பெருங்கோயிலின் கட்டடக்கலைச் சிறப்பை உணர்த்துவன.
- பிரதான கோயில் கருவறை, அர்த்த மண்டபம், மகா மண்டபம், நந்தி மண்டபம், நர்த்தன மண்டபம், வாச்சிய மண்டபம் என்று 6 பகுதிகளைக் கொண்டுள்ளது.
- ஆலயத்தின் உறுப்புகள் ஒவ்வொன்றும் ஆகம விதிப்படி நிருமாணிக்கப்பட்டுள்ளன.
- 45 அடி நீளமும் 9 அடி அகலமும் கொண்ட கருவறையின் நாற்புறமும் நான்கு வாயில்கள் உள்ளன.
- தஞ்சைக் கோயிலின் பிரதான பகுதியாக அமைவது பிரமிட் வடிவில் அமைந்த அதன் விமானம் என்பர்.
- ஆலயத்தின் விமானம் 216 அடி உயரத்தை கொண்டிருப்பதுடன், 15 அடுக்குகளையும் உடையது.
- தஞ்சைக்கோயிலின் மதில் வாயில் விமானம் 3 கோபுரங்களும் கேரளந்தகன் வாயில், ராஜராஜன் வாயில், திருவணுக்கன் வாயில் எனும் பெயர்களால் அழைக்கப்படுகிறது.
- ராஜேந்திரன் கங்கையை வெற்றி கொண்டதன் நினைவாக அமைக்கப்பட்ட கங்கை கொண்ட சோழேஸ்வரம் தஞ்சைக் கோயிலின் மறுபதிப்பு என்று கொள்ளப்படுகிறது.
- இவ்வாலயம் 567 அடி நீளமும் 318 அடி அகலமும் கொண்ட வளாகத்தினுள் அமைந்துள்ளது. ஆலயத்தின் கருவறை, அர்த்த மண்டபம், மகா மண்டபம் ஆகிய பிரதான பகுதிகள் ஒரு பொதுவான பிரமாண்டமான அதிட்டானத்தின் மேல் அமைந்துள்ளன.
- கங்கை கொண்ட சோழேஸ்வரத்தின் பிரதான பகுதியாக அமைவது விமானமாகும்.
- தஞ்சைப் பெருங்கோயிலின் விமானத்தின் தளங்கள் நாற்புறமும் நேராக அமைந் திருக்க, கங்கை கொண்ட சோழேஸ்வரத்தின் விமானம் வில் வளைவாகக் காட்சியளிக்கின்றது.
- விமானத்தில் ஐந்து பக்க வடிவிலும், நாற்சதுர வடிவிலும் அமைந்த மாடங்கள் தளங்களை அலங்கரிக்கின்றன.
- கருவறையின் இருபுறமும் வட கைலாயம், தென் கைலாயம் எனும் இரு சிவாலயங் கள் உள்ளன.

**பிற்கால சோழர் கலைப் பாணி**

- பிற்கால சோழ மன்னர்களால் அமைக்கப்பட்ட கோயில்கள் இடைக்கால சோழ கட்டடக் கலைப்பாணியின் அடுத்த கட்ட வளர்ச்சியைக் காட்டுவன.
- இக்கோயில்கள் சோழர் கால கட்டடக் கலையின் முதிர்ச்சியைக் காட்டும். அதே நேரம் சோழப் பேரரசின் வீழ்ச்சியையும் வெளிப்படுத்துவன.
- 1 ஆம் குலோத்துங்கன், 2 ஆம் குலோத்துங்கன், விக்கிரம சோழன் போன்ற அரசர்களால் அமைக்கப்பட்ட கோயில்களாக இவை உள்ளன.
- சிதம்பரம், திரிபுவனேஸ்வரம், ஐராவதேஸ்வரம் போன்ற கோயில்கள் பிற்கால சோழர் கால கலைப்பாணியை பிரதிபலிப்பன.
- விக்கிரம சோழன் போன்ற அரசர்கள் - சிதம்பரத்தில் நிருத்த சபை, கோபுரங்கள், நூற்றுக்கால் மண்டபம், ஆயிரங்கால் மண்டபம் போன்ற கட்டட அம்சங்களை நிருமாணித்தனர்.
- சிதம்பரத்தின் திருச்சுற்று மாளிகையின் சுவர்கள் 1 ஆம் குலோத்துங்கன், விக்கிரம சோழன் போன்றவர்களின் காலங்களில் நிருமாணிக்கப்பட்டவை.
- இடைக்காலக் கோயில்களின் விமானங்கள் உயரமாக அமைய, பிற்கால சோழர் கோயில்களின் கோபுரங்கள் உயரமாக இருந்தமை இக்கால கட்டடக்கலை வளர்ச்சியில் காணப்படும் முக்கிய அம்சமாகும்.
- சிதம்பரத்தின் 7 வாயில்களிலும் 7 உயரமான கோபுரங்கள் உள்ளன.
- 2 ஆம் ராஜராஜனால் நிருமாணிக்கப்பட்ட ஐராவதேஸ்வரம், இராஜஇராஜேஸ்வரம் என அழைக்கப்பட்டது.
- இவ்வாலயம் கருவறை, அர்த்த மண்டபம், பெரு மண்டபம் என்பனவற்றைப் பிரதான பகுதிகளாகக் கொண்டுள்ளது.
- ஐராவதேஸ்வரத்தின் விமானம், தேவகோட்டம், சுவர் போன்ற பகுதிகளில் பல சிற்பங்கள் செதுக்கப்பட்டுள்ளன.
- இக்கோயில் பல சிற்பங்களைக் கொண்டுள்ளதனால் “சிற்பங்களால் இழைக்கப்பட்ட ஒரே சோழர் வளாகம்” என்று வருணிக்கப்படுகிறது.
- எனவே சோழர்களின் பிற்காலக் கோயில்கள் விஜயநகர நாயக்கர் கால கட்டடக் கலை வளர்ச்சிக்கு முன்னோடி என்பர்.

## விஜய நகராட்சியில் இந்துப் பண்பாடு

## விஜயநகர தோற்றமும் தமிழகத்தில் அதன் ஆதிக்கமும்

- தென்னிந்தியாவில் கர்நாடக மாநிலத்தில் 1336 இல் விஜயநகரப்பேரரசு நிறுவப்பட்டது. அவர்கள் காவிரி, வைகை, தாமிரபரணிப் பிரதேசங்களையும் கைப்பற்றினார்கள். விஜயநகரரசர்கள் தமிழகத்தை ஆதிக்கம் செலுத்த முன்பு மதுரைச் சுல்தானியர் ஆட்சி தமிழகத்தில் பேராதிக்க நிலையை ஏற்படுத்தியது. முதலாம் புக்கன் என்பவன் விஜயநகரப் பேரரசனாக முடிசூடித் தமிழகத்தை ஆட்சி செய்தான். அவனைத் தொடர்ந்து கரிகரன், குமாரகம்பணன் முதலியோரும் விஜயநகர ஆதிக்கத்தை வளர்த்தனர். விஜயநகர அரசர்களில் தமிழ் நாட்டை ஆண்டவர்களை மண்டலிதர் எனக் கூறுவது மரபாகியது. மண்டலிதர் என்பவர் மண்டல ஆட்சியில் ஈடுபட்டவர்களாவர். விஜயநகர ஆதிக்கத்தின் கீழ், தமிழ்நாட்டை ஆண்டவர்கள் மகாமண்டல ஈஸ்வரன் என அழைக்கப்பட்டனர். இத்தகைய விஜயநகர அரசர்களின் ஆட்சி தலைக்கோட்டைப் போரைத் தொடர்ந்து வலுவிழந்தது. தலைக்கோட்டைப் போரைத் தொடர்ந்து விஜயநகர நாயக்கர் அரசர் மதுரை, தஞ்சை, செஞ்சி ஆகிய இடங்களில் ஆட்சிசெய்து தம்மை மன்னர்களாக மாற்றிக் கொண்டார்கள்.

- சோழர் காலத்தில் காணப்பட்ட மண்டலம் எனும் அரசமுறை தவிர்ந்து விஜயநகர ஆட்சியில் ராஜ்ஜியம் என்னும் ஆட்சிமுறை வலுப்பெறத் தொடங்கியது. விஜயநகர அரசர்களில் முதன்மையானவன் கிருஷ்ணதேவராயன் (1509-1529). இவனது பெருமையைப் பயசு எனும் வெளிநாட்டறிஞன் புகழ்ந்துரைத்துள்ளான். நீதியான ஆட்சி அவன் காலத்தில் இடம்பெற்றதென பயசு குறிப்பிட்டுள்ளார். கிருஷ்ணதேவ ராயரைத் தொடர்ந்து அச்சுதராயர் ஆட்சி செய்தார். அதன் பின்பு இராமராயர் ஆட்சி இடம்பெற்றது. இராமராயரைத் தலைக்கோட்டைப் போரில் தோல்வியடையச் செய்ததன் மூலம் விஜயநகர ஆதிக்கம் சிதைவுற்றது.

## விஜயநகர ஆட்சியும் வடமொழி இலக்கியச் சிறப்பும்

- முதலாம் புக்கன் சாயனருக்கு உதவி செய்தான். அவனால் நான்கு வேதம் பிராமணங்கள் என்பவற்றுக்கு உரை எழுதப்பட்டது. இராமாயண உரையை ஸ்வரதீட்சிதர் எழுத கிருஷ்ணதேவராயர் உதவினான். கிருஷ்ணதேவராயரின் அரண்மனைப் புலவராகிய சானாவதிம்மர் மகாபாரதத்திற்கு கிருஷ்ணசந்தம் என்னும் உரையை எழுதியுள்ளார். விஜயநகராட்சியில் நாடக நூல்களும் எழுந்தன.
- தமிழகத்தில் ஆட்சிசெய்த நாயக்கர் அவையில் அப்பையதீட்சிதர் வடமொழி இலக்கியத்துறைக்கு பெரும்பணி செய்தார். சமஸ்கிருதம், தமிழ், தெலுங்கு இலக்கியங்கள் இங்கு சிறப்பிடம் பெற்றன. கிருஷ்ணதேவராயர் ஆமுக்தமால்யதா என்னும் ஆண்டாள் கதையை இயற்றினார்.

## விஜயநகராட்சியில் சைவமும் வைணவமும்

- சித்தாந்த சைவம், வீர சைவம், காஷ்மீர சைவம் என்பவற்றின் வளர்ச்சி காணப்பட்டது. பசவபுராணம் பிரதான நூல். இது வீரசைவக் கோட்பாட்டைக் கூறுகின்றது. பிரபுலிங்கலீலை, விருபாட்சகர் கோயில், விருபாட்சம் பொறித்தல் என்பன முக்கியமானவை. சைவசமய நெறியில் விருபாட்சகர் வழிபாடு பிரதான இடத்தைப் பெற்றது. வைணவம் பற்றித் தெலுங்கு, கன்னட மொழிப்பாடல்கள் எழுந்தன. கிருஷ்ணதேவராயர் காலத்தில் தெலுங்கு இலக்கியமும் முதன்மை இடம்பெற்றது. கிருஷ்ணதேவராயரே விஷ்ணுசித்தீயம விஷ்ணுசித்தீயம் என்னும் நூலை எழுதியுள்ளார். சிறந்த எளியநடைக் காப்பியம். அட்டதிக்க ஜயம் என்னும் எட்டு நூல் புலவர்கள் பிரதானமானவர்கள்.
- சைவசமயத்தில் காளத்தி மகாத்மியம் கிருஷ்ணதேவராயர் காலத்தில் எழுதப்பட்டது. இஸ்லாமிய மதத்தைக் கண்டனம் செய்ததன் மூலம் விஜயநகரத்தின் புகழ் பரவிக் காணப்பட்டது.
- இஸ்லாமியர்கள் இந்துக்களை அழித்தனர். இந்துக்களை மதம் மாற்றினர். கோயில் களையும் படிமங்களையும் சிதைத்தனர். அத்துடன் இந்துக்களை இழிவாகக் கருதும் நிலையை ஏற்படுத்தினர். இவ்வேளையில் இவற்றையெல்லாம் எதிர்க்கத் தோன்றியதே விஜயநகர அரசாகும். கோய்சல (கௌசல) அரசின் தொடர்ச்சியாகவே விஜயநகர அரசு வளர்ச்சி பெற்றது. வித்யாரண்யர் (1305-1387) என்னும் அரசவைத் தலைவர் இதனை உருவாக்கினார்.
- விஜயநகர அரசர்களில் ஒருவரான கரிகரர் காளகஸ்தி, சிதம்பரம், திருப்பதி, திருவரங்கம் முதலிய கோயில்களில் திருப்பணி செய்தார். இவற்றினூடாக கரிகர அரசரது சைவ, வைணவப் பணி வெளிப்படுகின்றது.

- விஜயநகரத்தின் ஆரம்பகால அரசர்கள் சைவசமயத்தைச் சேர்ந்தவர்கள். விஜயநகர அரசர்கள் சங்கரரின் சிருங்கேரி மடத்திற்கு கூடுதல் மானியங்களை வழங்கினர். சாருவநரசிம்மனுக்கு பின்பு ஆட்சி செய்த அரசர்கள் வைணவ அரசர்களாவர். அவர்கள் சைவ, வைணவ ஆலயங்களுக்கு வேறுபாடின்றி தானங்களை வழங்கினர்.
- வைணவம் வடகலை வைணவம், தென்கலை வைணவம் என விரிவடைந்தது. திருவரங்கத்தில் வாழ்ந்த மத்துவர் வேதாந்தத்தைப் போதித்தார். அருணகிரிநாதர் பாடல்கள் விஜயநகரர் ஆதிக்கத்தை எடுத்துக் காட்டுவன. காளமுகர், பாசுபதர் முதலிய சைவசமயப் பிரிவினர்களும் காணப்பட்டனர்.

## விஜய நகரமும் கலை மரபும்

- விருபாட்சகர் கோயில், விட்டலாசுவாமி கோயில் என்பன கிருஷ்ணதேவராயர் அமைத்த கோயில்களாகும். அவற்றில் இராமாயணக் கதைச்சிற்பம், ராஜகோபுரம், கல்யாண மண்டபம், ஆயிரங்கால் மண்டபங்கள், பட்டாபிராமர் கோயில், அம்மன் சந்நிதானம் முதலான அமைப்புக்கள் இடம் பெற்றன.
- சுற்றுப்பிரகார அமைப்புக்கள் முக்கியமானவை. இராமாயண, மகாபாரத ஓவியங்கள் அதில் தீட்டப்பட்டுள்ளன. குதிரை யாழித்தூண்கள் அமைக்கப்பட்டன. திருப்பாற்கடல் கடைதல், இராவணன் கதைச் சிற்பங்கள் கூடுதலாக அதில் உண்டு.

## விக்கிரகக் கலை

- இந்து நுண்கலைகளுள் சிற்பக் கலையுடன் மிக நெருங்கிய தொடர்புடையதாக விக்கிரகக் கலை உள்ளது.
- திருவுருவங்களை ஆலயத்தின் தூண்கள், சுவர்கள், அதிட்டானங்கள் போன்ற இடங்களில் செதுக்குமிடத்து அவை சிற்பங்களாக அமைகின்றன.
- சிற்பங்களாக அமையும் வடிவங்களது எல்லா அங்கங்களும் வெளித் தெரியும்படியாக அமைக்கும்போது அது விக்கிரகம் எனப்படும்.
- விக்கிரகம் அமைப்பதற்குரிய மூலப்பொருள்கள் பற்றி மானசாரம் என்னும் சிற்பசாத்திரம் “பொன், வெள்ளி, செம்பு, கல், மரம், சுதை, சர்க்கரை, பளிங்கு, ஓடு முதலியவற்றால் உருவங்கள் அமைக்கப்பட வேண்டும்” என்று கூறுகின்றது.
- விக்கிரகங்களுள் நகர்த்தக்கூடிய சல விக்கிரகங்களை அமைப்பதற்கு பொன், வெள்ளி, செம்பு, சுதை, சர்க்கரை, ஓடு முதலானவற்றையும், நிலையாக நிறுவப்படும் அசல விக்கிரகங்களுக்கு கல், மரம் என்பனவற்றையும் பயன்படுத்த வேண்டும் எனவும் சிற்ப சாத்திரங்கள் குறிப்பிடுகின்றன.
- ஆகம, சிற்ப சாத்திர விதிகளுக்கு அமைய அமைக்கப்படும் விக்கிரகங்கள், அவை நிறுவப்படும் நோக்கத்தைக் கொண்டு மூன்றாக வகைப்படுத்துவர்.
- சல விக்கிரகம் - இடத்துக்கிடம் நகர்த்தக்கூடிய விக்கிரகங்கள்
- அசல விக்கிரகம் - நிலையாக ஓரிடத்தில் நிறுவப்படும் விக்கிரகங்கள்
- சலாசல விக்கிரகம் - நகர்த்தக்கூடியதாக இருப்பினும் அவ்வாறு நகர்த்தக் கூடாது என்னும் நோக்கத்தில் நிறுவப்படும் வடிவங்கள்.

- ஆகமங்கள், சிற்ப சாத்திரங்கள் கூறும் விதிகளைப் பிரமாணமாகக் கொண்டு திருவடிவங்கள் விக்கிரகங்களாக அமைக்கப்படுகின்றன.
- உலோகங்களில் வார்க்கப்பட்ட பல படிமங்களைப் சோழர், விஜய நகர நாயக்கர் காலங்களில் சிறப்பாகக் காணலாம்.
- சிறப்பாக இந்துத் தெய்வ வடிவங்களுள் சிவனின் பல மூர்த்தி பேதங்கள் சோழர் காலத்தில் (தமிழகத்தில்) வெண்கலப் படிமங்களாக வார்க்கப்பட்டன.
  உதாரணமாக நடராஜர், தட்சணாமூர்த்தி, திரிபுராந்தகர், இலிங்கோற்பவர் போன்ற மூர்த்தங்களைக் குறிப்பிடலாம்.

## நடராஜ மூர்த்தம்

- சிவமூர்த்தங்கள் 64 ஆகும்.
- இதில் சிறப்பாக 25 மூர்த்தங்கள் குறிப்பிடப்படுகின்றன.
- இதில் நடராஜ வடிவமும் ஒன்று.
- நடராசர் வடிவத்தின் தோற்றம் சிற்ப சாத்திரங்கள் கூறும் அளவுப் பிரமாணங்களின்படி அமைக்கப்படுகிறது.
- அங்க இலட்சணங்களும் அவை உணர்த்தும் உண்மைகளும்

முயலகன் - ஆன்மா
பாம்பு - ஆணவம்
புலித்தோல் - கோபத்தைக் கட்டுப்படுத்துபவன்
முக்கண் - இச்சா சக்தி, கிரியா சக்தி, ஞானசக்தி
சிலம்பு - பல வினைகள் பிறவித் துன்பத்தை நீக்குவதைக்குறிக்கின்றது
திருவாசி - ஓங்காரத்தைக் குறிக்கின்றது
பவளநிற (சிவந்த) திருமேனி - தூய்மைப்படுத்தும் தன்மையைக் காட்டும்
நான்கு திருக்கரம் - எல்லையில்லா ஆற்றலைக் குறிக்கும்
நெற்றிக்கண் - உயிர்களுக்கு ஏற்படும் துன்பங்களைப் புன்முறுவலால் நீக்குகிறார் என்பதை குறிக்கும்
சடாமுடி - ஞானத்தைக் குறிக்கும்
பிறை - பேரழகைக் குறிக்கும்
திருநீறு - பராசக்தியைக் குறிக்கும்
சூலம் - முச்சக்தியைக் குறிக்கும்
கோடரி - பேராற்றலைக் குறிக்கும்
மான் - வேதநாயகனைக் குறிக்கும்

### இவ்வடிவம் விளக்கும் தத்துவங்கள் - பஞ்சகிருத்திய விளக்கம்

(சிருஷ்டி) படைத்தல் - உடுக்கை ஏந்திய கை
(திதி ) காத்தல் - அபயகரம்
(சங்காரம்)அழித்தல் - தீ ஏந்திய கரம்
(திரோபவம்) மறைத்தல் - ஊன்றிய திருவடி
(அநுக்கிரகம்) அருளல் - தூக்கிய திருவடி

- “தோற்றம் துடியதனில் தோயுந்திதி அமைப்பில்

  சாற்றியிடும் அங்கியிலே சங்காரம் - ஊற்றமாம்

  ஊன்று மலர்ப்பதத்தில் உற்ற திரோதம் முத்தி

  நான்ற மலர்ப்பதத்தே நாடு” - உண்மை விளக்கம்

- நடராஜ வடிவம் தூல, சூக்கும பஞ்சாட்சரங்களுடனும் தொடர்புபடுத்தப்பட்டு நோக்கப் படுகிறது.

- திருவைந்தெழுத்தின் தொடர்பு

  ந - திருவடி

  ம - திருவயிறு

  சி - திருத்தோள்

  வா - திருமுகம்

  ய - திருமுடி

- தேவாரம், திருமந்திரம், புராணம் சைவ சித்தாந்த நூல்கள் முதலானவை நடராசரைப் போற்றிக் கூறுகின்றன.

- தோத்திரப் பாடல்களில் நடராஜர் வருணனை

  - குனித்த புருவமும் கொவ்வைச் செய்வாயிற் குமிண்சிரிப்பும்” என்னும் அப்பரின் தேவாரப்பாடல்.

- வழிபாடுகள் - திருவாதிரை
  - திருவெம்பாவை
  - சிதம்பரத்தில் சிறப்பான வழிபாடுகள்

- நடராஜர் விக்கிரகம் சமய, கலாதத்துவ, தத்துவம் தொடர்பானதென ஆய்வாளர் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

- ஆனந்தகுமாரசுவாமியின் ஆய்வுநூல் சிறப்பானது. சைவ சித்தாந்தத்தின் அனைத்துக் கோட்பாடுகளையும் நடராஜ மூர்த்தம் பிரதி பலிக்கிறது.

- சிவன்கோயில்கள் எல்லாவற்றிலும் நடராஜர் வடிவம் நிறுவப்படும்.
- சிற்ப, விக்கிரகக் கலைகளுடன் நடராஜ வடிவம் தொடர்புபட்டது.
- ஆடல்வல்லனாகச் சிறப்புப் பெறுவது.
- இலங்கையில் பொலநறுவையில் அகழ்ந்தெடுக்கப்பட்ட நடராஜர் வடிவம் சிறப்பானது.
- சிதம்பரத்தில் தில்லைக்கூத்தன் எனப்போற்றப்படுதல்.

- மதுரை ஸ்ரீ மீனாட்சி சுந்தரேஸ்வரர் கோயிலில் கால்மாறி ஆடும் நிலையில் நடராஜர வடிவம் உள்ளது.

## அனந்தசயன வடிவம்

- அனந்தசயனம் என்பது அறிதுயில் நிலை எனத் தமிழில் உரைப்பர்.அறிந்த துயில் -அறிகின்ற துயில், அறியும் துயில் என முக்காலமும் தொக்கவரும் அதாவது இறைவன் முக்காலமும் உணர்ந்தவனாய் துயிலும் நிலை என்பர். ஆன்மாவைப் பொறுத்தவரையில் துயில் நலையில் சொர்ப்பனத்தைத்தவிர பிறிதொன்றையும் உணராது. ஆனால் பரமான்மா முக்காலமும் உணர்ந்து காத்தல் தொழிலைச் செய்கிறது என்பதனை இவ்வனந்த சயனம் உணர்த்துகிறது.
- திருமால் திருப்பாற்கடலில் ஆதிசேடன் மீது பள்ளி கொண்டுள்ள வடிவமே அனந்த சயன வடிவம்
- அனந்த என்பது அஷ்ட நாகங்களில் ஒன்று
- படுக்கையாக அமைந்து விரிந்த படத்தினைக் குடையாகப் பிடித்து ஆதிசேடன் மீது பெருமாள் பள்ளி கொண்டிருப்பார்.
- இந்து விக்கிரகங்களில் யோக நிலையில் படுத்திருக்கும் கோலம் அனந்தசயன வடிவம் மட்டுமேயாகும்.
- அவிமுக்தேசுவர் கோயில் (காசி) விசம் உண்ட நிலையில் மயக்க நிலையில் படுத்திருக்கின்ற சிவ விக்கிரகம் ஒன்று காணப்படுகின்றது. அவ்விக்கிரகம் அனுக்க்ரக வடிவவமாகும். தேற்கு நோக்கி அமைந்துள்ளது. முக்கதியளிக்கின்ற ஒரு மூர்த்தமாகும்.
- சிவாலயங்களில் - நடராஜர், விநாயகர் ஆலயங்கிளல் பஞ்சமுக விநாயகர், முருகன் ஆலயங்களில் -ஷண்முக வடிவம் சிறப்புப் பெறுவதுபோன்று விஷ்ணு ஆலயங்களில் அனந்தசயன வடிவம் சிறப்புப் பெறுகின்றது.
- திருவரங்கர், அரங்கநாதர், யோகசயன மூர்த்தி, சேஷசாயி போன்ற பல பெயர்களில் அழைக்கப்படுகின்றார்.

### பிரதிமாலட்சணங்கள்

- சங்குபோல் வெண்மையான அனந்தசயனத்திலே யோக நித்திரையில் காணப்படுகின்றார்.
- வலது கால் நீண்டு கிடக்க, இடதுகால் சிறது மடக்கி வளைந்திருக்கும்
- தலை சற்றுத் தூக்கியபடி இருக்க உடம்பு படுக்கை மீது நீண்டு கிடக்கின்றது.
- இருகரங்கள் காணப்படும்
- வலது கை தலையணையாகக் கிரீட மகுடத்தை தழுவியிருக்கும் கிரீட மகுடம் என்பது மணிமுடியாகும் இதனது தோற்றம் கண்டாமணி அல்லது பூசை மணியை ஒத்திருக்கும் கிரீட மகுடம் விஸ்ணு படிமத்திற்கு மிகவும் உரியதாகும்.
- இடது கை உடலோடு சமமாக அல்லது முழங்கை மடிந்து கடக முத்திரை தரித்திருக்கும்
- கைத்தலத்திலிருந்து பெருவிரலை நீட்டி உள்முகமாக சிறது வளைந்து நடுவிரலையும் அணிவிரலையும் ஒன்றோடு ஒன்று இணைத்து முன்னோக்கி வளைந்து சுட்டுவிரலையும் சிறுவரலையும் தனது இடங்களில் நிறுத்தி மேற் கணுக்களை சிறிது வளைத்து பிடிக்கும் கை கடக முத்திரை எனப்படும்.
- முந்தமாக திருக்கண்களை திறந்து சேநாக்குபவர்.
- கருமையும் மஞ்சளும் கலந்த வண்ணமுடையவர் குறிப்பாக நீல வண்ணத்திருமேனி டையவரும் மஞ்சள் வஸ்திரம் உடுத்தியவருமாக விளங்குகின்றார்.
- காலடியில் மகாலட்சுமி திருவடிவக் கொப்புழிலிருந்து வெளிவந்து நீண்டுள்ள மலர்த்தாமரையில் பிரமதேவன் வீற்றிருப்பார்.
- இத் திருவுருவத்திற்கேன்றே திருக்குோயில்கள் காணப்படுகின்றன. மாமல்லபுரம், காஞ்சி கொள்ளவண்ணம் செய்த பெருமாள், திருநீர்மலை ஆகியவை போன்ற இடங்களில் பள்ளி கொண்ட பெருமானுக்கே திருக்கோயில்கள் உள்ளன.
- செங்கற்பட்டு மாவட்டத்தில் தேவதானம் எனும் ஊரில் அமைந்துள்ள அரங்கர் வடிவம் மிகப் பெரியதாய் கூறப்படுகின்றது.
- இது 7மீ நீளமும் 3மீ உயரமும் உடையது பொன்னாலை வரதராஜப் பொருமாள் ஆலயம் மற்றும் யாழ்ப்பாணம் பெருமாள் ஆரலயத்திலும் இவ்வடிவம் காணப்படுகின்றது.

## இசைக் கலை

### அறிமுகம்

- திருக்கோயில்கள் வளர்ந்த நுண்கலைகளில் இசைக்கலை முக்கியமானதாகும். இசை இயைபுபடுத்தும் சாதனமாகும்.
- இறைவனே இசை வடிவினன் (நாதப் பிரம்மம்) என்பது இந்துமத நம்பிக்கை
- இசையானது செவிக்கு இன்பம் ஊட்டுவதோடு மட்டுமல்லாது ஐம்புலன்களைக் கட்டுப்படுத்தி உள்ளத்தை பண்படுத்தி பேரின்பப் பேற்றையும் தரவல்லது.
- இந்துப் பண்பாட்டு வரலாற்றில் இசைக்கலையானது மிக உன்னத கலையாக மிளிர்கின்றது.

## இசைக்கலையின் தோற்றம் வட இந்தியா

### வேதங்கள்

- நான்கு வேதங்களுள் ஒன்றாக காணப்படும் சாமவேதம் இசைப்பாடல்களால் அமைந்தவை.
- பிற்பட்ட காலத்தில் இசைக்கலை வளர்வதற்கு வித்திட்ட பெருமை சாம வேதத்தையே சாரும்.

### • புராண, இதிகாசம்

- புராணக் கதைகளில் இறைவனே இசைவடிவினன் என்னும் கருத்து வலியுறுத்தப்படுகின்றது.
- கடவுளர் திருவுருவங்கள் இசைக்கருவிகளோடு சித்தரிக்கப்படுகின்றன.
  உ-ம்: சிவன் - உடுக்கு நாரதர் - தம்புரா
  சரஸ்வதி - வீணை
  கண்ணன் - புல்லாங்குழல், சங்கு
- தேவசபையில் இந்திரனுக்கு முன்னால் மேனகை, ஊர்வசி இசைமீட்டி நடனம் ஆடுவதாகக் கூறப்பட்டுள்ளது.
- இராமாயணத்தில் வரும் இராவணன் சாமகானம் பாடுவதில் வல்லவன். தனது பத்துத் தலைகளில் ஒன்றினை வெட்டி எடுத்து, நரம்புகளின் துணையுடன் இசை மீட்டி சிவனிடம் வரம் பெற்றதாக வரலாறு உண்டு.

### • குப்தர் காலம்

- கண்டெடுக்கப்பட்ட நாணயங்களில் சமுத்திரகுப்தன் வீற்றிருந்து வீணை வாசிப்பது போன்ற நிலை உள்ளது
- சமுத்திரகுப்தன் பெரிய கவி என இலக்கியங்கள் போற்றுகின்றன.

### தமிழகம் - சங்க காலம்

- சங்ககாலத்தில் மக்களது வாழ்க்கையுடன் இசையானது இரண்டறக் கலந்து காணப்பட்டது.
- இசை பற்றி சங்க நூல்களான பரிபாடல், சிறுபாணாற்றுப்படை, பெரும் பாணாற்றுப்படை, குறுந்தொகை, அகநானூறு, புறநானூறு என்பவற்றில் கூறப் பட்டுள்ளது.

### ஐவகைப் பண்

- குறிஞ்சிப் பண், முல்லைப் பண், மருதப் பண், நெய்தல் பண், பாலைப் பண் என்றஅடிப்படையில் மக்கள்தத்தம் நிலங்களில் சங்கீத மரபைக் கொண்டிருந்தனர்.
- பண்களைப் பாடியவர்கள் பாணர் எனப்பட்டனர்.
- யாழே இசைக்கருவிகளில் சிறப்பானது.
- பெருநாரை, பெருங்குருகு, தாள சமுத்திரம் போன்ற இசைநூல்கள் இருந்தமை பற்றிய குறிப்புகள் உள்ளன.

- **சங்கமருவிய காலம்**
  - சிலப்பதிகாரத்திலும், மணிமேகலையிலும், காரைக்காலம்மையார்,முதல் ஆழ்வார் மூவர் பாடல்களிலும் இசையின் சிறப்பினை அறியலாம்.
  - சிலப்பதிகாரம் தமிழரின் சங்கீதம், செந்நெறிச் சங்கீதமாக இருந்ததை உணர்த்து கின்றது.

    யாழும் குழலும் சீரும் மிடரும்
    தாழ்குரல் தண்ணுமை ஆடலோடு இவற்றின் இசைந்த பாடல் இசையாகும்"
    என சிலப்பதிகாரம் கூறுகின்றது.
  - காரைக்காலம்மையார் தோத்திரங்கள் இறைவனுடன் இசையச் செய்பவை.

    உ. ம்: அற்புதத் திருவந்தாதி, திருவிரட்டை மணிமாலை

- **பல்லவர் காலம்**

**நாயன்மார்கள் ஆழ்வார்கள்**

" பண்ணும் பதமேழும்" ' எனச் சம்பந்தரும்

" ஓசை ஒலி எலாம் ஆனாய்" என அப்பரும்

" ஏழிசையாய் இசைப் பயனாய்"

" பண் சுமந்த பாடல் பரிசு" என மணிவாசகரும் இசையினைப் போற்றிப் பாடியுள்ளனர்

- ஆழ்வார்களது பாடல்களில் திருமாலின் ஆயிரம் நாமங்களையும் பண் இசைந்து பாடுவது.
  உ. ம்: "அறுகால் வலி வண்டுகளா யிரநாமஞ்.........."

- **மன்னர்களும் இசைக்கலையும்**
  - மகேந்திரவர்மன் பல்லாவரம் குகைக்கோயில் கல்வெட்டில் தன்னை "சங்கீரணசாதி" எனக் கூறியுள்ளான்.
  - மேலும் "பரிவாதினி" என்னும் பெயர் கொண்ட வீணையில் வல்லவனாக இருந்தான்.
  - இராசசிம்மன் இசையில் புலமை பெற்றிருந்தான்.

    உ-ம்: "வாத்ய வித்யாதரன் ", "வீணாதரன்" எனும் பெயர்கள் கொண்டிருந்தமை.

**சோழர் காலம்**

- ஆலயங்களில் பல் வகை இசைக்கருவிகள் ஆராதனைகளில் வாசிக்கப்பட்டன.

  உ. ம்: தக்கை, தண்ணுமை முதலியன.
- இசைச் சிற்பங்கள், இசை மண்டபங்கள், இசைக்கலைஞருக்குரிய நிலபுலங்கள் ஆலயத்துக்கு உரியனவாகும்.
- முதலாம் இராஜராஜன் காலத்தில் தேவாரங்களுக்கு பண் அமைக்கப்பட்டு அதனை கோயில்களில் தேவாரங்களை ஓதும் வழக்கத்தை முறைப்படுத்தினான்.
- சோழர் காலத்தில் "வாச்சிய மாராயன்" பட்டம் இசைக் கலைஞர்களுக்கு வழங்கப்பட்டது.
- தேவாரம் ஓதுபவர்களை மேற்பார்வை செய்ய, தேவார நாயகம் அலுவலரை நியமித்தனர்.
- வீணைக்காணி, திருப்பதியக் காணி - கோயில் சொத்தாகியது

- **நாயக்கர் காலம்**
  - தமிழ்நாட்டில் கீர்த்தனை வடிவம் - நந்தனார் சரித்திர கீர்த்தனை, இராம நாடகக் கீர்த்தனை என்பன இக்காலத்தில் அறிமுகமானது.
  - இசைத்தூண்கள் அமைக்கப்பட்டன.
    உ-ம்: மதுரை அழகர்
    உ-ம்: - அருணகிரிநாதர் பாடிய பாடல்கள் - திருப்புகழ் சிறந்த சந்த லயம் உடைய நூலாகும்.
- **தற்காலம்**
  - கர்நாடக இசையில் மாரிமுத்தாப்பிள்ளை, முத்துத்தாண்டவ தேசிகர், அருணாசலக் கவிராயர், தியாகராஜ பாகவதர் போன்றவர்களின் பங்களிப்பு.
  - விபுலாநந்தரின் யாழ்நூல் சிறந்த இசைநூலாகும்.
  - பாடசாலைகளில் ஆரம்ப வகுப்பு தொடக்கம் பல்கலைக்கழகம் வரை இசை ஒரு பாடமாகக் கற்பிக்கப்படுகிறது.
    உ-ம்: விபுலாநந்தர் நுண்கலைக் கல்லூரி, இராமநாதன் நுண்கலைப் பல்கலைக்கழகம்
  - ஆலயங்களில் பஜனை, பிரார்த்தனை, நாமகீர்த்தனம், கதாகலாட்சேபம், என்பன இசைவளர்ச்சியைப் பிரதிபலிப்பனவாகும். மேலும் நாதாஞ்சலி, புராணபடனம், இசைக்கருவிகள் ஆலய வழிபாட்டில் பயன்பட்டமை, பஞ்ச புராணம் பாடும் மரபு தோன்றியமை.

**கற்றல் - கற்பித்தற் செயற்பாடுகள்:**

படி 1 : அழகியற்கலைகள் சமயச் சார்பானவை என்றும் கோயில் கலைகளுடன் தொடர்பானவை என்றும் மாணவர்களுக்கு முன்வையுங்கள்.

படி 2 : மாணவர்களை இந்து நுண்கலை தொடர்பான தகவல்களைத் திரட்டவும், படங்களைச் சேகரிக்கவும் வழிகாட்டுங்கள்.

படி 3 : மாணவர்களை 8 குழுக்களாகப் பிரித்து, ஒவ்வொரு கலைகள் பற்றித் தேவையான தகவல்களைத் திரட்டி ஒழுங்குபடுத்துமாறு கூறுங்கள். சேகரித்த விடயங்களை வகுப்பறையில் முன்வைக்க இடமளியுங்கள்.

படி 4 : அவற்றைத் தொகுத்து வகுப்பறையில் காட்சிப்படுத்த வழிப்படுத்துங்கள்.

**உசாத்துணைகள்**

இந்து கலாசாரம் - பேராசிரியர் சி. பத்மநாதன்
சிவ விக்கிரகவியல் - பேராசிரியர் ப.கோபாலகிருஷ்ண ஐயர்
நடனங்களும் ஓவியங்களும் ஓவியக்கலை - இராமமூர்த்தி
தமிழர் வளர்த்த அழகுக்கலைகள் - மயிலை சீ. வேங்கடசாமி
வாழ்வியற் களஞ்சியம் தொகுதி 9 - தஞ்சைப் பல்கலைக் கழகம், தஞ்சாவூர்
தென்னிந்திய வரலாறு - நீலகண்டசாஸ்திரி
தென்னிந்திய சிற்ப வடிவங்கள் - க. நவரெத்தினம்
சிவானந்த நடனம் - கலாயோகி ஆனந்தகுமாரசுவாமி
இந்துக் கோயில்களும் சிற்பங்களும் - பேராசிரியர் சி. பத்மநாதன்
இந்து கலைக் களஞ்சியம் - தொகுதி 07

## • பாடசாலை மட்டக் கணிப்பீடு - அறிமுகம்

கற்றல், கற்பித்தல், மதிப்பீடு ஆகியன கல்விச் செயன்முறைகளின் முக்கிய மூன்று கூறுகளாகும் என்பதையும், கற்றல் கற்பித்தலின் முன்னேற்றத்தை அறிய கணிப்பீட்டையும் மதிப்பீட்டையும் பயன்படுத்த வேண்டும் என்பதையும் எல்லா ஆசிரியர்களும் தெளிவாக அறிந்திருக்க வேண்டும். அவை ஒன்றன் மீது ஒன்று செல்வாக்குச் செலுத்தும் அதேவேளை ஒவ்வொன்றும் மற்றையவற்றின் முன்றேற்றத்திலும் செல்வாக்குச் செலுத்துகின்றன என்பது ஆசிரியர்கள் யாவரும் அறிந்த உண்மையாகும். தொடர் (நிதமும் நிகழும்) கணிப்பீட்டு கோட்பாடுகளுக்கிணங்க கற்றல் நடைபெறும்போதே கணிப்பீடும் இடம்பெற வேண்டும். இது கற்றல் - கற்பித்தல் செயன்முறையின் ஆரம்பப்பகுதி, இடைப்பகுதி, இறுதிப்பகுதி ஆகிய எந்த ஒரு சமயத்திலும் இடம்பெறலாம் என்பதை ஆசிரியர்கள் விளங்கிக் கொள்வது அவசியமாகும். தமது மாணவரை மதிப்பிட எதிர்பார்க்கும் ஓர் ஆசிரியர் கற்றல் - கற்பித்தல் மதிப்பீடு ஆகியன தொடர்பான ஒழுங்கான திட்டமொன்றைப் பயன்படுத்தல் அவசியம்.

பாடசாலையை அடிப்படையாகக் கொண்ட கணிப்பீட்டு வேலைத்திட்டமானது ஒரு பரீட்சை முறையோ சோதனை நடத்துவதோ அல்ல. அது மாணவர்களது கற்றலையும், ஆசிரியர் களது கற்பித்தலையும் மேம்படுத்துவதற்காகப் பயன்படுத்தப்படும் ஒரு முறைமையாகும். ஆதலால் மாணவர்களுக்கு அருகில் இருந்து அவர்களுடைய பலங்களையும் பலவீனங் களையும் இனங்கண்டு அவற்றிற்குப் பரிகாரம் கண்டவாறு மாணவர்களை அவர்களது உச்ச வளர்ச்சி மட்டத்தை அடையச் செய்வதற்காகப் பயன்படுத்தக்கூடிய ஒரு வேலைத் திட்டமுமாகும்.

கற்றல் - கற்பித்தற் செயன் மூலம், தேடல் செயன்முறையின்பால் மாணவர்கள் வழிப்படுத்தப் படுகின்றனர். பாடசாலையை அடிப்படையாகக் கொண்ட கணிப்பீட்டு வேலைத்திட்டத்தைச் செயற்படுத்தும்போது மாணவர்களிடையே ஆசிரியர் சென்று அவர்கள் செய்யும் வேலை களை அவதானித்து வழிகாட்டலை வழங்கிச் செயற்படல் வேண்டும் என எதிர்பார்க்கப் படுகின்றது. இங்கு மாணவர்கள் தொடர்ச்சியாக கணிப்பீட்டுக்கு உள்ளாக்கப்படுவதோடு மாணவரது ஆற்றல், அபிவிருத்தி என்பன எதிர்பார்த்தவாறு நடைபெறுகின்றதா என்பதை ஆசிரியர் உறுதிப்படுத்திக் கொள்ளல் வேண்டும்.

மாணவருக்குத் தக்க அனுபவங்களைப் பெற்றுக்கொடுத்து, அவற்றை அவர்கள் சரியாகப் பெற்றுக் கொண்டார்களா என உறுதிப்படுத்தல் கற்றல் - கற்பித்தல் ஊடாக நிகழ வேண்டும். அத்தோடு அதற்குத் தக்க வழிகாட்டல் வழங்கப்பட வேண்டும். கணிப்பீட்டில் ஈடுபட்டுள்ள ஆசிரியர்கள் தமது மாணவர்களுக்கு இரண்டு வகையான வழிகாட்டல்களை வழங்க முடியும். அவை பின்னூட்டல், முன்னூட்டல் என்பனவாகும்.

மாணவர்களின் பலவீனங்களையும் இயலாமைகளையும் கண்டறிந்தபோது அவர்களது கற்றல் பிரச்சினைகளை நிவர்த்திப்பதற்காகப் பின்னூட்டலையும் மாணவர்களின் திறமை களையும் ஆற்றல்களையும் இனம் காணும்போது அவற்றை மேம்படுத்த முன்னூட்டலையும் வழங்குவதும் ஆசிரியரின் கடமையாகும்.

கற்றல் - கற்பித்தல் செயன்முறையின் வெற்றிக்காக பாடநெறியின் நோக்கங்களுள் எந்த நோக்கத்தை எந்த மட்டத்தில் நிறைவேற்ற முடிந்தது என்பதை இனங்காணல், மாணவர் களுக்கு அவசியமாகின்றது. கணிப்பீடுகள் மூலம் மாணவர்கள் அடைந்துள்ள தேர்ச்சி மட்டங்களைத் தீர்மானித்தல் ஆசிரியரிடமிருந்து எதிர்பார்க்கப்படுகின்றது. மாணவர்கள், ஆசிரியர்கள், சம்பந்தப்பட்ட வேறு பிரிவினர்களுக்கு மாணவர்களின் முன்னேற்றம் பற்றிய தகவல்களை அறிவிப்பதற்கு ஆசிரியர் முனைய வேண்டும். இதற்குப் பயன்படுத்தக்கூடிய மிகவும் பொருத்தமான முறை, தொடர்ச்சியாக மாணவரை மதிப்பீட்டுக்கு உட்படுத்த வாய்ப்பளிக்கும் பாடசாலை மட்ட கணிப்பீட்டு முறையாகும்.

மேற்படி நோக்கத்துடன் செயற்படும் ஆசிரியர்கள் தமது கற்பித்தல் செயன்முறையையும் மாணவர்களின் கற்றல் செயன்முறையையும் மேலும் வினைத்திறன் மிக்கதாக்குவதற்கு வினைத்திறன் மிக்க கற்றல் - கற்பித்தல், மதிப்பிடல் முறைகளைப் பயன்படுத்த வேண்டும். இது தொடர்பாக ஆசிரியர்களுக்கும் மாணவர்களுக்கும் பயன்படுத்தத்தக்க அணுகுமுறை வகைகள் சில கீழே தரப்பட்டுள்ளன. இவை நீண்டகாலமாக ஆசிரியர்களுக்கு தேசிய கல்வி நிறுவனத்தினாலும், பரீட்சைத் திணைக்களத்தினாலும் விளக்கமளிக்கப்பட்ட முறைகளாகும். எனவே, அவை தொடர்பாக பாடசாலைத் தொகுதியைச் சேர்ந்த ஆசிரியர்கள் போதிய அறிவூட்டம் பெற்றிருப்பர் என எதிர்பார்க்கப்படுகின்றது. அந்த அணுகுமுறை வகைகள் வருமாறு:

1. ஒப்படைகள்
2. செயற்றிட்டங்கள்
3. அளவாய்வுகள்
4. தேடியாய்வுகள்
5. அவதானிப்புக்கள்
6. கண்காட்சி / முன்வைத்தல்கள்
7. களச் சுற்றுலாக்கள்
8. குறுகிய எழுத்துப் பரீட்சைகள்
9. அமைப்புக் கட்டுரைகள்
10. திறந்த நூல் சோதனைகள்
11. ஆக்கச் செயற்பாடுகள்
12. செவிமடுத்தல் சோதனைகள்
13. செய்முறைச் செயற்பாடு
14. பேச்சுக்கள்
15. சுய ஆக்கங்கள்
16. குழுச் செயற்பாடுகள்
17. எண்ணக்கருப் படங்கள்
18. இரட்டைப் பதிவு - ஜேர்னல்
19. சுவர்ப் பத்திரிகைகள்
20. வினா - விடை நிகழ்ச்சிகள்
21. வினா - விடைப் புத்தகங்கள்
22. விவாதங்கள்
23. குழுக் கலந்துரையாடல்கள்
24. கருத்தரங்குகள்
25. உடனடிச் சொற்பொழிவு
26. பாத்திரமேற்று நடித்தல்

அறிமுகம் செய்யப்பட்டுள்ள மேற்படி கற்றல் - கற்பித்தல், மதிப்பீட்டு முறைகள் அனைத்தை யும், எல்லா பாடங்களினதும் எல்லா அலகுகளுக்காகவும் பயன்படுத்த முடியும் என எதிர் பார்க்கப்படவில்லை. தமது பாடத்திற்கும் குறித்த பாட அலகிற்கும் பொருத்தமான வகைகளைத் தெரிவு செய்து கொள்வதற்கு அறிவூட்டம் பெற வேண்டும். அதற்கமைய அவற்றைத் தெரிவு செய்து கொள்ளவும் வேண்டும்.

இந்த ஆசிரியர் வழிகாட்டியில் தமது மாணவர்களின் கற்றல் முன்னேற்றத்தைக் கணிப்பிடப் பயன்படுத்தக்கூடிய கற்றல் - கற்பித்தல் மற்றும் கணிப்பீட்டு வகைகள் பற்றிக் றிப்பிடப்பட்டுள்ளன. ஆசிரியர்கள் தமது மாணவர்களின் முன்னேற்றத் திற்காக அவற்றைத் தக்கவாறு பயன்படுத்தல் வேண்டும். இவற்றைப் பயன்படுத்தாது தவிர்த்தல் மாணவர் தமது அறிவாற்றல் மற்றும் உள எழுச்சி, உள இயக்கத் திறன்களை வளர்த்துக் கொள்வதற்கும் அவற்றை வெளிப்படுத்துவதற்கும் தடையாக அமையும்.

# பாடசாலை மட்டக் கணிப்பீட்டிற்கான உத்தேசக் கருவிகள் - 1

தவணை : முதலாம் தவணை

கருவி இலக்கம் : 01

தேர்ச்சி : 1.0

தேர்ச்சி மட்டம் : 1.1

கருவியின் தன்மை : கட்டமைப்புக்கட்டுரை வினாக்கள்

பின்வரும் வினாக்களுக்கு விடை எழுத மாணவரை வழிப்படுத்துங்கள்.

(அ) நாகரிகம், பண்பாடு என்பவற்றின் விளக்கங்களையும், அவற்றுக்கிடையிலான தொடர்புகளையும் எழுதுக.

(ஆ) இந்து நாகரிகத்தின் சிறப்பம்சங்களைத் தொகுத்து எழுதுக.

- பின்வரும் அடிப்படையில் புள்ளிகளை வழங்குங்கள்.

| நியதிகள் | புள்ளிகள் | புள்ளி வழங்கல் | | | |
|---|---|---|---|---|---|
| | | தேர்ச்சி மட்டத்தினை அடைந்துள்ளார் | | தேர்ச்சி மட்டத்தை அடையவில்லை | |
| 1. தலைப்பை அறிமுகஞ் செய்தல் | 4 | 4 | 3 | 2 | 1 |
| 2. பாடவிடயங்கள் தலைப்புக்குப் பொருத்தமானதாக இருத்தல் | 4 | 4 | 3 | 2 | 1 |
| 3. ஒழுங்கமைப்பு பந்தி பிரித்தல், அட்டவணைபோன்றபல்வேறு உத்திகளைப் பயன்படுத்தல். | 4 | 4 | 3 | 2 | 1 |
| 4. மொழிச்செம்மை, இலக்கணச் செம்மை, நிறுத்தக் குறிகள், மொழிசார்ந்த பிரயோகங்கள் தெளிவு,ஆக்கபூர்வத்தன்மை. | 4 | 4 | 3 | 2 | 1 |
| 5. முடிவெடுத்தல், நியாயப்படுத்தல், விடயங்களைத் தர்க்கரீதியில் முன்வைத்தல். | 4 | 4 | 3 | 2 | 1 |
| பெற்ற புள்ளிகளின்கூட்டுத்தொகை (மொத்தப்புள்ளி) 20 | | | | | 20 |
| இறுதிப்புள்ளி = பெற்ற மொத்தப் புள்ளிகள் | | | | | 10 |

# பாடசாலை மட்டக் கணிப்பீட்டிற்கான உத்தேசக் கருவிகள் - 2

தவணை : முதலாம் தவணை
கருவி இலக்கம் : 02
தேர்ச்சி : 1.0
தேர்ச்சி மட்டம் : 1.3
கருவியின் தன்மை : ஒப்படை

பின்வரும் வினாக்களுக்கு விடை எழுத மாணவரை வழிப்படுத்துங்கள்.

- 'இந்து நாகரிகத்தின் தோற்றம், வளர்ச்சி என்பவற்றை அறிவதில் மூலாதாரங்கள் வகிக்கும் இடம்' எனும் தலைப்பில் ஒப்படை தயாரிக்க மாணவரை வழிப்படுத்துங்கள்.
  - எடுத்துக்காட்டுக்கள், உதாரணங்கள் என்பன கால அடிப்படையில் அமைய வேண்டும் என்பதனையும் கூறுங்கள்.
  - உருவப் படங்கள், இந்திய இலங்கைப்படங்கள்
  - கால அடிப்படையிலான பட்டியல் தயாரித்தல்
- பின்வரும் நியதிகளின் அடிப்படையில் புள்ளிகளை வழங்குங்கள்.

| நியதிகள் | புள்ளிகள் | புள்ளி வழங்கல் | | | |
|---|---|---|---|---|---|
| | | தேர்ச்சி மட்டத்தினை அடைந்துள்ளார் | | தேர்ச்சி மட்டத்தை அடையவில்லை | |
| 1. ஒப்படையின் குறிக்கோளை விளக்குதலும் குறிக்கோள் களுக்கும் தலைப்புக்கும் இடையிலான தொடர்பை வெளியிடலும். | 4 | 4 | 3 | 2 | 1 |
| 2. தரவு / தகவல்கள் சேகரிப்பதற்காக கையாண்ட முறைகளின் பொருத்தப்பாடு. மூலங்களை சுட்டிக்காட்டல் | 4 | 4 | 3 | 2 | 1 |
| 3. தரவு / தகவல் சேகரித்தலும் அவற்றைப் பதிவு செய்தலும். | 4 | 4 | 3 | 2 | 1 |
| 4. பயன்படுத்தும் உத்திகளின் பொருத்தப்பாடும் தர்க்கரீதியான தன்மையும் | 4 | 4 | 3 | 2 | 1 |
| 5. முடிவுக்குவருதலும் அவற்றுக்குக் காரணங்காட்டலும் ஆக்கத்தை முன்வைத்தலும். | 4 | 4 | 3 | 2 | 1 |
| பெற்ற புள்ளிகளின்கூட்டுத்தொகை (மொத்தப்புள்ளி) 20 | | | | | 20 |
| இறுதிப்புள்ளி = பெற்ற மொத்தப் புள்ளிகள் | | | | | 10 |

# பாடசாலை மட்டக் கணிப்பீட்டிற்கான உத்தேசக் கருவிகள் - 3

தவணை : முதலாம் தவணை
கருவி இலக்கம் : 03
தேர்ச்சி : 1.0
தேர்ச்சி மட்டம் : 1.3
கருவியின் தன்மை : கண்காட்சி

- இதிகாசங்களையும், அவற்றுடன் தொடர்புடைய நூல்களையும் உள்ளடக்கி ஒரு கண்காட்சியை ஏற்பாடு செய்ய வழிப்படுத்துங்கள்.
  - அதில் நூல்கள், மாணவர்களது ஆக்கங்கள், பிறரால் ஆக்கப்பட்ட ஆக்கங்கள், இணையம் மூலம் தேடிப் பெறப்பட்ட விடயங்கள் போன்றவற்றைக் காட்சிப்படுத்துங்கள்.
  - இதிகாச கூத்துப்படம், இதிகாச திரைப்படக் காட்சி, இதிகாச நாடக பிரதி ஆகியவற்றைக் காட்சிப்படுத்தல்.
- பின்வரும் நியதிகளின் அடிப்படையில் புள்ளிகளை வழங்குங்கள்.

| நியதிகள் | புள்ளிகள் | புள்ளி வழங்கல் | | | |
|---|---|---|---|---|---|
| | | தேர்ச்சி மட்டத்தினை அடைந்துள்ளார் | | தேர்ச்சி மட்டத்தை அடையவில்லை | |
| 1. கண்காட்சியின் தலைப்புக்கேற்ற பொருத்தப்பாடும் தொடர்பும். | 4 | 4 | 3 | 2 | 1 |
| 2. கண்காட்சியை ஏற்பாடு செய்ய கையாண்ட வழிமுறைகள் | 4 | 4 | 3 | 2 | 1 |
| 3. கண்காட்சியை ஒழுங்கமைத்தல் | 4 | 4 | 3 | 2 | 1 |
| 4. பயன்பாடும் உத்திகளின் பொருத்தமும் | 4 | 4 | 3 | 2 | 1 |
| 5. ஆக்கத்தின் விளைவும் முடிவும் | 4 | 4 | 3 | 2 | 1 |
| பெற்ற புள்ளிகளின்கூட்டுத்தொகை (மொத்தப்புள்ளி) 20 | | | | | 20 |
| இறுதிப்புள்ளி = பெற்ற மொத்தப் புள்ளிகள் | | | | | 10 |

# பாடசாலை மட்டக் கணிப்பீட்டிற்கான உத்தேசக் கருவிகள் - 4

தவணை : இரண்டாம் தவணை
கருவி இலக்கம் : 01
தேர்ச்சி : 1.0
தேர்ச்சி மட்டம் : 1.4
கருவியின் தன்மை : களச்சுற்றுலாக்கள்

பின்வரும் வினாக்களுக்கு விடை எழுத மாணவரை வழிப்படுத்துங்கள்.

- இந்து சமய வளர்ச்சியில் திருக்கோயில்களின் பங்களிப்பினை திருக்கோயில் அமைப்பு சிற்ப இலட்சண விதிகள், பிரமாண நூல்கள், தோற்றம், வரலாறு, வழிபாடு, தத்துவம், விரதங்கள், விழாக்கள், இலக்கியங்கள், மனித வாழ்வியலில் அது வகிக்கும் பங்கு என்பவற்றை உள்ளடக்கியதாக) விளக்கக்கூடிய களச்சுற்றுலா நிகழ்வு ஒன்றைத் தயாரிக்க மாணவர்களை வழிப்படுத்துங்கள்.
- பின்வரும் நியதிகளின் அடிப்படையில் புள்ளிகளை வழங்குங்கள்.

| நியதிகள் | புள்ளிகள் | புள்ளி வழங்கல் | | | |
|---|---|---|---|---|---|
| | | தேர்ச்சி மட்டத்தினை அடைந்துள்ளார் | | தேர்ச்சி மட்டத்தை அடையவில்லை | |
| 1. கற்றல் - கற்பித்தல் செயன் முறை காட்டும் தொடர்பு, பொருத்தப்பாடு. | 4 | 4 | 3 | 2 | 1 |
| 2. களச் சுற்றுலா ஒழுங்கமைப்பு | 4 | 4 | 3 | 2 | 1 |
| 3. களச்சுற்றுலாவில் பெறப்பட்ட தகவல்கள், கையாளப்பட்டுள்ள உத்திகளும் அவற்றின் பொருத்தப்பாடும். | 4 | 4 | 3 | 2 | 1 |
| 4. களச் சுற்றுலாவின் உள்ளடக்கமும் மாணவர் ஈடுபாடும். | 4 | 4 | 3 | 2 | 1 |
| 5. களச் சுற்றுலாவின் மாணவர் ஆக்கத்திறன் பற்றிய அறிக்கையும் பொருத்தப்பாடும். | 4 | 4 | 3 | 2 | 1 |
| பெற்ற புள்ளிகளின்கூட்டுத்தொகை (மொத்தப்புள்ளி) 20 | | | | | 20 |
| இறுதிப்புள்ளி = பெற்ற மொத்தப் புள்ளிகள் | | | | | 10 |

# பாடசாலை மட்டக் கணிப்பீட்டிற்கான உத்தேசக் கருவிகள் - 5

தவணை : இரண்டாம் தவணை
கருவி இலக்கம் : 02
தேர்ச்சி : 2.0
தேர்ச்சி மட்டம் : 2.1
கருவியின் தன்மை : உடனடிச் சொற்பொழிவு

பின்வரும் வினாக்களுக்கு விடை எழுத மாணவரை வழிப்படுத்துங்கள்.

- வட இந்தியாவில் வைணவ பக்தி இயக்கம் என்ற தலைப்பில் ஸ்ரீசைதன்யர், இராமானந்தர், மீராபாய், கபீர்தாசர் ஆகியோரில் திருவுளச் சீட்டின் மூலம் ஒருவரைத் தெரிவு செய்து, உடனடிச் சொற் பொழிவு ஒன்றை நிகழ்த்த மாணவரை வழிப்படுத்துங்கள்.
- பின்வரும் நியதிகளின் அடிப்படையில் புள்ளிகளை வழங்குங்கள்.

| நியதிகள் | புள்ளிகள் | புள்ளி வழங்கல் | | | |
|---|---|---|---|---|---|
| | | தேர்ச்சி மட்டத்தினை அடைந்துள்ளார் | | தேர்ச்சி மட்டத்தை அடையவில்லை | |
| 1. தலைப்பைத் தெளிவாக முன்வைத்தலும் அதன் பொருத்தப்பாடும். | 4 | 4 | 3 | 2 | 1 |
| 2. ஒழுங்கமைப்பு, தலைப்புக்குப் பொருத்தமானவாறு விடயங்களை முன்வைத்தல். | 4 | 4 | 3 | 2 | 1 |
| 3. ஆக்கபூர்வமான தர்க்க ரீதியான தன்மை தன்மை | 4 | 4 | 3 | 2 | 1 |
| 4. தெளிவு, குரல், கட்டுப்பாடு, முகபாவனை,அங்க அசைவுகள், நேரக்கட்டுப்பாடு,சரியான உச்சரிப்பு. | 4 | 4 | 3 | 2 | 1 |
| 5. தொகுப்பு, முடிவுகளுக்கு வருதல், காரணங்காட்டல். | 4 | 4 | 3 | 2 | 1 |
| பெற்ற புள்ளிகளின்கூட்டுத்தொகை (மொத்தப்புள்ளி) 20 | | | | | 20 |
| இறுதிப்புள்ளி = பெற்ற மொத்தப் புள்ளிகள் | | | | | 10 |

# பாடசாலை மட்டக் கணிப்பீட்டிற்கான உத்தேசக் கருவிகள் - 6

தவணை : இரண்டாம் தவணை

கருவி இலக்கம் : 03

தேர்ச்சி : 2.0

தேர்ச்சி மட்டம் : 3.1

கருவியின் தன்மை : விவாதம்

பின்வரும் வினாக்களுக்கு விடை எழுத மாணவரை வழிப்படுத்துங்கள்.

- இலங்கையில் இந்து நாகரிக வளர்ச்சிக்கு அதிகளவு பங்களிப்புச் செய்தவர் ஆறுமுகநாவலர், விபுலானந்தர்
- இத்தலைப்புக்களின் கீழ், மாணவரை ஒட்டியும், வெட்டியும் விவாதிக்க வழிப்படுத்துங்கள்.
- பின்வரும் நியதிகளின் அடிப்படையில் புள்ளிகளை வழங்குங்கள்.

| நியதிகள் | புள்ளிகள் | புள்ளி வழங்கல் | | | |
|---|---|---|---|---|---|
| | | தேர்ச்சி மட்டத்தினை அடைந்துள்ளார் | | தேர்ச்சி மட்டத்தை அடையவில்லை | |
| 1. தலைப்பைத் தெளிவாக அறிமுகஞ் செய்தல். | 4 | 4 | 3 | 2 | 1 |
| 2. தலைப்புக்குப் பொருத்தமானவாறு விடயங்களை முன்வைத்தலும் ஒழுங்கமைப்பும். | 4 | 4 | 3 | 2 | 1 |
| 3. தகவல்கள் ஆக்கபூர்வமாகவும் தர்க்கரீதியிலும் முன்வைக்கப்பட்டிருத்தல். | 4 | 4 | 3 | 2 | 1 |
| 4. பொருத்தமான முகபாவனையும் அங்க அசைவுகளும் நேர்முகமாகவும் | 4 | 4 | 3 | 2 | 1 |
| 5. முடிவுகளையும், முடிவுகளுக்கான காரணங்களையும் முன்வைத்தல். | 4 | 4 | 3 | 2 | 1 |
| பெற்ற புள்ளிகளின்கூட்டுத்தொகை (மொத்தப்புள்ளி) 20 | | | | | 20 |
| இறுதிப்புள்ளி = பெற்ற மொத்தப் புள்ளிகள் | | | | | 10 |

# பாடசாலை மட்டக் கணிப்பீட்டிற்கான உத்தேசக் கருவிகள் - 7

தவணை : மூன்றாம் தவணை

கருவி இலக்கம் : 01

தேர்ச்சி : 4.0

தேர்ச்சி மட்டம் : 4.1

கருவியின் தன்மை : குழுக்கலந்துரையாடல்

பின்வரும் வினாக்களுக்கு விடை எழுத மாணவரை வழிப்படுத்துங்கள்.

- உலக நாடுகளில் இந்துப் பண்பாட்டம்சம் பற்றிய விடயங்களை மாதிரி தொலைக்காட்சி நிகழ்ச்சி ஒன்றினை ஆற்றுகை செய்தல்
- பின்வரும் நியதிகளின் அடிப்படையில் புள்ளிகளை வழங்குங்கள்.

| நியதிகள் | புள்ளிகள் | புள்ளி வழங்கல் | | | |
|---|---|---|---|---|---|
| | | தேர்ச்சி மட்டத்தினை அடைந்துள்ளார் | | தேர்ச்சி மட்டத்தை அடையவில்லை | |
| 1. தலைப்பைத் அறிமுகஞ் செய்தல். | 4 | 4 | 3 | 2 | 1 |
| 2. தலைப்புக்குப் பொருத்தமான விடயங்கள் | 4 | 4 | 3 | 2 | 1 |
| 3. ஒழுங்கமைப்புக்காக பல்வேறு உதிதிகளைப் பயன்படுத்தல். | 4 | 4 | 3 | 2 | 1 |
| 4. மொழிச்செம்மை, இலக்கணச் செம்மை, நிறுத்தக் குறிகள், மொழிசார்ந்த பிரயோகங்கள், தெளிவு, ஆக்கபூர்வத்தன்மை. | 4 | 4 | 3 | 2 | 1 |
| 5. விடயங்களை தர்க்கரீதியில் முன்வைத்தல். | 4 | 4 | 3 | 2 | 1 |
| பெற்ற புள்ளிகளின்கூட்டுத்தொகை (மொத்தப்புள்ளி) 20 | | | | | 20 |
| இறுதிப்புள்ளி = பெற்ற மொத்தப் புள்ளிகள் | | | | | 10 |

# பாடசாலை மட்டக் கணிப்பீட்டிற்கான உத்தேசக் கருவிகள் - 8

தவணை : மூன்றாம் தவணை

கருவி இலக்கம் : 02

தேர்ச்சி : 3.0

தேர்ச்சி மட்டம் : 5.1

கருவியின் தன்மை : தேடி ஆய்வுகள்

- நுண்கலைகள் - கட்டடம், சிற்பம், இசை , நடனம் என்ற விடயங்களை உள்ளடக்கிய ஒப்படை ஒன்றைத் தயாரிக்க வழிப்படுத்துங்கள்
- பின்வரும் நியதிகளின் அடிப்படையில் புள்ளிகளை வழங்குங்கள்.

| **நியதிகள்** | **புள்ளிகள்** | **புள்ளி வழங்கல்** | | | |
|---|---|---|---|---|---|
| | | தேர்ச்சி மட்டத்தினை அடைந்துள்ளார் | | தேர்ச்சி மட்டத்தை அடையவில்லை | |
| 1. குறிக்கோள்களை விளக்குதல் | 4 | 4 | 3 | 2 | 1 |
| 2. தகவல் சேகரிப்பதற்காகக் கையாண்ட முறைகள். | 4 | 4 | 3 | 2 | 1 |
| 3. தகவல்கள் சேகரித்தலும் அவற்றைப் பதிவு செய்தலும். | 4 | 4 | 3 | 2 | 1 |
| 4. பயன்படுத்தும் உத்திகளின் பொருத்தப்பாடும் தற்கரீதியான தன்மையும். | 4 | 4 | 3 | 2 | 1 |
| 5. முடிவுவுக்கு வருதலும், அவற்றுக்கு காரணங்காட்டலும் ஆக்கத்தை முன்வைத்தலும். | 4 | 4 | 3 | 2 | 1 |
| பெற்ற புள்ளிகளின்கூட்டுத்தொகை (மொத்தப்புள்ளி) 20 | | | | | 20 |
| இறுதிப்புள்ளி = பெற்ற மொத்தப் புள்ளிகள் | | | | | 10 |

# பாடசாலை மட்டக் கணிப்பீட்டிற்கான உத்தேசக் கருவிகள் - 9

தவணை : இரண்டாம் தவணை

கருவி இலக்கம் : 03

தேர்ச்சி : 5.0

தேர்ச்சி மட்டம் : 5.1

கருவியின் தன்மை : இரட்டைப்பதிவு

- பாடத்திட்டத்தில் தரப்பட்டுள்ள சிவ மூர்த்தங்களுள் நடராசர், அனந்தசயனர் என்ற விடயங்களில் மாணவர்களை வழிப்படுத்துங்கள்
- பின்வரும் நியதிகளின் அடிப்படையில் புள்ளிகளை வழங்குங்கள்.

| நியதிகள் | புள்ளிகள் | புள்ளி வழங்கல் | | | |
|---|---|---|---|---|---|
| | | தேர்ச்சி மட்டத்தினை அடைந்துள்ளார் | | தேர்ச்சி மட்டத்தை அடையவில்லை | |
| 1. கற்றற் செயன்முறையுடன் காட்டும் பொருத்தப்பாடு | 4 | 4 | 3 | 2 | 1 |
| 2. தலைப்புக்களைப் பெறுதலும் அறிவுறுத்தல்களைப் பின்பற்றலும் | 4 | 4 | 3 | 2 | 1 |
| 3. இரட்டைப் பதிவுகளை முன்னெடுத்துச் செல்லக் கூடியவகையில் விருத்திகரமாக முன்வைத்தல். | 4 | 4 | 3 | 2 | 1 |
| 4. முன்வைக்கப்படும் கருத்துக்களின் ஆக்கபூர்வமான தன்மை. | 4 | 4 | 3 | 2 | 1 |
| 5. முடிவுகளும் முடிவுகளுக்கான காரணங்களையும் பதிவு செய்தல் | 4 | 4 | 3 | 2 | 1 |
| பெற்ற புள்ளிகளின்கூட்டுத்தொகை (மொத்தப்புள்ளி) 20 | | | | | 20 |
| இறுதிப்புள்ளி = பெற்ற மொத்தப் புள்ளிகள் | | | | | 10 |